வரு. 76 இல. 05 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
28 பக்கங்கள் 100/-

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරි

2024 பெப்ரவரி 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
February 04 Sunday, 2024

/ Thinakaran.lk / ThinakaranLK













## 76 ஆவது தேசிய சுதந்திர தின விழா இன்று

# ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் காலிமுகத்திடலில் கோலாகலம்

### தாய்லாந்து பிரதமர் தலைமையிலான தூதுக்குழுவினரும் பங்கேற்பு



**6,000 க்கும் அதிகமான முப்படை, பொலிஸாரின் அணிவகுப்பு, விசேட பாதுகாப்பு, போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக 4,000 பொலிஸார் கடமையில்**

**ஸாதிக் ஷிஹான்**

இலங்கையின் 76ஆவது தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வு இன்று கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

தேசத்தின் அபிமானத்தை பாதுகாக்கும் வகையில் வழக்கம் போன்று எவ்வித குறைபாடுகளுமின்றி, கம்பீரமாகவும் எளிமையான முறையிலும் இந்த நிகழ்வை நடத்த சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

இம்முறை நடைபெறவுள்ள சுதந்திர தின பிரதான நிகழ்வின் அணிவகுப்பில் ஆறாயிரத்துக்கும் அதிகமான முப்படை வீரர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படைவீரர்கள் கலந்து கொள்வர்.

ஏழு தசாப்த தேரவாத பௌத்த தொடர்பை வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில்

06

## மீண்டு வந்த இந்த பாதையிலேயே தொடர்ந்தும் பயணிப்போம்

### ஜனாதிபதியின் சுதந்திர தின செய்தி



"இலங்கையின் தற்போதைய பாதை உலகத்துக்கு நம்பிக்கை ஏற்படுத்தியிருப்பதால், இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும், மீண்டும் சுபீட்சத்தை கொண்டுவரவும் இந்த சுதந்திர தினத்தில் உறுதி கொள்வோம்" என, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சுதந்திர தின செய்தியில் தெரிவித்தார். இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை

06

### பிரதமரின் சுதந்திர தின வாழ்த்துச் செய்தி

## கடினமான தடைகளை தாண்டிச் செல்வோம்



"உணவுப் பாதுகாப்பு, கிராமிய மறுமலர்ச்சி மற்றும் உற்பத்திப் பொருளாதாரம் என்பவற்றை நோக்கி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் நாம் அந்த கடினமான தடைகளை தாண்டியிருக்கிறோம்" என, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தன சுதந்திரதின வாழ்த்துச்

06

## சுதந்திரத்தை பாதுகாப்பது எம் அனைவரதும் கடமை



சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பு நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகுமென்பதுடன், சுதந்திரத்தை பாதுகாக்க நிபந்தனையற்ற அர்ப்பணிப்பை வழங்குவதும் ஆட்சியாளர்களினதும் பொறுப்பாகுமென, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார். போர்த்துகேயராலும் ஒல்லாந்தராலும் பின்னர் 1815 முதல்

06

### ஜனாதிபதி – தாய்லாந்து பிரதமர் முன்னிலையில்

# இலங்கை - தாய்லாந்துக்கிடையிலான வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து


இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்தும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (03) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தாய்லாந்து பிரதமர் ஷ்ரேத்தா தவீசின் முன்னிலையில் நடைபெற்றது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் தாய்லாந்து பிரதிப் பிரதமரும் வர்த்தக அமைச்சருமான பூம்தம் வெச்சயச்சாய் மற்றும் இலங்கையின் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இலங்கை 22 மில்லியன் சனத்தொகையை கொண்டிருக்கும் அதே நேரம், இலங்கையின் 37ஆவது

06





### தரமற்ற மருந்து இறக்குமதி விவகாரம்

## அமைச்சர் கெஹெலியவுக்கு பெப். 15வரை விளக்கமறியல்

**மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவு**



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் (02) கைது செய்யப்பட்ட சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, நேற்று (03) மாளிகாகந்த நீதவான்

06

### எங்கள் கருத்து...

## இன ஐக்கியம் நிறைந்ததொரு தேசத்தை உருவாக்குவோம்!

எமது தாயகத்தின் 76 ஆவது சுதந்திரதினத்தை இன்று நாம் கொண்டாடுகின்றோம். அந்நிய ஆட்சியாளரான ஆங்கிலேயரிடமிருந்து எமது இலங்கைத் தேசம் விடுதலை பெற்று 76 வருடங்கள் உருண்டோடி விட்டன.

ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மூன்று நாட்டவர்களிடம் தொடர்ச்சியாக சுமார் நான்கரை நூற்றாண்டு காலம் எமது தேசம் அடிமைப்பட்டுக் கிடந்தது. இம்மூன்று நாட்டவர்களும் இலங்கையின் வளங்களை இங்கிருந்து அள்ளிச் செல்வதற்காக எமது தேசத்தை அடிமைப்படுத்தி வைத்திருந்தனர்.

இறுதி ஆட்சியாளர்களான ஆங்கிலேயர்கள் 1948 ஆம் ஆண்டில் எமது நாட்டுக்கு சுதந்திரத்தை வழங்கினர். ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுக் கொண்ட ஏனைய பல நாடுகள் பொருளாதாரரீதியில் பெரிதும் முன்னேற்றமடைந்து விட்டன. எமது தேசம் இன்னுமே பொருளாதார முன்னேற்றம் பெறவில்லை; இனஐக்கியம் மிகுந்த தேசமாகி விடவுமில்லை.

பொருளாதார பலம்மிக்க தேசமாக மாறுவதற்கு இன்னும்தான் நாம் போராடி வருகின்றோம். இனஐக்கியம் என்பது இன்னும் எட்டாத தொலைவிலேயே உள்ளது. இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு எமது நாட்டின் கடந்தகால ஆட்சியாளர்கள் சிலர் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும், அம்முயற்சி கைகூடவில்லை.

இனஐக்கியம் நிலைபெறுவதானால் இதயபூர்வமான முயற்சிகள் அவசியம். அத்துடன் ஏனைய அரசியல் தரப்பினரின் ஒத்துழைப்பும் தேவை. ஆனால்

06

### தமிழரசு கட்சியையும் இணைத்துக்கொண்டு

## பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நாங்கள் தயார்



**செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.**

**மன்னார் குறூப் நிருபர்**

**இலங்கை தமிழரசுக் கட்சியையும் இணைத்துக்கொண்டு பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எந்த விட்டுக்கொடுப்பையும் செய்ய தாம் தயாராக உள்ளதாக, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

**அவரது மன்னார் அலுவலகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர்**

06

## வான், கடல் வழி கண்காணிப்புக்கு எல்லை கட்டுப்பாட்டு கட்டமைப்பு

### இலங்கைக்கு அமெரிக்கா வழங்க தீர்மானம்



விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களூடாக நாட்டுக்குள் வரும் நபர்கள் போன்று வான் மற்றும் கடல் மார்க்கங்கள் வழியாக எல்லை மீறலில் ஈடுபடுகின்றார்களா? என்பதை உடனடியாக அறிவிக்கும் வகையிலான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய எல்லைக் கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றை இலங்கைக்கு வழங்க அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு

06

## ஐ.தே.க தேர்தல் நடவடிக்கை குழு தலைவராக ரொனால்ட் பெரேரா

### ஜனாதிபதியால் நியமனம்



நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் நடவடிக்கைக் குழுத் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேராவை நியமிக்க ஐ.தே.க. தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, ஐ.தே.க. தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

06

### 'என்றும் ராஜா ராஜாதான்'

## மீண்டும் இலங்கை வருகிறார் இசைஞானி இளையராஜா



இசைஞானி இளையராஜாவின் இடைநிறுத்தப்பட்ட இசை நிகழ்ச்சி ஏப்ரல் மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறுமென, நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரட்ணம் பாஸ்கர் தெரிவித்தார்.

06

### மக்களுக்கு நிவாரணம் வழங்கும்

## 'அஸ்வெசும' திட்டத்தை தாமதப்படுத்த வேண்டாம்

### அதிகாரிகளிடம் ஜனாதிபதி செயலர் வலியுறுத்து



'அஸ்வெசும' திட்டத்தை தாமதப்படுத்தும் மாவட்டச் செயலாளர்கள் உட்பட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வலியுறுத்தினார்.

மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ள குறைந்த வருமானம்

06



# தாய்லாந்து பிரதமரின் இலங்கை விஜயம்









# கொள்ளையர்களுக்குத் தெரியாமல் படகை சீஷெல்ஸ் நோக்கி திசை திருப்பினேன்

## லோரென்சோ புத்தா 4 ஆள்கடல் வள்ள படகோட்டி ரகித



சில காலங்களுக்கு முன்னர் வறுமைக் கோட்டின் கீழ்' வாடும் நாடாக அறிவிக்கப்பட்டிருந்த சோமாலியாவின் எதிர்காலம், அதலபாதாளத்துக்குச் சென்றுள்ளது. 1991இல் அந்நாட்டின் அடிப்படைவாதக் குழுவினால் சர்வாதிகாரி ஆட்சியாளர் முகமது செயித் பாரியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் பின்னர் அந்நாடு அராஜகங்களுக்குப் பெயர்போன நாடாக மாறியது. அதன் பின்னர் சோமாலியா கடற்கொள்ளையர்களால் பிரபலமானது.

தற்போது கடற்பயணிகளையும் மீனவர்களையும் பயமுறுத்தும் சோமாலிய கடற்கொள்ளையர்களின் உருவாக்கத்தின் பின்னணி, அந்நாட்டின் கடற்படை உட்பட பாதுகாப்புத் துறையின் சரிவு, ஐரோப்பா மற்றும் ஆசியாவின் கப்பல்களிலிருந்து சோமாலியக் கடலில் தொடர்ந்தும் கழிவுகள் அகற்றப்படுவது மற்றும் வேறு நாடுகளிலிருந்து வரும் மீனவர்கள் பாரியளவில் சோமாலியா கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவது போன்ற பல காரணங்களால்தான் கடற்கொள்ளையர்கள் உருவானார்கள் என்பது உண்மையை அறிந்தவர்களுக்கு தெரியும். இந்த பிரச்சினைகளால் கடுமையாக பாதிக்கப்பட்ட சோமாலிய மீனவர்கள், பின்னர் ஆயுதங்களை ஏந்தி தங்கள் கடற்பரப்பு முழுவதிலும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் அவர்கள் சிறிய ஆயுதமேந்திய படகுகள் மூலம் வணிகக் கப்பல்களைத் தங்கள் கடற்பரப்பிலிருந்து விரட்டும் அளவுக்கு அப்பாவிகளாக இருந்த போதிலும், காலப்போக்கில் மற்றொரு குழு அதனைத் தமது வாழ்வாதாரமாக ஆக்கிக் கொண்டது. அக்குழுக்கள் சிறிய குழுக்களாக வரும் வணிகக் கப்பல்களை வெற்றிகரமாக கடத்திச் சென்றன.



இவ்வாறு கப்பல்கள் மற்றும் மீன்பிடி படகுகளை கொள்ளையடிக்கத் தொடங்கிய அவர்கள், காலப்போக்கில் கொள்ளையிட்டு ஈட்டிக் கொண்ட பணம் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் அதிவேக படகுகள், தானியங்கி துப்பாக்கிகள் மட்டுமின்றி, அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்களையும் கொண்ட மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாகினர். கடற்பயணிகளும் மீனவர்களும் சோமாலியா கடற்கொள்ளையர்கள் என்ற பெயரைச் சொன்னாலே பயந்து நடுங்கும் அளவுக்கு சோமாலிய கடற்கொள்ளையர்கள் உருவானது இத்தகைய பின்னணியில்தானாகும்.

சோமாலிய கடற்கொள்ளையர்கள் இலங்கை கடற்பணிகளுக்கும் மீனவர்களுக்கும் புதியவர்கள் அல்ல, கடந்த சில வருடங்களினுள் இந்த நாட்டைச் சேர்ந்த பல மீனவக் குழுக்கள் அரபிக்கடலில் வைத்து சோமாலிய கடற்கொள்ளையர்களால் சிறைபிடிக்கப்பட்ட போதிலும், அதிர்ஷ்டவசமாக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட பல முயற்சிகளின் விளைவாக அவர்கள் பாதுகாப்பாக வீடு திரும்ப முடிந்தது. அதேபோன்ற கடந்த 27ஆம் திகதி அரபிக்கடலில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையின் லோரென்சோ புத்தா 04 என்ற பல்நாள் மீன்பிடிப் படகும், அதிலிருந்த ஆறு மீனவர்களும் மூன்று நாட்கள் என்ற குறுகிய காலத்தில் கடற்கொள்ளையர்களின் பிடியில் இருந்து மீட்கப்பட்டது இலங்கை கடற்படையின் முறையான முன்னெடுப்புகளால்த்தான்.

இலங்கை கடற்படை, பிராந்திய தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மத்திய நிலையத்துடன் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கை தொடர்பான மேலதிக விபரங்களை இலங்கை கடற்படையின் ஊடகப் பணிப்பாளர் கப்டன் கயான் விக்கிரமசூரியவிடம் கேட்டோம்.

“இந்தச் சம்பவத்தைப் பற்றி எமக்கு முதலில் கடந்த 27ஆம் திகதி கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டது. IMULA 2590 CHW என்ற பதிவிலக்கத்தைக் கொண்ட லோரென்சோ புத்தா 04 என்ற பலநாள் மீன்பிடிப் படகு ஆறு மீனவர்களுடன் மீன்பிடிப்பதற்காக ஆழ்கடலுக்கு திக்வோவிட மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த ஜனவரி 12ஆம் திகதி புறப்பட்டுச் சென்றுள்ளது. அந்தப் படகு அரேபியக் கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அவர்கள் கடற்கொள்ளையர்களின் பிடியில் சிக்கியிருப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. இந்த அறிவித்தல் கிடைத்தவுடன் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, கப்பலையும் மீனவர்களையும் எவ்வாறு மீட்பது என்பது குறித்து உடனடியாக ஆலோசனைகளை வழங்கினார். இதன்படி, கடற்படையினர் உடனேயே செயற்படுத்தப்பட்டனர். கடற்படையினர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பல நாள் மீன்பிடிப் படகு இருக்கும் இடத்தை அடையாளம் கண்டனர். நாம் கண்காணித்தபோது இந்த மீன்பிடிப் படகு சோமாலியா மற்றும் சீஷெல்ஸ் என்பனவற்றுக்கு இடையே சர்வதேச கடல் பகுதியில் அடையாளம் காணப்பட்டது. கடத்தல்காரர்கள் படகினை சோமாலியாவை நோக்கி எடுத்துச் செல்வதை அவதானிக்க முடிந்தது. அதன்பிரகாரம் நாம் அந்தப் படகினை மீட்கும் பணியை உடனடியாக தொடங்கினோம்”

காணாமல் போன மீனவப் படகு பற்றி இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா பஹ்ரைனில் உள்ள இலங்கை உட்பட 39 நாடுகளை உள்ளடக்கிய கூட்டு கடல்சார் செயலணிக்கு அறிவித்தார். சோமாலிய கடற்கொள்ளையர்களை ஒடுக்கவும், பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள இந்த படையணி தொடர்ந்தும் கடலில் கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதால் அவர்களால் இந்த மீனவப் படகினை எளிதாக கண்டுபிடிக்க முடியும்.

“அதனடிப்படையில் நாம் இந்தியா, சீஷெல்ஸ், சீனா போன்ற நாடுகளுக்கு இந்தப் படகு பற்றி அறிவித்தோம். அந்நேரம் இந்திய கடற்படைக்குச் சொந்தமான படகு ஒன்று எமது படகினைத் தேடிப் புறப்பட்டிருந்தாலும் அவர்களால் எமது படகினைக் கண்டு கொள்ள முடியாமல் போனது. அதற்குள் கடற்கொள்ளையர்களின் கட்டுப்பாட்டில் இருந்த படகின் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட போதிலும், கடற்படையின் சிறப்பு தொழில்நுட்பத்தின் மூலம் கப்பலின் போக்கை தொடர்ந்து கண்காணித்து வந்தோம். பல மணி நேரங்களுக்குப் பிறகு, முதலில் சோமாலியாவை நோக்கிச் சென்ற கப்பல் சீஷெல்ஸ் நோக்கிச் செல்வதை நாங்கள் அவதானித்தோம். சீஷெல்ஸில் அதிக எண்ணிக்கையிலான தீவுகள் இருப்பதால், அத்தகைய தீவுக்குள் படகினைக் கொண்டு சென்றால், அதை மீண்டும் கண்டுபிடிப்பது கடினம் என்பதையும் நாங்கள் உணர்ந்தோம். எனவே, இது தொடர்பாக சீஷெல்ஸ் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையம், பிராந்திய தேடல் மற்றும் மீட்பு மையம் மற்றும் இந்தியாவுக்கும் அறிவித்தோம். அதன்பிரகாரமே எமது மீனவப் படகினைத் தேடிக் காப்பாற்றும் கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் கடற்படைத் தளபதியின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கைக்கு எங்களுடைய கப்பலைத் தேவையான நேரத்தில் விரைவாக அங்கு அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் ஏற்கனவே செய்திருந்தோம்.

இதற்கிடையில், கிடைத்த தகவலின் அடிப்படையில், தொடர்ச்சியாக எம்மோடு ஒருங்கிணைப்பில் ஈடுபட்ட சீசெஷல்ஸ் கடலோர காவல்படையினர், இந்திய கடற்படையுடன் இணைந்து படகினை மீட்கும் நடவடிக்கையை திங்கட்கிழமை (29ஆம் திகதி) தொடங்கினர். கடற்படைத் தளபதி தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்ட தலைவர்களுடன் உரையாடி, இந்த நடவடிக்கை தொடர்பில் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்ததோடு, அனைத்து தரப்பினருக்குமிடையில் நல்ல ஒருங்கிணைப்பை தொடர்ந்து பேணி வந்தார். குறிப்பாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களமும் எமக்கு நல்ல ஒத்துழைப்பை வழங்கியது”

பல தரப்பினரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட அந்த கூட்டு நடவடிக்கையில் சீஷெல்ஸ் கடலோரப் பாதுகாப்பு படையணியினால் அந்நாட்டு கடலோர காவல்படைக்குரிய ‘டொபெஸ்’ என்ற கப்பலானது அந்நாட்டின் பிரதான தீவான மாஹோ தீவிலிருந்து சுமார் 230 கடல் மைல் தூரத்தில் அமைந்துள்ள சீஷெல்ஸ் பொருளாதார வலயத்தில் ‘லோரென்சோ புத்தா 04’ஐ தேட ஆரம்பித்தது.

"இதன்போது அவர்களால் ஆயுதம் தாங்கிய மூவருடனான மீனவப் படகு ஒன்று அடையாளம் காணப்பட்டது. அது லொரேன்சோ புத்தா 04 என்ற மீனவப் படகாக இருக்கலாம் என்பதை உறுதி செய்ததன் பின்னர் அவர்கள் பாதுகாப்புடன் அந்த மீனவப் படகை நெருங்கினார்கள். அந்தப் படகை நெருங்கும்போது தான் அதில் இருந்தவர்கள் சோமாலியா கடற் கொள்ளையர்கள் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்கள். கடற்படையை கண்டதும் குழப்பமடைந்த கொள்ளையர்கள் கடலோர பாதுகாப்பு அணியினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர், பின்னர் இரு தரப்புக்கும் இடையில் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்றாலும் இந்த துப்பாக்கி பிரயோகத்தில் எவருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படாத நிலையில், கொள்ளையர்களை கைது செய்வதற்கு இலங்கை மீனவர்களை பாதுகாப்பாக மீட்பதற்கும் வாய்ப்பேற்பட்டது.

சீஷெல்ஸில் உள்ள மொபிடாஸ் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள லோரென்சோ புத்தா 04 என்ற மீன்பிடிப்படகில் அந்த மீனவர்கள் தற்போது தங்கியுள்ளார்கள். அந்த மீன்பிடிப்படகின் படகோட்டியான வர்ணகுலசூரிய ரகித துஷான் பெர்னாண்டோ (வயது 35) தாம் எதிர்கொண்ட பயங்கர அனுபவங்கள் தொடர்பில் தினகரனுக்கு இவ்வாறு விபரித்தார்.

“நான் மீன்பிடித் தொழிலை ஆரம்பித்து தற்போது 13 வருடங்களாகின்றன. படகோட்டியாகச் செயற்பட ஆரம்பித்து 8 வருடங்களாகின்றன. இவ்வாறான சம்பவத்திற்கு முகங்கொடுத்த முதல் தடவை இதுவாகும். அன்று 27ஆம் திகதி காலை 10.30 மணியளவில் எமது படகின் பின்னால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தையடுத்தே நாம் அவர்களைக் கண்டோம். அவர்கள் வந்தது சுமார் 60 அடி நீளத்தைக் கொண்ட ஈரானுக்குச் சொந்தமான படகிலாகும். அதில் சோமாலியாவைச் சேர்ந்த 10 பேரளவில் இருந்தார்கள். அவர்கள் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு எம்மை பிடித்துக் கொண்டார்கள். அங்கு எமக்கு முன்னர் அவர்களால் பிடிக்கப்பட்ட பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள்.

அவர்கள் வந்த உடனேயே என்னைத் தாக்கிவிட்டு எமது படகினை சோமாலியாவை நோக்கித் திருப்புமாறு கூறினார்கள். எம்மிடம் செட்டிலைட் போன் உள்ளதா எனத் தேடினார்கள். அதன் பிறகு பெரிய படகுடன் வந்த டிங்கிப் படகில் எமது படகிலிருந்த உணவுகளிலிருந்து அரைவாசியை ஏற்றிக் கொண்டு அவர்கள் வந்த படகை அதிலிருந்தவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். சோமாலியா நாட்டவர்கள் மூவரின் தலைவன் எமது படகின் ரேடியோ கருவியை நிறுத்துமாறு உத்தரவிட்டான். அவர்கள் பேசிய மொழி எமக்கு விளங்கவுமில்லை. நாம் கொச்சையாகப் பேசிய ஆங்கிலமும் அவர்களுக்கு விளங்கவில்லை. சைகை மொழிகளால்தான் பேசிக் கொண்டோம். சில விடயங்களை எழுதியும் காட்டினோம். சோமாலியாவுக்குச் செல்வோம் என அவர்கள் கூறினார்கள். சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி சோமாலியாவுக்குச் சென்றதன் பின்னர் எம்மால் தப்பிக்க முடியாது என எனக்குப் புரிந்தது. எனவே நான் எம்மிடமிருந்த பழைய கைப்பேசியை உடைத்து அதிலிருந்து சிறிய காந்தத்தை எடுத்து திசைகாட்டியில் பயன்படுத்தி படகினை மெதுவாக சீஷெல்ஸ் பக்கத்தை நோக்கித் திருப்பினேன். அவர்களுக்கு இது பற்றிய எந்த அறிவும் இல்லை என்பதை அறிந்து கொண்டதால்தான் நான் அவ்வாறு செய்தேன். அதேபோன்று அவர்கள் மூவரும் படகின் மேல் தளத்திற்குச் சென்றதும், இரண்டு நிமிடங்கள் என் குறுகிய நேரத்திற்குள் நான் ரேடியோவை ஓன் செய்து எங்கள் குழுவினரிடம் நாம் கடல் கொள்ளையர்களிடம் சிக்கிக் கொண்ட தகவலைத் தெரிவித்தேன்.

நான் தகவலைக் கூறி முடித்தவுடன் அவர்கள் கீழே இறங்கினர். நான் அப்படிச் செய்யாவிட்டால், அவர்கள் எங்களை சோமாலியாவுக்கு அழைத்துச் சென்றிருப்பார்கள். அவ்வாறு நடந்திருந்தால் நாம் தப்பியிருக்க மாட்டோம். அந்த இரண்டு நிமிடங்கள்தான் எங்கள் உயிரைக் காப்பாற்ற உதவியது என்றார் ரகித.

சுரேகா நில்மினி இலங்கோன்
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்


# ஸ்ரீதரனின் வருகையும் ஜனாதிபதி தேர்தலும்

ரஜித் கீர்த்தி தென்னகோன

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான பங்காளியான இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு தமிழ் கடும் போக்காளரான யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் ஸ்ரீதரன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆசிரியரான இவர் கடந்த தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஆகக்கூடிய விருப்பு வாக்குகளை பெற்றவராவார். அவரிடம் தோல்வி கண்டவர் தெற்கில் மிகவும் பரிச்சயமான எம்.ஏ. சுமந்திரன். தமிழ் மொழியில் மாத்திரம் பேசும் ஸ்ரீதரன் தெற்கில் மாவீரர் தினத்துடன் அறிமுகமானவர். தலைமைத்துவத்திற்கு நியமிக்கப்பட்ட இவர் போராளிகளை நினைவுகூர்ந்து தனது கடமைகளை ஆரம்பித்தார். இவர் தெற்குக்கு கசப்பான தமிழர் பிரச்சினைகள் குறித்தே பேசுபவர். தமிழ் தேசியக் கடமையை தொடர்ந்து நிறைவேற்றுவதாக அவர் திருகோணமலையில் தெரிவித்திருந்தார். கட்சியின் செயலாளர் பதவிக்கு திருகோணமலையின் சண்முகம் சிவஞானம் நியமிக்கப்பட்டதை அடுத்து ஜனவரி 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டம் பெரும் கூச்சல் குழப்பத்துடன் நிறைவடைந்தது. கடைசியில் தலைமைத்துவத்துக்கு போட்டியிட்டு தோல்வியடைந்த சுமந்திரன் கட்சியின் செயலாளராக வருவதற்கு எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

தமிழரசுக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் 327 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் வடக்கு, கிழக்கை சேர்ந்தவர்கள். கட்சியின் தலைவர் பதவி வழமையாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. கட்சி தலைமைத்துவத்திற்கான போட்டி நடைபெறும் தினத்தில் சுமந்திரன் கிறிஸ்தவதேவாலயத்துக்கும்வேட்டிஅணிந்தும்ஸ்ரீதரன் கோயிலுக்கும் சென்று வந்திருந்தனர். இருவருக்கு இடையிலான வாக்கு வித்தியாசம் 49 ஆகும். மத்திய சபையின் வாக்குகள் கிறிஸ்தவம், இந்து என்ற அடிப்படையில் பிரிந்துள்ளது. கோத்திரம் மற்றும் சமயம் என்பன வடக்கு அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் சுமந்திரனையும் விட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன் இலங்கை தமிழ் காங்கிரசின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ.பி.டீ.பி தலைவர் டக்லஸ் தேவானந்தா ஆகியோர் அதிக வாக்குகளைப் பெற்றனர். தெற்கில் ஜனரஞ்சகமான வடக்கு தலைவர் ஒருவருக்கு வடக்கு, கிழக்கு சமுதாயத்தில் குறைந்த வரவேற்பேவுள்ளது. தமிழ் டயஸ் போராவுடன் அதிக தொடர்பு சுமந்திரனுக்கே உள்ளது. எனினும், தலைவர் தெரிவில் கூடிய ஆதரவு ஸ்ரீதரனுக்கே கிடைத்திருந்தது. அடுத்த விடயம் வடக்கு என்பது யாழ்ப்பாணம் மாத்திரம் அல்ல கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா என்பன இதில் அடங்குகின்றன. இதேவேளை வடக்கை



அடிப்படையாகக் கொண்டு தனது அரசியலை விரிவு படுத்துவதற்கும் மலையகத்திலிருந்து வந்து வசிப்பவர்களின் உள்ளங்களை வெல்வதற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

**ஜனாதிபதி தேர்தல் மீதான இதன் தாக்கம்**

2005 தொடக்கம் 2019 வரை ஜனாதிபதி தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் அல்லது அதன் ஆதரவுடன் போட்டியிட்ட வேட்பாளரே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெற்றி பெற்றுள்ளார். ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேகா போன்றோர் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் வெற்றிபெற்றிருந்தனர். மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு மில்லியன் வரையிலான வாக்குகள் கிடைத்திருந்தன. ஆறு இலட்சம் மேலதிக வாக்குகளினால் வெற்றி பெற்றார். சஜித் 11 இலட்சம் வாக்குகளைப் பெற்றார். அவருக்கு கிடைத்த மேலதிக வாக்குகள் ஒன்பது இலட்சம். 2005ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. மற்றும் மஹிந்த ராஜபக்ஷ கூட்டணி வடக்கு கிழக்கில் 2,26,009 வாக்குகளைப் பெறும் போது ரணில் 4,44,230 வாக்குகளைப் பெற்றிருந்தார். இறுதி பெறுபேறுகளின் படி ஜே.வி.பி மற்றும் எல்.ரி.ரி.ஈ. ஆதரவு பெற்ற மஹிந்த 1,80,000 மேலதிக வாக்குகுகளினால் வெற்றி பெற்றிருந்தார். கொழும்பு வெள்ளவத்தை மற்றும் கொட்டாஞ்சேனை பகுதிகளில் கூட தாக்கத்தை ஏற்படுத்திய தேர்தல் பகிஷ்கரிப்பு இருந்திருக்காவிட்டால் இதில் ரணில் விக்கிரமசிங்க இலகுவாகவே வெற்றி பெற்றிருப்பார்.

2015இல் மைத்திரி வடக்கில் 4 இலட்சம் வாக்குகளையும் கிழக்கில் 6 இலட்சம் வாக்குகளையும் பெற்றார். 2005 இல் மஹிந்தவின் வெற்றியை உறுதி செய்த திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் 2015இல் அவருக்கு தோல்வியை ஏற்படுத்தியது. 2019 இல் ரணில் விக்கிரமசிங்க அதிக கூட்டங்களுக்கு வடக்கு கிழக்கிற்கே சென்றிருந்தார். சஜித்தின் 55 இலட்சம் வாக்குகளில் 11 இலட்சம் வாக்குகள் வடக்கு கிழக்கில் இருந்து கிடைத்தவை ஆகும். ஐக்கிய தேசிய சிந்தனைகளை கொண்டிருக்கும் அணியொன்று ஜனாதிபதி தேர்தலில் வெல்ல வேண்டுமாயின் அது வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெருமளவு மேலதிக வாக்குகளைப் பெறவேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்கு அத்தகய வாக்கு வங்கியே உள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதிக்கத்தின் கீழ் சுமார் ஆறு இலட்சம் வாக்குகள் உள்ளன. 2005 இல் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி. சார்பாக செயற்பட்டார். 2015இல் ஐ.தே.க. ஜே.வி.பி க்கு சாதகமாக செயற்பட்டது. தெற்கில் சஜித் 25 வீதம் பெறும்போது, வடக்கு கிழக்கில் 65 வீதம் பெற்றார். ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் வடக்கு, கிழக்கு தலைவர்களுடன் ஒரு கௌரவமான நட்புறவை பேணிவந்தனர். இதன் பின்னனியில் வடக்கு கிழக்குக்கான மைத்திரிபாலவின் விஜயங்கள் சமூக வலைத்தளங்ளில் பரவலாக பேசப்பட்டன.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள் என்பவற்றின் அழுத்தங்களும் மைத்திரியின் வாக்கு வங்கியை அதிகரித்தது. அதாவது வடக்கு கிழக்கு வாக்குகள் ஒட்டுமொத்தமாக ஐக்கிய தேசிய கட்சி சார்ந்த முகாம்களை சென்றடைந்தது. 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வடக்கு, கிழக்கில் கணிசமான பிரதிநிதித்துவத்தையும் பெற முடிந்தது.

கொழும்பு சமுதாயம், தெற்கு மக்கள் தூதரகங்கள் மற்றும் சிவில் சமூகம் என்பவற்றின் செல்வாக்கற்ற ஸ்ரீதரனின் தலைமைத்துவம் 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தலில் முன்னைய தேர்தல்களையும் விட ஒரு வித்தியாசமான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடும். அதாவது வடக்கு, கிழக்கு வாக்குகள் ஒட்டுமொத்தமாக ஒருகுறிப்பிட்ட தரப்பினருக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

சிவஞானம் ஸ்ரீதரன், மாவை சேனாதிராஜா தலைமையிலான சம்பிரதாய பெடரல் கருத்துக்கள். சுமந்திரன், ராசமாணிக்கம் தலைமையிலான புதிய லிபரல்வாதக் கருத்துக்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உள்ளக அதிகார மையத்தில் தோல்வி அடைந்துள்ளது.

எனவே, வடக்கு, கிழக்கு வாக்குகள் ஒட்டுமொத்தமாக தெற்கின் வேட்பாளரை நோக்கிச் செல்லாமல் நான்காகச் சிதறக்கூடிய நிலைமையே காணப்படுகின்றது. கடும் தமிழ் தேசியவாதக் கருத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் ஸ்ரீதரன் எதிர்க்கட்சியுடன் ஒற்றுமையாக அல்ல சில நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படக்கூடும். ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் அதிக நேரம் தமிழில் பேசுபவர். பொருளாதாரம் சம அந்தஸ்து, சமவுரிமை, சனநாயகம் என்பவற்றையும் விட தமிழ் தேசியம் என்ற அரசியலில் கடும் போக்காளராகவே செய்படுகின்றார். அவர் ஒரு முன்னாள் ஆசிரியருமாவார். இவரையும் விடக் கடும் தமிழ் போக்காளர்களான விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்ததுடன் இவருக்கு ஒரு கடுமையான போட்டி உள்ளது. இந்தப் போட்டியின் இறுதிக்கட்டம் வேட்பாளர் ஒருவருக்கு சாதகமான முறையில் ஓரு தேர்தல் பகிஷ்கரிப்பை நோக்கிச் செல்லலாம். அல்லது தமிழ் தரப்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் களமிறங்கலாம்.

2005 தொடக்கம் 2019 வரை ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு கிழக்கு வாக்குகள் தொடர்பாக பெரும் எதிர்பார்ப்புடனேயே இருந்தது. இதன் அடையாளமாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்து இதனை நிரூபித்து வருகின்றார். ஐக்கிய மக்கள் சக்தி இதற்கு வேறுபட்ட நிலைப்பாட்டில் நாலக கொடஹேவா, சன்ன ஜயசுமன போன்ற சிங்கள தேசியவாத தலைவர்கள் மற்றும் தயா ரத்நாயக்க போன்ற ராணுவ தலைவரர்களை தமது அணியில் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே. வி. பி தெற்கில் சிங்கள மக்களின் வாக்குகள் தொடர்பாக அதிக எதிர்பார்ப்புடன் உள்ளன.

வடக்கு ஐந்தாகவும் கிழக்கு எட்டாகவும் பிரிதல். வடக்கு தற்போது தெளிவாக ஐந்து



தமிழ் அரசியல் முகாம்களாக பிரிந்துள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, கஜேந்திரகுமார் பொன்னம்பலம். டக்ள்ஸ் தேவானந்தா, விக்னேஸ்வரன் மற்றும் அங்கஜன் ஆகியோரே அந்த 5 முகாம்களாகும். கிழக்கு முஸ்லிம் வாக்குகள் திருகோணமலை, கல்முனை, அக்கரைப்பற்று, சாய்ந்தமருது என ப் பிரிந்துள்ளன. தமிழ் அரசியல் முகாம் 3 பிரிவுகளாக பிரிந்துள்ளது.

2024இல் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கு 13 பிரிவுகளாக பிரியும். யார் யாருடன் இணைவார்கள் என்பது கூற இயலாத ஒரு விடயமாகும். இது இலங்கை ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் மிகவும் சிக்கலானதோர் தேர்தலாகவே அமையும். 2005 (ரணில்) 2010 (பொன்சேகா) 2015 (மைத்திரி) 2019 (சஜித்) வருடங்களைப் போன்று வடக்கு கிழக்கு ஒட்டுமொத்தமான வாக்குகள் இம்முறை தனி ஒருவருக்கு கிடைக்க மாட்டாது என்பது உறுதி. வாக்குகள் பிளவு படுவதும் உறுதி.











# 20 இலட்சம் பேரின் துன்பத்தைப் போக்கும் புதிய சுவாசக்காற்று 'உறுமய'

பாத்திமா சிஹானா

ஒரு அங்குல நிலத்தையேனும் தங்களுக்குச் சொந்தமாக வைத்திருக்க அனைவரும் விரும்புகிறார்கள். ஏனென்றால், நிலம் முக்கிய உற்பத்திக் காரணியாகும்.





அந்த வகையில் அது ஒரு சொத்தாக மாறுகிறது. ஆனால் குறித்த நிலத்திற்கு முழு உரிமையுடன் கூடிய காணி உறுதிப்பத்திரம் இருந்தால் மாத்திரமே அதற்கு சொத்துக்கு அப்பாற்பட்ட பொருளாதார ரீதியான பெறுமதி கிடைக்கிறது. இல்லாவிட்டால் நிலத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான். ஜய பூமி, ஸ்வர்ண பூமி போன்ற காணி பெற்றவர்கள் அதற்கு வாழும் சாட்சியாளர்களாக உள்ளனர். இதுவரை தெரியவந்துள்ளபடி, 20 இலட்சத்துக்கும் அதிகமானோர், நிலம் இருந்தும், உறுத்திப்பத்திரம் இல்லாததால், பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த நபரின் குடும்ப உறுப்பினர்களையும் கணக்கிட்டால், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்பது இரகசியமல்ல. மறுபுறம், சுதந்திரத்தின் பின்னர், இந்த காணி அனுமதிப்பத்திரங்களுக்குப் பதிலாக காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் முறையான திட்டம் எதுவும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த வகையில், பல தசாப்தங்களாக காணி உரிமை கிடைக்காத மக்களுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக முன்வைத்த 2024 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் ஒரு காணியின் சட்டபூர்வ உரிமையாளர் என்ற கனவு நனவாகியது.

வலுவான எதிர்காலத்திற்கான முன்னோடி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் 08 ஆவது பிரேரணையானது,

1935ஆம் ஆண்டு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனையுடன் கூடிய மானியப் பத்திரங்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள, அரச காணிகளின் முழு உரிமையை விவசாயிகளுக்கு வழங்கும். “உறுமய” திட்டத்தின் ஊடாக அது மக்களுக்கு வழங்கப்படும்" என்று குறிப்பிடுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஊடக நிறுவனத் தலைவர்களின் மத்தியில் உரையாற்றிய போது, இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய தனியார்மய மாக்கல் இந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதன்படி 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் “உறுமய” வேலைத்திட்டத்தின் கீழ் இருபது இலட்சம் குடும்பங்களுக்கு முழு உரிமையுடன் கூடிய காணி உறுதிப்பத்திரங்களை அடுத்த சில வருடங்களுக்குள் வழங்குவதற்காக இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நாட்டு அப்பாவி மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதன் மூலம், குறித்த காணிகளின் மீதான முழு உரிமையும் காணி உரிமையாளர்களுக்கே கிடைக்கும் என்பதுடன், விசேட பணியாக இதனை குறிப்பிடுவது மிகையாகாது.

### பிரபுக்களுக்கு மாத்திரம் சொந்தமான காணி உரிமை

சிங்கள மன்னர் காலத்தில், நாட்டின் நிலம் முழுவதும் மன்னருக்குச் சொந்தமானது. குறித்த நபரின் சேவையின் தன்மை மற்றும் சாதிய படிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் மன்னர் நிலத்தை அனுபவிக்க அனுமதி வழங்கியிருந்தார். அங்கு பிரபுக்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு மாத்திரமே நிலத்தை அனுபவிக்கும் அடிப்படை உரிமை கிடைத்திருந்தது. சாமானியர்களுக்கு வாழ்வதற்கு நிலம் கிடைத்தாலும் மற்றும் அக்காலத்தில் மக்கள் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தாலும் கூட அவர்களுக்கு நிலத்தின் மீது முழு உரிமை இருக்கவில்லை.

காலனித்துவ காலத்தில் இந்த நிலைமை மேலும் சிக்கலானது. குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள், பெருந்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பெருந்தோட்டப் பொருளாதாரத்தை உருவாக்கியது. 1833இல் அமுல்படுத்தப்பட்ட கோல்புரூக் சீர்திருத்தத்தின் மூலம் அடிமைத்தனத்தை ஒழித்தமை, இலங்கையில் நில உரிமையின் திசையை மாற்றியது.

ஆனால் அதற்குப் பிறகு, பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்குத் தேவையான விளை நிலங்களைக் கையகப்படுத்த பிரித்தானிய ஆட்சியாளர்கள் கொண்டு வந்த 'வேஸ்ட்லேண்ட் சட்டம்' முதலியவற்றால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டனர். அதன்படி, நிலத்தின் உரிமையை எழுத்துபூர்வமாக நிரூபிக்க முடியாமல் மக்கள் அவதிப்பட்டனர். இந்நிலைமையால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கிய மலையக மக்களே.

### விக்கிரமசிங்க குடும்பத்திலிருந்து வந்த உறுமய (மரபு)

காலனித்துவ காலத்திற்குப் பிறகு, 1933இல் அரசுக்குச் சொந்தமான நிலத்தின் உரிமையை மாற்றுவதற்கான முதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அப்போதைய விவசாய அமைச்சர் டி.எஸ். சேனாநாயக அரசாங்கத்தின் காணி உரிமையை மக்கள் மயப்படுத்தும் திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில், 1934இல் மின்னேரியா விவசாய மக்கள் இயக்கச் செயற்பாடுகளை ஆரம்பித்தார். அதற்கேற்ப, மக்களுக்கான நிலப் பகிர்வு தொடங்கியது. அந்த அரசாங்கத்தின் காணி ஆணையராக இருந்தவர் சி.எல். விக்கிரமசிங்க.சி.எல். விக்கிரமசிங்க. ரஜரட்ட விவசாய மக்கள் இயக்கத்தை நிறுவுவதில் முக்கிய பங்காற்றினார், மேலும் அப்போதைய டி.எஸ். சேனாநாயக்கவுக்கும் அவர் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நாட்டின் முதல் சிங்கள மாவட்ட செயலாளராக சி.எல். விக்கிரமசிங்க சப்ரகமுவ மாவட்டத்தின் பொறுப்பாளராக இருந்தார். மற்றும் அவரது ஐந்து பிள்ளைகளில் ஒருவர் எட்மண்ட் விக்கிரமசிங்க ஆவார். இவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையாவார். விக்கிரமசிங்க பரம்பரை ஊடாகக் கொண்டு வந்த மக்கள் சேவைகள் மற்றும் பூர்வீக நிலத்தின் மீதான உரிமையை மக்களுக்கு வழங்கும் திட்டத்தை இன்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யதார்த்தமாக்குகிறார்.

### மக்களின் நில உரிமைக்கான தொடர் போராட்டம்

சுதந்திரத்திற்குப் பிறகு, டி.எஸ். சேனாநாயக்க மக்களுக்கு காணி வழங்கியதும், பின்னர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, நாட்டு மக்களுக்கு காணி உரிமையை வழங்குவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டதன் காரணமாகவே மகாவலி திட்டத்தையும் ஆரம்பித்தார்.

அதற்கிணங்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு முறையும் தேவையான சட்டங்களை இயற்றுவதன் மூலம் மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தது. பல ஆண்டுகளாக காணி உரிமை இல்லாத மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட “ நில சிறப்பு ஏற்பாடுகள் சட்ட வரைவு” மூலம் அமெரிக்காவுக்கு நிலம் வழங்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. ஆனால் எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அந்த வேலைத்திட்டத்தை நிறுத்தத் தயாராக இல்லாத அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குவதை எதிர்த்தவர்களுக்கு எதிராக மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கக் கூடத் தயாராக இருந்தார்.

2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் விவசாயிகள் மற்றும் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் சட்டப்பூர்வ உரிமையை அவர்களுக்கு வழங்க திட்டமிட்டது. ஆட்சியில் இரண்டு ஆண்டுகளே இருந்ததால், அப்போதும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதன் பின்னர் 2015 இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஆவதற்கு வலுவான பங்களிப்பை வழங்கினார். ஆனால் அப்போதும், நாட்டின் நிலம் பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்ற பொய்யை நிலைநாட்டி எதிர்க்கட்சிகள் அதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தன.

### "உறுமய" என்றால் என்ன?

அதன்படி, பல தசாப்தங்களாக, இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு காணி உரிமைப் பிரச்சினையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளும் இதனுடன் வளர்ந்தது. நிலமற்ற மக்களுக்கு விவசாயம் செய்ய அரச நிலங்கள் வழங்கப்பட்டாலும், அந்த நிலங்களின் முழு உரிமையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஸ்வர்ண பூமி, ரன் பூமி என வெவ்வேறு பெயர்களில் நிலமாற்றுச் சான்றிதழ்கள் மூலம் நிலத்தை அனுபவிக்கும் உரிமை பெறப்பட்டாலும், அந்த உரிமை முழு உரிமையாக இல்லாததோடு, நிலத்தின் பூரண உரிமை அரசிடமே இருந்தது.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் அரச காணிகளை அனுபவிக்கும் மக்களுக்கு அதன் பூரண உரிமை வழங்கும் வேலைத்திட்டம் “உறுமய” என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சுமார் 20 இலட்சம் விவசாய குடும்பங்களை உத்தேச பயனாளிகளாக அவர்கள் அனுபவிக்கும் அரச காணிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதே உறுமய வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1935ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ், விவசாய தொழில் மற்றும் குடியிருப்பு நோக்கங்களுக்காக நிலமற்ற விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட 17 இலட்சம் உரிமங்களும் 12 இலட்சம் கொடுப்பனவுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

தற்போது, அனுமதிப் பத்திரங்கள் மற்றும் கொடுப்பனவுப் பத்திரங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காக சரியாகப் பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தால், சுய விருப்பப்படி காணியின் சட்டபூர்வ அனுமதிப் பத்திரங்கள் அல்லது கொடுப்பனவுப் பத்திரங்களை அரசாங்கத்திடம் தாங்களாகவே ஒப்படைத்த பிறகு, "உறுமய" திட்டத்தின் கீழ் காணிக்கான முழு உரிமையுடைய உறுதிப்பத்திரங்களை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, உறுமய திட்டத்தின் கீழ், காணியின் முழு உரிமைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு 03 பிரதான கட்டங்களின் கீழ் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படும். இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மக்கள் முன்வைக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கு உரிய நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் "உறுமய" செயற்பாட்டு செயலகம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

# சரியான பாதையில் பயணிக்கும் இலங்கையின் பொருளாதாரம்!

## தொடர்ந்தும் இதே பாதையிலேயே கொண்டு செல்ல வேண்டும்



மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க

பொருளாதார நெருக்கடியின் தற்போதைய நிலை பற்றி மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தினகரனுக்கு வழங்கிய செவ்வி

**எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் இந்தப் பாதையில் மாத்திரம்தான் பயணிக்க வேண்டும் என நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள்?**

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பிற கட்டமைப்புக் கொள்கைகளின் திசையை யாரேனும் மாற்ற முயற்சித்தால், அதனால் இடம்பெறப் போவது மீண்டும் பின்னோக்கித் திரும்புவது மாத்திரமேயாகும். தற்போது நிதிக் கொள்கையின் படி பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் வட்டி விகிதம் கூடிக் குறைந்து செல்கின்றது. அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு, செலவுகளைக் கட்டுப்படுத்த, கடன் பெறுவதைக் குறைப்பதற்கான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றோம். அரசாங்கத்திற்குச் சொந்தமான மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் பாரியளவில் இழப்புக்களை அடைந்துள்ளன. இப்போது செலவு குறைந்த விலை நிலைப்படுத்தும் முறை அமுல்படுத்தப்படுகிறது. அரசு நிறுவனங்கள் முறையாக நஷ்டத்தைச் சந்திக்காத திசையில் நகர்கின்றன. நாட்டின் வரி வருவாய் குறைந்ததாக யாராவது சொன்னால் மீண்டும் கடன் வாங்குவது அதிகரிக்கும். அதன்பின்னர் அதே பழைய தவறான முறையைப் பின்பற்றி நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படும். யார் போனாலும் அடுத்த நான்கு வருடங்களுக்குள் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும், அடுத்த வருடம் மொத்த உள்நாட்டு உற்பத்தி 15% ஆக உயர்த்தப்பட வேண்டும். அதனுடன், பணவீக்கத்தை 5% ஆக வைத்திருக்க வேண்டும். மின்சாரக் கட்டணம், எண்ணெய்க் கட்டணத்தை சர்வதேச அளவில் ஏதேனும் ஒரு முறை மூலம் குறைக்கலாம்.

**2022ம் ஆண்டு நாடு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு, வங்குரோத்து நிலையை அடைந்த ஆண்டாகும். 2023ஆம் ஆண்டு அந்த நிலைமை மாறியதா?**

நாம் ஒரு போதும் பொருளாதார வங்குரோத்து நிலைக்குச் செல்லவில்லை. அரசாங்கமோ, தனிநபர்களோ பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்தாமையே வங்குரோத்து நிலை என்ற சொல்லுக்கு அர்த்தத்தை வழங்குகின்றது. என்றாலும் நாம் 2022ஆம் ஆண்டு கடனில் ஒரு பகுதியை செலுத்துவோம் என்றும், மற்றொரு பகுதியின் கடன் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்றும், மறுசீரமைப்பு செய்யப்பட்டு திருப்பிச் செலுத்தப்படும் என்றும் அறிவித்தோம். இது கடனை செலுத்துவதற்கான தற்காலிக இடைநிறுத்தமே தவிர வங்குரோத்து நிலை அறிவிப்பு அல்ல. ஆனால் பொருளாதார நெருக்கடி இருந்ததை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு, மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தோம். அதுபற்றி எந்த விவாதமும் இல்லை.

**நீங்கள் அவ்வாறு கூறினாலும் அவ்வாறான நம்பிக்கையான நிலையை மக்கள் இன்னும் உணரவில்லையே?**

ஆம். இன்று பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதற்கு ஏற்ற வகையில் நாட்டு மக்களின் வருமானம் இன்னமும் அதிகரிக்கவில்லை. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் போது உணரப்படும் வேதனை நிறைந்த நிலை இன்னமும் இருக்கின்றது. இது ஓரளவுக்கு இலகு படுத்தப்பட்டதே தவிர முழுமையாகக் குறைந்துவிடவில்லை. இதன் நேர்மறையான பிரதிபலன்கள் கிடைப்பதற்கு சில காலம் எடுக்கும். பணவீக்கம் 6 வீதமாகக் குறைந்த போதிலும் பொருளாதாரம் 6 வீதத்துக்கு இன்னமும் வளர்ச்சியடையவில்லை. மக்களின் வருமானம், பொருட்களின் விலை ஏற்றத்துக்கு ஏற்ற வகையில் அதிகரிக்க வேண்டும். அதற்கு சில காலம் எடுக்கும். அதன் பின்னரே பொருட்களின் விலையேற்றத்திற்கு ஏற்றவாறான வருமானம் மக்களுக்கு கிடைக்கும்.

**2024ஆம் ஆண்டில் எம்மால் புதிய எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போகுமா?**

இந்த வருடத்தில் 3 வீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். நாட்டின் உற்பத்தி செயல்முறை 3 வீதமாக அதிகரிக்க வேண்டும். எனவே பொருளாதாரம் அதிகரிப்பது முக்கியமாகும். அதற்கான பின்னணியையே உருவாக்கிக் கொண்டு செல்கின்றோம். அதன் மூலமே மக்களால் ஏதாவது நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும். வருமானம் அதிகரித்தால் மாத்திரம்தான் அரசு ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க முடியும். கடன் வாங்கி சம்பளத்தை அதிகரிக்க முடியாது. இதற்கு சிறிது காலம் எடுக்கும். பொருட்களின் விலை அதிகரிப்பு ஏற்பட்ட மட்டத்துக்கு வித்தியாசத்தை ஈடுகட்டுவதாயின், அரசின் வருமானம் அதிகரிக்க வேண்டும். அதனை ஒரேயடியாகச் செய்ய முடியாது.

**ஒரு பொருளாதார நிபுணராக இந்த நிலை ஏற்படுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று கூறுவீர்களா?**

இந்த ஆண்டு 3% பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால், மக்களின் வருமானம் 8வீதமாவது அதிகரிக்க வேண்டும். அடுத்த ஆண்டில் 5% அதிகரித்தால், மக்களின் வருமானம் 10 வீதமாக அதிகரிக்க வேண்டும். பணவீக்க விகிதம் 5% என்றால், அவற்றின் உண்மையான மதிப்பு மேலும் 5% அதிகரிக்கும். அப்போது பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட இழப்பை மூன்று முதல் நான்கு வருடங்களில் இயல்பு நிலைக்கு கொண்டு வர முடியும். எனவே, இத்திட்டம் தொடர்ந்தால் மட்டுமே எதிர்காலம் வெற்றியளிக்கும். சிலவேளை பணவீக்கம் 15 - 20 வீதமாக அதிகரித்தால், நிலைமை இதனைவிடவும் மிகவும் கடினமாகிவிடும். அப்போது வருமானம் வாழ்வதற்குப் போதுமானதாக இருக்காது. எனவே, இந்த வழியைப் பின்பற்றினால் மட்டுமே, வருமானத்திற்கு ஏற்ப வாழ முடியும்.

**அரசாங்கத்தின் வரிக் கொள்கையின் மூலம் அரசாங்க வருமான அதிகரிப்பை எதிர்பார்க்கலாம் அல்லவா? ஏன் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது?**

அதிகரிப்பு ஏற்படும். மத்திய வங்கியின் ஆளுநர் என்ற வகையில் இது குறித்து நான் கூறுவது சரியல்ல. இது அரச நிதிக் கொள்கை, பாராளுமன்றம், திறைசேரி ஆகியவற்றின் செயற்பாடாகும். அரசின் வருமானத்தை அதிகரித்துக் கொண்டால் அதன் பலனை மக்களால் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு அதிகரித்த வருமானத்தை அத்தியாவசிய விடயங்களுக்கு எவ்வாறு ஒதுக்குவது என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும்.

**எதிர்காலத்தில் வெளிநாட்டுக் கடனை செலுத்தத் தொடங்கிய பின்னர் இதனை விடவும் அதிக சிரமங்களை அனுபவிக்க வாய்ப்பு இருப்பதாக மக்கள் கூறுகிறார்களே?**

அது அவ்வாறு நடக்காது. கடன் மறுசீரமைப்பு முக்கியத்துவம் பெறுவது அதனால் தான். அரச வருமானத்தை விட அதிக கடன் சுமையினைச் செலுத்த வேண்டியிருந்தது. அதனால் அரசாங்கத்தினால் கடனைச் மீளச் செலுத்தமுடியாமல் இருந்தது. அதனால் தற்காலிகமாக கடனைச் செலுத்துவது நிறுத்தப்பட்டது. ஒரு பகுதி மாத்திரம் செலுத்தப்பட்டது. வெளிநாட்டு கடன்கள் மற்றும் வெளிநாட்டு சந்தைகளிலிருந்து பெறப்பட்ட வணிக கடன்களைச் செலுத்துவதே நிறுத்தப்பட்டது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, தொடர்ந்து திருப்பிச் செலுத்தப்பட்டது. 6 பில்லியன் வெளிநாட்டு கடனை செலுத்த வேண்டியிருந்தது. இன்னமும் ஆண்டுக்கு 6 பில்லியன் செலுத்துவதற்கான வாய்ப்பில்லை. எதிர்காலத்தில், முன்னரைப் போல கடனைச் செலுத்த மாட்டோம். அதனைவிடவும் குறைந்த அளவிலேயே செலுத்தப்படும். 3 பில்லியனுக்கும் குறைந்தளவிலாகும்.

**எதிர்காலங்களில் வங்கி வட்டி வீதத்தினை தனி இலக்கத்திற்குள் கொண்டு வர முடியுமா?**

வட்டி வீதங்கள் தங்கியிருப்பது பணவீக்கத்தின் அடிப்படையிலாகும். எதிர்காலத்தில் பணவீக்கம் 5 வீதமாக இருந்தால், நல்ல வாடிக்கையாளர்களால் ஒற்றை இலக்க வட்டி விகிதத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இப்போது பணவீக்கம் 6.4%. ஆனால் பணவீக்கம் 5% ஆக நிலையானதாக இருக்க வேண்டும். அதுவே எங்களின் இலக்காகும். அந்தக் குறிக்கோளைக் கடைப்பிடித்தால், நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அரசின் வருவாய் அதிகரிப்புக்கு ஏற்ப இந்த மாற்றங்கள் அனைத்தும் செய்யப்படலாம்.

**2024ல் மத்திய வங்கியின் பொறுப்பு மற்றும் சவால் பற்றிக் கூற முடியுமா?**

பணவீக்கத்தை 5% ஆக தொடர்ந்து வைத்திருப்பதே எங்கள் முக்கிய நோக்கமாகும். அதே போன்று அதன் மூலம், வைப்பாளர்களுக்கு நியாயமான வட்டியை வழங்கி, கடன் பெறுபவர்களுக்கு இலகுவான வட்டியையும் வழங்கி பொருளாதாரத்தை மீட்டெடுப்பதும் எமது நோக்கமாகும். பணவீக்கம் அதிகரித்தால் அதுதான் எமக்கு சவால். அப்படி நடந்தால் வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு நடக்காது என நாங்கள் நம்புகிறோம். ஏதாவது வகையில் கையிருப்பை அதிகரிக்க வேண்டும். சர்வதேச நெருக்கடிகளால் எண்ணெய் விலை அதிகரிக்கலாம். உற்பத்திச் செயற்பாடுகளை நிறுத்தி, இயற்கை சீற்றங்களால் உணவு உற்பத்தி தடைப்பட்டால் அது எமக்கு சவாலாகும். வங்கி கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை பராமரிப்பது மற்றொரு சவாலாக உள்ளது. உங்கள் வைப்புத்தொகையுடன் வங்கியை நம்பகத்தன்மையுடன் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு.

**மக்கள் விளங்கிக் கொள்ளும் படியான மாற்றங்கள் இந்த வருடத்தில் இடம்பெறுமா?**

கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு இயல்புநிலை ஏற்பட அவகாசம் தேவை. இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை. இதே பாதையில் பயணிக்க வேண்டுமானால் அந்தப் பாதையில்தான் செல்ல வேண்டும். மாறினால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாக நேரிடும். வலி மிகுந்ததாக இருந்தாலும், முடிவுகள் நீண்ட காலம் நீடிக்கும். இதற்கு சிறிது காலம் எடுக்கும். மக்கள் பொறுமையாக இருந்தால் அந்த நிம்மதி அவர்களுக்குக் கிடைக்கும். இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளான நாடுகள் பல ஆண்டுகள் கடந்தும் இன்னமும் அதிலிருந்து மீளவில்லை. நாம் ஒப்பீட்டளவில் குறுகிய காலத்திற்குள் அந்தப் பாதையில் பயணித்துள்ளோம். அந்த நிலையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்

சுபாஷினி ஜயரத்ன
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# கடினமான பாதையாக இருந்தாலும் மாற்றுவழி எதுவுமே கிடையாது!

## துறைமுகங்கள், கப்பல்துறை, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பேட்டி

**'நாட்டை பொருளாதார ரீதியில் மீட்பதற்காக தற்பொழுது அரசாங்கம் பயணம் செய்து வருகின்ற பாதைக்கு மாற்றுவழி எதுவுமே கிடையாது. இது கடினமான பாதையாக இருந்தாலும், அப்பாதையில் பயணித்தே ஆக–வேண்டும்' என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து எமக்கு அமைச்சர் பேட்டி வழங்கினார்.**

**கே: வருவாய் ஈட்டும் விடயத்தில் துறைமுகம் எட்டியுள்ள அடைவுகள் குறித்து திருப்தியடைகின்றீர்களா?**

பதில்: மிகவும் திருப்தியடைய முடியும். நல்ல வருமானம் ஈட்டி வருகின்றோம். நாட்டின் பொருளாதார மையமாக துறைமுகம் காணப்படுகிறது. நமது நாட்டில் கொள்கலன் மீள்ஏற்றுமதி நடவடிக்கைகள் 1981 இல் ஆரம்பமாகிய போதும், தற்போது எமது கொள்கலன் மீள்ஏற்றுமதி நடவடிக்கைகள் மிகவும் உச்சமட்டத்துக்குச் சென்றுள்ளன. ஆண்டுக்கு 8.5 மில்லியன் கொள்கலன்களை மீள்ஏற்றுமதி செய்து வருகிறோம். உலகின் சிறந்த கொள்கலன் மீள்ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இலங்கை இருக்க வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு. பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் இந்தியாவில் உள்ள சிறிய துறைமுகங்களில் இருந்து இந்த நாட்டுக்குக் கொண்டு வரப்படும் கொள்கலன்கள் பெரிய கப்பல்கள் மூலம் மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும், பெரிய கப்பல்கள் மூலம் நாட்டுக்கு கொண்டு வரப்படும் கொள்கலன்கள் சிறிய கப்பல்கள் மூலம் சிட்டகாங் போன்ற துறைமுகங்களுக்கு மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**கே: துறைமுகத்தின் வளர்ச்சியை சுருக்கமாக விபரிக்க முடியுமா?**

பதில்: எங்களிடம் ஜயா கொள்கலன் முனையம் மாத்திரமே இருந்தது. தற்போது துறைமுகத்தில் இரண்டு தனியார் முனையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், அதானிக்கு முனையொன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், 580 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புதிய முனையம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கு சுமார் 400 மில்லியன் டொலர் செலவிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த மாதம் பாரம்தூக்கிகளை அதன் செயல்பாட்டுக்கு கொண்டு வருவோம். இந்த ஆண்டு அதன் செயல்பாடுகளை தொடங்க முடியும் என எதிர்பார்க்கின்றோம். அதன் மூலம் இங்கு நடவடிக்கைகளுக்காக அதிக கப்பல்களை ஈர்க்க முடியும். அதன் மூலம், இந்த ஆண்டு 10 மில்லியன் கொள்கலன்களாகவும், பின்னர் 15 மில்லியனாகவும், பின்னர் 25 மில்லியனாகவும் வளர வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. கப்பல்கள் இங்கு கொள்கலன்களை விரைவாக இறக்கிவிட்டு புதிய கொள்கலன்களுடன் வெளியேற விரும்புகின்றன.

**கே: துறைமுகத்தின் பணி மெதுவாக முன்னெடுக்கப்படுவது கப்பல்களின் வருகைக்கு இடையூறாக இருக்கின்றதல்லவா?**

பதில்: ஆம், அதற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஏற்பாடு செய்துள்ளோம். குறிப்பாக, துறைமுக செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கி வருகிறோம். துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் போது கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒரு இடத்தில் சுங்கம், இன்னொரு இடத்தில் துறைமுகப் பணிகள். இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் வெவ்வேறு இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இறக்குமதியாளர்கள், கப்பல் நிறுவன முகவர்கள் பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. அனைத்து செயல்பாடுகளையும் ஒரே இடத்தில் இருந்து சாத்தியமாக்கும் வகையில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும். அது மட்டும் அல்ல, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தற்போது 22 மாடிக்கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதன் மூலம் பல்வேறு இடங்களில் உள்ள துறைமுகத்தின் அனைத்து அலுவலகங்களும் ஒரே இடத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. இது நிர்வாக ரீதியாகவும் துறைமுகத்தின் வாடிக்கையாளர்களுக்கும் மிகவும் வசதியானது. அதுமட்டுமன்றி, துறைமுகத்துடன் இணைக்கப்பட்ட கோபுரங்களில் கட்டப்பட்டு வரும் விமான நெடுஞ்சாலையின் 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. அதை இந்த ஆண்டு அப்பணிகளை பூர்த்தி செய்ய முடியும். அப்போது துறைமுகத்திற்கு வரும் போக்குவரத்து 90 வீதம் குறையும்.

**கே: ஒலுவில் துறைமுகம் பாரிய செலவில் நிர்மாணிக்கப்பட்ட துறைமுகமாக இருந்தாலும் இதனால் கிடைக்கும் பயன்கள் தொடர்பில் கேள்வி உள்ளது அல்லவா?**

பதில்: அந்தத் துறைமுகம் எங்களால் வெற்றிகரமான முடிவுகளைப் பெற முடியாத நிலையில் உள்ளது. எனவே, அந்தத் துறைமுகத்தை மீன்பிடி அமைச்சிடம் ஒப்படைத்தோம்.

**கே: அரசாங்கம் பயணிக்கும் திசையை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பதில்: பொருளாதாரத்தைமீட்டெடுப்பதோ அல்லது நாட்டை மீட்டெடுப்பதோ ரோஜா படுக்கையில் ஆற்றக்கூடிய விடயமல்ல. நிச்சயமாகக் கடினமான பாதையாக உள்ளது. நாமும் விருப்பத்துடன் செல்வதில்லை. அந்த வழியைத் தவிர வேறு வழியில்லை எமக்கு. பொருளாதார வேலைத்திட்டத்தை மேம்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கிறோம். ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மாத்திரமே உறுதுணையாக உள்ளது. மாற்றுவழி இல்லையென்பதால் கடினமான பயணத்தை நாம் நிச்சயமாகத் தொடர்ந்தே ஆகவேண்டிய கடப்பாடு ஏற்பட்டுள்ளது. நமது நாட்டை பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வர வேண்டும். சர்வதேச நாணய நிதியத்திற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தாங்கள் பதவிக்கு வந்த பிறகு நிலைமைகள் மாற்றப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார். சர்வதேச நாணய நிதியம் என்பது அரசியல் கட்சிகளுக்கு ஏற்ப நிலைமைகள் மாற்றப்படும் இடம் அல்ல.

**கே: நாட்டின் அபிவிருத்தி தடைப்பட்டுள்ளது அல்லவா?**

பதில்: அபிவிருத்திப் பணிகளுக்கு பணம் கொடுப்பது நிறுத்தப்பட்டது. எனினும் இதுவரை 250 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் கிராமத்தை நிர்மாணிப்பவர்களும் வெலிகொட பிரதேச மக்களும் வருமானம் ஈட்ட முடியும்.

**கே: ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறவுள்ளது. நாட்டின் அரசியல் சூழலுக்கு ஏற்ப சிரேஷ்ட அரசியல்வாதியாக இந்த நிலைமையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: ஜனாதிபதியை நாட்டின் தலைவராக நாங்கள் மதிக்கிறோம். ஏனெனில் முன்னைய ஜனாதிபதியின் இராஜினாமாவுடன் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ஏற்குமாறு கோரிய போதும் ஏனைய கட்சித் தலைவர்கள் அனைவரும் பயந்து பின்வாங்கினர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க முன்வந்து சவாலை ஏற்றுக்கொண்டார். அத்துடன், அன்றைய ஜனாதிபதி கோட்டாபயவின் இராஜினாமாவுடன் அவர் ஜனாதிபதியாக பதவியேற்று நாட்டுக்குத் தேவையான கடமைகளை நிறைவேற்றினார். திவாலான நாட்டை மீட்க அவர் எப்படி உழைத்தார் என்பது எங்களுக்குத் தெரியும். எனவே, நாட்டு மக்கள் சரியான நேரத்தில் சரியான பதிலை வழங்குவார்கள்.

**ஏனைய கட்சித் தலைவர்கள் அனைவரும் பயந்து பின்வாங்கிய போது முன்வந்து சவாலை ஏற்றுக் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க!**



**நாட்டை மீட்டெடுப்பது ரோஜா படுக்கையில் ஆற்றக்கூடிய விடயமல்ல. அது நிச்சயமாக கடினமான பாதையாக உள்ளது. நாமும் விருப்பத்துடன் செல்வதில்லை. ஆனால் அந்த வழியைத் தவிர வேறு வழியில்லை!**

---

# பா.ஜ.கவை வீழ்த்துவதற்கு வகுத்த வியூகம் தகர்ந்தது!



**பா.ஜ.கவின் கைகளுக்கு மீண்டும் இலகுவாகக் கிடைக்கப் போகின்றது வெற்றிக்கனி!**

இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் ஆதரவுடன் மீண்டும் 9 ஆவது முறையாக பீஹாரில் முதலமைச்சராக பதவி ஏற்றிருக்கிறார் நிதீஷ்குமார். கடந்த 23 ஆண்டுகளில் 4 ஆவது முறையாக பா.ஜ.க கூட்டணிக்கு தாவியுள்ளார் நிதிஷ்குமார் என்பது வியப்பான செய்தியாகும்.

'மகாகத்பந்தன்' கூட்டணியில் இருந்து வெளியேறி 9 ஆவது முறையாக பா.ஜ.க எம்.எல்.ஏக்கள் ஆதரவுடன் பீஹார் மாநிலத்தின் முதல்வராக தலைநகர் பாட்னாவில் கடந்த வாரம் நிதிஷ்குமார் பதவியேற்றுள்ளார்.

பீஹார் மாநில முதல்வரும், ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவருமான நிதிஷ்குமார், கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும், 2020 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலிலும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்து ஆட்சியைப் பிடித்தார்.

இந்நிலையில் தேர்தல் வெற்றிக்குப் பின்பு, பா.ஜ.க கூட்டணியில் இருந்து விலகி ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியுடன் கூட்டணி சேர்ந்து முதல்வராக தொடர்ந்து வந்தார். அதுதவிர, அகில இந்திய அளவில் 'இந்தியா' கூட்டணியிலும் அங்கம் வகித்து வந்தார் நிதிஷ்குமார்.

பதவி ஏற்பு நிகழ்வு முடிந்த பிறகு செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய நிதிஷ்குமார், "எங்கு இருந்து சென்றேனோ, அங்கேயே மீண்டும் வந்துள்ளேன்" எனத் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து பா.ஜ.க தலைவர்களான சாம்ராட் சவுத்ரி, சபாநாயகர் விஜய் குமார் சின்ஹா ஆகியோர் துணை முதல்வராகப் பதவியேற்றுள்ளனர்.

"கூட்டணி இனி அப்படியே இருக்கும். இன்று எட்டு பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். மேலும் மீதமுள்ளவர்கள் விரைவில் பதவியேற்பார்கள். சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜய் சின்ஹா ஆகியோர் துணை முதல்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்" என நிதீஷ்குமார் தெரிவித்தார்.

பா.ஜ.கவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக எதிரணிகள் ஒன்றிணைந்து ஏற்படுத்தியுள்ள 'இந்தியா' என்ற பெயரிலான கூட்டணியில் நிதிஷ்குமாரும் ஒருவராக இருந்தார். அவர் மீது பெரும் நம்பிக்கை வைக்கப்பட்டிருந்த நிலையில், குத்துக்கரணம் அடித்து 'இந்தியா' கூட்டணியிலிருந்து விலகி தேசிய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் நிதீஷ்குமார் .

லாலு பிரசாத் யாதவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் அவ்வப்போது கூட்டணிகளை மாற்றிக் கொண்டு வந்தார் நிதீஷ்குமார். இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் காலத்துக்குக் காலம் கூட்டணி மாறுவது சகஜமானது. ஆனால் நிதிஷ்குமாரின் அரசியல் போக்கு சந்தர்ப்பவாதம் நிறைந்தது என்றுதான் இந்திய அரசியலில் கருத்து நிலவுகின்றது. 18 மாதங்களுக்கு முன்பு பா.ஜ.கவுடன் முரண்பாடு கொண்டு, ராஷ்டீரிய ஜனதா தளத்துடன் கூட்டணி சேர்ந்து மீண்டும் முதல்வர் ஆகியவர் நிதிஷ்குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆளும் பா.ஜ.கவையும், ஃபாசிசத்தையும் வீழ்த்தப் போவதாகக் கூறி 'இந்தியா' என்ற கூட்டணியை உருவாக்கியதால் நிதிஷ்குமார் மீது பெரும் எதிர்பார்ப்பு உருவாகியிருந்தது. அக்கூட்டணி வெற்றிபெறும் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனால் அந்த நம்பிக்கை இப்போது கவிழ்ந்து விட்டது.

இதனிடையே பீகாரில் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. லாலு, தேஜஸ்வி யாதவுடன் முரண்பட்டு மீண்டும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்து முதலமைச்சராக பதவியேற்றிருக்கிறார் நிதிஷ்குமார்.

'இந்தியா' கூட்டணியில் இருந்து நிதிஷ்குமார் வெளியேறியிருப்பது அந்தக் கூட்டணிக்கு பெரும் பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது. நிதிஷ்குமாரின் இந்த முடிவு காங்கிரஸ் கட்சிக்கும் கூட்டணிக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

மத்தியில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்து வரும் பா.ஜ.கவை வீழ்த்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எதிர்க்கட்சிகள் 'இந்தியா' கூட்டணியை அமைத்தன. காங்கிரஸ், தி.மு.க, சமாஜ்வாடி, திரிணாமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம் என 28 கட்சிகள் இந்தக் கூட்டணியில் இணைந்தன.

எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியை முழுமூச்சாக முன்னெடுத்தவர் நிதிஷ்குமார். 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் முதல் கூட்டம் பாட்னாவில்தான் நடைபெற்றது. 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேசத்தொடங்கிய போது பிரச்சினை ஏற்பட்டது.

இதனால், மம்தா பானர்ஜி மேற்கு வங்காளத்தில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்தார். மறுநாளே கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மியும் பஞ்சாப்பில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்தது. இதனால், 'இந்தியா' கூட்டணியின் எதிர்காலம் இனிமேல் என்ன ஆகும் என்று அரசியலில் விவாதங்கள் அதிகரித்தது வந்த நிலையில், கூட்டணியை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்த நிதிஷ்குமாரும் அந்தக் கூட்டணியில் இருந்து இப்போது விலகி விட்டார்.

இது 'இந்தியா' கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு கடும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.



**பிளவடைந்தது 'இந்தியா' கூட்டணி!**

**நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து பிரதமர் நரேந்திர மோடியை வீழ்த்துவதற்கு எதிரணியை ஒன்றுதிரட்டிய நிதீஷ்குமார் பா.ஜ.கவுடன் இணைந்து முதல்வரானார்!**

இந்தியா கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு தன்னை முன்னிறுத்தவில்லை என்ற அதிருப்தியால் நிதிஷ்குமார் இந்த முடிவை எடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

"பா.ஜ.கவுடன் இனிச் சேருவதற்குப் பதிலாக உயிரை விடுவேன்" என நிதிஷ்குமார் ஓராண்டுக்கு முன்னர் பேசியிருந்தார். ஆனால், ஓராண்டில் தனது நிலைப்பாட்டை அப்படியே தலைகீழாக நிதிஷ்குமார் மாற்றியது 'இந்தியா' கூட்டணி கட்சிகளை அதிர்சியில் உறைய வைத்துள்ளது.

மறுபக்கம் பா.ஜ.கவோ, இந்தியா கூட்டணி உடைந்து விடும் என்று சொல்லிக்கொண்டே வந்தது. தற்போது 'இந்தியா' கூட்டணியில் இருந்து முக்கிய கட்சிகள் வெளியேறியிருப்பதை மகிழ்ச்சியோடு ரசித்துக் கொண்டு இருக்கிறது பா.ஜ.க.



இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே எஞ்சியிருக்கும் இந்நிலையில், நிதிஷ்குமார் தற்போது எடுத்துள்ள முடிவு 'இந்தியா' கூட்டணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தலாம் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். பா.ஜ.கவுக்கு எதிராக வியூகம் வகுத்துள்ள மகாகூட்டணியில் இருந்து நிதிஷ்குமார் வெளியே வந்துள்ளதால் 'இந்தியா' கூட்டணி கவலையில் உள்ளது.

பீகாரில் ஏற்பட்டுள்ள அரசியல் அதிரடியைக் காரணம் காட்டி மாநிலக் கட்சிகள் இனிமேல் காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீட்டில் கெடுபிடி காட்டும் வாய்ப்பு உள்ளதாக அனுமானிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில், மோடியின் செல்வாக்கு மற்றும் பல மாநிலங்களில் ஆளும் கட்சியாக இருக்கும் பலத்துடன் பா.ஜ.க தேர்தலை சந்திக்க உள்ளது. அதேவேளையில், 'இந்தியா' கூட்டணியோ நிதிஷ்குமார் வெளியேறி இருப்பதால் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

முதல்வராகப் பொறுப்பேற்றதும் செய்தியாளர்களிடம் பேசிய நிதிஷ்குமார், "நான் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வந்து விட்டேன். இனி எங்கேயும் செல்வதற்கான கேள்வியே இல்லை" என்று கூறியுள்ளார்.

பீகாரில் கடந்த 2020 சட்டமன்றத் தேர்தலின் போது தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இணைந்து நிதிஷ்குமார் தேர்தலைச் சந்தித்தார். இந்தத் தேர்தலில் பா.ஜ.க 78 தொகுதிகளிலும் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் 45 தொகுதிகளையும் வென்றன. அங்கு மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் பெரும்பான்மைக்கு 122 தொகுதிகளில் வெற்றி பெறுவது அவசியம். பா.ஜ.கவை விட குறைந்த இடங்களில் வென்றாலும் நிதிஷ்குமாருக்கு முதல்வர் பதவி கிடைத்தது விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்.சாரங்கன்...

# ஜோதிர்லிங்க அருங்காட்சியக அங்குரார்ப்பண விழா நாளை

ஜோதிர்லிங்க அருங்காட்சியகம் அங்குரார்ப்பண விழா நாளை திங்கட்கிழமை (05) காலை 9.00 மணிக்கு பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம், 10ஆம் வட்டாரம், கொக்கட்டிச்சோலையில் நடைபெறும்.

ஆன்மிக அதிதியான 50 வருட தவயோகி, தெய்வீக சகோதரர், அவுஸ்திரேலியாவிலுள்ள பிரம்ம குமாரிகள் நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சார்லி ஹொஃஹ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொள்ளவுள்ளதாக, விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவின் பழமையான சக்தி நிறைந்த 12 ஜோதிர்லிங்க சிவாலயங்களிலுள்ள சிறப்பு வாய்ந்த 12 ஜோதிர்லிங்கங்களின் மாதிரிகளே பக்தர்களின் தரிசனத்துக்காக அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரம் 05 புலமைப்பரிசில்
# மாணவர்களுக்கான பாராட்டு விழா

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று (04) பிற்பகல் 3.45 மணிக்கு கிரான்ட்பாஸ் சென். ஜோசப் ஆண்கள் பாடசாலையில் நடைபெறும்.

பிரதம அதிதிகளாக பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, விசேட விருந்தினர்களாக கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் றோசி சேனநாயக்க, ஈரான் கலாசார நிலையத்தின் கலாசார உத்தியோகத்தர் கலாநிதி முஸம்மில், கௌரவ அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் காசிம் உமர் ஆகியோர் கலந்துகொள்வர்.

## சாந்தனை அழைத்துவர கோரிக்கை
# சாதகமாக பரிசீலிப்பதாக ஜனாதிபதி ரணில் உறுதி
## ஜனாதிபதியை சிறிதரன், மனோ சந்தித்து பேச்சு




இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை பெற்றுள்ள சாந்தன் இலங்கைக்கு வருவதற்கு மனிதாபிமான அடிப்படையில் அனுமதிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் சி.சிறிதரன் மற்றும் தமிழ் முற்போக்குகூட்டணிதலைவர்மனோ கணேசன் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை நண்பகல் ஜனாதிபதியை நேரில் சந்தித்த போதே, அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக சாதகமாக பரிசீலித்து, சாந்தன் இலங்கை வந்து இவரது வயதான தாயை சந்திக்கும் வாய்ப்பை தருவதாக, கட்சித் தலைவர்கள் இருவரிடமும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்புக்கான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்னாயக்கவுக்கு, இரு தலைவர்கள் முன்னிலையில் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சாந்தனின் தாயாரின் கோரிக்கை கடிதம் மற்றும் மேலதிக தகவல்களை தருமாறும் இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் சிறிதரனிடம் ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் ஜனாதிபதியின் பெஜட் வீதி அலுவலகத்தில் இந்த சந்திப்பு நேற்று நண்பகல் நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

# மின் இணைப்பை மீளப் பெற்றுக்கொள்ள ஹாசிம் உமர் பௌண்டேஷனால் உதவி



காத்தான்குடி மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, மீள் இணைப்பை பெற்றுக்கொள்ள வசதியற்றுள்ள குடும்பங்களுக்கு ஹாசிம் உமர் பௌண்டேஷனின் அனுசரணையில் மீள் மின் இணைப்பு பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது.

வறுமைக் கோட்டுக்கு கீழுள்ளவர்களுக்காக புனித றமழானை முன்னிட்டு இந்த நலனுதவித் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, காத்தான்குடி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் அல்ஹாஜ் ரீ.எல்.ஜவ்பர் கான் தெரிவித்தார்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டு மீள் இணைப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையுடையோர், மின்சாரம் துண்டிக்கப்பட முன்னர் இலங்கை மின்சார சபையால் வழங்கப்பட்ட சிவப்பு அறிவித்தலுடன் அல்லது ஏனைய ஆதாரங்களுடன் 0757916018 என்ற கையடக்கத் தொலைபேசி எண்ணுக்கு தொடர்புகொள்ளுமாறும், அவர் கேட்டுக் கொண்டார்.

## 'அஸ்வெசும' திட்டத்தை...

பெறும் மக்களுக்காக 'அஸ்வெசும' திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்நிலையில் 'அஸ்வெசும' திட்டத்தை விரைவில் முன்னெடுத்து, மக்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு சில குழுக்களால் தாமதப்படுத்தப்படுவதாக தெரியவருவதால் உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார். 'அஸ்வெசும' நிவாரணம் கிடைக்காதோரின் முறைப்பாடுகளை முன்வைத்து, அத்திட்டத்தின் கீழ் புதிதாக பதிவு செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

## மீண்டு வந்த இந்தப் பாதையில்...

கொண்டாடும் போது, வங்குரோத்து அடைந்த நாடென்று முத்திரை குத்தப்பட்டிருந்தோம். ஆனால் 76ஆவது சுதந்திர தினத்தில் பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும், அந்நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டுவர முடிந்துள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் துன்பங்களை சகித்துக் கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நீண்டகால வேலைத்திட்டத்துக்கு ஆதரவளித்ததால், எம்மால் மெதுவாக முன்னேற முடிந்தது. இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லும் போது, சிரமங்கள் யாவும் மறைந்துவிடும். வாழ்க்கைச்சுமை குறையும். பொருளாதாரம் வலுவடையும். இலங்கைத் தாய்க்கு மீண்டும் விடிவு கிட்டும்.

1948 இல் இலங்கை சுதந்திர நாடாக மாறிய போது, இலங்கை கீழைத்தேய பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டுமென்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதற்கான அனைத்து பின்னணி காரணிகளும் எங்களிடம் இருந்தன. ஆனால் இறுதியில் நாம் வங்குரோத்து அடைந்த நாடாக மாற நேரிட்டது. கடந்தகால தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது. நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பெருமைமிக்க பணிக்கு இலங்கையிலும் நாட்டுக்கு வெளியிலும் வாழும் அனைத்து இலங்கையர்களும் தங்களால் முடிந்தளவு பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சுதந்திர தின செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

## சுதந்திரத்தை பாதுகாப்பது...

1948வரை ஆங்கிலேயராலும் முழுமையாக காலனித்துவப்படுத்தப்பட்டிருந்த நாம், 1948 பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திரத்தை பெற்றுக்கொண்டோம். அவ்வாறு சுதந்திமடைந்து இவ்வருடம் பெப்ரவரி 4ஆம் திகதியுடன் 76 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

உயரிய சுதந்திரத்துக்காக நாடு எதிர்கொண்ட அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள, கடந்தகாலம் தொட்டு இன்றுவரை உயிர்த்தியாகம் செய்த அனைத்து தேசப்பற்றாளர்களுக்கும் தேசத்தின் மரியாதையும் அஞ்சலியும் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்று 76 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பெற்ற சுதந்திரத்தை தேசிய, சமூக, கல்வி, மத ரீதியிலாக அர்த்தமுள்ளதாக்க நாம் தவறிவிட்டோம். 1948 இலிருந்து 76 வருடங்களாக பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, நாம் பெற்ற அரசியல் சுதந்திரத்தை பொருளாதார மற்றும் சமூக சுதந்திரமாக மாற்றும் பொறுப்பு எமக்குள்ளது.

ஆனால் துரதிஷ்டவசமாக குறுகிய பேதங்கள் போலவே, இனவாத மற்றும் மதவாத உணர்வுகளுடன் அரசியல் களம் மிகவும் அழுக்கடைந்து போயுள்ளமையால், நாம் ஒரு நாடாக பிரிந்து பல துரதிஷ்டவசமான அவலங்களை எதிர்கொண்டோம்.

ஒரு நாடாக அடைந்த சாதனைகள், பின்னடைவுகள் மற்றும் தோல்விகளை கடந்த 76 ஆண்டுகளில் நமக்கு நல்ல பாடங்களை போதித்திருக்கின்றன.

மக்களின் சுதந்திரத்துக்கு தடைவிதிக்கும் சட்டங்களை நிறைவேற்றி, தற்போதைய ஆட்சியாளர்கள் நடந்துகொள்ளும் விதம், நாம் பெற்றுள்ள சுதந்திரத்தினுள் உரிமையாக்கிக் கொண்ட ஜனநாயக ஆட்சியை சர்வாதிகாரமாக மாற்றும் முயற்சியாகும்.

இந்த முயற்சியை முறியடிக்க நாட்டின் சுதந்திரத்துக்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் சகல சக்திகளும் ஒன்றிணைய வேண்டியது இந்த சுதந்திர தினத்தில் நமது அபிலாஷையாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன்" என்றார்.

## இலங்கை தாய்லாந்துக்கிடையிலான...

ஏற்றுமதி நாடாக காணப்படும் தாய்லாந்து 71.6 மில்லியன் சனத்தைகையை கொண்டிருக்கிறது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதியான தேயிலை, மிளகு, தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களுக்கான கட்டண தீர்வை வரியை தாய்லாந்து விதித்துள்ளது. இலங்கை 2022ஆம் ஆண்டில் 58.82 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்தது. 2022ஆம் ஆண்டில் 495 மில்லியன் அமெரிக்க டொலரை மொத்த தேசிய வருமானமாக ஈட்டிய ஆசியான் (ASEAN) நாடாக தாய்லாந்து காணப்படுகிறது.

தாய்லாந்து நாடுகள் 17.3 மில்லியன் அமெரிக்க டொலரை வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்த நிலையில் 2021ஆம் ஆண்டில் ஆசியான் சங்கத்தில் மிகப்பெரிய முதலீட்டு நாடாகவும் தாய்லாந்து மாறியிருந்தது. 2005 2022 வரையான காலப்பகுதியில் இலங்கையில் தாய்லாந்து 92 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நேரடி முதலீடுகளை மேற்கொண்டிருக்கிறது.

2018ஆம் ஆண்டில் 550 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்ட இருதரப்பு வர்த்தக பெறுமதியை 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்வரை மூன்று மடங்காக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தமும் இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான முதன்மை சாத்தியமாக காணப்படுகிறது.

இந்த ஒப்பந்தம், பொருட்கள் வர்த்தகம், வர்த்தக சட்ட அனுமதி, சுகாதார மற்றும் மூலிகை சுகாதார செயன்முறைகள், வர்த்தகத்துக்கான தொழில்நுட்பத் தடைகள், வர்த்தகத் தீர்வுகள், சேவை வர்த்தகம், முதலீடுகள், சுங்கச் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை இலகுபடுத்தல், பொருளாதார ஒத்துழைப்பு, அறிவுசார் சொத்துகளின் உரிமம், அடிப்படை ஏற்பாடுகள், நிறுவன மற்றும் இறுதி செய்யப்பட்ட ஒதுக்கீடுகள், வெளிப்படைத்தன்மை மற்றும் பிரச்சினைகளை தீர்த்தல் உள்ளிட்ட துறைகளை உள்வாங்கும் வகையில் 14 அத்தியாயங்களுடன் கூடிய விரிவான 09 சுற்றுகளில் வர்த்தக பேச்சுவார்த்தைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவை ஒப்பந்தமும் இங்கு கைச்சாத்திடப்பட்டது. 1950 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை வலுப்படுத்தும் வகையிலும், இந்த புதிய ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவை உறவுகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்தும் வகையிலும் கையெழுத்தானது.

இலங்கை தரப்பில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் தாய்லாந்துக்கான பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜக்கபொங் சங்மானி(Jakkapong Sangmanee) ஆகியோர் இதில் கைச்சாத்திட்டனர்.

இலங்கை இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI) மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் ஆபரண நிறுவனம் (GIT) ஆகியவற்றுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இதன் பின்னர் கைச்சாத்திடப்பட்டது.

## பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து...

இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"தமிழ்க் கட்சிகள் 5 ஒன்றிணைந்து ஓரணியில் பொதுச் சின்னமான குத்துவிளக்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஏற்கெனவே தமிழரசுக் கட்சியின் தனிச் சின்னத்தில் நாம் பயணித்தோம். பல வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பயணித்தோம்.

உள்ளூராட்சிமன்றம் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட வேண்டுமென்று அவர்கள் வெளியில் சென்ற காரணமாகவும் நாம் ஒன்றாக நிற்க வேண்டுமென்ற காரணமாகவும் நாம் ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

எம்மை பொறுத்தவரையில் நாம் அனைவரும் பொதுச் சின்னமொன்றில் பயணிக்க வேண்டுமென்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறிதரனின் கூற்றை நான் வரவேற்கிறேன். பொதுச் சின்னமொன்றில் நாம் அனைவரும் அணிதிரள்வோம்.

பொதுச் சின்னத்துக்கு வீட்டுச் சின்னம் கூட மாற்றப்பட்டால் எமக்கு ஆட்சேபனை இல்லை. தனிப்பட்ட கட்சிக்குள் கூட்டாக இருப்பது நன்றாக அமையாது" எனத் தெரிவித்தார்.

## கடினமான தடைகளை...

செய்தியில் தெரிவித்தார். எமது முன்னோர்கள் கீர்த்திமிக்கதொரு வரலாற்றை எம்மிடம் கையளித்துச் சென்றனர். அவர்களது வழிவந்த நாம், அந்த கீர்த்திமிக்க வரலாற்றை எமது அடுத்த தலைமுறைக்கு அர்த்தமிக்க வகையில் கையளிக்க வேண்டியது எமது பொறுப்பாகுமென்றும், பிரதமர் தெரிவித்தார்.

காலம்காலமாக அந்நிய, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளுக்கு முகங்கொடுத்து, யுத்தத்தாலும், இரத்தம் மற்றும் வியர்வை சிந்தியும், பல்வேறு போராட்டங்களாலும், அறிவு ஞானத்தாலும் போஷிக்கப்பட்ட சுதந்திரத்தின் 76ஆவது ஆண்டை இன்று நாம் கொண்டாடுகிறோம்.

1818 மற்றும் 1848ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்கள் முதல் 1948ஆம் ஆண்டுவரை சமய மற்றும் சமூக தேசியத் தலைவர்கள் மேற்கொண்ட சிந்தனை மற்றும் புரட்சிப் போராட்டங்களின் விளைவாக நாம் 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றோம். இந்தத் தருணத்தில் நாம் அவர்களை பெருமையுடன் நினைவுகூர்வோம்.

அந்த சுதந்திரத்தின் பின்னரும் கூட, 1956ஆம் ஆண்டு மக்கள் எழுச்சி, 1972ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பின் மூலம் கிடைத்த முழுமையான சுதந்திரம், மூன்று தசாப்தகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர தம் இன்னுயிர்களை தியாகம் செய்த படைவீரர்களை இந்தத் தருணத்தில் நாம் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

எமது நாடு பாரியதொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்து, மெல்ல மெல்ல சரியான இலக்கை நோக்கி திரும்பிக்கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்திலேயே இவ்வருட சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம்.

இந்தச் சவால்களை வெற்றிகொண்டு சுபீட்சமானதொரு தேசத்தை கட்டியெழுப்பும் உறுதியுடன், இந்த 76ஆவது தேசிய சுதந்திர தினம் நாட்டின் பொருளாதாரத்தில் புதியதோர் திருப்புமுனையாக அமையவுள்ளது.

அந்தப் போராட்டங்களின் அடிப்படையில் சுதந்திரத்தை பாதுகாத்து, நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம்" எனத் தெரிவித்தார்.

## ஐ.தே.க. தேர்தல் நடவடிக்கை குழு...

இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஐ.தே.க.வின் கொழும்பு மாவட்ட முகாமையாளர் லசந்த குணவர்தன, ஐ.தே.க.வின் நிறைவேற்று பணிப்பாளர் சமல் செனரத் மற்றும் செயற்குழு உறுப்பினராக கிருஷான் தியடோர் ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து, கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதே ஐ.தே.க. தேர்தல் நடவடிக்கைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்பாகுமெனவும், அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐ.தே.க.வின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இந்தக் குழுவினூடாக முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் குழுவுடன் இணைந்து பணியாற்ற மேலும் சில குழுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாகவும், அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கியுள்ள ஜனாதிபதி, தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களை வழங்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

## அமைச்சர் கெஹெலியவுக்கு...

நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தரமற்ற மருந்து இறக்குமதி வழக்கு தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சரிடம் 10 மணிநேரத்துக்கும் மேலாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி விவகாரம் தொடர்பிலேயே முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் பெற்றுக்கொடுக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமையவே முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரானார்.

## வான், கடல் வழி கண்காணிப்புக்கு...

அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அமெரிக்க தூதுக்குழுவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

எல்லைக் கட்டுப்பாட்டு கட்டமைப்பை இலவசமாக பெற்றுக்கொடுப்பது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டதுடன், இதன் உதவியுடன் நாட்டுக்குள் நுழைபவர்கள் மற்றும் நாட்டிலிருந்து வெளியேறுபவர்களை இலகுவில் அடையாளம் காண முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்கள் பற்றிய தகவல்கள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை இந்தக் கட்டமைப்பின் மூலம் தானாகவே அடையாளம் காணக்கூடிய வசதி உள்ளமை தொடர்பாகவும் குற்றச்செயலை புரிந்துவிட்டு நாட்டை விட்டு தப்பிச்செல்ல முற்படுபவர்களை இந்தக் கட்டமைப்பின் உதவியுடன் தடுப்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன், இது எமக்கு உகந்ததா? அல்லது இல்லையா? என்பது தொடர்பாக அரசாங்கம் கவனத்தில் கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

## எங்கள் கருத்து...

# இன ஐக்கியம் நிறைந்ததொரு தேசத்தை உருவாக்குவோம்!

கடந்த சுமார் ஏழு தசாப்த காலமாக நாம் ஐக்கியப்படாத சமூகங்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகின் பார்வையில் எமது தாயகம் இனமுரண்பாடுகள் மிகுந்த தேசமாகவே இன்றும் நோக்கப்படுகின்றது.

எமது அரசியல்வாதிகளில் பலர் இனமுரண்பாடுகளை தமக்கு சாதமாக வைத்தே தங்களது அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்றனர். மக்களிடையேயான முரண்பாடுகளுக்கு மதத்தை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகளே காரணமாக அமைந்துள்ளதால், அப்பேதங்களை அரசியல்வாதிகள் பலர் கெட்டியாகப் பற்றிப்பிடித்தவாறு சுயநல அரசியல் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதுமாத்திரமன்றி, தங்களது மதமே உயர்வானதென்ற சிந்தனை கொண்ட பலர் நம்மத்தியில் உள்ளனர். மற்றைய மதங்களை சமூக ஊடகங்கள் ஊடாக கேவலப்படுத்துகின்ற இழிவான குணமும் அவர்களிடம் காணப்படுகின்றது. சமூகங்கள் மதரீதியில் தங்களை தனித்துவமாக்கிக் கொள்ள முற்படுவதே இனரீதியான பிளவுக்குக் காரமாக அமைகின்றது.

எமது இலங்கைத் தாயகம் அந்நிய ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்று 76 ஆண்டுகள் சென்ற போதிலும் ஐக்கியம் இன்னுமே தோன்றவில்லை. உண்மையான சுதந்திரம் என்பது இனங்களுக்கிடையிலான ஐக்கியத்திலேயே தங்கியுள்ளது. பல்லின மக்கள் வாழ்கின்ற இலங்கைத் தேசமானது நம் அனைவருக்கும் சொந்தமான தாயகநாடு என்ற சிந்தனையுடன் இனஒற்றுமையைக் கட்டியெழுப்ப இன்றைய நாளில் மக்கள் அனைவரும் திடசங்கற்பம் கொள்வார்களாக!

## மீண்டும் இலங்கை வருகிறார்...

இசைஞானி இளையராஜாவின் 'என்றும் ராஜா ராஜாதான்' என்ற இசை நிகழ்ச்சி கடந்த மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவிருந்தது.

இசை நிகழ்ச்சிக்காக இளையராஜா வருகை தந்த போது, அவரது மகளும் பின்னணிப் பாடகியுமான பவதாரிணி புற்றுநோயால் 25ஆம் திகதி உயிரிழந்தார். இதன் காரணமாக இசை நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் இசை நிகழ்ச்சிக்காக ஏற்கெனவே நுழைவுசீட்டுகளை பெற்றுக்கொண்ட மற்றும் பதிவு செய்தவர்கள், அந்த நுழைவுசீட்டுகளை பயன்படுத்தி இசை நிகழ்ச்சியை பார்வையிட முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி, பிரதமர் தலைமையில்...

விக்கிரமசிங்கவினுடைய விசேட அழைப்பின் பேரில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் விசேட அதிதியாக இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கின்றமை இம்முறை விசேட அம்சமாகும்.

இது இலங்கை, உலக நாடுகளுடன் கொண்டுள்ள சிறந்த நட்புறவையும் வெளிநாட்டு உறவின் பலத்தையும் காண்பிக்கிறது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார்போஸ் ரொஷான் குணதிலக, அட்மிரல் ஒப் த பிலீட் வசந்த கரண்ணாகொட, ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பீ.ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் டீ .எம்.அநுர திஸாநாயக்க, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு தூதுவர்கள், இராஜதந்திரிகள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சிறப்பிப்பர்.

சுதந்திர தின பிரதான நிகழ்வையிட்டு கொழும்பு காலி முகத்திடல் உட்பட அதனை அண்டிய பிரதேசம் எங்கும் தேசிய கொடி மற்றும் வர்ண கொடிகள் பறக்கவிடப்பட்டு அலங்கரிக்கப்பட்டு காணப்படுவதுடன், இந்தப் பிரதேசம் எங்கும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

மேற்படி இறுதி ஒத்திகைகளை நேற்று முன்தினம் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண தலைமையில் முப்படை தளபதிகள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் பார்வையிட்டதுடன், தேவையான ஆலோசனையும் வழங்கினர்.

இம்முறை சுதந்திர தின பிரதான அணிவகுப்புடன் விமானப் படையின் வான் சாகசங்கள் இன்றைய நிகழ்வை மேலும் அலங்கரிக்கும் வகையிலும், தமது பலத்தையும் தரத்தையும் வெளிக் காண்பிக்கும் வகையிலும் அமையும்.

முப்படையினர், பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த சுமார் 6,300 பேர் கலந்துகொள்கின்றனர். இவர்களில் இராணுவத்தைச் சேரந்து 3,163 பேரும், கடற்படையைச் சேர்ந்த 950 பேரும், விமானப் படையைச் சேர்ந்த 740 பேரும் 336 பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 504 பேரும் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த 380 பேரும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 551 பேரும் அடங்குவர்.

காலையில் ஜனாதிபதியின் வருகையை தொடர்ந்து சுதந்திர தின பிரதான நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படும்.

தேசிய கொடியை சம்பிரதாய முறையில் ஏற்றி ஜனாதிபதி சுதந்திர தின பிரதான நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் ஜனாதிபதிக்கு மரியாதை நிமித்தம் 21 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்படும்.

இம்முறையும் வழமை போன்று தேசியகீதம் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் 100 மாணவ, மாணவிகளால் இசைக்கப்படும். ஜயமங்கள கீதமும் இசைக்கப்படும்.

இலங்கை இராணுவத்தின் மத்திய பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ரோஹித்த அலுவிஹார சுதந்திர தின முப்படை பிரதான அணிவகுப்பின் கட்டளை தளபதியாக செயற்படுவார்.

இராணுவ அணிவகுப்பில் இராணுவத்தின் ஆயுதங்கள், கணரக கவச வாகனங்கள், யுத்த தளபாடங்கள், உபகரணங்கள், ஆட்டிலரி, பீரங்கி தாங்கிய வாகனங்கள், மோப்பநாய்கள், பொறியியல் உபகரணங்கள் உட்பட யுத்த காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் இராணுவம் பயன்படுத்தும் பல்வேறு வாகனங்களும் அணிவகுத்து செல்லும்.

அதேபோன்று கடற்படையின் பல்வேறு வகையான பிரிவினர் அணிவகுப்பில் கலந்து கொள்வர். இவர்களில் கடற்படையின் விசேட படகு பிரிவினர், மீட்பு பிரிவினர், மெரைன் படைப் பிரிவினர், பெண்கள் படைப்பிரிவினர் இதில் அடங்குவர். கொழும்பு காலி முகத்திடல் மற்றும் அதனை அண்டிய வான்பரப்பில் விமானப்படையின் பல்வேறு ரக 19 விமானங்கள், ஹெலிகொப்டர்கள், தாக்குதல் விமானங்கள் தேசியகொடியை பறக்க விட்ட நிலையில் வானில் சாகசங்களை காண்பித்த வண்ணம் அணிவகுத்து பறந்துச் செல்லும்.

எப் 7 ரக தாக்குதல் விமானங்களும், எம் ஏ 60, வை 12 ரக விமானங்களும், பெல் 412, பெல் 212, எம்ஐ 17 ரக ஹெலிகொப்டர்களும் கொழும்பு வான்பரப்பில் தமது சாகங்களை காண்பிக்கும்.



## 2024ஆம் ஆண்டு தேர்தல் வருடமென்பதால் கூட்டணி சேருதல், கட்சி தாவுதல் பரபரப்புகள் ஆரம்பம்!

# அரசியல் களத்தில் அதிகரித்துவரும் அதிரடிக் காட்சிகள்!

### வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கி மீண்டும் ஜனாதிபதி பதவியில் அமர்த்துவதில் ஐ.தே.கவில் மாத்திரமன்றி பொதுஜன பெரமுன தரப்பிலும் முயற்சிகள்!

**அரசியல் என்றாலே பொதுவாக சிக்கல்கள் மற்றும் குழப்பங்கள் நிறைந்ததொன்றாகவே இருக்கும். நீண்ட காலமாக அதனை ஆராய்ச்சி செய்யும் ஒருவரால் மாத்திரமே அரசியல் ரீதியான முன்னேற்றங்கள் மற்றும் அதன் போக்குக் குறித்துப் புரிந்துகொள்ள முடியும்.**

ஆனாலும் கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையின் அரசியல் போக்குகள் மற்றும் அதன் முன்னேற்றங்களை எடுத்துக்கொண்டால் எந்தவொரு அரசியல் விஞ்ஞானிகளாலும் அரசியல் நிலைமைகளை அனுமானிக்க முடியாதபடியே உள்ளது.

2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக அமைந்திருப்பதால் கடந்த ஒரு மாத காலமாக அரசியல் களத்தில் பரபரப்புக் காட்சிகள் இடம்பெற்று வருவதைக் காண முடிகின்றது. புதுமைக் காட்சிகள் மாத்திரமன்றி குழப்பங்களும் அதிகரித்திருக்கின்றன. எதிர்வரும் மாதங்களில் இந்த நிலைமைகள் மேலும் பரபரப்படையக் கூடுமென்றே ஊகிக்கப்படுகின்றது.

அரசியல்வாதிகள் ஒருபக்கமும், அதற்கு ஊடகங்கள் வழங்கும் விளக்கங்கள் மறுபக்கமுமாக குழப்பங்கள் மென்மேலும் அதிகரிக்கின்றன. இதனால் அரசியல் குறித்த உண்மை நிலைமையை எவரும் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது என்றே கூறவேண்டும். இந்த நிலைமையால் நேர்மையான அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் ஒரே தராசில் வைத்தே மக்கள் பார்க்கின்றனர்.

இவ்வாறான குழப்பமான அரசியல் நிலைமைகளின் மத்தியில் தேர்தலுக்கான அடுத்தகட்ட நகர்வுகளில் அரசியல் கட்சிகள் ஆர்வம்காட்டத் தொடங்கியுள்ளன. இதன் ஆரம்பகட்டமாக கூட்டணிகளை அமைப்பதில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதனை மையமாகக் கொண்டு அரசியல்வாதிகள் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது இருக்கும் அரசியல் சூழ்நிலைக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்கள் களமிறங்குவார்கள் என அனுமானிக்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் அதாவது ஜே.வி.பி தலைமையிலான கூட்டணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவே அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் தேர்தலில் போட்டியிடுவது குறித்து உறுதியாக அறிவிக்காதபோதும், அவரை வேட்பாளராகக் களமிறங்குவதில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஜனாதிபதிக்கு ஆதரவான தரப்பினரும் உறுதியாகவிருக்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தின் பிரதான கட்சியாகப் பொதுஜன பெரமுன இருக்கின்றபோதும், பொதுஜன பெரமுன தனது வேட்பாளர் யார் என்பதில் இன்னமும் இறுதி முடிவை எடுக்கவில்லை.

இருந்தபோதும், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பல்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தமது நேரடியான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். வேறு சிலர் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவுடன் இருக்கின்றனர்.

மேலும் சிலர் எந்தப் பக்கம் செல்வது என முடிவெடுக்க முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிகின்றது.

மறுபக்கத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் ஆளும் கட்சியில் உள்ள சிரேஷ்ட அரசியல்வாதிகள் உள்ளிட்டவர்கள் அடங்கிய புதிய கூட்டணியொன்றும் உருவாகியுள்ளது. நிமல் லான்சா மற்றும் அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையிலான இந்தக் கூட்டணியில் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்கள் அங்கம் வகிக்கின்றனர். நாட்டை இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீட்டெடுத்து ஓரளவு சாதகமான நிலைக்குக் கொண்டுவந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு இந்தக் கூட்டணி செயற்படுகிறது.

அதேநேரம், பொதுஜன பெரமுன இன்னமும் தனது உத்தியோகபூர்வ முடிவை அறிவிக்கவில்லை. தமது தரப்பில் நான்கு வேட்பாளர்கள் தயாராக இருப்பதாவும், அவர்களில் பொருத்தமான ஒருவரைக் களமிறக்குவோம் என்றும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூறி வருகின்றனர்.

எதுவாக இருந்தாலும், தற்போதிருக்கும் அரசியல் நிலைவரத்துக்கு அமைய பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிட்டு அவர்களின் வேட்பாளரை வெற்றிபெற வைப்பது என்பது மிகவும் கடினமானதாகவே இருக்கும். எனவே, அவர்கள் யாராவது ஒரு பலமான அணியுடன் கூட்டணி அமைப்பதே அவர்களுக்கு இருக்கும் ஒரே தெரிவாக அமையும்.




மறுபக்கத்தில், எதிர்க்கட்சிகளின் தரப்பில் ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி எந்தவொரு அரசியல் தரப்புடனும் கூட்டணி அமைப்பது பற்றிப் பேசாது தனித்துப் போட்டியிடும் அரசியல் நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. அவர்கள் தொடர்பில் மக்கள் கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கு அமைய எந்தவொரு அரசியல் கட்சியுடனும் அவர்களால் கூட்டணி அமைப்பது இலகுவாக அமையாது.

இதுவரை ஆட்சியிலிருந்த அனைத்து அரசியல் கட்சிகளும் மக்களை ஏமாற்றியிருப்பதாகவும், ஆட்சியாளர்கள் மோசடி புரிந்திருப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி மக்கள் மத்தியில் பிரசாரம் மேற்கொண்டு வரும் நிலையில், அவர்களால் எந்தவொரு பிரதான அரசியல் கட்சியுடனும் கூட்டணி அமைக்க முடியாது. அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

அதுமாத்திரமன்றி, மக்கள் மத்தியில் தமக்கான ஆதரவு அதிகம் இருப்பதாக அவர்கள் அதீத நம்பிக்கை கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.இது இவ்விதமிருக்க, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைமை சற்று வித்தியாசமாகவே இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச போட்டியிடுவார் என்ற தீர்மானம் அந்தக் கட்சியினால் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டது என்றே கூறப்படுகிறது.



**ஐக்கிய மக்கள் சக்திக்குள் வந்து சேர்ந்துள்ள புதியவர்களால், சிரேஷ்ட தலைவர்கள் வெளிப்படையான அதிருப்தி!**

இவ்வாறான நிலையில், எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய பொதுத்தேர்தலில் அந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டால் வெற்றிபெற்று விடலாம் எனக் கணிப்பிடும் அரசியல்வாதிகளும், அரசியல்வாதிகளுக்கு ஆதரவான பிரமுகர்களும் ஐக்கிய மக்கள் சக்தியைத் தேடிச் சென்று இணைந்து வருகின்றனர்.

அவர்களும் வருபவர்களை அரவணைத்துப் பதவிகளையும் வழங்கி வருகின்றனர். சுதந்திரக் கட்சியின் நீண்டகால சிரேஷ்ட உறுப்பினரான ஷான் விஜயலால் த சில்வா ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டு அமைப்பாளர் பதவியைப் பெற்றுள்ளார். இதுபோன்று மேலும் பலரும் இணைந்துள்ளனர்.

அது மாத்திரமன்றி, கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இருந்த துறைசார் நிபுணர்களின் குழுவான 'வியத் மக' குழுவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாளக கொடஹேவா போன்றவர்களும் சஜித்துக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். இந்த வரிசையில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்னாயக்க புதிதாக இணைந்து கொண்டார். கோட்டாபய ராஜபக்ஷ வின் அரசாங்கத்தில் துறைமுக அதிகாரசபையின் தலைவராகவும், அமைச்சு ஒன்றின் செயலாளராகவும் இருந்த இவர், தற்பொழுது ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித்துக்கு ஆதரவாக இணைந்து கொண்டுள்ளார்.

இவரின் இந்த இணைவு ஐக்கிய மக்கள் சக்திக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா போர்க்கொடி தூக்கியிருப்பதே இந்த சலசலப்புக்குக் காரணமாகியுள்ளது.

கட்சியின் தவிசாளராக இருக்கும் தனக்குக் கூடத் தெரியாமல் ஒரு சிலரின் விருப்பத்துக்கு அமையத் தீர்மானங்கள் எடுக்கப்படுவதாகவும், கட்சியுடன் இணைத்துக் கொள்ளப்படும் நபர்கள் குறித்து சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கூட்டிய ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்த சரத் பொன்சேகா, இது விடயத்தில் கட்சி சரியான முடிவை எடுப்பதே பொருத்தமானது என்றார்.

தனக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்துவதற்குக் காரணமாக இருந்தவர் தயா ரத்னாயக்க என்றும், இவர் நியாயமானதொரு நபர் இல்லையென்றும் சரத் பொன்சேகா விமர்சித்திருந்தார். தனித்துவமான முறையில் எடுக்கப்படும் சில தீர்மானங்கள் காரணமாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தியடைந்திருப்பதையும் சரத் பொன்சேகா நினைவுபடுத்தினார்.

சரத் பொன்சேகாவின் இந்தக் கருத்துக்கள் கட்சிக்குள் குழப்பம் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளன. ஜெனரல் தயா ரத்னாயக்கவுக்கு பதவியொன்று வழங்கப்பட்டிருந்தாலும் அவர் அரசியல் களத்தில் இறக்கப்பட மாட்டார் என்ற அர்த்தத்தில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார.

கட்சிக்குள் கதைக்க வேண்டிய விடயத்தை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியமைக்குத் தான் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் அவர் கூறியிருந்தார். இதுபோன்ற கருத்துப் பரிமாற்றங்கள் அக்கட்சிக்குள் இருக்கும் குழப்பநிலையொன்றும் புலப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி சலூனில் காணப்படும் கதவைப் போன்றது அல்ல. இந்தக் கட்சிக்குள் வரும் நபர்கள் யார் என்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமகா தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியில் எடுக்கப்படும் சில தீர்மானங்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதன் காரணமாக கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதும் புலனாகிறது.


இவ்வாறான அரசியல் குழப்பங்களும், கட்சித் தாவல்களும் வரும் வாரங்களில் அதிகரிக்க தேர்தல் அரசியல் களம் மேலும் சூடுபிடிக்கும். இந்தக் குழப்பங்கள் ஜனாதிபதித் தேர்தலை மாத்திரம் இலக்கு வைத்தது அல்ல.

மாறாக ஜனாதிபதித் தேர்தலை அடுத்து நடைபெறக் கூடிய பொதுத்தேர்தலையும் இலக்கு வைத்தே அனைத்து அரசியல் நகர்வுகள் இடம்பெறுகின்றன. விசேடமாக கட்சித் தாவல்கள் மற்றும் கரணங்களில் ஈடுபடும் அரசியல்வாதிகள் தமது எதிர்கால இருப்பை அடிப்படையாகக் கொண்டே தாம் எந்தத் தரப்புடன் நிற்பது என்பதைக் கணிப்பிட்டு வருகின்றனர். இந்தக் கணிப்பீடுகள் காலத்துக்குள் காலம் மாறும்போது அரசியல் பரபரப்புகளும் அதிகரிப்பதைப் பார்க்க முடியும்.

# இந்தியாவின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிய இந்தியா கூட்டணி?




### இந்தியா ஒரு நோக்கு வாராந்த அலசல்



நந்தவனம் சந்திரசேகரன்

இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பாரதிய ஜனதா மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக 27 கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தியா கூட்டணியை உருவாக்கி, விரைவில் வர இருக்கும் மக்களவை தேர்தலை சந்திக்க தயாராகி வந்த நிலையில், இந்தியா கூட்டணி உடைந்து, இந்தியாவின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்தியா கூட்டணி கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட போது மிகப்பெரிய எதிர்பார்ப்பு மக்களிடம் ஏற்பட்டது. பாரதிய ஜனதாவை தேசிய அளவில் வீழ்த்த இதுவே சரியான கூட்டணி என்றும் நம்பப்பட்டது.

மாநில கட்சிகள் அனைத்தும் ஆங்காங்கே செல்வாக்குப் பெற்றிருந்தாலும், துண்டு துண்டாக கிடந்ததால் அது பாரதிய ஜனதாவுக்கு மட்டுமே சாதகமாக இருக்கும் என்பதால் பீகார் முதலமைச்சராக இருந்த நித்திஷ் குமார் எல்லா எதிர்க்கட்சிகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தார்.

இதற்காக ஊர் ஊராக சென்று எதிர்கட்சித் தலைவர்களை எல்லாம் சந்தித்துப் பேசி ஒருமித்த கருத்தை ஏற்படுத்தினார். காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க, சிவசேனா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு சமாஜ்வாடி, ராஷ்டிரிய ஜனதா தளம் உட்பட 27 கட்சிகள் அவரது முயற்சியால் ஒன்றுபட்டன

பாட்னாவில் பரபரப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்டணி பெங்களூரு கூட்டத்தில் சற்று தொய்வைச் சந்தித்தது. மும்பை கூட்டத்தில் காரசாரத்தை இழந்தது நான்காவதாக டெல்லியில் நடந்த கூட்டத்தில் சலசலப்புடன் பிளவு ஏற்பட்டு விட்டது.

கூட்டணி உடைந்ததற்கு காங்கிரஸ் கட்சியே முழுக்க முழுக்க காரணம் என்று கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் குற்றம் சுமத்துகின்றன. அண்மையில் நடந்த ஐந்து மாநில தேர்தலில் காங்கிரஸ் கட்சி கூட்டணி கட்சிகளை கண்டு கொள்ளாமல் தன்னிச்சையாக செயல்பட்டதால் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. படுதோல்வியை சந்தித்த பிறகும் காங்கிரஸ் கட்சி விழித்துக் கொள்ளாமல் இருந்ததால் கூட்டணி கட்சிகள் காங்கிரஸ் கட்சியின்மீது அதிருப்தியில் இருந்து வந்தன.

கூட்டணி பற்றியோ, தேர்தல் தொகுதி பங்கீடு பற்றியோ எதுவும் கவனத்தில் கொள்ளாமல் ராகுல் காந்தி தனது யாத்திரையிலேயே கவனம் செலுத்தினார். இதுவும் இந்தியா கூட்டணியில் முணுமுணுப்பை உண்டாக்கியது. இந்த நிலையில் மேற்குவங்கத்தில் ராகுல் காந்தி யாத்திரை சென்றபோது மரியாதைக்குக்கூட நான் வருகிறேன் என்று சொல்லாமல் புறக்கனித்ததாலும் தொகுதி பங்கீடு விவகாரத்தில் உடன்பாடு எட்டப்படாமலும் இருந்ததால் இந்தியா கூட்டணியில் முக்கிய அங்கம் வகித்த திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி மேற்கு வங்கத்தில் கூட்டணி இல்லை தனித்தே போட்டியிடுகிறோம் என்று அறிவித்தார்.

இவரைத் தொடர்ந்து பஞ்சாபில் ஆட்சியில் இருக்கும் ஆம். ஆத்மி கட்சியும் தனித்தே தேர்தலை சந்திப்பதாக அறிவித்தது. இது இந்தியா கூட்டணியில் விரிசலை ஏற்படுத்தியது. இந்தியா கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராக நித்திஷ் குமாரை தேர்வு செய்வதில், ராகுல் காந்தியும் அலட்சியமாக இருந்தார். இந்தியா கூட்டணியில் நித்திஷ்குமார் எதிர்பார்த்த ஒருமித்த கருத்து உருவாகவில்லை. இதுபற்றி ராகுல் காந்தி கவனத்தில் கொள்ளாமல் நடை பயணத்தை மேற்கொண்டதால் அவர் மேலும் விரக்தியடைந்தார்.

இதனால் இவருக்கு துணையாக இருந்த லல்லு பிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியுடனும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலைக் காரணம் காட்டி இந்தியா கூட்டணியிலிருந்து வெளியேறி மீண்டும் பாரதிய ஜனதாவுடன் சேர்ந்து விட்டார் நித்திஷ் குமார். இது இந்தியா கூட்டணியின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

நித்திஷ் குமாரைத் தொடர்ந்து இந்தியா கூட்டணியில் இருக்கும் சரத்பவார், அகிலேஷ் யாதவ். மம்தா பானர்ஜி ஆகியோரும் யோசிக்கத் தொடங்கியுள்ளனர்.

இநிலையில் அரசியலில் யாருக்கும் நிரந்தரமாக கதவுகள் மூடப்படுவதில்லை. மூடப்பட்ட கதவுகள் நேரம் வரும் போது திறக்கப்படும் என்று பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் சுஷில்குமார் மோடி கூறியிருப்பதை அரசியல் விமர்சகர்களும் உற்று நோக்கத் தொடங்கியுள்ளனர்

எதிர்க்கட்சிகளே இல்லாமல் ஆட்சியமைக்க வேண்டும் என்ற பாரதிய ஜனதாவின் கனவை நனவாக்க இன்னும் என்னென்ன நாடகங்கள் அரங்கேற்றமாகுமோ என்று மற்ற கட்சிகளுக்கும் பயத்தை உண்டாக்கியுள்ளது.

அதிகார பலத்தாலும், பண பலத்தாலும்எதிர்க்கட்சிகளை மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சியில் பாரதிய ஜனதா தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.மக்களவை தேர்தலுக்குள் இன்னும் எத்தனை கட்சிகள் பாரதிய ஜனதாவுடன் இணையும் என்ற கவலையும் மீண்டும் பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் எதிர்காலம் என்னவாகும் என்ற கவலையும் பாஜக எதிர்ப்பாளர்களிடம் உருவாகியுள்ளது.

இந்தியா கூட்டணி பலமாகவே உள்ளது. ஆங்காங்கே சில தடைகள் உள்ளன. பாரதிய ஜனதாவுக்கு எதிராக ஒருங்கிணைந்து போராடுவதிலிருந்து பின்வாங்க மாட்டோம். என்று காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் ஜெயராம் ரமேஷ் உறுதியாக தெரிவித்து வருகிறார். இந்த நிலை மாறக்கூடாது என்பது தான் பெரும்பாலான இந்திய மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இந்தியா கூட்டணியை பலப்படுத்த ராகுல் காந்தி கவனம் செலுத்த வேண்டும் என்று கூட்டணிக் கட்சிகள் விரும்புவதையும் அவர் அவதானிக்க வேண்டும். வலிமையில்லாத கூட்டணியால் வெற்றி பெற முடியுமா? என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

நடை பயணத்தால் மட்டுமே மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது. கருத்து முரண்பாடுகளைக் கலைத்து ஒருமித்த கருத்துடன் களத்தில் நின்றால் மட்டுமே, இந்தியா கூட்டணியால் வெற்றி பெற முடியும்.




## தலைவர், பொதுச்செயலாளர் தெரிவுகளுக்காக இருதடவைகளில் போட்டிக்களமாக மாறிய திருகோணமலை!

# ஐக்கியப்படத் திராணியற்ற நிலையில் தமிழரசுக் கட்சி!

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பது தொடர்பில் காணப்பட்ட இழுபறி நிலைமையானது, தலைவர் தெரிவுக்கான தேர்தல் நடத்தப்பட்டு முடிவுக்கு வந்துள்ள போதும், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் உள்ளிட்ட ஏனைய பதவிகளுக்கான தெரிவுகளில் குளறுபடி ஏற்பட்டுள்ளது.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக வாக்கெடுப்பின் மூலம் தலைவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததும் எம். ஏ. சுமந்திரன் எம்.பி, எஸ்.சிறிதரன் எம்.பி மற்றும் எஸ். யோகேஸ்வரன் ஆகிய மூவரில் கூடுதலான வாக்குகளைப் பெற்ற சிறிதரன் எம்.பி தலைவரானதும் நாம் அனைவரும் அறிந்த விடயம்.

தலைமைத்துவத்துக்கான போட்டியில் சுமந்திரன் மற்றும் சிறிதரனுக்கு இடையில் கடுமையான போட்டி நிலவியது. தலைமைத்துவத்துக்கான போட்டியின் காரணமாக தமிழரசுக் கட்சிக்குள் இருதரப்பு ஆதரவுக் குழுக்கள் உருவாகியிருந்தன. அது மாத்திரமன்றி, இந்தக் குழுக்கள் ஒருவர் மீது ஒருவர் சேறுபூசும் வகையிலான சமூக ஊடகப் பிரசாரங்களையும் முன்னெடுத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

நீண்டகால அரசியல் வரலாற்றைக் கொண்டதும், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுமான கட்சி என்பதால் இதன் தலைமைத்துவத்தை யார் பெற்றுக் கொள்கின்றார் என்பதைத் தமிழ் தரப்பு மாத்திரமன்றி, தென்னிலங்கை அரசியல் களமும் உன்னிப்பாக அவதானித்து வந்தது.

இந்த விடயம் சர்வதேச மட்டத்தில் அதாவது புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் அதிக கவனத்தை ஈர்த்திருந்தது. இந்தப் போட்டி நிலைமையானது புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் மத்தியிலும் பிரிவினைகளை உருவாக்கியிருந்தது.

பிரிவினைகளை உருவாக்கியிருந்தது என்பதை விட அவர்களுக்கிடையில் ஏற்கனவே காணப்பட்ட மாற்றுக்கருத்துக்கள் இந்தத் தலைமைத்துவப் போட்டியின் காரணமாக புலப்பட்டன என்பதே பொருத்தமாகவிருக்கும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஆரம்பம் தொட்டே இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர் தரப்பு அரசியல் விடயத்தில் தாக்கம் செலுத்தும் பிரிவினராக இருந்து வருகின்றனர். இதற்கு முக்கிய காரணம் இங்குள்ள பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகளுக்கான நிதிப்பலமாக அவர்களே இருக்கின்றனர் என்று பரவலாக கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. இதனால் புலம்பெயர் தமிழர் சமூகத்தின் மேலாதிக்கம் வடக்கு, கிழக்கு அரசியலில் தவிர்க்க முடியாததாகியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம்தான் போட்டி நிறைந்ததாக இருந்ததென்றால், பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட ஏனைய பதவிகளும் இழுபறிநிலைக்கே தள்ளப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவானது போட்டியில் முடிந்து விட்டதால் ஏனைய பதவிகளையாவது போட்டியின்றி இணக்கப்பாட்டுடன் மேற்கொள்வதற்கான முயற்சிகளை தலைமைத்துவம் எடுத்திருந்தது.

இருந்தபோதும் இந்த முயற்சி கைகூடவில்லை. தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் வடக்கிற்கு வழங்கப்பட்டால் பொதுச்செயலாளர் பதவி கிழக்குக்கு வழங்கப்படுவது என்பது அவர்களால் பின்பற்றப்பட்டுவரும் ஓர் சம்பிரதாயமாக இருந்தது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும், குறித்த பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் பலர் இருந்தமை மாநாட்டில் புலப்பட்டது.



**தலைமைப் பதவிகளுக்காக போட்டாபோட்டியில் இறங்கியிருக்கையில், தமிழருக்கான பேரம்–பேசும் சக்தியாக உருவெடுப்பது எவ்வாறு?**

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கிடையிலேயே ஒற்றுமை இல்லையென்பதும், பலர் கட்சியின் ஒற்றுமையை விட பதவிநிலைகளைப் பெற்றுக்கொண்டு தம்மை பலப்படுத்துவதிலேயே ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும் இந்த நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக்காட்டும் விதத்தில் அமைந்தன.

பொதுச் செயலாளர் பதவியைப் பெற்றுக் கொள்வதில் சுமந்திரன் எம்.பி, சாணக்கியன் எம்.பி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஞா. சிறிநேசன் உள்ளிட்ட பலரும் ஆர்வம் கொண்டிருந்ததாக மாநாட்டில் கலந்துகொண்ட பலரும் தெரிவித்திருந்தனர். இது விடயத்தில் கட்சிக்குள் ஒற்றுமை இல்லாமையால் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்களின் ஆதரவு எவருக்கு அதிகமாக உள்ளதோ அந்நபருக்கு அப்பதவியை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனுக்கு பொதுச்செயலாளர் பதவி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் இதுவிடயத்தில் முரண்பாடுகள் இருப்பதால் பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட பதவிகளுக்கு இடம்பெற்ற தெரிவுகளை இடைநிறுத்துவதுடன், மாநாட்டை பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைப்பதாவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா அறிவித்தார்.

தலைவர் பதவியில் ஏற்பட்ட குழப்பம் ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டாலும், ஏனைய பதவிகளுக்கான குழப்பம் நீடித்திருப்பது கட்சியின் எதிர்கால ஒற்றுமை குறித்த கேள்வி பலமாக எழுந்துள்ளது. பல ஆண்டுகளாக யுத்தம் உள்ளிட்ட பல்வேறு சவால்களைச் சந்தித்த சமூகமான தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியமான கட்சியொன்று ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய தருணத்தில் கட்சியின் பதவிகளுக்காக உறுப்பினர்கள் முரண்பட்டுக்கொள்வது அரசியல் ரீதியில் தமிழர்களைப் பலவீனமாக்கும் ஒரு செயற்பாடாகவே அமையும் என்பதுதான் தமிழ் மக்களின் கவலை.

அது மாத்திரமன்றி, இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பது உரிமைப் போராட்டங்கள் பலவற்றுடன் தொடர்புபட்ட கட்சியாக இருந்தாலும் ஆயுதக் போராட்டங்களுடன் நேரடியாகத் தொடர்புபடாத கட்சியென்ற பெயரைக் கொண்டிருப்பதால் தென்னிலங்கை அரசியல் தரப்பிலும் அக்கட்சி தொடர்பான பார்வை வித்தியாசமாக இருக்கின்றது.

குறிப்பாக கடந்த காலங்களில் ஆயுதக் குழுக்களாக இருந்து பின்னர் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி தற்பொழுது அரசியல் கட்சிகளாக செயற்பட்டு வருபவற்றுடன் ஒப்பிடுகையில், தமிழரசுக் கட்சி ஆரம்பம் முதலே அஹிம்சை வழியைப் பின்பற்றும் ஒரு கட்சியாக இருக்கின்றது. இவ்வாறான பின்னணியில் அதன் பதவிகளுக்காக உறுப்பினர்கள் முரண்பட்டுக் கொள்வது தமிழ்க் கட்சிகள் மீதான பரிகாசப் பார்வையையே தென்னிலங்கையில் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து கூட்டணியாகச் செயற்படச் செய்ய வேண்டியதொரு பாரிய பொறுப்பு தமிழரசுக் கட்சிக்கு இருக்கும் நிலையில் இதுபோன்ற உள்ளக முரண்பாடுகள் அந்தப் பொறுப்பை பலவீனமாக்கலாம்.

புலிகள் இயக்கத்தின் காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் செயற்பட்டுவரும் நிலையில், இதனை மேலும் வலுப்படுத்தி ஏனைய அரசியல் கட்சிகளையும் அதில் ஒன்றிணைத்து பலம்பெருந்திய கூட்டணியாகச் செயற்படுவதற்குப் பதிலாக தமக்கிடையில் முரண்பட்டுக் கொண்டிருப்பது பற்றியும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும் என்கிறார்கள் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் என்ற ரீதியில் தனித்தனியாகப் பிரிந்துநின்று செயற்படுவது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் சார்பில் பேரம்பேசும் சக்தியை ஏற்படுத்தி விடாது என்பதை கவனத்தில் கொள்வது முக்கியம்.

அதேநேரம், தமிழ்க் கட்சிகள் தமக்கிடையில் ஒற்றுமையாக இருக்கும் பட்சத்திலேயே நடைபெறக் கூடிய தேசிய ரீதியான தேர்தல்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான பேரம்பேசும் சக்தியாக அவர்கள் உருவாக முடியும். எனவே, தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பவிகளுக்காகத் தமக்கிடையில் முரண்பட்டுக் கொள்ளாது ஒட்டுமொத்த சமூகம் சார்பில் சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த தமிழர்களின் குரலாக இருக்கின்றது.

**பி.ஹர்ஷன்...**

# ஆபத்து நிறைந்ததாக மாறியுள்ள சர்வதேச கப்பல் போக்குவரத்து!



**மத்திய கிழக்கு நாடான யெமனை அண்மித்த சர்வதேச கடற்பிராந்தியத்தில் கடந்த சில வாரங்களாகப் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. அரபுக் கடல், யெமனின் ஏடன் வளைகுடா, பாப் அல் மண்டெப் நீரிணை மற்றும் செங்கடல் உள்ளிட்ட கடற்பரப்பும் சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையும் அடங்கலாக மத்திய கிழக்கில் இப்பதற்றநிலை உருவாகியுள்ளது.**



## ஹூதிக்களின் தாக்குதல்கள் தீவிரமடைவதால் சர்வதே கடல்–யுத்தம் உருவெடுக்கும் அபாயம்!

காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்திருக்கும் யுத்தத்தை நிறுத்துமாறும், காஸா மக்களுக்கு தங்குதடையின்றி மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைக்க இடமளிக்குமாறும் கோரி யெமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் முன்னெடுத்துவரும் தாக்குதல்களே இப்பதற்றநிலைக்குக் காரணமாகும்.

அதாவது ஏடன் வளைகுடா, பாப் அல் மண்டெப் நீரிணை மற்றும் செங்கடல் ஊடான சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையின் ஊடாக இஸ்ரேலுக்கு செல்லும் வணிகக் கப்பல்கள் மீதும் இஸ்ரேலியருக்குச் சொந்தமான கப்பல்கள் மீதும் ஹூதிக்கள் கடந்தாண்டு நவம்பர் நடுப்பகுதி முதல் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் பிரித்தானியாவின் எண்ணெய்க் கப்பலொன்று ஏடன் வளைகுடாவில் கடந்த வாரம் ஹூதிக்களின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளானது. அதனால் கப்பலில் ஏற்பட்ட தீ அமெரிக்க, இந்திய கப்பல்களின் ஒத்துழைப்புடன் பல மணித்தியாலங்களுக்குப் பின்னர் அணைக்கப்பட்டது. அந்தத் தீ அணைக்கப்பட்ட சில மணித்தியாலங்களுக்குள் மற்றொரு அமெரிக்க கப்பல் மீது தாக்குதல் நடத்த ஹூதிகளின் படகுகள் முயற்சி செய்ததாக பிரித்தானிய கடல் சார் அமைப்பு அறிவித்துள்ள நிலையில், அமெரிக்க யுத்த கப்பல் மீது தாக்குதல் மேற்கொண்டதாக ஹூதிக்கள் தெரிவித்திருந்தனர்.

ஹூதிக்கள் முன்னெடுக்கும் தாக்குதல்களுக்கு அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து கடும் பதில் தாக்குதல்களை அவர்களது நிலைகள் மீது மேற்கொண்டு வருகின்றன. இதன் நிமித்தம் அமெரிக்காவும் கூட்டணி நாடுகளும் நீர்மூழ்கிக் கப்பல்கள், யுத்த விமானங்கள், போர்க்கப்பல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி வருகின்ற அதேநேரம் ஹூதிக்கள் ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், ரிமோட்டில் இயக்கப்படும் ஆயுதங்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

அதனால் யெமன் மற்றும் செங்கடல் வழியான சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையில் சரக்கு கப்பல்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. அதனால் பல சர்வதேச கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் செங்கடல் வழியான வணிகக் கப்பல் போக்குவரத்தைத் தவிர்த்துக் கொண்டுள்ளதோடு தென்னாபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையை சுற்றி 6,000 கிலோ மீற்றர் மேலதிகமாகப் பயணிக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளன.

அதனால் தாக்குதல்களை நிறுத்துமாறு அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை நிராகரித்த ஹூதிக்களுடன் ஒமான் ஊடாக பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டது.

'காஸா மீதான போர் நிறுத்தப்படும் வரை தாக்குதல் தொடரும்' என ஹூதிக்கள் குறிப்பிட்டதால் அம்முயற்சி தோல்வியடைந்தது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் கடந்தாண்டு நவம்பர் 25 ஆம் திகதி முதல் 7 நாட்கள் நீடித்த யுத்த நிறுத்தத்தின் போது ஹூதிக்களும் தாக்குதல்களை நிறுத்தியிருந்தனர். ஆனால் இஸ்ரேல் டிசம்பர் முதலாம் திகதியுடன் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்ததும் ஹூதிக்களும் தாக்குதல்களைத் தொடங்கினர்.

இந்நிலையில் சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவென அமெரிக்கா பல நாடுகளை உள்ளடக்கிய கூட்டணியொன்றை அமைத்து அந்நாடுகளது யுத்தக்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள் என்பவை யெமன் மற்றும் செங்கடல் கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அத்தோடு ஈரானின் 3 யுத்தக்கப்பல்களும் செங்கடல், ஏடன் கடற்பரப்பில் நிலைகொண்டுள்ளன.

அப்படியிருந்தும் ஹூதிக்கள் தாக்குதல்களைத் தொடர்வதால் கடந்த ஜனவரி 12 ஆம் திகதி அமெரிக்காவும், பிரித்தானியாவும் இணைந்து யெமனிலுள்ள ஹூதிக்களின் நிலைகள் மீது முதன் முறையாகக் கடும் தாக்குதல்களை முன்னெடுத்தன. அவர்களது ஆயுதக் களஞ்சிய சாலை, ஏவுகணை ஏவு தளங்கள், ரடார் நிலையங்கள் என 12 இடங்கள் மீது 73 தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளைத் தலைமையகம் அறிவித்தது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாபதிபதி ஜோ பைடன், 'சர்வதேச கடல் போக்குவரத்து பாதையில் ஹூதிக்கள் மேற்கொள்ளும் தாக்குதல்களால் சுமார் 50 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் அவர்களது தாக்குதல் பலத்தைப் பலவீனப்படுத்தி சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது' என்றார்.

காஸா மீதான யுத்தத்தை நிறுத்துமாறு கோரும் ஹூதிக்கள் மீது அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து தாக்குதல் நடத்தியமை உலகை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியுள்ளது. யுத்தத்தை நிறுத்தக் கோரும் தரப்பு மீது அமெரிக்காவும் நேச நாடுகளும் தாக்குதல் நடத்துவதானது காஸா மீதான யுத்தத்திற்கு இந்நாடுகள் ஆதரவளிக்கின்றனவா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.



**யெமன் மற்றும் செங்கடல் வழியான சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதிப்பு; உலகளாவிய பொருளாதாரம் வீழ்ச்சியடையுமா?**

உலகின் பல நாடுகளதும் கண்டனத்துக்கு உள்ளான இத்தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யெமனிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இச்சமயம் ஹூதிக்கள், 'இத்தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும். நாங்கள் காஸா மீதான யுத்தத்தை நிறுத்துமாறே கோருகிறோம். பிரித்தானியாவையோ அமெரிக்காவையோ நாங்கள் தாக்கவில்லை. அவர்களது நிலங்களுக்குள் சென்றும் நாங்கள் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை' என்றுள்ளனர்.

இதேவேளை, 2021 பெப்ரவரியில் ஹூதிக்களை பயங்கரவாதிகள் பட்டியலிலிருந்து நீக்கிய அமெரிக்கா, மீண்டும் உலகளாவிய பயங்கரவாத இயக்கமாக கடந்த 17 ஆம் திகதி அறிவித்ததோடு, ஹூதிக்கள் அரசின் பாதுகாப்பு அமைச்சர் முஹம்மத் அல் அதீபி, ஹூதிக்களின் கடல்சார் படையணியின் தளபதி பட்ல் அப்த் அல் நபி, கரையோர காவல் படையின் தளபதி முஹம்மத் அலி அல் காதிரி, ஹூதிகளின் கொள்வனவு பணிப்பாளர் முஹம்மத் அஹமட் அல் தலிபி ஆகிய நால்வருக்கும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் கடந்த 25 ஆம் திகதி முதல் தடைகளை விதித்துள்ளன.

இந்தச் சூழலில் யெமனிலுள்ள ஐ.நா. நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களில் பணிபுரியும் அமெரிக்க, பிரித்தானிய பிரஜைகளை ஒரு மாதத்திற்குள் வெளியேறுமாறு ஹூதிக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை செங்கடல் ஊடாக கடலுக்கடியில் இடப்பட்டுள்ள கேபிள்கள் மீது ஹூதிக்கள் தாக்குதல் நடத்தக்கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ள வளைகுடா சர்வதேச மன்றம், இது உலகளாவிய தகவல் தொடர்பு மற்றும் பொருளாதாரத்தை கணிசமாகப் பாதிக்கும் எனவும் கடந்த வியாழனன்று எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

அவ்வாறான தாக்குதல்கள் கடலுக்கடியில் உள்ள கேபிள்கள் மீது நடத்தப்படுமாயின் உலகளாவிய தகவல் தொடர்பு மற்றும் உலகப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் குறித்த கவலைகளும் அதிகரித்து வருகின்றன.

அதேநேரம் ஹூதிக்களின் தாக்குதல்கள் பிராந்திய மற்றும் சர்வதேச பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தலையும் தோற்றுவித்துள்ளன. உலக எண்ணெய் வர்த்தகத்தில் 12 வீதமான மசகு எண்ணெய் இப்பாதை ஊடாகவே கொண்டு செல்லப்படுகிறது.

உலகின் மிகப் பெரிய எரிவாயு ஏற்றுமதி நாடான கட்டார் ஜனவரி 14 முதல் செங்கடல் வழியாக ஐரோப்பாவுக்கு திரவ எரிவாயுவை அனுப்பி வைப்பதை நிறுத்தியுள்ளது.

அத்தோடு இப்பாதை ஊடாகப் பயணிக்கும் சரக்குக் கப்பல்களுக்கான காப்புறுதிக் கட்டணங்களை கப்பல் காப்புறுதி நிறுவனங்கள் உயர்த்தியுள்ளன. குறிப்பாக கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் செலவுகளை அதிகரித்துள்ளன. நவம்பரில் 1,500 டொலராகக் காணப்பட்ட கொள்கலன் ஒன்றின் விலை டிசம்பரில் 4,000 டொலராக உயர்த்தப்பட்டுள்ளது.

இப்பாதை ஊடாகக் கப்பல்களில் கோதுமை கொண்டு செல்லப்படுவது 40 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக உலக வர்த்தக அமைப்பு குறிப்பிட்டுள்ளது. எண்ணெய்க் கப்பல்களும் இப்பாதையை தவிர்க்கும் முடிவை எடுத்துள்ளன.

செங்கடலில் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்து வருவதானது, உலகப் பொருளாதாரத்தில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுவதாக சர்வதேச பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணர் ஜான் லெவெல்லின், 'உலக வர்த்தகத்தில் கடுமையான இடையூறுகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தோற்றம் பெற்றுள்ளன' என்றுள்ளார்.

இப்பதற்ற நிலையின் விளைவாக உலகின் பல நாடுகளும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. அதனால் அமெரிக்கா, ஈரானுடன் பேசி ஹூதிக்களின் தாக்குதல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சீனாவிடம் கேட்டுக் கொண்டது. அதற்கேற்ப ஈரானுடன் கலந்துரையாடிய சீனா, காஸா மீதான யுத்தத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவது ஹூதிக்கள் தாக்குதல்களை நிறுத்த வழிவகுக்கும்' என்றுள்ளது.



**மர்லின் மரிக்கார்...**



விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, லண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள உலகத் தமிழர் வரலாற்று மைய வளாகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கம், திருவள்ளுவர் சிலையொன்றினை 2024 மே மாதம் நிறுவவுள்ளது. அச்சிலையினை வழியனுப்பும் நிகழ்வில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் முனைவர் வி.ஜி. சந்தோசம், லண்டன் உலகத் தமிழர் வரலாற்று மையம் சார்பில், தமிழறிஞர் சிவாப்பிள்ளையிடம் 5 அடி உயரமுள்ள , திருவள்ளுவர் கற்சிலையை ஒப்படைத்தார். இவ்வழியனுப்பும் விழாவில், ஞானம் சிவாப்பிள்ளை மற்றும் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் இணைச்செயலாளர் விஜிபி ராஜாதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அமைச்சருடனான சந்திப்புடன் சுகாதார சேவைகள் வழமைக்கு

சுகாதார தொழிற்சங்கங்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு நேற்றுக் காலை 6.30 மணியுடன் நிறைவடைந்ததை தொடர்ந்து, சுகாதார சேவைகள் அனைத்தும் வழமைக்கு திரும்பின.

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்கக் கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்களால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் நாற்பெரும் விழா நிகழ்வுகள்

## பிரதம அதிதியாக மர்ஜான் பளீல் எம்.பி பங்கேற்பு



Golden Jubilee
Since 1973
JAMIAH NALEEMIAH
50 Years of Excellence in Islamic Studies & Human Sciences

(அஜ்வாத் பாஸி)

பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் ஐம்பதாண்டு நிறைவையொட்டிய பொன்விழா நிகழ்ச்சித் தொடரின் மற்றுமொரு வரலாற்று நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.45 மணிக்கு ஜாமிஆ நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

ஜாமிஆ நளீமிய்யா கலாபீட நிர்வாக சபையும் ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலயமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் நளீமிய்யா கலாபீட ஆளுநர் சபை உறுப்பினருமான மர்ஜான் பளீல் கலந்து சிறப்பிப்பார்.

விசேட அதிதியாக நளீமிய்யா பரிபாலன சபைத் தலைவர் யாகூத் நளீம் மற்றும் கௌரவ அதிதியாக கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் மொஹமட் (நளீமி) ஆகியோரும் கலந்து கொள்வர்.

இவ்விழா நிகழ்வில் நளீமிய்யாவின் ஐம்பதாண்டு நிறைவையொட்டிய நினைவு முத்திரை வெளியீடு, நளீமிய்யா உருவாகத்திற்கு மர்ஹூம் நளீம் ஹாஜியாருடன் இணைந்து உழைத்த ஸ்தாபகர்களை கௌரவிக்கும் ஸ்தாபகர் தினம், நளீமிய்யாவின் உருவாக்க வரலாற்று நூல் வெளியீடு மற்றும் நளீமிய்யா கலாபீடத்துக்கான 'SOLAR POWER PROJECT' திட்டமும் இந்நிகழ்வின்போது அதிதிகளினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

மேற்படி நாற்பெரும் விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலுக்கு ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலய தலைவர் அஷ்ஷெய்க் பௌஸர் ஹுஸைன் (நளீமி), வலய உப தலைவர் சாமஸ்ரீ தேசமான்ய மிர்சூக் பளீல் மற்றும் நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) ஆகியோர் அவரது பேருவளை இல்லத்தில் (31) சந்தித்து உத்தியோகபூர்வமாக அழைப்பிதழை கையளித்தனர்.



வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டத்தின்படி யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தியில் வீதியோரம் பழ வியாபாரம் செய்யும் பெண்ணொருவருக்கு 50,000 ரூபாவுக்கான பழங்கள் கையளிக்கப்பட்டன.

பெண் தலைமைத்துவத்தை கொண்ட அவரது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் லயன் கலாநிதி நா. தனேந்திரன் இதனை வழங்கினார்.

(படம் வேலணை குறூப் நிருபர்)

# குழந்தை இல்லை என்ற கவலை இனி இல்லை!

டொக்டர் கீதா ஹரிப்ரியா

பிரபல குழந்தையின்மை சிகிச்சை நிபுணரும் இலங்கையில் நாலாயிரம் குழந்தைகள் பிறப்பதற்கு தனது உன்னத சிகிச்சையால் உறுதுணை புரிந்தவருமான டொக்டர் கீதா ஹரிப்ரியா இம்மாதம் 11ஆம் திகதி ஞாயிறன்று, வெள்ளவத்தை ரோயல் மருத்துவமனை ஏற்பாடு செய்திருக்கும் மகப்பேறின்மைக்கான இலவச ஆலோசனை முகாமில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

யூரோப்பிய மருத்துவ சங்கம், பெல்ஜியம் மற்றும் யூரோப்பிய வர்த்தக சபை, பெரிய பிரித்தானியா ஆகிய அமைப்புக்களிடமிருந்து இந்தியாவிலேயே சிறந்த மருத்துவ சேவை வழங்கும் மருத்துவர் மற்றும் சிறந்த மருத்துவ சேவை வழங்கும் மருத்துவமனை ஆகிய பட்டியலில் நான்காவது இடத்தையும், அதே பிரிவுகளில் தமிழ்நாடு மாநில அளவில் முதலாவது இடத்தையும் டொக்டர் கீதா ஹரிப்ரியா தலைமையிலான பிரசாந்த் செயற்கை கருத்தரிப்பு மையம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

“மகப்பேறற்ற தம்பதியரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. உலக நாடுகளைப் போலவே இலங்கையிலும் திருமணமாகும் பத்து தம்பதியரில் ஆறு தம்பதியர் குழந்தையின்மைக்கு முகங்கொடுக்கிறார்கள்.

அவர்கள் தங்களுடைய குறைகள் பற்றி உடனடியாக தகுதிவாய்ந்த மருத்துவர்களுடன் கலந்தாலோசனை செய்து சிகிச்சைகள் பெற்றுக்கொண்டால், அவர்களும் தங்கள் குழந்தைக் கனவை நனவாக்கிக் கொள்ள முடியும்.



“நோயாளிக்கு சிகிச்சை அளிக்கும் முன் அவருக்கு இருக்கும் பிரச்சினை பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்வது அவசியம்.

அதன் பிறகே அவர்களுக்குப் பொருத்தமான சிகிச்சைகளையும் வழங்க வேண்டும்.

அந்த வகையில், மகப்பேறின்மை பரிசோதனைகள், சிகிச்சைகள் ஆகியவற்றில் அதிநவீன கருவிகளை எனது மருத்துவமனையே தமிழகத்தில் சில சமயங்களில் இந்தியாவிலும் கூட முதன்முறையாக அறிமுகப்படுத்தி வருகிறது. இதனால்தான் எமது மருத்துவமனையில் 85 சதவீத வெற்றிவாய்ப்பை அளிக்க முடிகிறது.

“மகப்பேறின்மைக்கு பெண்கள் மட்டுமே காரணம் என்ற எண்ணம் அந்தக் காலத்தில் இருந்தது. அது தவறு என்பதை இப்போதைய நவீன மருத்துவம் நிரூபித்திருக்கிறது.

மகப்பேறின்மைக்கு 60 சதவீதம் ஆண்களே காரணம் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனினும் இதை நினைத்து அவர்கள் வருந்தத் தேவையில்லை.

“உயிரணுக்களே இல்லை என்று சொல்லப்பட்ட பல ஆண்களுக்கு, அவர்களது உயிரணுக்களைக் கொண்டே வெற்றிகரமாக மகப்பேற்று சிகிச்சைகள் செய்திருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், செயன்முறைக் கருத்தரிப்பில் ஆண்களின் குறைபாடுகள் விரைவாகவும் உறுதியாகவும் சரிசெய்யக்கூடிய ஒன்று. எனவே, தமது குறைபாடுகளை எண்ணி அவர்கள் மருகிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

“மருத்துவ விஞ்ஞானம் வானளவு உயர்ந்துவிட்டபோதிலும் செயன்முறைக் கருத்தரிப்பு மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு ஒரு தயக்கம் இருக்கும்.

அதாவது, பிறக்கும் குழந்தைகள் குறைபாடுகள் எதுவுமின்றிப் பிறக்குமா என்று! ஆனால், அது வீண் சந்தேகமே! செயன்முறைக் கருத்தரிப்பு மூலம் உருவான பிள்ளைகள் சுட்டித்தனமாகவும் கெட்டித்தனமாகவுமே இருப்பர்.

“என்னிடம் நீங்கள் கேட்டறிய அனேக சந்தேகங்கள் உங்களிடம் இருக்கும். அவை அனைத்துக்கும் உங்கள் அனைவரையும் தனித்தனியே சந்தித்து ஆலோசனை வழங்கவிருக்கிறேன், அதுவும் இலவசமாக! என்னைச் சந்திக்க நீங்களும் விரும்பினால், 075 4000012 என்ற கைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உங்களது வருகையையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

“உங்களுக்கும் குழந்தை நிச்சயம் உண்டு.”











## 3000 கோடி ரூபா உலக வங்கி நிதி உதவியில்

# கண்டியின் பாரிய அபிவிருத்தி ஆரம்பம்



2008 ஆம் ஆண்டில், நாட்டின் மிகவும் நெரிசலான நகரங்கள் குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் குழு நடத்திய ஆய்வில் கண்டி மிகவும் நெரிசலான நகரம் என்பது தெரியவந்தது. மாலையில் ஊருக்குள் நுழைந்து வெளியேற ஒரு மணி நேரத்திற்கும் மேல் செலவாகின்றது எனத் தெரியவந்தது.

ஆனால் அப்போது வடக்கு, கிழக்கில் இடம் பெற்ற யுத்த மோதல்கள் காரணமாக அது தொடர்பில் அதிக கவனம் செலுத்த முடியாமல் போயிருக்கலாம். ஆனால் மீண்டும் 2011இல், மொரட்டுவைப் பல்கலைக்கழகமும் பேராதனைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய ஆய்வில், கண்டியில் சராசரியாக ஒரு வார நாளில் சுமார் 365,000 பேர் (ரயில்கள் தவிர்த்து) நகருக்குள் நுழைந்து வெளியேறுவதோடு, அதில் 58 வீதத்துக்கு அதிகமானோர்கள் பயன்படுத்துவது பொதுப் போக்குவரத்து சேவை என்பது அறியப்பட்டது.

மேலும், 5000க்கும் மேற்பட்ட பஸ்வண்டிகள் நகருக்குள் நுழைவதும், அதே எண்ணிக்கையிலான பஸ்வண்டிகள் அங்கிருந்து புறப்படுவதும் அடையாளம் காணப்பட்டது.

கண்டி மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க குட்ஷெட், போகம்பர, மணிக்கூண்டு கோபுரம் என பல இடங்களில் இருந்து தொடங்கும் அனைத்து பஸ் நிலையங்களையும் ஒருங்கிணைத்து புதிய பஸ்வண்டிகள் முனையத்தை அமைக்க வேண்டுமென, ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நவீன உலகிற்கு ஏற்ற பல்வகை போக்குவரத்து முனையமாக இது இருக்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டது.

அத்திட்டத்தின் அடிப்படை திட்டமிடல் பணிகள் மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் மூலோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 2015ஆம் ஆண்டு ஆரம்பமானதுடன் பின்னர் 2016 ஆம் ஆண்டு மீண்டும் அது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையால் இது கண்டி பல்வகைமை போக்குவரத்து முனையம் (Kandy Multimodel Transport Terminal KMTT) என்று அழைக்கப்பட்டு வேறான திட்டமாக திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதன் இலக்கை அடைய முடியாமையினாலும் கொவிட் தொற்று காரணமாகவும் நடவடிக்கை பாதிப்படைந்தது. எவ்வாறாயினும் நடவடிக்கைகளை மேலும் விரைவாக செயல்படுத்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் 2022 ஆம் ஆண்டு இந்நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டது.



அது கண்டி பல்வகைமை போக்குவரத்து முனைய அபிவிருத்தி திட்டத்தின் (KMTTDP) கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், அதன்படி திட்ட மதிப்பீட்டின்படி அபிவிருத்தி திட்டத்திற்கு 3000 கோடி ரூபா கடன் உலக வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் படி இத்திட்டத்தின் முகாமைத்து நடவடிக்கைகள் அனைத்தும் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்டுள்ள திட்ட முகாமைத்துவ பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது .

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் திட்டத்தின் அனைத்து நிதிச் செயற்பாடுகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாண பணிகளை மேற்கொள்வதற்காக(MAGA) கட்டட ஒப்பந்த நிறுவனதுக்கு 25,000 மில்லியன் ரூபா ஒப்பந்தப்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் ஆலோசனை நிறுவனமாக RoughtonMG Consultant மற்றும் ECL ஆகிய நிறுவனங்கள் இணைந்துள்ளன.

திட்டத்தின் ஆரம்பமாக 2024 ஜனவரி பரிந்துரைக்கப்பட்டதோடு அதனை பூர்த்தி செய்யும் காலம் 2026 டிசம்பர் மாதம் ஆகும்.

அதன்படி, பணிகள் ஜனவரி 27, சனிக்கிழமை, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய பயிற்சி முகாமையாளர் பெய் டெங், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், ரஞ்சித் ரூபசிங்க மற்றும் பல அதிகாரிகள் பலரின் பங்களிப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த போக்குவரத்து முனைய திட்டத்தை நிறுவுவதன் மூலம், ஒரு நாளைக்கு கண்டிநகருக்கு வருகை தரும் 5000 வாகனங்களுக்கும் அதிகமான மற்றும் 365,000 அதிகமான பயணிகளின் பிரச்சினைக்கும் தீர்வு கிட்டுமா?

இது தொடர்பில் கண்டி பல்வகைமை போக்குவரத்து முனைய அபிவிருத்தி திட்ட பணிப்பாளர் ஆர். எம். எஸ். ஜே. பி. ரத்னாயக்கவிடம் வினவிய போது,

"கண்டி நகரில் கடும் போக்குவரத்து நெரிசல் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. குறிப்பாக நகரின் மையப்பகுதியில் உள்ள ரயில் நிலையம், பிரதான பஸ் நிலையம், முக்கிய நெடுஞ்சாலைகள் என பல இடங்களில் பொது மக்கள் அதிகம் கூடும்போது நாளுக்கு நாள் இந்த நிலை மோசமாகி வருகிறது. பாடசாலைகளுக்கு வரும் பாடசாலை வேன்கள் காலை 7:00 மணியளவில் வந்து பாடசாலைக்கு அருகாமையில் வந்தும் குழந்தைகளை 7:30 மணிக்குப் பிறகு பாடசாலையில் சேர்க்கின்றன.

எனவே, ரயில் நிலையம் அருகே உள்ள குட்ஷெட் பஸ் நிலையம் தற்போது தற்காலிகமாக அகற்றப்பட்டு, அந்தப் பகுதி முழுமையாக இந்தத் திட்டத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திட்டமாக 9 நிலையங்களை பஸ் நிலையங்களாக அறிமுகப்படுத்தியுள்ளோம். கண்டி பல்வகைமை பஸ் முனையமாக குட்ஷெட் பஸ் நிலையம் முதலில் அமைக்கப்படும். கண்டியில் இருந்து புறப்படும் அனைத்து பஸ் வண்டிகளும் ஒரே இடத்தில் இருந்து மட்டுமே புறப்படும். அது மட்டுமல்ல. ரயில் நிலையம் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல், குறிப்பாக கெப் வண்டிச் சேவைகள், முச்சக்கர வண்டிச் சேவைகள் அல்லது பிற போக்குவரத்துத் தேவைகளை வழங்குதல் இதன் நோக்கமாகும்

பஸ்களை ஒரே இடத்திற்கு கொண்டு வந்தால், போக்குவரத்து நெரிசல் தீருமா?

இது தொடர்பாக போக்குவரத்து துறை நிபுணர் சம்பத் சந்திரசேன அளித்த பதில்,

நகரில் அதிக வாகனங்கள் காரணமாகவே சன நெரிசல் ஏற்படுகின்றது. ஏனெனில் வாகனங்கள் குறிப்பாக பஸ் வண்டிகள் தேவையில்லாமல் நிறுத்தப்படுகின்றன. இந்த நிலைமைகளுக்கு ஒரு தீர்வாக, அனைத்து பஸ் பயணங்களையும் ஒரே இடத்தில் இருந்து தொடங்குவது ஒரு தீர்வாகும்.

அதன்படி, எந்தப் பஸ்ஸையும் முனையத்தின் தொடக்க இடத்தில் (Bus Bay) 10 நிமிடங்கள் மட்டுமே நிறுத்த முடியும். தொலைதூர பயண சேவைகளுக்கு இடையேயும் எந்த வித்தியாசமும் இல்லை. 10 நிமிடங்களுக்குள், எந்தப் பஸ்வண்டியும் பயண முனைய தொடங்கும் இடத்திலிருந்து புறப்பட வேண்டும். முனையத்திற்கு வரும் ஒரு பஸ் வண்டி திரும்பும் பயணத்தை ஒரு மணித்தியாலத்துக்குள் தொடங்கினால் மட்டுமே நிறுத்த முடியும். பஸ் வண்டி ஒரு மணி நேரம் திரும்பிப் பயணிக்க வேண்டியிருந்தால், பஸ் வண்டி முனையத்திலிருந்து வெளி நிலையத்திற்குச் செல்லும். பஸ் வண்டி ஒரு மணி நேரம் இருக்கும் போதுதான் மீண்டும் பஸ் வண்டி முனையத்திற்கு வரவழைக்கப்படும். நெரிசலைக் குறைக்க இதுவும் ஒரு வழியாகும். மற்ற முறை டச் அண்ட் கோ என அறியப்படுகிறது. அதன்படி, கண்டிக்கு வரும் பல பஸ் வண்டிகளை கண்டிக்கு வெளியில் உள்ள 3 இடங்களுக்கு திருப்பி விடுகிறோம். இதன்படி, கெட்டம்பே, கட்டுகஸ்தோட்டை மற்றும் திகன வரை இந்த சேவைகள் நீடிக்கப்படவுள்ளன. பின்னர் அந்த பஸ்களில் இருந்து வந்து கண்டிக்கு அப்பால் பயணிக்கும் பயணிகளும் முன்னோக்கி பயணிக்க அதே பஸ்கள் பயன்படுத்தப்படும். இதனால் வாகன நெரிசல் குறையும்

மேலும், சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் வில்லியம் கொபல்லாவ மாவத்தையை இணைக்கும் வகையில் புதிய 200 மீட்டர் நீளமான வான் பாலம்(SKY BRIDGE) அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நெடுஞ்சாலை வழியாக இடமாற்றம் செய்வதை தவிர்க்கவும், மக்கள் விரைவாக செல்லவும் முடியும். கண்டி பொது வைத்தியசாலை மற்றும் ரயில் நிலையத்திற்கு செல்லும் பயணிகள் அந்த மேம்பாலத்தில் இருந்து மிகக் குறுகிய காலத்தில் இலகுவாக பயணிக்கும் வகையில் அணுகு வீதிகள் அமைக்கப்படும்.

மேலும், குட்ஷெட் பஸ் நிலையத்தின் வழியாக செல்லும் முனைய உள் அணுகல் சாலை அமைப்பு மற்றும் நடுக் கால்வாய் ஆகியவையும் இந்த அபிவிருத்தியின் மூலம் புதுப்பிக்கப்படும். மாற்றுத்திறனாளிகள் கூட சக்கர நாற்காலிகளில் பயணிக்கும் வகையில் புதிய பாலம் கட்டப்படும்."

இத்திட்டத்தை செயல்படுத்தும் போது ஐந்து காரணிகளின் ஊடாக செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் கீழ் பிரதானமானது மூன்று மாடி KMTT பிரதான கட்டடமாகும். பஸ் வண்டிகளை நிறுத்தும் கட்டடம். மேலும், ARCADE கட்டடம் முழுமையான டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான முகாமைத்துவ அமைப்பும் நாட்டு மக்களுக்கு வசதியாக இங்கு நிறுவப்பட்டுள்ளது.

மேலும், 150க்கும் மேற்பட்ட பஸ்வண்டிகளை நிறுத்துதல் பஸ்வண்டிகள் மற்றும் பஸ்வண்டி பணியாளர்களுக்கு தேவையான சேவைகள், நிறுத்துமிட வசதிகள், இளைப்பாறும் இடங்கள், பெண்களுக்கான சிறப்பு பாதுகாப்பு வலயம், ஏனைய நிறுவனங்களின் போக்குவரத்து தேவைக்கான வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலும் இங்கு பயணிகள் நவீன பஸ்வண்டிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். மேலும், ரயில் தொடர்பான தகவல்கள் பல்வகைமை போக்குவரத்து முனையங்களில் இருந்து கிடைக்கும். அதிநவீன தகவல் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாட்டு மையம் ஆகியவை முனையத்திற்கு வரும் பஸ் வண்டிகளுக்கு நவீன தகவல் தொழில்நுட்பத்தையும், தொழில்நுட்ப உபகரணங்களையும் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதனால் இலங்கை புகையிரத திணைக்களத்தின் பாரியளவிலான காணிகள் பாதிக்கப்படுவதுடன் புகையிரத ஊழியர்களின் குடியிருப்புகளும் இடிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு தற்காலிக இடவசதியும், நிரந்தரமாக குடியமர்த்த 7 மாடி கட்டடமும் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த போக்குவரத்து முனையத்தின் நிர்மாணத்தின் பின்னர், பொது போக்குவரத்து மூலம் கண்டிக்கு வரும் பயணிகளின் சதவீதம் 60% ஆக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கண்டி நகருக்கு நாள்தோறும் ஏராளமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதைக் காணமுடிகிறது. மேலும், தலதா மாளிகைக்கு முன்புறம் உள்ள சாலையின் ஒருபுறம் ஏரியும், மறுபுறம் குயின்ஸ் ஹோட்டலும் இருப்பதால் சாலையை எந்த வகையிலும் விரிவாக்கம் செய்ய முடியாது. புதிய பல்வடிவ போக்குவரத்து முனையத்தின் கட்டுமானத்தில் இந்த காரணிகள் அனைத்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த திட்டத்திற்கு மேலதிகமாக கண்டி நகரின் மையப்பகுதியில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் ஆரம்பத்தில் காணப்பட்ட போதும் தற்போது சுரங்கப்பாதைக்கு பதிலாக வான்வழிப்பாதை அமைக்க வேண்டுமா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ரயில் பாதையை இரட்டை ரயில்பாதையாக உருவாக்கினால், அதிகரிக்கும் ரயில் சேவைகளுக்கு அமைய பல்வகைமை போக்குவரத்து முனையத்திற்கு வரும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை நகரின் ரயில் கடவையில் நீண்ட நேரம் நிறுத்த வேண்டி நேரிடும். அதனால் பயன்கள் குறையலாம். அது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. ஆனால், அது இந்த திட்டத்திற்கு புறம்பாக இதற்கு இணைந்ததாக மேற்கொள்ளப்படும்.

**தாரக விக்கிரமசேகர**
**தமிழில் வீ.ஆர்.வயலட்**

# அமெரிக்காவில் பிரகாசித்த பாத்திமா ஜலீல்

***கலாபூசணம் எம்.எ.பகுர்தீன்***

அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டியைச் சேர்ந்த அமெரிக்கா பொஸ்டன் நகரின் வெஸ்ட்பீல்டில் (Westfield middle school) எட்டாம் (8) தரத்தில் கல்விபயின்று வரும் மாணவி பாத்திமா ஜலீல் அமெரிக்காவில் முன்னூற்று ஐம்பத்தொரு நகர பாடசாலைகளைச்சே ர்ந்த மாணவிகள் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டு ஒன்றிய ஒன்று கூடலுக்கு (Project 351 Community Service Program) தனது பாடசாலையின் தூதுவராக தெரிவு செய்யப்பட்டு பங்குபற்றினார். இலங்கையைச் சேர்ந்த ஒரு மாணவி சகல துறைகளிலும் முன்னணியில் திகழும் ஒரு நாடான அமெரிக்காவில் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டமை ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.



பாத்திமா ஜலீல் ஒரு கடின உழைப்பாளியும் புதுப்புது விடயங்களை அறிந்துகொள்வதில் மிகவும் ஆர்வமுள்ளவரெனவும் அவரது பாடசாலையின் (Westfield middle school) அதிபர் ஜெஸ்சே மெக்மில்லன் தெரிவிகின்றார்.

அந்நாட்டு “WESTFIELD NEWS” “வெஸ்ட் பீல்ட்நியூஸ்” எனும் பத்திரிகைக்கு அளித்த விசேட செவ்வியின்போது அப்பாடசாகையின் அதிபர் இவர் மற்ற மாணவர்களைப்போலன்றி மிகவும் இரக்கசிந்தனையுடையவர் என்றும் மற்றவர்களுடைய உணர்வுகளையும், உள்ளக்கிடைகைகளையும் அறிந்து அவர்களுக்கு உதவுவதில் மிகவும் திருப்தி காண்பவரென்றும் குறிப்பிட்டார்..

தேவையானோருக்கு கைகொடுப்பது பாதிக்கப்பட்டோருக்கு உதவுவது இவரிடம் காணப்பட்ட அதி சிறந்த பண்பாகும் என அதிபர் கூறுகின்றார்.

அமெரிக்காவில் பல மாநில மாணவர்களுக்கு மத்தியில் பாத்திமா ஜலீல் தூதுவராக (Ambassador) தெரிவு செய்யப்படிருப்பதற்கு இவரின் சிறந்த ஆளுமையே காரணமாகும் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

தனது மார்க்க விழுமியங்களை கைவிடாது இஸ்லாமிய கட்டுக்கோப்புக்குள் தனது பாடசாலை வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டமை இவரது மற்றொரு மிகவும் உயர்ந்த குணாவியல்பாக இருந்தது. அமெரிக்காவில் ஹிஜாப் அணிந்து கொண்டு தன்னை அப்பாடசாலையின் தூதுவராக (Ambassador) அடையாளப்படுத்தி இருப்பது மிகவும் துணிகரமானதும் பாராட்டுக்குமுரிய ஒரு செய்தியாகும்.

இவர் அக்கரைப்பற்று ஜலீல், நுஸ்ரத் பேகம் தம்பதிகளின் புதல்வி என்பது குறிபிடத்தக்கது. ஜலீல் அபூபக்கர் ஒரு சிரேஷ்ட கணக்காளர். நுஸ்ரத் பேகம் தனது சொந்த ஊரில் நல்லசிரியராகப் பணியாற்றியவர். மேலும் அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டியைச் சேர்ந்த ஒரு சிறந்த சமூக சேவையாளரான சமாதான நீதவான் ஏ எம். சஹீட் மற்றும் ஆஷரா உம்மா ஆகியோரின் பேரக்குழந்தையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாரம்பரியம் நிகழ்ச்சியில்

# "சிம்மக்குரலோன்" கற்பிட்டி ஜப்பார்

லியாவுல் பன்னான் கலைச்சுடர் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார்! ஒரு காலத்தில் தன் மதுரக் குரலால் வானொலி நேயர்களைக் கட்டிப்போட்டவர். 60, 70, 80 களில் இவரது தொனியில் தம் மனதை பறிகொடுக்காத, மாணாக்கர், வாலிபர்கள், படித்தோர், பாமரர் என யாருமே இருக்க மாட்டார்கள். இன்று, ஓர் இலங்கை வானொலியாளர் ஒருவரை சந்திக்கும், கற்பிட்டியின் மூத்த ஊரார், கேட்கும் முதல் கேள்வி “எங்கள் கற்பிட்டி ஜப்பாரைத் தெரியுமா? எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பாரின் கற்பிட்டியே எங்கள் ஊர்” எனச் சொல்லி ஜப்பாரை, உறவில்லாத நிலையிலும் இன்றும் சொந்தம் கொண்டாடி மகிழ்வது கற்பிட்டி மண்ணின் மீது ஜப்பார் கொண்டிருந்த பற்றினைப் புலப்படுத்துகிறது. இருப்பினும் முதுபெரும் கலைஞர், கவிஞர், நாடக எழுத்தாளர், பாடலாசிரியர், தமிழகத்து பேச்சாளர்களோடு ஒப்பிட்டு பேசும் பன்முக ஆளுமை மிக்க கற்பிட்டி ஜப்பார் அவர்களைப் பரவலாக இன்றைய இளைய தலைமுறைக்கு, கொண்டு சொல்லாதிருப்பது ஒரு குறையாகவே இருந்து வருகிறது. எனினும் அவ்வப்போது நாம் எமது பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் ஜப்பாரை நினைவு படுத்திய போதிலும், எதிர்வரும் 6 ஆம் திகதி (06.02.2024) செவ்வாய் இரவு 8.10 மணியளவில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் எமது “பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடர்” சற்று விரிவாகப் பேசப்போகிறது. எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பாரின் நினைவுகளை, அவரது நெருங்கிய நண்பர், பேராசிரியர், ஆய்வாளர், கலாநிதி முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர், எம்.எஸ். எம். அனஸ் அதிதியாக கலந்து நேயர்களோடு பரிமாறிக்கொள்கிறார். ஜப்பார், கிராம அதிகாரி சேகு இஸ்மாயீல் மரைக்கார், உம்மு ஹபீபா தம்பதியரின் மூத்த புதல்வராகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கற்பிட்டி அல் அக்ஸா மஹாவித்தியாலயத்தில் கற்றார். உயர் கல்வியை சிலாபம் சென். மேரிஸ் கல்லூரியில் தொடர்ந்தார். ஓய்வு நிலை ஆசிரியை ஸைனப் ஜப்பாரை மணமுடித்த இவருக்கு மூன்று ஆண்களும், மூன்று பெண்களுமாக ஆறு பிள்ளைகள். முஸ்லிம் சேவைக்கு இவர், குரலால், எழுத்துகளால், கருத்துகளால் வழங்கிய பங்களிப்புகள் அநேகம். கனல் தெறிக்கும், அழகு தமிழில் எழுதி, தனக்கே சொந்தமான குரல் ஜாலத்தில் நடித்த நாடகங்களை, இசை, உரைச் சித்திரங்களில், இஸ்லாமிய நற்சிந்தனைகளில் ஒலித்த அந்த சிம்மக்குரலை யார்தான் மறந்து போவர்? ஒரு காலத்தில், சினிமா ரசனையில் மூழ்கிக் கிடந்த வானொலி நேயர்களின் நெஞ்சங்களை குறிப்பாக முஸ்லிம் நாடகங்கள் பக்கம் திசை திருப்பியதில் நாடக எழுத்தாளரான இவருக்கும் பங்கிருக்கிறது. அசுத்தங்களை, அவலங்களை சுமந்து சமூகத்தில் நடந்து திரிந்து சமூகத்தையே இழி நிலைக்கு கொண்டு வந்த நிஜ மனிதர்களை தன் நாடகத்தில் கற்பனை பாத்திரங்களாக உலவவிட்டு, அதன் ஒரு பாத்திரமாய் கர்ஜித்து தன் வானொலி நாடகங்கள் மூலமாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தினார். குறிப்பாக புத்தளம், கற்பிட்டி வட்டார பாரம்பரியத்தை, அப்பிரதேச வாழ் அடிமட்ட மனிதர்களின், மீனவர்கள் முலாளியினரின் முரண்பாடுகளை மையப்படுத்தி எழுதிய ஒவ்வொரு முஸ்லிம் சேவையின் நாடகமும் இவரது பெயரை பேச வைத்தது. “அவன் போட்ட கணக்கு” “முடிந்த முடிவு”, “அவள் கொடுத்த தீர்ப்பு”, “பெற்றவளா? தொட்டவளா?” தன் நாடகங்களுக்கு அவர் போட்ட



தலைப்பே கதை சொல்லும். நாடகங்களுக்கு அவர் வழங்கிய முன்னுரையை தொட்டுப் பேசும் பலர் நம்மோடு இன்றும் இருக்கிறார்கள். இவரது நாடகங்களில் நடிப்பதற்காக மூத்த கலைஞர்கள் முன் நிற்பர். இசையறிவும் மிக்க எஸ்.ஐ. எம்.ஏ. ஜப்பார், ஒரு பாடலாசிரியருமாவார். இசைச் சித்திரங்களுக்கு பாடல்கள் எழுதியதோடு. பொதுவான இஸ்லாமிய கீதங்கள் பல எழுதியுள்ளார். சிரேஷ்ட பாடகர்களான பீர் முஹம்மது, டொனி ஹசன், குமாலா சௌஜா எம்.எச்.பௌசுல் அமீர். மஸாஹிரா இல்யாஸ் போன்றோர் பாடியிருக்கிறார்கள். அன்று ஒலிபரப்பான மாதர் நிகழ்ச்சிக்கு பெண் எழுத்தாளர்கள் எழுத பின் வாங்கிய சூழலில் மாதர் சிந்தனைக்கு வலுவூட்ட வல்ல ஆக்கங்களை தன் துணைவியார் திருமதி ஸைனப் ஜப்பாரது பெயரில் எழுதி நிகழ்ச்சித் தொடர துணை சேர்த்துள்ளார். எங்கள் நெஞ்சை விட்டும் மறவாத அந்த காந்தக் குரல் நிகழ்ச்சியில் ஒலிக்க போகிறது. முஸ்லிம் சேவைக்குப் பங்களிப்பு வழங்கியோர் வரிசையில் தவற விட்டு விடாது பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் நினைவுகூர்ந்து ஆவணப்படுத்தியதில் மன நிறைவடைகிறோம். நிகழ்ச்சியை முஸ்லிம் சேவை அதிகாரி எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார். 1934ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி கற்பிட்டியில் பிறந்த கலைச்சுடர் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் 2004ஆம் ஆண்டு ஜுன் மாதம் 20 ஆம் திகதி தனது எழுபதாவது வயதில் நம்மை விட்டும் பிரிந்தார். அவரது ஜனாஸா கற்பிட்டி பெரிய பள்ளியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**எம்.எஸ்.எம். ஜின்னா.**

16 ஆவது ஆண்டு எடிசன் திரை விருது மேடையில்

# புலம்பெயர்ந்த தமிழ் கலைஞர்களுக்கு வாய்ப்பு






உலகத் தமிழர்களால் இணையதளம் மற்றும் சமூக வலைதளம் மூலமாகவும் வாக்குகள் பெற்று கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் திரை கலைஞர்களுக்காக நடைபெற்று வரும் எடிசன் திரை விருது எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் பல்வேறு நாட்டு தமிழ் ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் மூலம் தங்களுக்கு பிடித்தமான திரைக் கலைஞர்களுக்கு வாக்குகளை பெற்று விருது வழங்கப்பட உள்ளது.

அந்த நிகழ்வில் இதுவரை புலம்பெயர்ந்த தமிழர்கள் 50க்கும் மேற்பட்டோருக்கு மேடை வழங்கிய எடிசன் திரை விருதுக் குழு இவ்வாண்டும் பின்னணி பாடகர்கள், தன்னார்வை இசையமைப்பாளர்கள், நடன மணிகள், குறும்பட தயாரிப்பாளர்கள், OTT தளங்களில் வெளியீடு கண்ட வெப் சீரியஸ்கள் என வாய்ப்பு வழங்கவுள்ளது. இதன் மூலம் தமிழ் திரை உலகுக்கு அவர்களின் பங்களிப்பை வழங்கவும், தங்களின் திறமைகளை தமிழ் திரையுலகுக்கு அறிமுகப்படுத்தும் தளமாகவும், இந்த எடிசன் தமிழ் திரை விருது மேடை வாய்ப்பாக இருக்கும் என எடிசன் திரை விருது குழுத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பம்சமான Red Carpet நிகழ்வை பல்வேறு நாட்டு தமிழர்கள் கண்டுகளிக்கும் விதமாக 148 கூட்டாண்மை சமூக ஊடகங்கள் மூலம் நேரலையாக வழங்கவுள்ளது என எடிசன் விருது குழு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார். தொடர்புக்கு +60166167708 வாட்ஸ் அப்பில் தொடர்பு கொள்ளலாம்.







இலங்கையிலுள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகராலயங்களில் உதவி உயர்ஸ்தானிகராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இந்தியாவைச் சேர்ந்த ஏ.நடராஜன் எழுதிய ''From the Village to the Global Stage' (அனுபவ வாழ்க்கைக் குறிப்பு) என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பேராதனை ரெஸ்ட் ஹவுஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. நூலின் முதற் பிரதியை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் நிகழ்வின் பிரதம விருந்தினருமான ரவூப் ஹக்கீமிடமிருந்து இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன ஆலோசகர், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும், சமூக சேவகர் முத்தையா தம்பதியினர் சிறப்புப் பிரதிகளை பெறுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: மாவத்தகம இக்பால் அலி, நாவலப்பட்டி வசந்தகுமார்)


## இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு

# தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் 1979 ஆம் ஆண்டு முதல் விளையாட்டுக் கல்வித் துறையில் பாடநெறிகளை நடத்தும் முன்னணி நிறுவனமாகும்.

## விளையாட்டுக் கல்விப் பாடநெறிகளுக்கான விண்ணப்பகோரல் - 2024

### பயிற்றுவிப்பாளர் உயர் பாடநெறி - கால்பந்து - (NVQ 6)

விளையாட்டுத் துறையில் அனுபவம் வாய்ந்த விளையாட்டுப் பயிற்சியாளர்களுக்கு புதிய தொழில்நுட்ப அறிவை வழங்கும் நோக்கில் இந்தப் பாடநெறி நடத்தப்படுகிறது. தொழில்முறை விளையாட்டுப் பயிற்சியாளராக சர்வதேச மட்டத்தில் வெற்றியடைவதற்கு தேவையான தேடல் அறிவை இந்தப் பாடநெறி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பாடநெறியின் கால அளவு**

ஒரு (01) வருடம் (6 மாத கால விளக்க மற்றும் நடைமுறை பாடநெறி மற்றும் 6 மாத கால ஆராய்ச்சி ஆகியவற்றைக் கொண்டுள்ளது, மேலும் பாடநெறிகள் வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.)

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம் / ஆங்கிலம்

பாடநெறிக் கட்டணம் : ரூபா. 50,000.00

**பாடநெறியில் இணைந்துக்கொள்வதற்கான தகுதி**

1.தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் விளையாட்டு டிப்ளோமாவில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் குறைந்தபட்சம் மாகாண, தேசிய பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற நிகழ்வொன்றில் பயிற்சியாளராக இருத்தல்.

அல்லது

2. 03 வருடங்கள் (கல்வி பீடம்) உடற்கல்வி டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்து மாகாண, தேசிய பாடசாலை போட்டிகளில் வெற்றிபெற்ற நிகழ்வொன்றில் பயிற்சியாளராக இருத்தல்.

அல்லது

கால்பந்து சம்மேளனத்தால் நடத்தப்படும் பாடத்திட்டத்தில் “பி” தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் தேசிய விளையாட்டு அரங்கம் அல்லது தேசிய பாடசாலை விளையாட்டுப் போட்டி அல்லது வேறு ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கால்பந்து போட்டியில் மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பயிற்சியாளராக இருக்க வேண்டும்.

### உடற்றகமை ஆலோசகர் பயிற்சி பாடநெறி - (NVQ - 04)

தற்போது இலங்கை மக்களிடையே பரவியுள்ள தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்த உடற்பயிற்சிக்கான சரியான அறிவுரைகளை வழங்கக்கூடிய விஞ்ஞான அறிவும் நடைமுறைத் திறன்களும் கொண்ட உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதே இந்தப் பாடநெறியின் நோக்கமாகும்.

இந்த பாடநெறி தேசிய தொழிற்கல்வி தகுதி நிலை 04 (NVQ - 04) இன் படி நடத்தப்படுகிறது, மேலும் பாடத்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம், உடற்பயிற்சி கூடத்தில் உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளராக தொழிபயிற்சி நடவடிக்கையை தொடங்க முடியும்.

**பாடநெறியின் கால அளவு**

12 மாதங்கள் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம் / ஆங்கிலம்

பாடநெறிக் கட்டணம் : ரூபா. 30,000.00

**பாடநெறியில் இணைந்துக்கொள்வதற்கான தகுதி**

க.பொ.த சாதாரன தர பொதுத் தேர்வில் சித்தியடைந்திருத்தல், மேலும் விளையாட்டுத்துறை பின்னணி கொண்டவர்.

### விளையாட்டு உளவியல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

வீரர்கள் மற்றும் அவர்களது விளையாட்டு திறன்களை மேம்படுத்துவதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு சாதனைகளை அடைய அவர்களுக்கு தேவையான உளவியல் ஆதரவையும் அறிவையும் வழங்குவதே இந்த பாடத்திட்டத்தின் நோக்கமாகும் அதாவது, விளையாட்டு வீரர்கள், விளையாட்டு பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைத்து தரப்பினரும் இந்த பாடத்திட்டத்தில் பங்கேற்கலாம், அதற்கு பின்வரும் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்:

**பாடநெறியின் கால அளவு**

100 மணிநேரம் (சனிக்கிழமை / ஞாயிற்றுக்கிழமை)

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம்
பாடநெறிக் கட்டணம் : ரூபா. 20,000.00

**பாடநெறியில் இணைந்துக்கொள்வதற்கான தகுதி**

க.பொ.த சாதாரன தர பொதுத் தேர்வில் சித்தியடைந்திருத்தல், மேலும் விளையாட்டுத்துறை பின்னணி கொண்டவர்.

### விளையாட்டு உபாதைகள் முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

விளையாட்டு வீரர்களை உபாதைகளில் இருந்து தவிர்த்துக்கொள்ளுதல் மற்றும் விளையாட்டு உபாதைகள் முகாமைத்துவம் தொடர்பான ஆரம்ப அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் விளையாட்டு பயிற்சிவிப்பாளர்கள் மற்றும் உடல் நல ஆலோசகர்களை இலக்காகக் கொண்டு இப்பாடநெறியானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**பாடநெறியின் கால அளவு**

100 மணித்தியாலங்கள் (வாரத்தின் இரண்டு நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணி வரை பாட நெறி இடம்பெறும்.)

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம் / ஆங்கிலம்
பாடநெறிக் கட்டணம் : ரூபா. 20,000.00

**தகைமைகள் :**

விளையாட்டு பயிற்சிவிப்பாளர்கள் அல்லது உடல் நல ஆலோசகர்களாக சேவையாற்றிய முன் அனுபவத்தை கொண்டிருத்தல்.

### பயிற்சியாளர்கள் திறன் மேம்பாட்டு சான்றிதழ் பாடநெறி

இலங்கையிலுள்ள பயிற்சியாளர்களின் விளையாட்டு அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் வகையில் இந்த பாடநெறி நடாத்தப்படுவதுடன் இவ்வருடம் சதுரங்கம், உதைபந்தாட்டம், கராத்தே மற்றும் தடகளம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பாடநெறியை வெற்றிகரமாக முடிக்கும் பயிற்சியாளர்கள் இலங்கையில் பொருத்தமான விளையாட்டுப் பயிற்சிக்கு தகுதியான விளையாட்டுப் பயிற்சியாளர்களாகக் கருதப்படுவார்கள், மேலும் அந்தப் பயிற்சியாளர்கள் இந்த அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு பயிற்சியாளர் பதிவுச் சான்றிதழும் வழங்கப்படும்.

**பாடநெறியின் கால அளவு**

03 மாதங்கள் (பாடநெறி வாரத்தில் ஒரு நாளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.)

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம் / ஆங்கிலம்

பாடநெறிக் கட்டணம் : ரூபா. 8,000.00

**பாடநெறியில் இணைந்துக்கொள்வதற்கான தகுதி**

1. பயிற்சியாளராக 03 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

2. சர்வதேசகூ தேசியகூ மாகாணகூ மாவட்ட அளவில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளித்தல்.

### விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை II

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக சரியான தொழில்நுட்ப அறிவினை மேலும் வழங்கும் முன்நோக்கிய படிமுறையாக நீச்சல் மற்றும் கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடநெறியின் கால அளவு**

12 வாரங்கள் (120 மணித்தியாலங்கள்- கிழமையொன்றிற்கு 02 நாட்கள் வீதம் மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.04.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம் / ஆங்கிலம்
பாடநெறிக் கட்டணம் : ரூபா. 15,000.00

**பாடநெறியில் இணைந்துக்கொள்வதற்கான தகுதி**

1. விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை I (நீச்சல் மற்றும் கரப்பந்தாட்டத்தில்) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

2. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் வழங்கப்படும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

3. தேசிய/மாகாண/மாவட்டமட்டத்தில் வெற்றிகளை ஈட்டிய விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவித்திருத்தல்.

### ஏரோபிக் ஆலோசகர் பயிற்சி பாடநெறி

இந்த பாடநெறி ஒரு தொழில்முறை ஏரோபிக் உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளராக பணியாற்ற தேவையான அறிவை வழங்குகிறது, மேலும் தற்போது பொதுவான தொற்று அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்த உடற்பயிற்சி திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான திறன்களையும் வழங்குகிறது, அத்துடன் உடல் தகுதி மற்றும் பொழுதுபோக்குக்கான உடற்பயிற்சிகளையும் வழங்குகிறது.

**பாடநெறியின் கால அளவு**

100 மணிநேரம் (ஞாயிற்றுக்கிழமை /திங்கட்கிழமை)

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம் / ஆங்கிலம்
பாடநெறிக் கட்டணம் : ரூபா. 20,000.00

**பாடநெறியில் இணைந்துக்கொள்வதற்கான தகுதி :**

க.பொ.த சாதாரன தர பொதுத் தேர்வில் சித்தியடைந்திருத்தல், மேலும் விளையாட்டுத்துறை பின்னணி கொண்டவர்.

### விளையாட்டு விஞ்ஞானத்தில் சான்றிதழ் பாடநெறி நிலை - I

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக வெற்றியை நோக்கி பயணிக்க முயற்சிக்கும் பயிற்சியாளர்களுக்கு (நிறுவனமயமாக்கப்பட்ட மற்றும் சுவேட்சை பயிற்றுவிப்பாளர்கள்) விளையாட்டு அறிவு மற்றும் ஆற்றுகை அபிவிருத்தியினை மேற்கொள்ளுவதற்காக இப் பாடநெறி நடாத்தப்படுவதுடன் கராத்தே, நீச்சல், கரப்பந்து, டைகொண்டோ, ஊசு ஆகிய விளையாட்டுக்கள் தொடர்பாகவுள்ள பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

**பாடநெறியின் கால அளவு**

06 வாரங்கள் (60 மணித்தியாலங்கள் - வாரத்தின் இரண்டு நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணிவரை பாட நெறி இடம்பெறும்.)

பாடநெறியின் ஊடக மொழி : சிங்களம் / ஆங்கிலம்

பாடநெறிக் கட்டணம் : ரூபா. 10,000.00

**பாடநெறியில் இணைந்துக்கொள்வதற்கான தகுதி**

1.திறந்த மட்டத்தில் மாகாண முதலாம், இரண்டாம் அல்லது மாகாண, தேசிய விளையாட்டொன்றில் மாகாண முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட வீர, வீராங்கனைகள் ஆவதுடன் அல்லது வீர, வீராங்கனைகளை பயிற்றித்திருத்தல்.

அல்லது

2.பாடசாலை மட்டத்தில் மண்டலங்களின் முதல், இரண்டாம் அல்லது மாகாண, தேசிய போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட வீர, வீராங்கனைகள் ஆவதுடன் அல்லது வீர, வீராங்கனைகளை பயிற்றித்திருத்தல்.

அல்லது

3. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் வழங்கப்படும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியை சித்தி பெற்றிருத்தல்.




**முக்கிய குறிப்பு : இந்தப் பாடநெறிகளில் இணைந்துக்கொள்வதற்கு கோரப்படும் தகுதிகளுடன், மேலும் சமர்பிக்கப்படும் உயர் திறன் மற்றும் விளையாட்டுக் கல்வித் தகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

விண்ணப்பங்களை அனுப்பும் முறை - அனைத்து பாடநெறிகளுக்குமான விண்ணப்பங்களை **National Institute of Sports Science Facebook Page** மூலமாகவோ அல்லது வார நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனததில் பெற்றுக்கொள்ளலாம். **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 28 பெப்ரவரி 2024** அன்று அல்லது அதற்கு முன்னதாக **பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இலக்கம் 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07.** என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

நீங்கள் பல்வேறு பாடநெறிகளுக்கு விண்ணப்பித்தால், அவற்றுக்கான தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறி / விளையாட்டை குறிப்பிடல் வேண்டும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனததில்,
இலக்கம் 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07.

தொலைபேசி இலக்கம் - 011 2684921 | தொலைநகல் - 011 2667709 | இணையத்தளம் : www.niss.gov.lk

SCAN ME! Download Application




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். வயிறு சம்பந்தப்பட்ட நோய் வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களை திட்டமிட்டு செய்வது நல்ல பலன் தரும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணவரத்து திருப்தி தரும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். புத்தி சாதுர்யத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். பெண்களுக்கு முயற்சிகள் சாதகமான பலன்தரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும். அரசியல்துறையினருக்கு புதிய முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் பெற எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். வீண்கவலையை தவிர்ப்பது நல்லது.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

உங்களது கருத்துக்கு மற்றவர்களிடம் வரவேற்பு இருக்கும். தனாதிபதி புதனால் பணவரத்து இருக்கும். எதிர்ப்புகள் விலகும். தடைப்பட்ட காரியங்களை மீண்டும் செய்து முடிக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். மனகசப்பு மாறும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் உதவி உண்டாகும். பெண்கள் சுப காரியங்களை செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அரசியல் துறையினருக்கு மனதில் உற்சாகம் ஏற்படும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

கொடுத்த வாக்கைக் காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். சிக்கலான சில விஷயங்களை சாதூரியமாக பேசி முடித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் முன்பு இருந்ததை விட முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தர்கள் தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம்பட செய்து முடித்து பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள். மேலிடத்தின் கரிசன பார்வை உங்கள் மீது விழும். குடும்பத்தில் உறவினர் வருகை இருக்கும். பெண்கள் சாதூரியமான பேச்சின் மூலம் சிக்கலான பிரச்சினைகளையும் தீர்த்து விடுவார்கள். கலைத்துறையினர் வீண் பயத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் அடைய பாடுபடுவர். கல்வி தொடர்பான பயணம் செல்ல நேரிடலாம். அரசியல்துறையினர் பயணங்கள் செல்ல நேரிடும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். வீண் பிரச்சினைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது. சுணங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். தொழில் வியாபாரம் தொடர்பான மனக்கவலை தோன்றி மறையும். லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிலும் நிதானமாக செயல்படுவதும் மற்றவர்களை அனுசரித்து போவதும் நல்லது. குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற நபர் மீண்டும் வந்து போவார்கள். கோபத்தை குறைத்து இனிமையாக பேசுவதன் மூலம் குடும்பத்தில் அமைதி உண்டாகும். பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை. கலைத்துறையினருக்கு அலைச்சல் அதிகரிக்கும். அரசியல்துறையினருக்கு அடுத்தவர்களிடம் பழகும்போது கவனம் தேவை. மாணவர்களுக்கு பாடங்களை மிகவும் நிதானமாக படித்து மனதில் பதிய வைத்துக்கொள்வது நல்லது.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நல்லது எது கெட்டது எது என்று பிரித்துப் பார்த்துச் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம். குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து அதன் மூலம் அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். பெண்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு புத்தி தெளிவு உண்டாகும். அரசியல் துறையினருக்கு எதிர்பாராத சில திருப்பங்களால் காரிய வெற்றி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கூடுதல் முயற்சி மேற்கொள்வது நல்லது. சக மாணவர்களுடன் நிதானமாக பேசி பழகுவது நன்மை தரும்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நல்லது எது கெட்டது எது என்று பிரித்துப் பார்த்துச் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கலாம். குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து அதன் மூலம் அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். பெண்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு புத்தி தெளிவு உண்டாகும். அரசியல் துறையினருக்கு எதிர்பாராத சில திருப்பங்களால் காரிய வெற்றி கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் முயற்சி மேற்கொள்வது நல்லது. சக மாணவர்களுடன் நிதானமாக பேசிப் பழகுவது நன்மை தரும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடச் செய்யும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். எதிர்ப்புகள் விலகும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பேச்சின் இனிமை புத்தி சாலித்தனம் இவற்றால் முன்னேற்றம் பெறுவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பேச்சினால் மேலதிகாரிகளை கவர்ந்து விடுவார்கள். குடும்பத்தில் இருந்த இறுக்கம் நீங்கி மனம் மகிழ்ச்சியடையும் விதமாக சம்பவங்கள் நடக்கலாம். உறவினர் மூலம் தேவையான உதவியும் கிடைக்கும். பெண்களுக்கு எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கலைத்துறையினருக்கு பயணம் மூலம் லாபம் கிடைக்கக் கூடும். அரசியல்துறையினருக்கு புதிய நபர்களின் நட்புக் கிடைக்கும். மாணவர்களுக்கு மற்றவர்கள் கூறுவதை கேட்டு அதன்படி நடக்கும் முன்பு அது சரியா தவறா என்று யோசித்துப் பார்ப்பது நல்லது. பாடங்களை படிப்பதில் கவனம்தேவை.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த காரியத்தை மீண்டும் செய்து முடிக்க முயற்சிகள் மேற்கொள்வீர்கள். கடிதப் போக்குவரத்து சாதகமான பலன் தரும். வெளியூர் தகவல்கள் சாதகமானதாக இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகள் வேகமாக நடைபெறும். தடைகள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். சக ஊழியர்களால் உதவியும் இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வழக்கு விவகாரங்களில் காலதாமதமான நிலை காணப்படும். பெண்கள் தடைப்பட்டு வந்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினருக்கு பணவரத்து கூடும். அரசியல்துறையினருக்கு எதிர்ப்புகள் விலகும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பது பற்றிய கவலை நீங்கும். மனதில் உற்சாகம் பிறக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

சகோதரர்கள் வகையில் ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டு மறையும். பூமி தொடர்பான பிரச்சினைகளில் இழுபறியான நிலை காணப்படும். வழக்குகளில் சுணக்கம் இருக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று மந்தமான நிலை காணப்படும். வரவேண்டிய பணம் கைக்கு கிடைக்கத் தாமதமாகலாம். போட்டிகளை சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரிடும். நிதானமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கி அமைதி காணப்படும். கணவன் அல்லது மனைவி மூலம் இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவை தரும். பெண்களுக்கு மனதில் தைரியமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அரசியல்துறையினர் வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு மனத்தெம்பும் மகிழ்ச்சியும் தரும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பது பற்றிய கவலை நீங்கும். உற்சாகமான மனநிலை காணப்படும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

உடல் ஆரோக்கியம் மேம்படும். பூமி, வீடு தொடர்பான பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். பணவரத்து தடைபட்டாலும் வந்து சேரும். வியாபார பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கும் போது கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களது பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். பெண்களுக்கு கோபம், படபடப்பு குறையும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அரசியல்துறையினருக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்த சுணக்க நிலை மாறும். மாணவர்களுக்கு உயர்கல்வி படிப்பவர்களுக்கு திடீர் பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வாகனங்கள் மூலம் செலவு உண்டாகும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

கோபமான பேச்சு, டென்ஷன் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்க பெறுவார்கள். லாபம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி அமைதியாக பணிகளை கவனிப்பார்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்க முற்படுவீர்கள். எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விட வேண்டும் என்பதில் உறுதி பெண்களுக்கு காணப்படும். கலைத்துறையினருக்கு அதிக அலைச்சல் இருக்கும். அரசியல்துறையினருக்கு மன உறுதி ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண உதவி கிடைக்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

திடீர் கோபம் உண்டானாலும் சமாளித்து விடுவீர்கள். எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல். வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் கெடுபிடிகளை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் தலைதூக்கலாம்.பொழுதுபோக்கில் நாட்டம் அதிகரிக்கும். பெண்களுக்கு எப்படிப்பட்ட சிக்கலையும் சமாளிக்கும் மனப்பக்குவம் உண்டாகும். கலைத்துறையினருக்கு நட்பின் மூலம் நன்மைகள் நடக்கும். அரசியல்துறையினருக்கு மேலிடத்தின் மூலம் அனுகூலம் ஏற்படும். மாணவர்களுக்கு எப்படி பாடங்களை படித்து முடிப்பது என்ற டென்ஷன் உண்டாகும்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 22

# தகைசால் தமிழர் விருதுபெற்ற கி.வீரமணி

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நிகழ்வில் சிரேஷ்ட ஆளுமை ஆசிரியர் கி.வீரமணியின் பிரசன்னம் மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்கியது. ஈ.வே.இராமசாமியின் சுயமரியாதை இயக்க கொள்கையை நிலைநிறுத்துவதில் இன்று வரையில் செயற்பட்டுக் கொண்டிருப்பவராக கி.வீரமணி விளங்குகிறார். தமிழ் நாட்டின், தமிழர்களின் வரலாற்றை செதுக்கியதில் திராவிட இயக்கத்தின் வகிபங்கு முக்கியத்திற்குரியதாகும். பேதங்களை கடந்து சரிநிகர் சமானம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக பயணிக்கும் நிறுவனமான திராவிட இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கி.வீரமணி ஆசிரியர் என்றே அடையாளப்படுத்தப்படுகிறார். தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் சீ.எஸ்.கிருஷ்ணசாமி, மீனாட்சி தம்பதிகளுக்கு 02.12.1933இல் மகனாக பிறக்கிறார். சாரங்கபாணி எனும் இயற்பெயரில் இருந்து காலப்போக்கில் வீரமணியாக அடையாளப்படுத்தப்படுகிறார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வியைப் பெற்றுக்கொள்கிறார். பெரியாரின் சுயமரியாதை சிந்தனையில் உந்தப்படுகிறார். அவ் உந்துதல் திராவிடக் கழகத்தில் இணைந்து செயற்பட வாய்ப்பாக அமைகிறது.

சுயமரியாதை, பகுத்தறிவு, சாதி எதிர்ப்பு, பெண் உரிமை ஆகியவற்றோடு இறை மறுப்பு சிந்தனையோடு ஆழ் மனதில் இருத்திய சிந்தனை, சொல், செயற்பாடுகள் திராவிட கோட்பாடுகளை கட்டமைப்பதில் முனைப்பாக ஈடுபடுகிறார்கள். காலனித்துவ ஆட்சியில் ஆரியவாத முனைப்பும் தமிழர்களின் சிதைவுக்கு உறுதுணை புரிகிறது. தமிழர் சமூகத்தில் புரையோடிய பிரிவினைவாதம் தமிழினதும், தமிழர்களினதும் கீர்த்தியில் பெரிதும் தாக்கத்தை செலுத்திய காலகட்டமாக திகழ்கிறது.

தமிழகத்திலிருந்து தமிழர்கள் அடிமைகளாக புலம்பெயரும் நிர்ப்பந்தத்தை துரிதப்படுத்தியும் சிதைவுகள் உறுதிப்படுத்திய காலமாக திகழ்கிறது. இந்தோ ஆரிய மொழியின் ஊடுருவல் துரிதமாக்கப்பட்ட நிலையில் தமிழ் மொழி ரீதியிலான உந்துதலோடு அம் மொழி சார்ந்த நெருங்கிய தொடர்போடும் காணப்படுகின்ற மொழிகள் திராவிட மொழிகள் என்ற வரையறைக்குள் உள்வாங்கப்பட்டன. இவ்வாறு உள்வாங்கப்பட்ட திராவிட மொழிகள் தென் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்றவாறு வகைப்படுத்தப்படுகின்றன. இத்திராவிட மொழிகளில் தமிழ் மொழி இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே சிறந்த இலக்கியத்தையும், இலக்கணத்தையும் கொண்ட மொழியாக விளங்குகிறது.

ஆங்கிலத்தில் “Dravidian” என்ற அடைமொழியின் மொழிபெயர்ப்பாகவே தமிழில் “திராவிடன்” எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இச் சொல்லை பிரயோகத்துக்கு கொண்டு வந்ததில் மொழி அறிஞரான கால்டுவெல்லின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இம் மொழியோடு தொடர்புபட்ட மக்களின் கலை, கலாசாரம், நாகரீகம் போன்றவற்றையும் தெளிவுறுத்தும் அடைமொழியாகவே “திராவிட” எனும் சொல் பிரயோகத்துக்கு வந்துள்ளது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளை ஆரம்பக் காலத்தில் “தமிழியன்” என அழைத்தார்கள். இச் சொற்பிரயோகம் இம் மொழிகளுக்குள்ளே தமிழின் சிறப்பை எடுத்துரைப்பதாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ் சிறப்பும் பழமையும் பெற்றுள்ள நிலையிலும் திராவிட மொழிகளில் தமிழும் ஒன்றாக இருப்பதாலும் இவ்வின மொழிகளை இணைத்து திராவிட மொழிகள் என கையாள்வதாக கூறும் கால்டுவெலின் கூற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இச் சொல்லைத் தான் பிரயோகத்துக்கு கொண்டு வருவதற்கு முன்னரே ஆரியர்கள் பயன்படுத்தியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார். தென்னாட்டு மக்களை பொதுவாக “திராவிடர்கள்” என அழைக்கும் மரபு நீண்ட காலமாகவே பிரயோகத்தில் வந்துள்ளதை எடுத்துக் கூறுவார். மகாபாரதத்திலும் திராவிடர் என்ற சொல் பல இடங்களில் பயன்படுத்துவதையும் காண முடிகிறது என்பார்.

“திராவிடம்” என்ற சொல்லின் புரிதல் “நீதிக்கட்சி” எனும் மகுடத்தில் அமைந்த அமைப்பில் திராவிடக் கழகமாக உருப்பெறுகிறது. பின்னர் “திராவிடக் கழகம்” திராவிட முன்னேற்றக் கழகம்” அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய சமூக அமைப்புகளின் உருவாக்கத்திற்கு அடிகோலியது. தமிழகத்தின் ஆட்சியை தீர்மானிக்கும் சக்திகளாக இவ்விரு அமைப்புகளின் வகிபங்கும் குறிப்பிடத்தக்கதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் குடும்ப ரீதியிலான ஆட்சிக்கு வாய்ப்பாக அமைத்துக்கொண்டுள்ளமை தொடர்பில் பல விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டாலும் திராவிடக் கழகத்தின் நோக்கத்தை அக் குடும்பம் சாதகமாகவே பயன்படுத்துவதும் கவனிக்கத்தக்கது. திராவிடக் கழகத்தின் பெரியார் காலம் தொடக்கம் அவ் அமைப்பின் செயற்பாட்டாளரா கி.வீரமணி செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தந்தை பெரியாரினாலேயே 1962ஆம் ஆண்டு இவ்வமைப்பின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2003ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அவ் அமைப்பின் தலைவராக செயற்படுகின்றமையும் கவனிக்கத்தக்கது. இவ் அமைப்பின் இதழ்களான “விடுதலை” “உண்மை” “பெரியார் பிஞ்சு” ஆகிய இதழ்களின் ஆசிரியராக தொழிற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் என்ற பதவி நிலையிலும் பெரியாரிசம் சார்ந்த பல அமைப்புகளின் முக்கிய பொறுப்புகளில் செயலாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

திராவிடக் கழகத்தின் இயக்க செயற்பாட்டின் அச்சாணியாக பெரியாரின் சிந்தனைகள் தொழிற்படுகின்ற நிலையில் அதன் தேரோட்டியாக வீரமணியின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதாகும். இயக்கத்தின் பல போராட்டங்களில் பங்கேற்று சிறைவாசம் பெற்ற அனுபவம் வீரமணியின் வாழ்வில் திருப்புமுனையாக அமையுமாற்றை அவரது வாழ்க்கை வரலாற்றை மீட்டிப் பார்க்கும் போது தெளிவாகிறது. பிறப்பின் அடிப்படையில் அனைவரையும் சமமாக அனுகுதல் வேண்டும் என்ற பொறிமுறையோடு இயக்கத்தின் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பாலின சமத்துவம், சமூக நீதி, மூடநம்பிக்கைகளை தகர்த்தல் போன்ற கொள்கைகள் மீது பொறுப்புடன் திட்டங்களை வகுத்து ஆற்றிய செயற்பாடுகள் சிறப்பிடம் பெறுகின்றன.

தமிழகத்தில் திராவிட அமைப்புகளின் ஆட்சிக்கு ஒரு முக்கிய அமுக்க இயக்கமாக தொழிற்படுமாற்றையும் அவதானிக்கலாம். பகுத்தறிவு அறிவியல் மனப்பாங்கை பரப்புவதிலும் திராவிடக் கொள்கைகளை உலகளவில் அமுல்படுத்தத் துணியும் பணியில் கி.வீரமணி தனித்துவ அடையாளமாக திகழ்கிறார். தமிழக அரசு கி.வீரமணியினது தொண்ணூராவது பிறந்த தினத்தில்; “தகைசால் தமிழர்” எனும் விருதினை வழங்கி கௌரவப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.



மாநாட்டில் பங்கெடுத்திருந்த போது கி.வீரமணியோடு சில நிமிடங்கள் மாத்திரமே உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. உலகின் முதல் பகுத்தறிவாளராக அறியப்பட்ட சோக்ரடிஸின் வாழ்க்கை என்னில் செல்வாக்கு செலுத்துவதைப் போல தந்தை பெரியாரும் இடம் பெறுகிறார். தமிழர்களின் தலைசிறந்த பகுத்தறிவாளர் வழி வந்தவர்கள் என்ற அடிப்படையில் அச் செயற்பாட்டாளர்கள் மீது அதீதமான ஈடுபாடு உள்ளது. அவர்களில் பெரியாரின் நேரடி மாணவனாகவும் அவரது பாசறையில் வளர்ந்த ஆளுமையோடு உரையாட கிடைத்த வாய்ப்பை பெரிதாகவே எண்ணுகிறேன். கி.வீரமணியிடம் இந்திய வம்சாவளி தமிழர் என்றும் எனக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பூர்வீக தொடர்பையும் எடுத்துக் கூறியவனாக அவருடன் உரையாடல் தொடர்ந்தது. நீங்க கண்டியா? என வினவிய நிலையில் எம்.ஜி.ஆர் பற்றிய நினைவுகளை அவரது வார்த்தைகள் மீட்டிப் பார்த்தன. இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பில் ஓரளவு தெளிவான புரிதலை கொண்டிருந்தார் என்பது புலனாகியது. ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் தொடர்பிலும் எடுத்துரைத்தேன். அதன் பின்னர் இந்திய வம்சாவளி தமிழர்கள் இன்று வரையில் இருப்பு தொடர்பில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சில பற்றிய பிரஸ்தாபிப்புகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய காலனித்துவத்தில்; புலம்பெயர்ந்த தென்னிந்திய தமிழர்கள் சட்ட ரீதியில் “இந்திய வம்சாவளி தமிழர்கள்” என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள். இலங்கையில் இருநூறாவது வருடத்தில் தடம் பதிக்கும் இவர்கள் தங்களை “மலையகத் தமிழர்கள்” என்று அடையாளப்படுத்துவதில் முனைப்பு காட்டுகின்ற நிலைபற்றியும் கலந்துரையாடல் தொடர்ந்தது.

“மலையகம்” திராவிடக் கொள்கை மீதான ஆர்வத்தின் வெளிப்பாடாகவே தோற்றம் பெற்ற சொல்லாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. பெரியாரிசத்தை இலங்கையில் முன்னெடுத்தவர்களில் ஏ.இளஞ்செழியன் இலங்கையின் பெரியாராகவே அடையாளப்படுத்தப்படுகிறார். “மலையகம்” என்ற சொல்லாக்கம் இவரில் இருந்தான தோற்றுவாயாகவே அமைந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் கலை இலக்கிய செயற்பாட்டாளர்களின் வலியுறுத்தல் செயற்பாடுகள் சிந்தனை, சொல், செயல் மூலமாக அர்த்தப்படத் தொடங்கியது. மலையக எழுத்துத்துறை மற்றும் கலை இலக்கிய செயற்பாட்டாளர்களும் தீவிரமாக திராவிடக் கொள்கையில் மீதான ஆற்றுப்படுத்தலோடு செயற்படத் தொடங்கினார்கள். குறிப்பாக மலையக நாடக அரங்குகள் திராவிடக் கொள்கைகள் மீது அதீத ஈடுபாட்டுடன் செயற்படத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய திராவிட கொள்கையுடன் உருவாக்கப்பட்ட நாடகங்கள் இலங்கை மலையகத்திலும் அரங்கேற்றப்பட்டமையும் அதனைத் தழுவிய நாடகங்கள் உருவாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மலையகத்தில் திராவிட கொள்கை மீதான ஈடுபாட்டையும் பிடிப்புணர்வையும் ஆவணப்படுத்தும் சில எழுத்துருவாக்கங்கள் முக்கியமானவை. முற்போக்காளர் ஏ.இளஞ்செழியன் எழுதிய “ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை” எனும் நூலும், பெ.முத்துலிங்கத்தின் “எழுதாத வரலாறு” அவ்வாறே ஓ.ஏ.இராமையாவின் எழுத்துக்களும் முக்கியமானவையாகும்.

அரங்கில் கி.வீரமணியின் சிறப்புரையும் மிக முக்கியத்துவம் பெற்றதாக விளங்கியது. மொழி என்பது போர்க்கருவியாக தொழிற்படுதல் வேண்டும். வில்லும் அம்பும் மனிதர்களின் போர்க்கருவியாக இருந்தது. இருப்பினும் தற்போது அதனை எந்த போர்க்களங்களும் பயன்டுத்துவதில்லை. கால மாற்றத்திற்கு ஏற்ப கருவிகள் வடிவமைக்கப்படுகின்றன. அவ்வாறே மொழியும் கால மாற்றத்திற்கு ஏற்ப நவீனப்படுத்தப்படல் வேண்டும்.

அந்த அடிப்படையில் இணைய காலத்தில் தமிழ் என்ற பொருண்மியத்துடன் ஆய்வு மாநாடு நடைபெறுவது பொருத்தமானதாகும். தமிழை ஏனையவர்கள் பார்ப்பதை விட பெரியாரிசத்தை நேசிக்கின்றவர்கள் அணுகுகின்ற முறை வித்தியாசமானதாகும். பண்பாட்டு படையெடுப்பு நிகழ்கின்ற போது அதனை எதிர்கொள்வதற்கு மொழி போர்க்கருவியாக உருமாற வேண்டும்.

அவ்வாறே இந்த மலாயா பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழித்துறை உருவாக்கத்தில் போர்க்கருவியாக பயனாகி நிலைபெற்ற சம்பவத்தை நினைவு கூறினார். நீநி கட்சி 1918இல் வலிறுத்திய தமிழ் மொழியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்ட நிலையிலேயே தமிழின் சிறப்பு மேலோங்கப்பட்டது. அதன் பரிணாம வளர்ச்சி நிலையிலேயே 2004ஆம் ஆண்டு தமிழ் மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. தமிழ் மொழி எந்த மொழியால் தூசிக்கப்பட்டதோ அம் மொழியான சமஸ்கிரதம் 2005ஆம் ஆண்டே செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. இதுவும் பெரியாரிசத்தின் மாணவனான கலைஞர் மு.கருணாநிதியின் செயற்பாடுகளே ஏதுவாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி அறிவுப் போரில், அறப் போரில், உரிமைப் போரில் கூர்மையான கருவியாக தொழிற்பட்டு வெற்றி வாகை சூடியுள்ளதை வரலாறு நிருபித்துள்ளது, என அவரது உரை தொடர்ந்தது.

**பயணப் தொடரும்...**

# வங்காள விரிகுடா பகுதிகளில் தவிர்க்க முடியாத வரட்சியும் மழையும்

(கடந்தவாரத் தொடர் )

1951/2022 காலத்தில் 15 நிரந்தரமானதும் வலிமையானதுமான எல்நினோ நிகழ்வுகள் ஏற்பட்டன என்பதை வரலாற்று ரீதியான பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த வருடங்களில் இந்திய மொன்சூன் 8 வருடங்களில் பற்றாக்குறையாகவும், 3 வருடங்கள் மொன்சூன் மழைவீழ்ச்சி வழமைக்கு மாறாகக் குறைவாகவும், இருந்தது 2015 இல் நிகழ்ந்த எல்நினோ நிகழ்வில் இந்திய மொன்சூன் மழைவீழ்ச்சி 13 வீதம் குறைவாக இருந்தது. அத்துடன் விவசாய இழப்புக்களுடன் இணைந்த முறையில் வெப்பத்தாக்கத்தினால் 1500 பேர் இறந்தனர். இதே போன்று 1877 இல் மிக மோசமான மொன்சூன் பாதிப்பினையும் மழைவீழ்ச்சிக் குறைவினையும் இந்தியா எதிர்நோக்கியது. வரட்சியின் காரணமாக உருவாகிய பட்டினியினால் இந்தியாவின் பல பகுதிகளிலும் தலைவிரித்தாடிய பஞ்சத்தினால் 5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் இறந்தனர். இந்தியாவில் இடம் பெற்ற மொத்த வரட்சிகளில் 50 சதவீதம் எல்நினோவுடன் தொடர்புபட்டதாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. NOAA வின் காலநிலை எதிர்வுகூறல்; மையத்தின் பிந்திய எதிர்வுகூறலின் படி 2024 இல் தீவிரமான எல்நினோ ஒன்று இப்பிராந்தியத்தில் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அம்சங்களை ஆராயும் போது தென்னாசியாவில் குறிப்பாக வங்காள விரிகுடாப் பகுதிகளில் வரட்சியும் மழையும் தவிர்க்க முடியாததாக உள்ளது. பிலிப்பைன்ஸ், கம்போடியா, ஊடாக ஊடறுக்கும் கீழலைகளின் தாக்கம் அராபியன் கடல் வரை ஏற்படுகின்றது. வட கீழ் மொன்சூன் காலம் இடிமின்னல்




நிறைந்ததாகக் காணப்படுகின்றது. தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் உள்ள காயல்பட்டினத்தில் டிசம்பரில் 24 மணித்தியாலத்தில் 95 சென்ரிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியது. திருநெல்வேலி மாவட்டம் அதன் வழமையான சராசரி மொன்சூன் மழைவீழ்ச்சியை விட ஒக்டோபரில் இருந்து 135 சதவீதம் அதிகமான மழைவீழ்ச்சியைப் பெற்றது. தமிழ்நாட்டில் வருடாந்தம் பதிவு செய்யப்படும் மழைச்சியில் ஏறக்குறைய 48 சதவீதம் ஒக்டோபர் டிசம்பர் காலத்தில் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. டிசம்பர் இறுதியில் இடம் பெற்றது போன்று ஜனவரி முதல் வாரத்திலும் மழைவீழ்ச்சிக்கான வாய்ப்புக் காணப்பட்டது. டிசம்பர் இறுதியில் அவுஸ்திரேலியாவிலும் கடும்மழைவீழ்ச்சி எல்நினோவின் தாக்கத்தினால் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் பொங்கலுக்கு முன்னர் இடம்பெற்ற தாழமுக்க நகர்வுகள் தென்சீனக் கடலின் ஊடாகவே வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

2023 டிசம்பர் 4 இல் ஏற்பட்ட புயலின் மிகக் கடுமையான பாதிப்பினை ஒளிப்படம் காட்டுகின்றது.

மாடன் யூலியன் ஊசலி (MJO Maddan Julian Oscillation) என்பது 1971 இல் கண்டுபிடிக்கப்பட்டது. வாராந்த அல்லது மாதரீதியிலான அளவுதிட்டங்களில் அயன வானிலையில் காணப்படும் பிரதான தளம்பல்களை இது குறிக்கும். மத்தியகோட்டுப் பகுதியில் கிழக்கு நோக்கி நகரும் மழைவீழ்ச்சி மற்றும் முகில் துடிப்புக்களைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு 30 தொடக்கம் 60 நாட்களுக்கு ஒரு முறை இடம்பெறும். மொன்சூன் பருவக்காற்றில் இடம்பெறும் 38 தொடக்கம் 80 வீதம் வரையான மழைவீழ்ச்சி மாறுதன்மை இந்த மாடன் யூலியன் ஊசலியுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது. மேற்கிலிருந்து கிழக்காக 60 நாள் சுழற்சியைக் கொண்ட பருவகால மழைவீழ்ச்சிக்கு முக்கியம் பெற்ற இந்த மாடர்ன் யூலியன் ஊசலி அதன் இரண்டாவது கட்டத்தில் இந்தியக் கடலுக்கு நகர்ந்தமை காரணமாகவே மழைவீழ்ச்சி பெரு நிகழ்வாக மாறியது. அதனுடன் றொஸ்பி அலைகளின் தாக்கமும் காணப்பட்டதனால் ஜனவரி பொங்கல் வரையும் இந்தியாவின் டெல்டா மாவட்டங்களுக்கு மழை தொடர்ந்து காணப்பட்டது.

புவியின் வெப்பநிலை அதிகரிப்பதனால் 2023 அதிக வெப்பம் கொண்ட ஆண்டாகக் கருதப்பட்டது. பூகோள வெப்பநிலை 1.50 C ஆக உயர்வடையும். இதற்கு காபனீரொட்சைட்டு 440 ppm ஆக உயர்ந்து காணப்படுவதே காரணமாகும் என அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் கூரியன் என்பவர் குறிப்பிட்டார். காயல்பட்டினத்தில் ஒரு வருடம் இடம்பெறும் மழை ஒரு நாளிலேயே கிடைத்துள்ளது. புவி வெப்பத்தினைக் குறைக்காவிட்டால் இத்தகைய கடுமையான மழைவீழ்ச்சி மட்டுமின்றி வரட்சியும் ஏற்படும். காலநிலை மாற்றத்தின் காரணமாக பசுபிக் பெருங்கடலில் வலிமைமிக்க எல்நினோ நீடித்திருப்பதுடன் மேற்காவுகை சுமாத்திராப் பகுதி காற்றுச் சுழற்சியாக நகர்ந்து இந்தியப் பெருங்கடலிலுள்ள காற்றுச் சுழற்சியுடன் இணைந்து மழைப்பொழிவைக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தாக்கத்தினால் சனவரி 20ஆம் திகதி வரை நிலவக்கூடிய பருவமழையின் தாக்கத்துடன் வடகிழக்கிலிருந்து வரும் குளிரலையின் தாக்கமும்; ஒருங்கிணைந்து காணப்படும்.

எல்நினோ நிகழும் காலங்களில் மொன்சூன் மீது இந்து சமுத்திர இருமுனைவு (IOD) தாக்கத்தின் செல்வாக்கு காணப்படும். இத்தாக்கம் எதிர்க்கணிய மட்டத்தினைக் கொண்டிருக்கும் போது இந்திய உப கண்டத்தின் மேலாக மொன்சூன் தாழியின் உருவாக்கத்தினை அது தடை செய்து விடுவதுடன் மழைவீழ்ச்சியையும் குறைந்துவிடும். இருமுனைவுத் தாக்கம் நேர்க்கணியமாக இருக்கும்போது அதிக மழைப்பொழிவு காணப்படும். இது நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அதி தீவிர மழைவீழ்ச்சி நிகழ்வுகளை அதிகரிப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. எல்நினோ என்பது சாதாரண நிலைமைகளில் காணப்படும் ஈரப்பதன் நிரம்பலில் இடையூறுகளை ஏற்படுத்தி விடுவதுடன் சில இடங்களில் தொடர்ச்சியான மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளப்பெருக்குகளுக்கும் காரணமாக அமைகின்றதுடன் சில பகுதிகளில் மோசமான வறட்சியையும் ஏற்படுத்தி விடுகின்றது. எதியோப்பியா, குவாட்டமாலா, சோமாலியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் ஏற்படும் வரட்சியின் பாதிப்புகள், வெள்ளப்பெருக்கு, புயல்கள் மற்றும் தீயினால் ஏற்படும் இத்தகைய வானிலை மாற்றங்களை இதற்கு உதாரணமாக கூறலாம்.



டிசம்பர் 3 இல் 48 மணித்தியாலத்தில் 46 சென்ரி மீற்றர் மழை சென்னையில் இடம்பெற்றது. வெள்ள நீரினைக் கொண்டு செல்வதற்கு மூன்று ஆறுகளும், பக்கிங்காம் கால்வாயும் இருந்தபோதும் பெரும் வெள்ளப்பெருக்கு சென்னையில் ஏற்பட்டது. 1960 களிலிருந்து விரைவான நகராக்கம் மற்றும் திட்டமிடப்படாத வளர்ச்சி காரணமாக நீர்நிலைப் பகுதிகளில் பேரழிவு இடம் பெற்றது. 1989 – 2016 காலத்துக்கு இடையில் சென்னை மாநகர அபிவிருத்தி அதிகாரசபை 175 ஹெக்டயர் பரப்பளவு கொண்ட 195 குடியிருப்புகளை 54 நீர்நிலைப் பகுதிகளில் அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தது. பொருத்தமான கண்காணிப்புப் பொறிமுறை இல்லாத காரணத்தினால் இதன் தொகை அதிகமாக இருக்கலாம் எனக் கூறப்பட்டது.


சென்னையின் பெருந்துயரம் என்னவென்றால் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் அண்மையில் ‘ரம்சார்’ பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. ஏறக்குறைய 5500 ஹெக்டயர் பரப்புக் கொண்ட இப்பகுதி அதன் மொத்த அளவில் இன்று 10 சதவீதத்தையே கொண்டுள்ளது. இதன் அழிவுக்கு OMR இல் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப இடைநிலமே (IT Corridor) காரணமாக இருந்தது. சதுப்பு நிலம் என்பது நீரை உறிஞ்சும் தன்மை கொண்டது. ஆனால் அத்துமிறல்கள் மற்றும் சாக்கடைகளின் உட்பாச்சல் காரணமாக அதன் இயல்பு மாறிவிட்டது. அரசாங்கமும் குப்பைகளைக் கொட்டும் இடமாக 81 ஹெட்டேயர் நிலப் பகுதியை மாற்றிவிட்டது. வேளாச்சேரி, மடிப்பாக்கம், பெருங்குடி, பேரம்பாக்கம், பள்ளிக்கரணை போன்ற வாழிடக் குடியிருப்புக்கள் இந்தச் சதுப்பு நிலப் பகுதிகளிலும் அதனையடுத்த பகுதிகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன. மொன்சூனுக்கு முன் பக்கிங்காம் கால்வாய் ஆழமாக்கப்பட்டிருந்தால் வெள்ள நீரின் கொண்டுசெல்லும் திறன் அதிகரித்திருக்கும். இக்கால்வாய் அமைக்கப்பட்ட போது அது கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 6 அடி ஆழமாக இருந்தது. இன்று மணல் தடைகள் காரணமாக 3 அடி ஆழமாகவே காணப்படுகிறது. நீர் நிலைகள் காணப்படும் பகுதிகளில் சேரிகளின் எண்ணிக்கை 2014 இல் 235 ஆக இருந்தது. 2018 இல் 451 ஆக அதிகரித்தது. இதற்கு அரசின் மோசமான வீடமைப்புக் கொள்கையே காரணமாக இருந்தது.

நாசாவின் சூரிய இயக்கவிசையியல் ஆய்வு கூடம் (NASA’S Solar Dynamics Observation) தொடர்ச்சியாக சூரியனில் இடம்பெறும் நிகழ்வுகளை அவதானித்து அவற்றினைப் படிமமாக எடுத்து வருகின்றது. 2023 மார்ச் 28 இல் சூரிய சக்தியில் ஏற்பட்ட ஆற்றல் மிக்க வெடிப்பு ஒன்றினால் சூரியனிலிருந்து மிக வலிமையான நெருப்புச் சுவாலையொன்று வெளியே வீசப்பட்டது. அண்மைக்காலமாக சூரியனின் செயற்பாடுகளில் உறுதியான அதிகரிப்பு ஏற்பட்டு வருவதுடன் சூரிய வட்டம் 25 என்று கூறப்படும் நிலையை நோக்கி நகர்ந்து வருவதையும் அவதானிக்கலாம். ஏறக்குறைய 115 சூரியப் புள்ளிகளைக் கொண்ட சூரிய சக்தியின் உச்ச அளவு 2025 ஜுலையில் எதிர்பார்க்கப்படுகின்றது. சூரியனில் ஏற்படும் மின்காந்தப் புயலினால் ஞாயிற்று கதிர் வீசலில் மாற்றம் ஏற்படுவதுடன் மின்னல் தாக்குவது போன்று புவியை தாக்கும் என நாசாவின் பௌதிகவியல் விஞ்ஞானியான ரிச்சாட் பிஷ்சர் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய செயற்பாடுகளின் காரணமாக வளி வெப்பநிலை அதிகரிக்கும். எல்நினோவின் தாக்கங்கள் செறிவடையும். 2023 ஏற்பட்ட எல்நினோவின் தாக்கத்தினால் நீரியல் வட்டத்தில் பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் இடம்பெற்று வரும் வரட்சியினால் 21 மில்லியன் மக்கள்; உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். கொங்கோ ஆறு, நைல் நதியின் நீரேந்து பகுதி முழுவதிலும் நீரின் வெளியேற்றம் குறைந்துள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் மனித நடவடிக்கைகளின் காரணமாக உலக நீர் மட்டமானது பாதிக்கப்பட்டு வருகின்றது. இலட்சக்கணக்கான மக்களின் நீர்ப்பாதுகாப்பினைப் பொறுத்தவரை நீண்ட காலத்துக்கான அச்சுறுத்தலாக இது அமையப் போகின்றது. புவி வளிமண்டலத் தொகுதியில்; நீரின் சுற்றோட்டமானது காலநிலை மாற்றம் மற்றும் மனித நடவடிக்கைகளினால் குறிப்பிடத்தக்களவு தாக்கத்துக்கு உட்படும் என உலக வளிமண்டலவியல் ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய நீரியல் வட்டப் பாதிப்பானது வரட்சிகளையும் அதிகளவு மழைவீழ்ச்சி நிகழ்வுகளையும் ஏற்படுத்துவதுடன் நீர் வட்டங்களின் ஒரு ஒழுங்கின்மைகளினால் வாழ்க்கைச் சுமை மற்றும் பொருளாதாரங்களில் பரந்தளவான குழப்பங்களைக் கட்டவிழ்த்து விடும். தற்பொழுது இடம்பெற்று வரும் பனியுருகலினால் அதி தீவிர வானிலை நிகழ்வுகள் குறிப்பாக வெள்ளப்பெருக்குகள் தூண்டப்படும். இவை இலட்சக்கணக்கான மக்களின் நீர்ப் பாதுகாப்பில் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆட்டிக், அந்தாட்டிக் பிரதேசங்களைத் தவிர்த்து உலகின் பனிக்கட்டி மற்றும் மழைப்பனியின் தேக்கமாகக் கருதப்படும் ஆசியாவின் பனியுருகல் குறிப்பிடத்தக்களவில் காணப்படுகின்றது.

(21 ஆம் பார்க்க தொடர் )



கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்




# யாருக்கு நன்மைகளை வாரி வழங்கப் போகிறது?

## ஒரு சோதிட, எண் சோதிட ஆய்வு

பலவித எதிர்பார்ப்புகளுடன் புத்தாண்டு (2024) மலர்ந்துள்ளது. நாட்டுமக்களில் பெரும்பாலோருக்கு வயிற்றுப் பாடுதான் இன்றுள்ள பிரச்சினை. எதைத்தின்று பிழைக்கலாம், எதைக்கொண்டு பிள்ளை குட்டிகளை வளர்க்கலாம், வாழ வைக்கலாம் என்பனதான் அவர்கள் முன்னுள்ள பூதாகரப் பிரச்சினை! ஆனால் அரசியல்வாதிகளுக்கோ அவ்விதமல்ல; தேர்தல்கள் வரப்போவதாக பூச்சாண்டி காட்டுகிறார்கள்? அவ்விதம் வந்தால் தங்கள் நிலையென்ன? வெற்றிபெறுவோமா? ஆட்சியமைப்போமா? அவ்விதம் அமைந்து இதுவரை வாழ்ந்துவந்த சுகபோக வாழ்க்கையை தொடர்வோமா? என்பதுதான் இப்போது வயிறு கலங்க வைத்து நித்திரையில்லாமல் செய்து வருகிறது!

பொதுவில் புத்தாண்டு என்பது ஓர் எதிர்பார்ப்புத்தான். அது அவரவர் வாழ்க்கை முறைகளைப் பொறுத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அமைகிறது. இவ்வாண்டு பொதுவில் எட்டாம் எண்காரர்களுக்குரிய ஆண்டாகத் திகழ்கிறது. (2+0+2+4=08) அதாவது வாழ்வில் முக்கிய திருப்பமொன்றைத் தரப்போகிற ஆண்டு! அது வெற்றியோ தோல்வியோ, அதன் மூலம் உங்கள் வாழ்க்கை திசை திரும்பப் போகிறது! அந்த மாற்றம் உங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக இருக்கும்.

எட்டின் குறியீடு சனிபகவான். சனியைப் போல்கொடுத்தவனுமில்லை கெடுத்தவருமில்லை என்பது சோதிட கூற்றாகும். எந்த வொரு மாதத்திலும் 8, 17, 26 ஆகிய ஏதாவதொரு திகதியில் பிறந்தவர்கள் இந்தச்சனியின் ஆதிக்கத்தினுள் அடங்குகின்றனர். அப்படியின்றி வேறொரு எண்ணில் பிறந்து, பிறந்த திகதி – மாதம் வருடம் மூன்றையும் கூட்டினால் கூட்டுத் தொகையாக எட்டு வருபவர்களுக்கு இந்தச் சனியின் ஆதிக்கமும் பலன்களும் அரைக்கரை வாசி அமைகிறது,

எட்டாம் எண் அரசியலுக்குரியது. அதிலும் கட்சி அரசியலில் ஆதிக்கம் செலுத்துவது அந்த நாள் முதல் இன்று வரை குற்றவியல் நீதித்துறையில் ஆதிக்கம் செலுத்திய பல வழக்கறிஞர்கள் இந்த எட்டாம் எண்காரர்களாக இருந்திருப்பதோடு அரசியலிலும் இறங்கி இலங்கை வரலாற்றில் தங்களுக்கென தனிமுத்திரை பதித்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். சேர் பொன்னம்பலம் இராமநாதன், மற்றும் அருணாசலம் போன்றோர் அரசியலிலும் தலைமைதாங்கி இந் நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக்கொடுத்த எட்டாம் எண்காரத் தலைவர்கள்! சாதக ரீதியாக அறியப்போனால் அவரவர் சாதங்களில் ஜென்ம லக்கினத்திலிருந்து எண்ணி வரும் மூன்றாம், ஆறாம், பத்தாம் அல்லது பதினோராம் இடங்களில் சனிபகவான் அமையப்பெற்றவர்கள் இவர்கள்!

மற்றும் டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தன, கே.டபிள்யூ.தேவநாயகம், அ.அமிர்தலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றோர் சட்டத்துறையோடு அரசியலிலும் தலைமைதாங்கி தங்களுக்கென தனிமுத்திரை பதித்த எட்டாம் எண்காரர்கள். இவர்களைத்தவிர, கிழக்கில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் எம்பியாயிருந்து வரலாறு படைத்த செ. இராசதுரையும் ஓர் எட்டாம் எண்காரரே! இவர்கள் யாவரும் மேற்சொன்ன விதத்தில் பொருத்தமான இடங்களில் சனி அமையப்பெற்றவர்களே!

ஒரு சாதகத்தில் சந்திரன் நின்ற இடமே ராசி எனப்படும். ராசிப்படி இந்த சாதகர்களுக்கு மேற்படி நான்கு இடங்களிலும் சனி சஞ்சரிக்கும்போது நன்மைகளை வாரி வழங்குகிறது. பொதுவாக இடபம் அல்லது துலாம் இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு சாதகமோ அன்றிப் பாதகமோ, எந்த இடங்களில் நின்றாலும் சனி நன்மைகள் செய்யப் பின் வாங்குவதில்லையென்பது சோதிடக் கூற்றாகும். அதற்குக் காரணம் மேற்படி இரு இலக்கினங்களுக்கும் அதிபதியான அசுர குருவாகிய சுக்கிரன் சனிக்கு அத்தியந்த நண்பர் என்பதோடு, அந்த இலக்கினங்களுக்கு சனியின் வீடுகளாகிய மகரமும் கும்பமும் முறையே ஒரு கேந்திரமும் ஒரு திரிகோணமும் பெறுவது தான் என்று சோதிடம் மேலும் விவரிக்கிறது. கேந்திரமென்றால் 4ஆம், 10ஆம் வீடுகள், திரிகோணமென்றால் 5ஆம், 9ஆம் வீடுகளாகும்.

பொதுவாக அரசியல் என்னும்போது அங்கு சனிதான் ஆட்சி செய்கிறது. அதைவிட கட்சிகள், தொழிற்சங்கங்கள் துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து, தொழிற்சாலைகள், மின்சக்தி எரிசக்தி உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள், பெருந்தோட்டங்கள் REAL ESTATE எனப்படும் பெரும் வீடமைப்புக் கட்டுமானங்கள் என்பன சனியின் ஆதிக்கத்திற்குள் வருபவையே. சுரங்கம் அகழ்ந்து கிடைக்கும் வைரம், வைடூரியம், இரத்தினக் கற்கள் யாவும் சனிக்குரியவையே.சனியின் திசை மேற்கு.

எனவே மேற்குத் திசை பார்த்த மேற்படி தொழில்கள் யாவும் இவ்வாண்டில் முன்னேற வழி பிறக்கும். இரும்பு, உருக்கு உலோகங்கள், கட்டடப் பொருட்கள், பாதணி மற்றும் கடலை, பயறு, உளுந்து போன்ற கருநிற தானியவகைகள், கருநிறம் கொண்ட சனியின் ஆதிக்கத்திற்குட்பட்டவைகளே.

எட்டாம் எண்காரர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை சனி ஏற்படுத்துவாரென்பது திண்ணம். அது நன்மைக்கு நன்மை, தீமைக்கு தீமை என்பது போல் அமையும். தீமையை செய்துவிட்டு நன்மையை எதிர்பார்க்க முடியாது. புளியங்கொட்டையை ஊன்றினால் பூசணிக்கொடி முளைக்காது.

அரசியல் வெற்றி என்னும்போது தேர்தல் வெற்றியையே பலரும் எதிர்பார்ப்பர். எவ்வளவோ பணம் செலவழித்தும், பிரசாரம் செய்தும் இம்முறை தேர்தலில் தோற்றுவிட்டால் சோதிடத்தில் கூறியது பொய்யாகிவிடுமல்லவா? அப்படியெல்லாம் எண்ணி யாரும் கலங்க வேண்டியதில்லை

தேர்தலில் தோற்றாலென்ன? தான் சார்ந்த கட்சி, அல்லது கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அதன் மூலம் ஓர் இராஜதந்திரப் பதவி அன்னாருக்கு கிடைக்க வாய்ப்புண்டல்லவா? அல்லது அதன் மூலம் வெளிநாடொன்றுக்குச் சென்று தன்னை வளப்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்குமல்லவா? ஆகவே எப்படியோ ஒரு மாற்றம் வருவது நிச்சயம்! அதைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டால், உங்கள் நிலை உயரும். அவ்விதம் பாடுபட்டு முன்னேறுவதைத்தானே சனிபகவானும் விரும்புகிறார்?

சரி. எட்டாம் எண்காரர்கள் தங்கள் எதிர்பார்ப்புகளுக்கும் முயற்சிகளுக்கும் ஏற்ப மாற்றங்களை எதிர்பார்க்கலாமென்றால், எந்த முயற்சியுமில்லாமல், அல்லது அதிகம் பாடுபடாமல் இவ்வாண்டில் நன்மைகளைப் பெறப்போகிற அதிர்ஷ்டசாலிகள் யாரென்று கேட்கிறீர்களா?

அவர்கள்தான் நாலாம் எண்காரர்கள்! அதாவது 4ஆம், 3ஆம், 22ஆம், 31ஆம் திகதிகளில் ஏதாவதொன்றில் பிறந்த நாலாம் எண்காரர்கள்! வாழ்வில் நாலும் தெரிந்த ஜனரஞ்சகமான பேர்வழிகள் இந்த எண்காரர்கள். என்றாலும் இடம் பொருள் ஏவல் தெரியாமல் வாயை கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்பவர்களும் இவர்கள்தான். ஆனால் ஒன்று வாய்ச்சாலம் காட்டுபவர்களாதலால் எந்தப்பிரச்சினையில் மாட்டிக்கொண்டாலும் சாதுரியமாக வார்த்தையாடி தப்பித்துக் கொண்டு வந்து விடுவார்கள்!

புராணகாலத்து நாரதர்கள் இந்த எண்காரர்கள்! குழப்பம் செய்வதும் இவர்கள்தான். அதனுள் சமரசம் செய்வதும் இவர்கள்தான். மது, மாது, சௌகரியம் என்று சுகபோகங்களை அனுபவிப்பதில் தாராளம் காட்டுவார்கள். கற்பித்தலில் மாணவர்கள் விரும்புவதும் இந்த எண்கார ஆசிரியர்களைத்தான். காலத்திற்கு காலம் கலை கலாசாரப்புரட்சிகள் இவர்களிடமிருந்தே ஆரம்பிக்கும். இவர்களைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டமிருக்கும். எந்த வேலையிலும் நெடுநாள் நிலைத்தது கிடையாது. பெரிய நிறுவனத் தலைவர்களிலிருந்து “லாவாய் லாவாய்” என்று கூவி நடை பாதைகளில் சாமான்களை குவித்து விற்கும் அங்காடி வியாபாரிகள் வரை இந்த எண்காரர்களில் அதிகமுண்டு.

நாற்சக்கர வாகனங்கள் தயாரிப்பு விற்பனை, வீடுகள் கட்டுதல், தரகுத் தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, மற்றும் வெளிநாட்டு வரம் போன்றவையெல்லாம் இவர்களுக்கு ராசியான சங்கதிகள்.

இவர்கள் அனைவரும் எதிர்பார்த்தோ அன்றி எதிர்பாராமலோ நன்மைகள் கிடைக்க இவ்வாண்டில் உத்தரவாதமுண்டு.

இவர்களுக்கு அடுத்தபடியாக 1ஆம், 10ஆம், 19ஆம், 28ஆம் திகதிகளில் பிறந்த முதலாம் எண்காரர்கள் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் அதிர்ஷ்ட வாய்ப்புகளை பெறக் காத்திருக்கிறார்கள்.

சனிபகவான், சூரியனின் மகனாக, பிறந்த போது அவரது கரிய நிறத்தையும் தேரை போல் காணப்பட்ட அசிங்கமான தோற்றத்தையும் அவதானித்து அருவருப்படைந்த சூரியன் அவரை ஏற்றுக் கொள்ளாமல் காலால் உதைத்து ஒதுக்கியதாகவும் சோதிடம் கூறுகிறது. இருந்தாலும் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மனமிரங்கி, பாவக்கிரகங்களின் முதன்மையானவனாக தனக்கு அடுத்த ஸ்தானத்தை வழங்கியதாகவும் அது மேலும் விவரிக்கிறது. 8,4,1 இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று சங்கிலி தொடரான பிணைப்பில் உள்ளவைகளாக கருதப்படுகின்றன.

ஆட்சியியல், பெருந்தோட்ட தொழில்துறை, கப்பல் போக்குவரத்து, பெரிய தொழிற்சாலைகள் போன்றவற்றின் தலைமைப்பதவிகள் வகிக்கும் முதலாம் எண்காரர்கள் பலரும் இதனுள் அடங்குகிறார்கள்.

இவர்கள் எங்கேயும் எந்த சிறிய பதவியில் இருந்தாலும் கூட, மற்றவர்கள் தமக்கு அடங்கிப் போகிற அல்லது தம்மை அணுகி ஆலோசனை கேட்க வைக்கிற அளவுக்கு மிடுக்கான ஓர் ஆளுமை இவர்களிடமிருக்கும். நன்மைகள் நடக்கவாரம்பித்தால் அது பெரும்பாலும் இவர்களின் கண்பார்வையை பாதிக்கத் தொடங்கும். முதலாம் எண்காரர்களில் பெரும்பாலோர் கண்ணாடி அணிவதன் மர்மம் இதுதான்!

சரி, இப்புத்தாண்டில் அதிர்ஷ்டசாலிகள் யார் யாரென்று பார்த்தோம். அப்படியானால் துரதிஷ்டசாலிகளென்று யாரும் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். அவர்களும் இருக்கிறார்கள்! அதிர்ஷ்டமும் துரதிஷ்டமும் இரட்டைப் பிறவிகள் தானே? 9ஆம், 5ஆம், 2ஆம் திகதிகளில் பிறந்தவர்களே அவர்களாகும்! அவர்களிலும் சனி மாற்றத்தினால் ஏழரைச் சனி பீடித்துள்ள மகர, கும்ப மற்றும் மீன ராசிக்காரர்கள் தெய்வவழிபாடுகளோடு தான தர்மங்களும் இயற்றி அன்றாட சீவனோபாய நடவடிக்கைகளில் கவனமாக இருக்க வேண்டும் என எண் சோதிடம் கூறுகின்றது.

திருவோணம்

# Visa Accelerator நிகழ்ச்சித் திட்டம் 2024 Fintechs இடமிருந்து விண்ணப்பம் கோரல்




டிஜிட்டல் கொடுப்பனவுகளில் உலகளாவிய ரீதியில் முன்னணியில் திகழும் Visa விண்ணப்பங்களுக்கான திறந்த அழைப்புடன் Visa விரைவுப்பொறி Visa Accelerator] நிகழ்ச்சி திட்டத்தின் நான்காவது பதிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. Visa வின் கொடுப்பனவு நிபுணர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம், இலங்கையில் அபிவிருத்தியின் ஆரம்பத்தில் உள்ள நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். 2024 பதிப்பு புதிய வாய்ப்புப் பகுதிகளில் கவனம் செலுத்துகிறது அதாவது செயற்கை நுண்ணறிவு (AI), உலகளாவிய பண நகர்வு மற்றும், நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களுக்கான டிஜிட்டல் ரீதியிலான ஏற்றுக்கொள்ளல் (MSMBs) மற்றும் உட்பொதிக்கப்பட்ட நிதி போன்ற செயற்பாடுகளில் எதிர்காலத்துக்கான நம்பகத்தன்மையை ஏற்படுத்தல் போன்றவற்றில் தனது கவனத்தை செலுத்துகிறது.

முக்கிய விரிவாக்க கட்டத்தில் உள்ள நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த திட்டம், தயாரிப்புகளுக்கான தீர்வு மற்றும் விரைவான வணிக மயமாக்கல், சாத்தியமான ஒத்துழைப்பு மற்றும் விரைவான வளர்ச்சியுடன் இந்நிறுவனங்களை மேம்படுத்தல் ஆகியவற்றை வலியுறுத்தும். ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப நிலை நிறுவனங்களின் குழு, இந்த திட்டத்தின் ஊடாக, கொடுப்பனவுகளுக்கான சூழல் முறைமையில் வளர்ந்து வரும் சவால்களை எடுத்தியம்பும். அத்துடன் அவர்கள் இணை அபிவிருத்தி,சோதனை மற்றும் புதிய தீர்வுகளை செயற்படுத்துவதுடன் மற்றும் நிதி நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் டிஜிட்டல் பங்காளர்கள் Visa வின் விரிவான வலையமைப்பைப் பயன்படுத்தி உறுதியான சந்தைக்குச் செல்லும் வாய்ப்புகளைத் தொடரலாம். இந்தத் திட்டத்தின் இந்தப் பதிப்பிற்கான விண்ணப்பங்கள் ஜனவரி 8, 2024 அன்று முதல் கோரப்பட்டுள்ள நிலையில் , இவற்றின் முடிவு திகதி மார்ச் 8, 2024 ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப நிலை நிறுவனங்கள் மே முதல் நவம்பர் 2024 வரை இத் திட்டத்தில் ஈடுபடுவதுடன் இது பின்னர் செய்முறை தினத்துடன் முடிவடையும்.

# உயர்மட்ட விருதுகளை வென்ற செலான் வங்கி

Sri Lanka Institute of Marketing (SLIM) அண்மையில் ஏற்பாடு செய்திருந்த தேசிய விற்பனை காங்கிரஸ் விருதுகள் (NSA) 2023இல் தனது குழுவின் வெற்றியை அறிவிப்பதில் செலான் வங்கி பெருமகிழ்ச்சியடைகிறது.

சிறந்த விற்பனைக் கலாசாரத்தை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பானது செலான் வங்கியை மீண்டும் முன் நகர்த்தி இந்த மதிப்புமிக்க நிகழ்வில் அதிக விருதுகளைப் பெற்ற வங்கியாக மாற்றியுள்ளது. அர்ப்பணிப்பு மற்றும் சிறந்த செயற்திறனுக்கு சான்றாக செலான் வங்கிக் குழு உறுப்பினர்கள் NSA 2023இல் ஏழு உயர்மட்ட விருதுகளை வென்றனர். அவர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு விருது பெறுபவரின் தனிப்பட்ட திறமையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி செலான் வங்கியின் விற்பனைக் குழுவின் கூட்டு வலிமையை பிரதிபலிப்பதோடு தொழில்துறையில் வங்கியின் முன்னணி நிலையை உறுதிப்படுத்துகிறது.

இந்த வருடத்தின் சிறந்த சாதனையாளர்களாக Frontline பிரிவில் தனுஷ்க குணசேன வெண்கல விருதையும், விற்பனை மேற்பார்வையாளர் பிரிவில் லோச்சன ஏக்கநாயக வெள்ளி விருதையும் பெற்றனர்.

மேலும் மொஹமட் மபாஸ் விற்பனை நிறைவேற்றுப் பிரிவில் வெண்கல விருதையும், ஷிரான் பெரேரா மற்றும் ஜூடி ரொட்ரிகோ ஆகியோர் முறையே பிராந்திய முகாமையாளர் மற்றும் பிற விற்பனை ஆதரவு – முகாமையாளர் பிரிவுகளில் வெள்ளி விருதுகளைப் பெற்றனர்.

# பாசிக்குடாவில் நடைபெற்ற USAID– SLTDA கண்காட்சி சிறு வணிகங்கள் மற்றும் சுற்றுலாப் பங்குதாரர்கள் பாராட்டு




பாசிக்குடா அமயா ஹோட்டல் ரிசோர்ட்டில், சர்வதேச அபிவிருத்திக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி (USAID) மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் (SLTDA) என்பன இணைந்து நடத்திய Sustainable Niche Tourism Learning Expo ஐ சுற்றுலாத் துறையில் உள்ள சிறு வணிக நிறுவனங்களும் சுற்றுலாப் பங்குதாரர்களும் பாராட்டியுள்ளனர்.

"இது உண்மையிலேயே உத்வேகம் தரத்தக்க நிகழ்வு கற்றல் அமர்வுகள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன, சுற்றுலாத் துறையில் மதிப்புமிக்க திறன்கள் மற்றும் நுண்ணறிவுகளுடன் எங்களை இற்றைப்படுத்தியது", என்று ஒரு பங்கேற்பாளர் கூறினார். "பூட்டான் மற்றும் மொங்கோலியா போன்ற நாடுகளின் அனுபவங்கள் மற்றும் சர்வதேச பயணிகளுக்கு அவர்களின் தேவைக்கேற்ற தயாரிப்புகளை வெற்றிகரமாக தயாரிக்க ஊக்குவித்தமை என்பன எமக்கு உத்வேகமாக அமைந்தது, இலங்கைக்குள் சுற்றுலாவை எவ்வாறு திறம்பட மேம்படுத்துவது என்பது பற்றிய பயன்மிக்க ஆலோசனைகளை வழங்குகிறது," என்று அவர் மேலும் கூறினார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுற்றுலா சபை, சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனம், திருகோணமலை மாவட்ட ஹோட்டல் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட ஹோட்டல் சங்கம், பாசிக்குடா ஹோம்ஸ்டே மாவட்ட சங்கம், கிழக்கு மாகாண சுற்றுலா வழிகாட்டிகள் சங்கம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை வர்த்தக சம்மேளனம் உட்பட 100க்கும் மேற்பட்ட சிறு வர்த்தகர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்கள் கலந்துகொண்டனர்.

# "ரெமிட் சேவர்" ஐ அறிமுகப்படுத்தும் NDB வங்கி




நிதி உள்ளடக்கத்தை வளப்படுத்தும் மற்றும் சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை நினைவுகூரும் முயற்சியில், NDB வங்கி தனது சமீபத்திய அம்சமான "NDB Remit Saver" ("ரெமிட் சேவர்") ஐ டிசம்பர் 18 அன்று, பெருமையுடன் வெளியிட்டது. இந்த சேமிப்புக் கணக்கு, இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வேலை தேடுபவர்கள், ஏற்கனவே வெளிநாட்டில் பணிபுரிபவர்கள், நிரந்தர வதிவிடப் புலம்பெயர்ந்தோர் மற்றும் இலங்கையில் வசிக்கும் அவர்களது குடும்பங்களின் தனித்துவமான நிதித் தேவைகளையும் இது பூர்த்தி செய்கிறது.

NDB ரெமிட் சேவரின் தனித்துவமான அம்சம் அதன் அதிக போட்டித்தன்மை கொண்ட வட்டி விகிதமாகும். இலங்கை ரூபா 1,000 இற்கு அதிகமான நிலுவைகளிற்கான பொதுவான சேமிப்பு வட்டிவிகிதத்திற்கும் (தற்போது கவர்ச்சிகரமான 3.50 எனும் கவர்ச்சிகரமான வட்டிவிகிதத்தில் உள்ளது) மேலாக 1% இனை கூடுதலாக வழங்கும், இக்கணக்கானது தங்களது சேமிப்புக்களில் கணிசமான வளர்ச்சியை கண்முன்னே காண கணக்குரிமையாளர்களிற்கு ஒரு இலபாகரமான வழியை வழங்குகின்றது.

நிதி நலனுக்கான முழுதளாவிய அணுகுமுறையை கைக்கொண்டு, இக்கணக்கானது, பிரத்தியேகமான காப்பீட்டுத் திட்டத்தை உள்ளடக்குகின்றது.

ரெமிட் சேவர் சேமிப்புக் கணக்கைத் தொடங்கும் புலம்பெயர்ந்த தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்களை வாழ்க்கைத்துணை மற்றும் 18 வயதுக்குட்பட்ட குழந்தை இது உள்ளடக்குகின்றது.

கணக்கு உரிமையாளர் மணமாகதவராக காணப்படும் சந்தர்ப்பங்களில், முழு குடும்பத்திற்கும் விரிவான பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் பெற்றோர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். ரெமிட் சேவர்" ஐ அறிமுகப்படுத்தும் NDB வங்கி

# விருது வென்ற ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி




பரந்தளவில் அறியப்படும் மற்றும் நாட்டின் மிகவும் புத்தாக்கமானதும், நம்பிக்கையை வென்றதுமான ஆயுட் காப்புறுதி சேவை வழங்குநரான ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி, காப்புறுதித் துறையில் சிறந்த வருடாந்த நிதி அறிக்கைக்கான (ரூ. 10 பில்லியன் வரை GWP) வெண்கல விருதை சுவீகரித்திருந்தது. TAGS விருதுகள் 2023 நிகழ்வில் தொடர்ச்சியான இரண்டாவது வருடமாகவும் இந்த விருதை ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி தனதாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகனத்தினால் (CA ஸ்ரீ லங்கா) ஏற்பாடு செய்யப்பட்ட TAGS விருதுகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றை பொருளாகக் கொண்டுள்ளது. நிதி, சூழல், சமூக மற்றும் ஆளுகை அறிக்கையிடல் ஆகியவற்றுக்காக கௌரவிக்கப்பட்ட ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் 2022 ஆம் ஆண்டின் நிதி அறிக்கை, 'Strides for Multifaceted Growth' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருந்தது.

நிதிசார் மற்றும் நிதிசார் அறிக்கையிடல் அம்சங்களை உள்வாங்கி சிறந்த வருடாந்த நிதி அறிக்கைகளை வெளியிட்டிருந்தமைக்காக CA ஸ்ரீ லங்காவினால் கௌரவிக்கப்பட்ட பல முன்னணி கூட்டாண்மை, பல்தேசிய, சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சிகள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களில் ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியும் உள்ளடங்கியிருந்தது. ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் தவிசாளர் ரமல் ஜாசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "ஒழுங்குபடுத்தல் தேவைகளை பின்பற்றுகின்றமைக்காக எமது முயற்சிகள் கௌரவிக்கப்பட்டு வெகுமதியளிக்கப்பட்டுள்ளமையை காண்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். " என்றார்.

# Bricks Developers உடன் SLT–MOBITEL கைகோர்ப்பு




தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, தொடர்மனைகள் மற்றும் வணிக கட்டடங்களை நிர்மாணிக்கும் சொத்துகள் அபிவிருத்தி நிறுவனமான Bricks Developers (Pvt) Ltd. உடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. அதனூடாக, கொழும்பு 3 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள "தேர்ஸ்டன் 42" சொகுசு தொடர்மனையில் SLTMOBITEL Fibre இணைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் SLT இன் நுகர்வோர் வியாபார ஆதரவு பொது முகாமையாளர் சுகத் ஆர்.டி சில்வா மற்றும் Bricks Developers (Pvt) Ltd. இன் தவிசாளர் சங்கர் சோமசுந்தரம் ஆகியோர் கைச்சாத்திட்டதுடன், இந்நிகழ்வில் இரு நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு தொடர்மனை அலகுக்கும் fibre optic வலையமைப்பை SLTMOBITEL நிறுவும். வதிவோருக்கு SLTMOBITEL இன் Fibre புரோட்பான்ட் பக்கேஜ்களுக்கு பதிவு செய்து கொண்டு, 1 Gbps வரை அல்ட்ரா வேக இணைய அனுபவத்தை பெற்றுக் கொள்ள முடியும். நவீன வாழ்க்கை முறைக்கு ஒப்பற்ற மற்றும் வினைத்திறனான டிஜிட்டல் தீர்வுகளை இது வழங்கும்.

SLTMOBITEL Fibre இனால் அல்ட்ராஉயர் வேக, குறைந்த தாமதம் மற்றும் அன்லிமிடெட் டேட்டா ஆகியன வழங்கப்படுவதால், வீட்டிலிருந்து பணியாற்றுதல், தொடர்ச்சியான வீடியோ மாநாடு, ஸ்ட்ரீமிங், ஒன்லைன் கேமிங் மற்றும் பல அம்சங்களுக்கு சிறந்த தெரிவாக அமைந்துள்ளது.

# பலாங்கொடையில் 10 ஏக்கர் காடுகளை மீட்டெடுத்து பராமரிக்கும் செலிங்கோ லைஃப்





செலிங்கோ லைஃப் நிறுவனம் பலாங்கொடையில் 10 ஏக்கர் காடுகளை மீட்டெடுத்து ஐந்து ஆண்டுகளாக அக்காடுகளை வளர்ப்பதையும், பராமரிப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதையும் ஒரு கூட்டாண்மை நிலைத்தன்மை முயற்சியாக மேற்கொண்டுள்ளது.

5.7 மில்லியன் முதலீட்டில், இலங்கையின் வனப் பாதுகாப்பாளர்கள் என்ற இலாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்புடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும் 10,000 மரங்கள் நடப்படும் என்றும் ஆயுள் காப்புறுதி சந்தையின் முன்னணி நிறுவனமான செலிங்கோ லைஃப் தெரிவித்துள்ளது.

காடுகள் மீள வளர்க்கப்படவுள்ள நிலப்பரப்பானது பலாங்கொடையில் உள்ள ரஜவக்க பிரதேசத்தில் ஈர மற்றும் இடைநிலை வலயங்களின் எல்லையில் அமைந்துள்ளது.

இது புல், புதர் நிலங்கள், மலைகள் மற்றும் நீர்ப்பிடிப்புத் தொகுதிகள் ஆகியவற்றின் சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியாகும். இந்த இயற்கை வானப்பகுதியானது பல ஆண்டுகளாக தீ வைத்து மனிதர்களால் அழிக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியை காடுகளாக மீட்டெடுத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உள்ளூர் சமூகத்திற்கு உதவுவது, அதன் மூலம் நீர்ப்பிடிப்பு மற்றும் நீர் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் தீ அதிர்வெண்களைக் குறைத்தல் என்பவற்றோடு தீ எதிர்ப்பை மேம்படுத்துதல், பல்லுயிர் பெருக்கம், மண் வளத்தை மேம்படுத்துதல் மற்றும் நுண்ணுயிரிகளின் செயல்பாட்டை எளிதாக்குதல், தேனீக்கள் மற்றும் ஹார்னெட்டுகள் போன்ற மகரந்தச் சேர்க்கை காலனிகளுக்கான வாழ்விடத்தை மீட்டமைத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

# உலகளாவிய ரீதியில் 100 மில்லியன் பயனர்களை கொண்டாடும் Zoho

இந்தியாவில் நிறுவப்பட்ட முன்னணி சர்வதேச தொழில்நுட்ப நிறுவனமான Zoho Corporation, உலகளாவிய ரீதியில் 100 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு தனது 55க்கும் அதிகமான வியாபார அப்ளிகேஷன்களினூடாக சேவைகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் இலங்கை சந்தையில் 30% வருமான வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

Zoho Workplace, உற்பத்தித்திறனுக்கான ஒன்றிணைக்கப்பட்ட தொகுதிக்கட்டமைப்பு, Zoho CRM, வாடிக்கையாளர் முகாமைத்துவ தீர்வு மற்றும் ஆட்சேர்ப்பு கட்டமைப்பான Zoho Recruit போன்றவற்றுக்கான உறுதியான கேள்வி வளர்ச்சியுடன் உள்நாட்டு சந்தையில் சீரான முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது.

உலகளாவிய ரீதியில் 100 மில்லியன் பாவனையாளர்கள் எனும் மைல்கல் இலக்கை எய்திய முதலாவது bootstrapped SaaS நிறுவனமாக Zoho திகழ்வதுடன், கடந்த ஆண்டில் நிறுவனம் 1 பில்லியன் வருடாந்த வருமானத்தை பதிவு செய்திருந்தது.

Zoho தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில், புத்தாக்கமான தொழில்நுட்பத்தை வழங்குவது மற்றும் தமது வாடிக்கையாளர்களுக்கு SaaS தீர்வுகளுக்கு பெறுமதி சேர்க்கவும் உதவியாக அமைந்திருக்கும்.

இந்த ஆண்டில், உருவாக்க AI ஊடாக தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது. தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், Zoho இனால் தயாரிப்பு தீர்வுகள் வழங்கலில் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தல்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக வாடிக்கையாளர்களுக்கு தமது வியாபாரத் தேவைகளுக்கு தொழில்நுட்ப தீர்வுகளை கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த மேம்படுத்தல்களுடன், Zoho இனால் APAC மற்றும் இலங்கையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

# பணியாளர்களின் சாதனைகளை கௌரவித்த SLIIT



SLIIT இன் கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் கடும் உழைப்பு மற்றும் சாதனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வான SLIIT பணியாளர் விருது இரவு 2023 நிகழ்வு மூன்று வருட இடைவெளியின் பின்னர் வெற்றிகரமாக இடம்பெற்றது.

அங்கீகாரம், பொழுதுபோக்கு மற்றும் தோழமை நிறைந்த மறக்கமுடியாத அனுபவங்களை வழங்கிய இந்த நிகழ்வு கொழும்பு ரமடா ஹோட்டலில் நடைபெற்றது. உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட நோய் தொற்றுக் காரணமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படாத நிலையில் தமது சக பணியாளர்களின் இணையற்ற செயல்திறன் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்பைக் கௌரவிக்கவும், மீண்டும் ஒன்றிணையும் ஆர்வத்துடனும் 400 பேர் இதில் கலந்துகொண்டனர்.

தொற்றுநோய் காலப்பகுதியில் எதிர்கொண்ட கணிசமான சவால்களைக் கையாழ்வதற்குப் பங்களிப்புச் செலுத்திய பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அரங்கு நிறைந்த கரகோசம் SLIIT இன் பணியாளர் சமூகத்தின் போராடும் திறன் மற்றும் அர்ப்பணிப்பைப் பறைசாற்றும் வகையில் அமைந்திருந்தன.

கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களுக்கு மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டு கொண்டாடப்பட்டதுடன், ஒவ்வொரு பிரிவும் மதிப்புவாய்ந்த நபர்கள் வழங்கிய பங்களிப்பை பல்வேறு நோக்கங்களில் கோடிட்டுக்காட்டும் வகையில் அமைந்தன. வருடத்துக்கான சிறந்த ஆய்வாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த ஒட்டுமொத்த திறமையாளர் என்ற பிரிவுகளின் கீழ் ஒவ்வொரு மட்டத்திலும் விருதுகள் வழங்கப்பட்டன.

# 20 இலட்சம் பேரின் துன்பத்தை...

04 ஆம் பக்கத் தொடர்...

**"உறுமய" முதற்கட்டமாக 10,000 காணி உறுதிப் பத்திரங்கள்!**

உறுமய வேலைத்திட்டம் 76 ஆவது சுதந்திர தின விழாவுடன் இணைந்த வகையில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், அதன் முதற் கட்டமாக பத்தாயிரம் உறுதிப் பத்திரங்கள் வழங்கும் தேசிய நிகழ்வு நாளை பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ரங்கிரி தம்புலு விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இது மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை பெற்றுக்கொடுப்பதன் அடையாளமாகும். ஜனாதிபதி எதிர்பார்த்தபடி, மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் இந்தப் பணிகள் நிறைவு செய்யப்படும். இரண்டாம் கட்டத்தின் கீழ், அரசாங்கம் வழங்கியுள்ள உரிமங்களை எந்தவித பிரச்சினையுமின்றி பேணிவரும் விவசாயிகளுக்கு உறுமய காணி உறுதிப் பத்திரம் வழங்கப்படும். பிரச்சினைகள் உள்ள அதாவது, குழந்தைகளுக்கு இடையில் பிரிக்க முடியாத, தகராறுகள் உள்ள, பெற்றோர்கள் மரணித்தல் போன்ற பிரச்சினைகள், குறைபாடுள்ள காணிகள் தொடர்பில் கிராம அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டு குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்ட பின், மூன்றாம் கட்ட உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் இறுதியாக உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

**கண்ணீருக்கு முடிவு!**

சுமார், நூறு வருடங்களுக்கு மேலாக இந்நாட்டில் காணி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக உறுமய வேலைத்திட்டத்தை குறிப்பிடலாம். பல்வேறு உரிம முறைகளின் கீழ் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்ட போதிலும், மக்கள் தமக்கு முழு உரிமைகள் இல்லாத காரணத்தினால் காணி தொடர்பான விடயத்தில் மீற முடியாத பல நிபந்தனைகளுக்கு அடிபணிய வேண்டியிருந்தது. சில சமயம் நிலத்தை அடகு வைத்தும் வங்கிக் கடன் கிடைக்கவில்லை. அத்துடன் காணி தொடர்பான எந்தவொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்கு கிராம உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர்கள், உதவி பிரதேச செயலாளர் அல்லது பிரதேச செயலாளர் போன்ற அரச உத்தியோகத்தர்களின் பின்னாலேயே செல்ல வேண்டியிருந்தது.

உறுமய வேலைத்திட்டத்தின் ஊடாக மக்கள் இந்த அடக்குமுறையில் இருந்து விடுபடுவதுடன், தமக்கு முழு உரிமை உள்ள காணி தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றனர்.



**பொருளாதாரத்திற்காக செய்யப்படும் முதலீடு**

நிலம் உற்பத்தியின் முக்கிய காரணியாகும். எனவே மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குவது நாட்டின் பொருளாதாரத்திற்கான முதலீடாக அமைவதுடன் மக்கள் சுதந்திரமான பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான வாய்ப்பாகவும் அமைகின்றது.

எனவே, நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையில் உள்ள வேளையில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க மக்களின் பங்களிப்பை உள்வாங்குவதற்கான வாய்ப்பாக இதனைக் கருதலாம். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் முன்னெடுக்கும் பாரிய வேலைத்திட்டத்தில் மக்களும் தங்களால் இயன்றளவில் பங்களிக்க முடியும்.

மேலும், நிலத்தை முறையற்ற முறையில் அரசாங்கத்தின் கீழ் வைத்திருப்பதும், அரசியலமைப்புக்கு எதிரானது. ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அந்த தவறை திருத்த ரணில் விக்கிரமசிங்க பணியாற்றியுள்ளார். எதிர்காலப் பொருளாதாரத்திற்கான மிக முக்கியமான ஜனநாயக முதலீடாக இதைக் குறிப்பிடலாம்.

அதன்படி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்றிய மீட்பாளராக மட்டுமன்றி மக்களுக்கு பூர்வீக நிலத்தின் முழு உரிமையுடைய காணி உறுதிப் பத்திரங்களை வழங்கிய தலைவராகவும் நவீன வரலாறு எழுதப்படவுள்ளது.


# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

**312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்**

நுகேகொடையில் அமைந்துள்ள எமது டயர் சேவை நிலையத்திற்கு டயர் வேலை தெரிந்த wheel balancing வேலை தெரிந்த ஊழியர்கள் தேவை. 077 6994215. 006789

நுகேகொடையில் அமைந்துள்ள எமது வாகன சேவை நிலையத்திற்கு பயிற்சி பெற்ற, பெறாத ஊழியர்கள் தேவை. 0750325393. 006787

பொலித்தின் பிபி பிலிம் எக்ஸ்ரூடர் இயக்குநர்கள் பை வெட்டும் இயந்திர இயக்குநர்கள் மற்றும் உதவியாளர்கள் அனுபவத்துடன் தேவை. நேராக வரவும் அல்லது விண்ணப்பிக்கவும் இல. 785, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை. 006981

**314 வெற்றிடங்கள் கட்டிட நிர்மாண வேலைகள்**

இரத்தினபுரி விசாலமான வீட்டில் கூரைப் பீலி பொருத்தக் கூடிய சிறந்த அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர் தேவை. உபகரணங்களை தாமே பெற்றுக் கொள்ளல் வேண்டும் 045 2222343. 008061

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

கொழும்பில் அமைந்திருக்கும் பிரபலமான கம்பனி ஒன்றில் கொழும்பில் வசிக்கக் கூடிய அனுபவமுள்ள கனரக வாகன ஓட்டுநர் தேவை. 40 வயதுக்கு கீழ் குறிப்பிடத்தக்கது தொடர்புகளுக்கு 0777323265. 007072

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கொழும்பு தலவத்துகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. சம்பளம் 35, 000 40, 000 அனுபவத்தின் பிரகாரம் வயது 55 இற்கு குறைந்தவர்கள்0777584961/ 0777456579 008032

நீர்கொழும்பு தாயின் தனிமை போக்குவதற்கு 20 வயதிற்கு க் குறைந்த சிறுமி மற்றும் பெண் தேவை சமைக்கத் தேவையில்லை. தமிழ் வெளி மாகாணத்தவர்கள் விரும்பத்தக்கது. 076 7727827. 008052

பிள்ளைகளை கவனித்துக் கொள்வதற்கு வீட்டில் தங்கி வேலை செய்யக் கூடிய நடுத்தர வயது பெண் தேவை. ஆரோக்கியமான தயவுடைய 60 இற்கு குறைவானவர்களாக இருத்தல் வேண்டும் சம்பளம் பேசித்தீர்க்கலாம்.074 2634365 007298

**322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்**

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள தொடர்மாடி வேலைத்தளத்திற்கு மேசன்பாஸ், டைல் பாஸ், லேபர்ஸ் தேவை Metro Habitat, No - 14Rudrama watha, C ol ombo - 060777380622/ 0773629518 008132

**325 தொழில்துறை பொது**

வத்தளையில் அமைந்துள்ள எமது' நிறுவனத்திற்கு 18 30 வயது ஊழியர்கள் தேவை. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் இருத்தல் மேலதிக தகைமையாகும். 0777 266515. 007598

## காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

பெல்லன்வில 13.6 பேர்ச், பழைய வீடு மேல் மாடி புதிதாக கட்டப்பட்டது அத்துடன் அதே காணியின் அரைவாசி கட்டப்பட்ட கட்டிடம், உடன் விற்பனைக்கு. 420 மில்லியன் பேசித் தீர்க்கப்படும்.0707914390, 0701214390 007862

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

வத்தளை அல்விஸ் டவுனில் இரு வீடுகள் 02 மற்றும் 04 படுக்கையறைகள் தனித்தனியாக 6 பேர்ச் காணி கேட்டுடன் 22.5 மற்றும் 38.5 மில்லியன் ஒவ்வொன்றும். 071 2384433, 070 3284433. 007596

வத்தளை அல்வி ஸ் டவுனில் 12.5 பேர்ச் 2 வீடுகள், 02 மற்றும் 04 படுக்கையறைகள், நீச்சல் தடாகத்துடன் விற்பனைக்கு @ 56/ மில்லியன் பேசித்தீர்க்கலாம். 070 3284433, 071 2384433. 007592

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

0777282147 கண்டி குண்டசாலை திகனவிற்கு இடையில் மிகவும் பெறுமதியான சொத்து 50 இடங்களுக்கு மேற்பட்ட அளவில் வீடு ஹோட்டல் பல்வேறு வியாபாரங்கள் தற்போது வேகமாக முன்னேறும் நகரம் 20 மில்லியன் முதல் அதற்கு மேல் விற்பனைக்கு வங்கிக்கடன் உண்டு.0777438169 004281

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

காலி வீதி, புகையிரத நிலையம், கடல் மற்றும் ஏனைய தேவைகளுக்கு அருகாமையில். மரைன் டிரைவ் வீதியை ஒட்டிய ஒரு அறையுடன் தெஹிவளை பகுதியளவிலான அனெக்ஸ் வாடகைக்கு உள்ளது. தொடர்புகளுக்கு 0771236269. 007335

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

## மணமகன்

தமிழ், கிறிஸ்துவ பெற்றோர் அவர்களின் மகனான சிட்னியிலுள்ள 1994 ஆண்டு பிறந்த மகனாகிய முன்னணியிலுள்ள மென்பொருள் பொறியியலாளருக்கு மணமகளை தேடுகின்றனர். அழகான, வர்த்தகம், பொறியிய ல் அல்லது தொடர்புடைய துறையிலுள்ள பட்டம் பெற்ற மகளை விரும்புகின்றோம். திடமான குடும்ப பெறுமதிகள் மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு புலம்பெயர விருப்பமுள்ளவர் தேவை. தொடர்பு முகவரி deepan.darshan@gmail.com G212922

நாம் ஒரு வர்த்தக குடும்பம், இரு பிள்ளைகளுடன் பன்னிப்பிட்டியவில் வசிக்கின்றோம். மூத்த மகன் திருமணஞ் செய்து அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார். எமது திருமணம் செய்யவுள்ள மகன் 1992.12.22 ஆம் திகதியன்று பிறந்தவர். உயரம் 5' 10'. சிறந்த ஆளுமை மற்றும் அழகான தோற்றமுடையவர். அவரது ஹோட்டல் முகாமைத்துவ பட்டப்படிப்பை அவுஸ்திரேலியா ACBT பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்துள்ளார். அவருக்கு இலங்கையில் ஆதனங்கள் உண்டு. ஆனால் அவுஸ்திரேலியாவில் வசிப்பதற்கு விருப்பம். அத்துடன் இலங்கையில் வியாபாரம் செய்யவும் விருப்பம். அவருக்கு இன்னும் நிரந்தர வதிவிட அனுமதி இல்லை ஆனால் தற்போது அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட அனுமதியை பெறுவதற்காக அங்கே வசிக்கின்றார் . நாங்கள் கிறிஸ்தவ குடும்பம். மதம் தடையில்லை. சிறந்த வாழ்த்துக்கள் தகப்பனார். தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும். 077 2032786, 011 2839446. மின்னஞ்சல்: lathika25beragama@gmail.com G212650

Visit - www.adz.lk
Sunday Observer adz it's what you want

adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling
Contact Us:-
- 011 2 429 369
- 077 7 270 067
- 077 7 270 845
- adzsuo@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

ROKY FAUCET WATER FILTER
~~Rs.9750/-~~ Rs.8750/-
CALL US NOW 0705 345 345

SYNCOATES
LEADING WOOD COATING SOLUTION PROVIDER
WE ARE SPECIALIZED IN MANUFACTURING AND SUPPLY OF FINISHING PRODUCTS
- Sealer/ Lacquer (NC/AC/PU/UV)
- Pigmented Colours
- Waterbase Stain/ Lacquer
- Wood Flooring Lacquer
- Glass paints
- Outdoor paints etc...
Mobile +94 714 103 668
SYNCOATES LANKA (PVT) LTD
No. 19 Undurugoda, Polgasowita.
Contact - +94 112 634 914, +94 112 623 326
Web : www. syncoates.com.my


DO YOU EXPECT TO WORK IN GERMANY ?
DOCTORS, NURSES, IT PERSONNEL, SKILLED WORKERS DRIVERS AND LABOURERS ARE INVITED TO SEND THEIR C.VS TO
0742 741 599 (whatsapp)

ராஜகிரியவில் பேக்கரிக்கு பேக்கரி வேலை தெரிந்த ஊழியர்கள் தேவை. முச்சக்கரவண்டி அனுமதிப்பத்திரம் மேலதிக தகைமையாகும்.
ஒரு நாள் சம்பளம் - ரூ. 4000/-
உணவு தங்குமிடம் இலவசம்
வயது 40 இற்கு மேல்
அழையுங்கள்:
0776 454 354, 0717 333 340

கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL
To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

ARIYARATHNE CONSTRUCTIONS
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
සියලුම ඇලුමිනියම් වැඩ
Warehouse Construction
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Polycarbonate
අමානෝ පිලි 0.47 (mm)
නවීන විලාසිතාවේ ග්‍රිල්,
ගේට්ටු, අත්වැල්
0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
(Zinc Aluminium Sheet)
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

ராகம
புத்தம் புதிய இரண்டாம் மாடி அபார்ட்மெண்ட் வைத்தியசாலைகள், வங்கிகள், சுப்பர் மார்க்கட்டுக்கள் இன்னும் பலவற்றிற்கு அருகாமையிலுள்ளது. முழுமையான தளபாடங்களுடன 06 அலகுகள், வளிச்சீராக்கல், 02 படுக்கையறைகள் அல்லது 3 படுக்கையறைகள் அத்துடன் சுடுநீர், அமரும் மற்றும் உணவருந்தும் பிரதேசம், பான்ரி, தனியான நுழைவாசல். வாகன தரிப்பிடத்துடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
உள்ளூர்: 076-8 295 106 வெளிநாடுகள்: 071-7 777 156

வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்


Peugeot 2008 SUV 2018 Second owner, Milage 52,000km, Service records available, Emission test available, Daytime running lights, Company fitted DVD/ Reverse Camera, Auto Retract mirrors, LED scope headlights, chrome nickel grill, company fitted alloy wheels, winker mirrors, dual multifunction, cruise control, many more extras 077 251 98 88
kup-1

# ஜெயித்தது மரணம்



பகல் நேரம் 2.45

வைத்தியசாலை அம்பியூலன்ஸ் மஹரகம அபேக்ஷா நோக்கி பயணிக்க தயார் நிலையில் இருந்தது. ஷஹ்மியும் அவனது தந்தையும் கண்ணீர் ததும்ப பெரும் கவலைகளைச் சுமந்தவர்களாக வைத்தியசாலையிலிருந்து விடைபெற ஆயத்தமானார்கள்.

ஆம். அன்றைய நாள், வைத்தியசாலை முழுக்க ஆரவாரமாகவே காணப்பட்டது. பரபரப்பு நிறைந்த அந்த சூழல், வழமைக்கு மாறான சனக் கூட்டம், எல்லோர் முகத்திலும் கவலையின் வெளிப்பாடு. கண்கள் கலங்கியவர்களாக எல்லோரும். அவ்வழியாக போவோர் வருவோர் எல்லோரும் ஒரு நிமிடம் நின்று என்ன என விசாரிக்காமல் போகத் தவற வில்லை.

நேரம் சரி புறப்படுவோமா ஷஹ்மி.........?

விடுதிக்கு பொறுப்பான வைத்தியரின் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த ஷஹ்மி சரியென தலையசைத்தவாறு எத்தனை நாளைக்கு அங்க இருக்கனும் டாக்டர் எனக் கேட்டவாறே தனது வாட்டிலிருந்து விடைபெற்றான்.

வெறும் மூன்று நாளைக்குத்தான். அங்கிருந்தே இந்தியா போக ஏற்பாடு செய்திருக்கன் என்றார் டாக்டர்.

சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு வாட்டிலிருந்து விடைபெற்ற ஷஹ்மி லிப்டின் உதவியோடு கீழ்த் தளத்துக்கு வந்து அங்கு நின்ற உறவுகளைப் பார்த்து புன்முறுவலோடு கையசைத்தவாறு அம்பியூலன்சில் ஏறிப் படுத்துக் கொண்டான்.

கூடவே, செயற்கை சுவாசத்திற்குரிய ஏற்பாடுகளும். அதி தீவிர வைத்திய தேவைகளுக்கான சகல வசதிகளுடனும் வைத்தியர்கள் குழுவுடனும் அம்பியூலன்ஸ் ஆயத்தமானது.

'மருமகன் மஹரகம போய் சேர்ந்ததும் கோல் எடுங்க. நாங்க பாக்க வருவோம்' இது ஷஹ்மியின் அன்பு மாமி றமீஸாவின் குரல்.

இதனைக் கேட்ட ஷஹ்மி நான் உசிரோடு இருந்தால் கோல் எடுப்பேன் மாமி என்றான். எதிர்பாராத இந்த பதில் சுற்றி நின்ற அனைவரையும் கவலைக்குள்ளாக்கியதுடன் கண் கலங்கவும் வைத்தது. இதற்கிடையில் தனது இளைய சகோதரனையும் முத்தமிட்டு ஸலாம் கூறவும் தவறவில்லை ஷஹ்மி.

விடைபெற்றது அந்த அம்பியூலன்ஸ் வேகமாக. கூடவே ஷஹ்மியின் தந்தையும் கவலைகளோடு மகனின் தலையினை வருடியவாறு அருகில்......

நிலைமையினை சுதாகரித்துக் கொண்டு தாங்க முடியா வேதனைகளையும் கவலைகளையும் சுமந்து கொண்டு ஒன்றுமே நடக்காத மாதிரி அனைவரது முன்னிலையிலும் தன்னை சமாளித்தாலும் அன்பு மகனின் நிலைமையினை நினைத்து கவலைப்படாமல் இருக்க முடியவில்லை ஹஸனால்.

மகனுக்கு இப்பதான் 15 வயது.........இந்த சின்ன வயதில் இப்படி ஒரு நிலை. பாடசாலையும் பள்ளிவாசலும் என்று தானும் தன்ட பாடும் என்றிருந்த மகனுக்கு இப்படி ஏற்பட்டு விட்டதே என்பதுதான் அவரது கவலையாக இருந்தது.

இருந்தாலும் வைத்தியர்களின் ஆறுதலான வார்த்தைகளும் தொடர்ச்சியான சிகிச்சையும் இறைவன் உதவியினால் இக் கொடிய நோயிலிருந்து மகனை மீட்டெடுத்து விடலாம் என்ற நம்பிக்கை மட்டும் தளர வில்லை ஹஸனுக்கு.

வேகமாகச் சென்ற அம்பியூலன்ஸின் ஒலிக்கு மத்தியில் பல கோணங்களிலும் யோசித்துக் கொண்டிருந்த ஹஸன் சற்று பின்னோக்கி கடந்த காலங்களை அசை போடத் தொடங்கினான்...

ஆம்,...அன்று சுமார் பத்து மாதங்களுக்கு முன்பு ஒரு நாள்......புனித நோன்பு 27

கடுமையான காய்ச்சலினால் படுத்திருந்தான் ஷஹ்மி. நோன்புடன் இருந்ததால் மாத்திரை உட்கொள்ள முடியவில்லை. இது வழமையாக எற்படும் சாதாரண காய்ச்சல் என நினைத்த தாய் றபீக்கா இப்தார் முடிந்ததும் பரசிட்டமோலை கொடுத்திருந்தாள்.

ஒரு நாள்.....தன் கணவனிடம்....இஞ்ச பாருங்க

மூத்தவருக்கு உடம்பு நல்லா இல்ல. பரசிடமோலைக் குடுத்தா காய்ச்சல் குறையுது. பிறகு திரும்பவும் வருது... முன்னப் போல உசாரும் இல்ல. எப்ப பார்த்தாலும் சோந்து போயே இருக்காரு.... சும்மா இருந்தவருக்கு இப்படி அடிக்கடி காய்ச்சல் வர்ரதோட கழுத்துப் பகுதியில் சின்னச்சின்ன கட்டி மாதிரி நிறைய இருக்கு என்றாள்...

விரைந்தார்கள் வைத்திசாலை நோக்கி.

ஷஹ்மியை பரிசோதித்த டாக்டர் அவசரமாக அல்ட்ரா சவுன்ட் ஸ்கேன் ரிப்போட் செய்து பார்த்து விட்டு சின்ன ஆபரேசன் ஒன்று செய்து கட்டி ஒன்றை எடுத்து பரிசோதிப்போம் என்றார்.

ஓப்பரேசன் முடிஞ்சு. இருந்த கட்டியில் பெரியதை மட்டும் எடுத்திருக்கின்றேன் என்று தியட்டரிலிருந்து வெளியில் வந்த டொக்டர் ஒரு பிளாஸ்டிக் போத்தலில் அடைக்கப்பட்டிருந்த அந்த கட்டியையும் காட்டினார்.

எழுந்து டொக்டரை அணுகிய ஹஸன்...தழுதழுத்த குரலில் மகன் நல்லா இருக்காரா டொக்டர். அவருக்கு நினைவு திரும்பிட்டா என்று கேட்டதோடு இதனையா பரிசோதனைக்கு அனுப்புற என்று கேட்டான்.

ஓ..... கொழும்புக்கு அனுப்பி பார்ப்போம் இரண்டு கிழமைக்கு பிறகுதான் முடிவு வரும் என்றார். அது வரையில்... ஷ்.......ஷ்........

மனப்போராட்டம்......பல உச்சங்களைத் தொட்டு வந்தது. பரிசோதனை முடிவு 'நோமல்' என்று வரணும் என்பதே எல்லோரினதும் பிரார்த்தனை. அதற்காக பல நேர்ச்சைகளையும் செய்தாள் றபீக்கா.

அந்த நாளுக்காய் காத்திருந்தார்கள். இதற்கிடையில்... ஆளுக்கொரு கதைகள். இதெல்லாம் றபீக்காக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியதால், ஆழ்ந்த கவலையோடு தூக்கத்தையும் பசியையும் மறந்தே நாட்களைக் கடத்தினாள்.

இஞ்ச வார எல்லார்ர கதையையும் கேட்டு நாம யோசிக்கப்போடா. மகனுக்கு பயப்படுற மாதிரி ஒன்றுமில்லை. இறைவன் போதுமானவன் என்று ஒரே வார்த்தையில் மனைவியை ஆறுதல்படுத்தினான் ஹஸன். நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஷஹ்மிக்கு காய்ச்சல் அடியோடு விட்டபாடில்லை.

ஹொஸ்பிடலிருந்து வந்த தொலைபேசி அழைப்பிற்கு பதிலளித்த ஹஸன்.....உங்க மகன்ட ரிப்போட் வந்திருக்கு. இங்க வந்து எடுங்க என்று கூறியவாறு துண்டிக்கப்பட்டது.

நேரம் மாலை 6 மணியைக் காட்டி பெல் அடித்தது சுவரில் தொங்கிய கடிகாரம். எல்லோருக்கும் ஒரு வித பதற்றம். மகன் புறப்படுங்க என்றவாறு ஹொஸ்பிட்டல் போக ஆயத்தமானான் ஹஸன்.

கவலையோடு மகனையும் அழைத்துக் கொண்டு காரில் புறப்பட்ட ஹஸனின் எண்ணமெல்லாம் மகனைப் பற்றியே சுற்றிக் கொண்டிருந்தது. மாலை நேரமாதலால்....அலுவலக கடமைகள் முடிந்து தத்தமது வீடு நோக்கி அதிகமானவர்கள் திரும்பிக் கொண்டிருக்கும் நேரமது. வீதியில் வாகன நெரிசல் காணப்பட்டாலும் அந்த நெரிசலுக்குள் புகுந்து புறப்பட்டது ஹஸனின் கார்.

ஹொஸ்பிட்டல்.....மகனின் ரிப்போட்......டொக்டர்......

என்ற வட்டத்துக்குள்ளேயே சுற்றி நின்றது. ஹொஸ்பிட்டலை அடைந்த ஹஸன் மகனோடு வேகமாக உள் நுழைந்தான். லிப்டுக்காக காத்திருக்காமல் படிக்கட்டில் 3ஆம் மாடிக்கு ஏறிச் சென்று ஆய்வு கூடத்திற்குள் நுழைகின்றான்.

ஷஹ்மி....ஆ...நீங்களா..

ஆம் என்று ஹஸன் கூறி முடிப்பதற்குள் இந்தாங்க ரிப்போட்... என்று நீட்ட அதனை வாங்கிய ஹஸன் டொக்டரை விசாரிக்கின்றான். டொக்டர் 303ஆம் இலக்க அறையில் நோயாளிகளை பார்வையிடுவதாக அறிந்து அங்கு விரைகின்றான். ஷஹ்மியை முன் காத்திருப்பு இருக்கையில் அமரச் செய்து விட்டு தனியாக உள் நுழைகின்றான் ஹஸன்.

குட்டீவினிங் டொக்டர், மகன்ட ரிப்போட் வந்திருக்கு..... என்றவாறு ரிப்போட்டை நீட்டுகின்றான் ஹஸன். வாங்கி படித்த டொக்டர் அமைதியாகின்றார். என்ன டொக்டர் ....என்னவாம்... மகனுக்கு ஒன்றுமில்லைதானே. வழமையான வெறும் காய்ச்சல்தானா.....என்று கேட்க..

'இல்லை' டொக்கடரின் பதில் ஹஸனைத் தூக்கிப்போட்டது....அப்ப....ஆச்சரியம் கலந்த பதற்றத்துடன் குரல் நடுநடுங்க கண்கள் கலங்கியவாறு ஹஸன் டொக்டரை நோக்க..

மகனுக்கு சின்ன பிரச்சினை இருக்கு, பயப்பட வேணா..... இந்த கட்டிகள் மோசமானவை, இதற்கு ஊசி போட்டால் சரியாக்கி விடலாம். நான் வேறு டொக்டருக்கு கடிதம் தாரன் அவசரமாக அவரைச் சந்திங்க என்று அமைதியாகக் கூறியவாறு சற்று நேரத்தில் கடிதத்தை நீட்டுகின்றார் டொக்டர்.

'ஓன்கோலொஜி கென்சல்டன்ட்'............ என ஆரம்பித்த அந்த கடிதத்தை பார்த்த ஹஸனால் தாங்க முடியவில்லை. கண்ணீர் சிந்தியவனாக தழுதழுத்த குரலில் டொக்டர் புற்று நோய் டொக்டருக்கிட்டயா காட்டணும்.......என்றான்

ஓம்...

அப்ப இது புற்று நோய்க் கட்டியா டொக்டர்......ஓம்... இந்தக் கடிதத்தை கொடுங்க, நானும் போனில் கதைக்கிறேன் என்றார். சொற்ப நேரத்திற்குள் மனமுடைந்து, மிகுந்த வலியோடு வைத்தியரின் அறையினை விட்டு அகலுமுன் கண்களை நன்கு துடைத்துக் கொண்ட ஹஸன்....

அது வரையில் ஸ்மார்ட் போனில் மூழ்கியிருந்த ஷஹ்மி வெளியில் வரும் வாப்பாவைக் கண்டதும் சிரித்த முகத்தோடு.. என்ன வாப்பா..... என்னவாம் எனக்கு....... பயப்படும் அளவுக்கு ஒன்றுமில்லைதானே....என்று அடுக்கிக் கொண்டிருக்கவே...

பதிலுக்கு வாங்க வீட்ட போவோம் என்று கூறி வேகமாக புறப்படுகின்றார்கள் ஊர் நோக்கி காரில்.

ஆனால்... நம்பவே முடியவில்லை ஹஸனால்...தனது மூத்த பிள்ளை. தோளுக்கு மேல் வளர்ந்து விட்டவன்;... நல்லது கெட்டது எல்லாம் புரிந்து குடும்ப சுமைகளை பகிர்ந்து கொள்கின்ற வகையில் பக்குவமாக வளர்க்கப்பட்ட அன்பு மகன். தனது எல்லா வேலைகளிலும் வலது கை போல் பங்கெடுத்து கொள்ளும் திறமைசாலி... அமைதியான சுபாவமுடைய ஷஹ்மி...

ஸ்மாட் போன்....தனது தாய் தந்தைக்கு ஸ்மாட் போனை படிப்பித்தவனும் அவன்தான். வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக நிற்கின்ற குடும்ப பொறுப்பு மிக்கவன். இப்படிப்பட்ட மகனுக்கு 'கென்சரா'..... உச்சரிக்கவே முடியவில்லை ஹஸனால். இதனை றபீக்காவிடம் எப்படி பக்குவமாக எடுத்துச் சொல்வது? தாங்கிக் கொள்வாளா?

இவ்வாறு பல வழிகளிலும் யோசித்து மனதை குழப்பிக் கொண்டிருந்த ஹஸன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் வீதியோரத்தில் காரை நிறுத்துகின்றான். ஷஹ்மியிடம் இருந்த போனை வாங்கிக் கொண்டு காரை விட்டு இறங்கிய ஹஸன்... தனது சகோதரியிடம் கதைக்க தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்துகின்றான்.

ஆம்,....

ஹஸனின் சிறு பராயம் முதல் இற்றை வரைக்கும் எல்லா வகையிலும் ஆறுதல் என்றால் அவனது உடன் பிறப்புகள் தான். எந்த விடயத்திலும் தனது உடன் பிறப்புக்களின் ஆலோசனைகள் இல்லாமல் இருப்பதில்லை. இதுதான் இற்றைவரைக்கும் பல தலைமுறைகள் தாண்டியும் அந்த குடும்பத்தின் ஒற்றுமைக்கு சிறந்த அத்திவாரம் என்று கூட கூறலாம்.

காணாக்குறைக்கு ஹஸனின் சகோதரிகளின் திருமணம் மூலம் கிடைத்த 'மச்சான்' என்ற உறவுகள்.... அது வெறும் வார்த்தைகளால் சொல்லக் கூடிய உறவுகளல்ல. கஷ்டப்பட்டு தமது பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி சமூகத்தில் நல்ல நிலையில் வைத்திட பாடுபட்ட ஹஸனின் பெற்றோருக்கு.....அது இறைவனால் கொடுக்கப்பட்ட வரம்...

அடிக்கடி தனது சகோதரிகளையும் மச்சான்மாரையும் நினைத்து ஹஸன் பெருமைப்படுவதுண்டு. அந்தக் குடும்பத்தை ஒற்றுமையாய் வைத்திருப்பதில் அவர்களுக்கு தனிப் பங்குண்டு.

ஹலோ.... ஹலோ....நானும் இப்ப எடுப்பம்டுதான் இருந்த...அதுக்குள் நீயே எடுத்திட்டா. என்ன நடந்த? டொக்டரை பார்த்தயா? என்ன சொன்னாறு? ஷஹ்மிக்கு ஒண்டுமில்லையாமா? கேள்விகள் தொடர்கின்றன. ஹஸனால் பதில் சொல்ல முடிய வில்லை.

ஹலோ .ஹலோ

ஓ.....ஏன் பேசாமல் இருக்கா? என்ன நடந்த? ஒண்டுமில்லை, அப்ப? ஷஹ்மிக்கு ஷஹ்மிக்கு, ஹஸனால் உச்சரிக்க முடியவில்லை. இரு முனைகளிலும் கதறல்கள், ஹஸன் வாய் விட்டு அழுது விட்டான். சொல்லன் டொக்டர் என்ன சொன்னாறு......?

மீண்டும், மௌனமானான் ஹஸன்.

ஓரளவு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஷஹ்மிக்கு ' சாதாரண கென்சர் கட்டியாம்' என்று அவசரமாக கென்சர் டொக்டருக்கிட்ட காட்டச் சொல்லி கடிதம் தந்திருக்காரு என்று ஒருவாறு விடயத்தை கூறி முடித்தான்.

எண்டல்லாவே கென்சராமா...? பதறினாள் சகோதரி நிஹாறா. சற்று நேரத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட நிஹாரா ஹஸன், அழாத அது பெரிசா ஒண்டும் இருக்காது. கவலப்படாம தைரியமா இரு. ஷஹ்மியை டென்சனாக்கி விடாத. இறைவன் உதவி என்றும் கிடைக்கும். பிரார்த்தனையோடு இரு என்றாள். சகோதரியின் ஆலோசனைக்கமைவாக உடனடியாக செயற்பட்ட ஹஸன், அன்றிரவே கென்சருக்கான டொக்டரை சந்தித்து கடிதத்தை நீட்டுகின்றான்.

ஷஹ்மியை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க சிபாரிசு செய்த வைத்தியர் கென்சர் தொடர்பாக இன்னும் பல பரிசோதனைகளுக்கு சிபாரிசு செய்கின்றார். எல்லாம் அவசர அவசரமாக நடந்தேறுகின்றது.

சிறிய வயது என்பதால் எல்லாவற்றிலும் ஷஹ்மிக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. மறுநாள் ஹஸனை அழைத்த பெரிய டொக்டர், உங்க மகனுக்கான ' வேடின் மெரோ' என்ற ஒரு முக்கியமான டெஸ்ட் ஒன்டு மஹரகமவில்தான் செய்யலாம். அம்புலன்சில் அங்க போவதற்கு ஆயத்தமாக இருங்க என்றார்.

'மஹரகம அபேக்ஷா'க்கு அம்பியூலன்சில் அனுப்பப்பட்ட ஷஹ்மிக்கு அவசரமாக ஆய்வுகூடத்தில் 'வேடின் மெரோ' டெஸ்ட் முடிக்கப்படுகிறது. இவரது கென்சர் சுகப்படுத்தக் கூடிய வகையைச் சேர்ந்தது. தொடர்ச்சியான சிகிச்சை முறை நிச்சயம் வெற்றியளிக்கும்.

ஷஹ்மியை பரிசோதித்த 'மஹரகம அபேஷா' இன் கென்சருக்குரிய பெரிய டொக்டரின் ஆறுதல் வார்த்தைகள் இவை. வைத்தியரின் பரிசோதனை அறிக்கையுடன் அடுத்த நாளே மீண்டும் தனது பழைய ஹொஸ்பிடலுக்கு மாற்றப் படுகிறான் ஷஹ்மி.

ஹஸனை அழைத்த டொக்டர், இதனை சாதாரண கீமோ தெரபி மூலம் சுகப்படுத்தி விடலாம். பயப்படத் தேவையில்லை. தொடர்ச்சியாக சிகிச்சை பெற வேண்டும் என்றார். ஹஸனின் உள்ளம் கனக்கின்றது. கண்ணீர்த் துளிகள் கண் இமைகளைத் தொட்டு நிற்கின்றது. டொக்டர் 'சுகப்படுத்திடலாம்தானே' என்று தடுமாற்றமாய் திக்கித் திக்கி கேட்கின்றான் ஹஸன்.

அதற்குள் கண்ணீர்த் துளிகள் முகத்தை நனைத்துக் கொள்ள, மகனை ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொண்டே டொக்டர் எப்படியாவது மகன சுகப்படுத்தி தாங்க என்று அழுது கேட்கின்றான் ஹஸன்.

நீங்க பயப்படுற மாதிரி இல்ல. இறைவனிடத்தில் பிரார்த்தியுங்கள். சுகப்படுத்தி விடலாம் என்ற டொக்டரின் வார்த்தைகள் ஹஸனுக்கு ஆறுதலாக இருந்தது. நாட்கள் உருண்டோடின. தந்தையும் மகனுமாக ஆஸ்பத்திரி வாழ்க்கைக்கு பழகி விட்டார்கள்.

ஷஹ்மியோ தனது வருத்தத்தை பொருட்படுத்தாது தான் எதிர் நோக்கும் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தன்னை ஆயத்தப்படுத்துவதிலேயே குறியாக இருந்தான். எப்படி இருந்தாலும் கட்டாயம் இம்முறை பொதுப் பரீட்சைக்கு தோற்றியே ஆக வேண்டும் என்பதில் ஷஹ்மி குறியாக இருந்தான்.

எல்லோரும் ஷஹ்மியை இரக்கத்தோடு அணுகினார்கள். பரிதாபம் காட்டினார்கள். ஹொஸ்பிட்டல் தாதிகளின் அன்பான கவனிப்பு, கனிவான வார்த்தைகள், மென்மையான அணுகுமுறைகள், அத்தனையும் ஷஹ்மிக்கு நன்றாக பிடித்து விட்டது. நாளுக்கு நாள் சிகிச்சையின் பின்பு எடுக்கப்படுகின்ற மருத்துவ ரிப்போட்களும் ஷஹ்மியின் முன்னேற்றத்தையே காட்டி நின்றன.

மகனுக்கு உணவு விடயத்திலோ அல்லது ஏனைய விடயங்களிலோ எவ்வித குறைவும் இல்லாது நிறைவாகவே பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஹஸனின் விடாப்பிடி, ஓய்வின்றி முழு நாட்களும் இரவு பகல் பாராது 24மணி நேரமும் மகனுடனேயே தங்கியிருக்க முடிவெடுத்தான் ஹஸன். இடையில் வந்த பெருநாட்கள் மற்றும் பண்டிகைகளையும் ஹொஸ்பிட்டலிலேயே கொண்டாட வேண்டிய நிலைமையினையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டான் ஷஹ்மி.

(23 ஆம் பக்க பார்க்க)

எம்.எஸ்.எம் ரூமி , ஏறாவூர்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 107

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | | | | | ■ | 09 | |
| 10 | | ■ | 11 | | 12 | | ■ |
| | ■ | 13 | | | | | ■ |
| ■ | 14 | | | | | ■ | 15 |
| ■ | 16 | | ■ | ■ | ■ | 17 | |
| 18 | | ■ | 19 | | ■ | 20 | |
| 21 | | | | ■ | 22 | | |

திரு/திருமதி.செல்வி ...............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ...............................................

...............................................

...............................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 107
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 107

**இடமிருந்து வலம்**

1. கூர்மையாகக் கவனித்தல்
6. பதவிப் பொறுப்பில் முதன்மையாளருக்கு அடுத்தபடியான நிலையைக் குறிக்கப் பயன்படுத்துவது.
8. பாராட்டுவது அல்லது உயர்வாகச் சொல்லும் வகையில் குறிப்பிடுவது.
9. ஒருவகைத் தானியம்
10. ஒரு காட்டு மிருகம்
11. இதுவும் ஒருவகை மரம் (குழம்பியுள்ளது)
13. உழைப்புக்கு வழங்கப்படும் ஊதியம்.
14. ஒழுங்கமைப்புக்கு ஏற்படும் தடை அல்லது சீர்குலைவு (குழம்பியுள்ளது)
16. உலகம் (திரும்பியுள்ளது)
17. சிரசு திரும்பிவிட்டது
18. அறிவு, புத்தி (திரும்பியுள்ளது)
19. அம்பு (திரும்பியுள்ளது)
20. அம்பு எய்வதற்கு இது தேவை
21. உடல் பலம், சக்தி (குழம்பியுள்ளது)
22. வகை, ரகம் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. ஒருவரின் அல்லது ஒன்றின் நலனில் ஆர்வமுடையவர்
2. பெண்ணுக்கு திருமணம் செய்து வைப்பதற்குப் பார்க்கப்படும் இளைஞன்
3. தாய் (தலைகீழ்)
4. வணக்கம் குழம்பிவிட்டது
5. நிலநடுக்கம் (குழம்பியுள்ளது)
6. இரத்தம்
7. பூலோக கற்பக தரு
12. சமையல் அறையில் இருக்க வேண்டிய பொருட்களில் ஒன்று
13. ஒருவகை அரிசி
14. பலன் கருதாமல் செய்யப்படுவது
15. மகள்
17. ஒரு செயற்கருமத்துக்கு முதன்மை நிலை வகிக்கும் பெண் (குழம்பியுள்ளது)
18. விளக்கு எரிக்கப் பயன்படுவது (தலை கீழ்)
19. ஓர் இசைக் கருவி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 106

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. தித்திப்பு
5. மது
7. கரும்பு
9. கட்டுப்பாடு
11. கடுகதி
12. சோம்பு
14. பரி
16. சுவீகாரம்
18. தகராறு
20. பசி
22. தவில்
23. தாரகை

**மேலிருந்து கீழ்**

1. திருப்தி
2. திருட்டு
3. கடுப்பு
4. புகடு
6. மணிப்புரி
8. சோகம்
10. பாகன்
13. பம்பரம்
15. உதவி
16. தராசு
17. வீறு
19. கல்
21. சிகை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 106

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **இல்யாஸ் தாஸீம்**<br>இல 23 ஏ, இப்றாஹீம் வீதி,<br>தொடடவத்தை,<br>பாணந்துறை | **ரதி சிவசீலன்**<br>நீர்வேலி வடக்கு<br>நீர்வேலி | **யூசுப் ஐடி**<br>முதலாவது ஒழுங்கை,<br>நூர் மஸ்ஜித் வீதி,<br>புத்தளம் |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ். செல்வராஜா** — *பதுளை*
2. **எஸ் பாக்கியராசா,** — *காரைதீவு*
3. **மல்லிகாதேவி பத்மநாதன்** — *பசறை*
4. **ரீ.நாகையா** — *கல்முனை*
5. **மாயன் சுப்பிரமணியம்** — *மட்டக்களப்பு*
6. **எஸ் . ஜனஹாசினி** — *கொழும்பு 13.*
7. **எம்.ஏ. அத்லான்** — *கிண்ணியா*
8. **என்.எஸ். ரஜீவ்** — *முசலி*
9. **எம்.டபிள்யூ.எம் நவாஸ்** — *துல்ஹிரிய*
10. **கே. எப்.மில்ஹானி** — *ஏறாவூர்*

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# சுதந்திர தின வாரத்தில் பிறக்கின்ற குழந்தைகளுக்கு மக்கள் வங்கி தரும் இசுரு உதான பரிசு சான்றிதழ்கள்

சுதந்திரக் காற்று 76 வருடங்கள்

**இம்மாதத்தின் முதல் பதினைந்து நாட்களில் பிறக்கின்ற குழந்தைகளை இலக்காகக் கொண்டு மக்கள் வங்கியின் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி எமது ஊழியர்கள் தங்கள் பகுதிக்கு உரிய வைத்தியசாலைகளுக்குச் சென்று புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான பரிசுகளை வைத்தியசாலை ஊழியர்களின் ஆதரவுடன் வழங்குவார்கள். ரூபா 2000/= பெறுமதியான இசுரு உதான சான்றிதழ் பரிசாக வழங்கப்படும்.**

Isuru Udana

ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினத்துடன் இணைந்ததாக மக்கள் வங்கியின் 'சுதந்திரத்தின் உதயம்' நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இதன்படி, இன்று 04 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் முன்னிலையில் பொரளை காசல்



வீதி மகளிர் வைத்தியசாலையிலும், பொரளை டி சொய்சா மகளிர் வைத்தியசாலையிலும் இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச் சேவை) நளின் பத்திரனகே இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். தாய்நாட்டின் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்துக்கான பாதையை உருவாக்குவதற்கு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்கள் வங்கி, பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினத்தின் கருப்பொருளாக 'சுதந்திரத்தின் உதயம்' என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தயார் செய்துள்ளது. மக்கள் வங்கி 2006 ஆம் ஆண்டு முதல் தற்போது 17 ஆவது தடவையாக இந்த இலவச நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கின்றது.

இம்மாதம் 01 முதல் 14 வரையிலான பதினைந்து நாட்களில் பிறக்கின்ற குழந்தைகளை இலக்காகக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி எமது

**பெற்றோர்/பாதுகாவலர் இந்த பரிசு சான்றிதழ் மற்றும் குழந்தையின் பிறப்பை உறுதிப்படுத்தும் ஆவணங்களை அருகில் உள்ள மக்கள் வங்கி கிளையில் சமர்ப்பிக்கும் போது, பரிசு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பை கணக்கில் வரவு வைத்து குழந்தையின் பெயரில் இசுரு உதான கணக்கை நாம் ஆரம்பிப்போம்.**

ஊழியர்கள் தங்கள் பகுதிக்கு உரிய வைத்தியசாலைகளுக்குச் சென்று புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான பரிசுகளை வைத்தியசாலை ஊழியர்களின் ஆதரவுடன் வழங்குவார்கள். ரூபா 2000/= பெறுமதியான இசுரு உதான சான்றிதழ் பரிசாக வழங்கப்படும்.

பெற்றோர்/பாதுகாவலர் இந்த பரிசு சான்றிதழ் மற்றும் குழந்தையின் பிறப்பை உறுதிப்படுத்தும் ஆவணங்களை அருகில் உள்ள மக்கள் வங்கி கிளையில் சமர்ப்பிக்கும் போது, பரிசு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பை கணக்கில் வரவு வைத்து குழந்தையின் பெயரில் இசுரு உதான கணக்கை நாம் ஆரம்பிப்போம்.

சேமிக்கும் பழக்கத்தை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதில் முன்னோடியாகத் திகழும் மக்கள் வங்கி, 1998 ஆம் ஆண்டில் பிறப்பிலிருந்து 5 வயது வரையிலான குழந்தைகளுக்காக இசுரு உதான கணக்கை அறிமுகப்படுத்தியது.

அங்கு, 'குழந்தைக்கு வழங்கக்கூடிய புத்திசாலித்தனமான பரிசு' என்ற தொனிப்பொருளில், பல்வேறு பெறுமதிகள் கொண்ட இசுரு உதான பரிசுச் சான்றிதழ்களை அறிமுகப்படுத்தினோம். அதன் மூலம், பெரியவர்களை பௌதிக ரீதியான பரிசுகளை எடுத்துச் செல்வதற்குப் பதிலாக குழந்தைக்காகச் சேமிக்கப் பழகுவதைத் தூண்டுவதே எங்களின் பிரதான குறிக்கோளாக இருந்தது. இந்த இசுரு உதான சேமிப்புக் கணக்குகளில் பணத்தைச் சேமிக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்படும் விசேட வட்டிக்கு மேலதிகமாக, அதிகரித்துவரும் கணக்கின் மீதிக்கு ஏற்ப பல கவர்ச்சிகரமான பரிசுகளை வழங்கி குழந்தைகள் சேமிப்பதை ஊக்குவிப்பதை நாம் எதிர்பார்க்கிறோம்.

அதற்கிணங்க, நாட்டின் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்கள் வங்கி, எதிர்கால அபிவிருத்தியை அடைவதற்காக ஒரு குழந்தைக்கு வழங்கக்கூடிய அறிவுபூர்வமான பரிசை வழங்கி உண்மையான சுதந்திரத்தின் அர்த்தத்தை உருவாக்க பாடுபடுவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. நிதி ஸ்திரத்தன்மை மூலம் குழந்தைகளின் எதிர்காலம் பிரகாசிக்கும்'.






## தாய்நாட்டின் மீதான அபிமானத்தையும் படைபலத்தையும் வெளிக்காட்டும்

# சுதந்திர தின மரியாதை அணிவகுப்பு

இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் வெளிநாட்டு இராஜதந்திர உறவு என்பன சுதந்திரம் பெற்ற நாடு ஒன்றின் இருப்புக்கு மிகவும் முக்கியமானதும் இன்றியமையாததுமாகும். இவை வலுப்பெற்று மேம்படுத்தப்படும் பட்சத்திலேயே அந்த நாடு வளர்ச்சியை நோக்கியும் சிறந்த எதிர்காலத்தை நோக்கியும் வெற்றிகரமாக பயணிக்க முடியும்.

அதேபோன்று நாடொன்றின் முன்னேற்றத்துக்கு அரசியல், பொருளாதார, பொது மக்கள் பாதுகாப்பு பலமும், சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானதாகும்.

சுதந்திரம் என்பது சகலருக்கும் தேவையான ஒன்று உலகில் வாழும் தனிநபர் தொடக்கம் நாடுகள் ஒவ்வொன்றும் அதற்காகவே தொடர்ந்தும் போராடி வருகின்றன. அதேபோன்று இலங்கை சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் தொடர்ந்தும் பல்வேறு விதமான போராட்டங்களுக்கும் சவால்களுக்கும் அவ்வப்போது முகம் கொடுத்து வந்த, முகம் கொடுத்து வரும் ஒரு நாடாகும். இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் எமது நாடு அமைந்துள்ளமையே இதற்கு பிரதான காரணமாகும்.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக அற்றுப் போயிருந்த சுதந்திரத்தை, எமது நாட்டின் பாதுகாப்பு படையினர் தங்களது முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புடன் இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் பெற்றுக்கொடுத்துள்ளனர். யுத்தத்திற்கு பின்னரான தற்போதைய காலகட்டத்தில் அதேபடையினரின் பங்களிப்புடன் சகல இன மக்களும் சுதந்திரமாகவும் நல்லிணக்கத்துடனும் வாழக் கூடிய சிறந்த ஒரு சூழலையும் உருவாக்கியுள்ளனர். இதனால் மூன்று தசாப்தங்களுக்கு பின்னர் மக்கள் உண்மையான சுதந்திரக் காற்றை சுவாசித்து வருகின்றனர். தற்பொழுது ஜனநாயகத்தின் ஊடாக நல்லாட்சியை நிலைநாட்டவும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

நீண்ட கால போராட்டத்திற்கு பின்னர் நாட்டில் தேசிய பாதுகாப்பு, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள், வெளிநாடுகளுடனான இராஜதந்திர, பாதுகாப்பு உறவுகள் நாளுக்கு நாள் மேம்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் இலங்கை தனது 76ஆவது தேசிய சுதந்திர தினத்தை இன்று (2024.02.04) கொண்டாடுகின்றமை விஷேட அம்சமாகும்.

நீண்டபோராட்டத்தின் வெற்றிக்கனியாகக் கிடைப்பதே சுதந்திரமாகும். இந்த சுதந்திர போராட்டத்துக்கு அந்த நாட்டின் பாதுகாப்பு படையினரது முழுமையான பங்களிப்பு மிகவும் முக்கியமானது. எனவே தான் சில நாடுகள் குடியரசு தினம் அல்லது சுதந்திர தினம் என்பதை தமது நாட்டினதும் படைத் தரப்பினரதும் பலத்தை வெளிக்காண்பிக்கும் ஒரு பிரதான வைபவமாகவே கொண்டாடுகின்றது. இதனை உலகின் பலம் பொருந்திய நாடுகள் தொடக்கம் சாதாரண நாடுகள் வரை வருடாந்தம் கொண்டாடும் சுதந்திர, குடியரசு தின பிரதான வைபவங்களில் காணமுடியும். இதன் ஓர் அங்கமாகவே பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற 1948ஆம் ஆண்டிலிருந்து இலங்கையும் வருடா வருடம் பெப்ரவரி 4ஆம் திகதி தேசிய சுதந்திர தினத்தை வெகுவிமர்சையாகக் கொண்டாடி வருகின்றது.



### ஆறாயிரத்திற்கும் அதிகமான முப்படை வீரர்கள் அணி வகுப்பில்



இதற்கமைவாகவே இம்முறையும் இலங்கையின் 76ஆவது சுதந்திர தின பிரதான வைபவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு காலி முகத்திடலில் இன்று காலை மிகக் கோலாகலமாக நடைபெறவுள்ளது.



தேசத்தின் அபிமானத்தை காக்கும் வகையில் வழக்கம் போன்று எவ்வித குறைப்பாடுகளுமின்றி கம்பீரமானதாகவும் எளிமையான முறையிலும் மேலதிக செலவுகள் எதுவுமின்றியும் இந்த நிகழ்வை நடத்த சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொது மக்கள் தத்தமது வீடுகளில் இருந்தவாறே தொலைக் காட்சியின் ஊடாக பாதுகாப்பாக அதனைக் கண்டுகளிப்பதற்கான ஏற்பாடுகளையும் ஏற்பாட்டுக் குழு மேற்கொண்டுள்ளது.



### தாய்லாந்து பிரதமர் விஷேட அதிதியாக பங்கேற்பு

இம்முறை சுதந்திர தின பிரதான அணிவகுப்பில் முப்படையினர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வீரர்கள் சுமார் ஆறாயிரத்திற்கும் அதிகமானவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களில் இராணுவத்தைச் சேர்ந்த 3163 பேரும், கடற்படையைச் சேர்ந்த 950 பேரும், விமானப் படையைச் சேர்ந்த 740 பேரும் பொலிஸ் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையைச் சேர்ந்த 504 பேரும் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த 380 பேரும் தேசிய மாணவர் படையணியைச் சேர்ந்த 551 பேரும் அடங்குவர்.

**தாய்லாந்து பிரதமர்**

ஏழு தசாப்த்த தேரவாத பௌத்த தொடர்பை வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விஷேட அழைப்பின் பேரில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின், விஷேட அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளமை விஷேட அம்சமாகும். இந்த விஜயத்தின் ஓர் அங்கமாக பல்வேறு இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. இதன் மூலம் இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன் நாம் எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை முறியடிக்கவும் ஓர் உந்து சக்தியாக அமையும்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார்போஸ் ரொஷான் குணதிலக்க, அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரண்ணாகொட மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு தூதுவர்கள், இராஜதந்திரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சுதந்திர தின பிரதான நிகழ்வை முன்னிட்டு கொழும்பு காலி முகத்திடல் உட்பட அதனை அண்டிய பிரதேசம் எங்கும் தேசிய கொடி மற்றும் வர்ணக் கொடிகள் பறக்கவிடப்பட்டு அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுவதுடன் இந்தப் பிரதேசம் எங்கும் விழாக்கோலம் பூண்டிருக்கின்றது.

இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை, தேசிய இளைஞர் படை ஆகியவற்றை பிரதிநிதித்துவப் படுத்திய சுமார் ஆறாயிரத்திற்கும் அதிகமான படைவீரர்களினது அணிவகுப்பும் விமானப் படையின் வான் சாகசங்களும் இன்றைய நிகழ்வை மேலும் அலங்கரிக்கும் வகையிலும், தமது பலத்தையும் தரத்தையும் வெளிக்காண்பிக்கும் வகையிலும் அமையவுள்ளது.

வழமைபோன்று பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன், விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன, பிரதமரின் செயலாளர் டீ. எம். அநுர திஸாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் ஈ. எம். எஸ். பீ. ஏக்கநாயக்க ஆகியோரின் வருகை இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார்போஸ் ரொஷான் குணதிலக்க, அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரண்ணாகொட, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிக்க பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரின் வருகையும் இடம்பெறவுள்ளது.

அதன் பின்னர் பொலிஸாரின் விஷேட வாகன பவனிக்கு மத்தியில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அவரது பாரியார் ஆகியோர் அழைத்து வரப்படவுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து பாரம்பரிய முறையில் பொலிஸ் வாகன பவனி மற்றும் பொலிஸ் குதிரைப் படையின் அணிவகுப்புக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் திருமதி மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோரின் வருகை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதியின் வருகையைத் தொடர்ந்து பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மாஅதிபர் ஜனாதிபதியை பிரதான கொடிக்கம்பத்துக்கு அழைத்துச் சென்றவுடன் மங்கள வாத்திய முழக்கத்துக்கு மத்தியில் தேசியக் கொடியை ஏற்றி சுதந்திர தின பிரதான வைபவத்தை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். இதன்போது பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவ, மாணவிகளினால் தேசிய கீதம் பாடப்படும். ஜனாதிபதி விஷேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் ஜயமங்கள கீதம் மற்றும் தேவ வஸ்து என்பன பாடப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து இலங்கையின் சுதந்திரம், இறைமை, தேசிய ஒருமைப்பாடு என்பவற்றை நிலைநாட்டும் பொருட்டு தாய் நாட்டுக்காக உயிர் நீத்த சகல தேசாபிமானிகளையும் நினைவு கூர்ந்து இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்படும். அதனைத் தொடர்ந்து முப்படைகளினால் ஜனாதிபதிக்கு மரியாதை அணிவகுப்பு வழங்கப்படுவதுடன், மரியாதை நிமித்தம் 21 பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்படும்.

அதன் பின்னர் முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை மற்றும் மாணவர் படையணியினரின் மரியாதை அணிவகுப்பு இடம்பெறவுள்ளது. இம்முறை மத்திய பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ரோஹித்த அலுவிஹார தலைமையில் நடைபெறவுள்ள இந்த மரியாதை அணிவகுப்பில் சுமார் ஆறாயிரம் படைவீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

**இராணுவம்**

இராணுவ அணிவகுப்பில் இராணுவத்தின் ஆயுதங்கள், கனரக கவச வாகனங்கள், யுத்த தளபாடங்கள், உபகரணங்கள். ஆட்டிலறி, பீரங்கி தாங்கிய வாகனங்கள், மோப்ப நாய்கள் பொறியியல் உபகரணங்கள் உட்பட யுத்த காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் இராணுவம் பயன்படுத்தும் பல்வேறு வாகனங்களும் அணிவகுத்து செல்லவுள்ளன.

**கடற்படை**

அதேபோன்று, கடற்படையினர் அணிவகுப்பும் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது. கடற்படையின் கொமொடோர் புத்திக் ஜயவீர தலைமையில் நடைபெறவுள்ள இந்த அணிவகுப்பில் கடற்படையின் பல்வேறு வகையான பிரிவினர் அணிவகுப்பில் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களில் கடற்படையின் விஷேட படகுப் பிரிவினர், மீட்புப் பிரிவினர், மெரைன் படைப் பிரிவினர், பெண்கள் படைப்பிரிவினர் அடங்குவர்.

கடற்படையிடம் உள்ள பெரிய கப்பல்களான கஜபாஹு, சயுர மற்றும் சமுதுர ஆகிய மூன்று கப்பல்களும் காலி முகத்திடலில் கடலில் இருந்தவாறே மரியாதை செலுத்தும்.

அத்துடன் தேசத்திற்காக அர்ப்பணித்தவர்களை நினைவு கூர்ந்து காலி முகத்திடல் கடலில் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான சமுதுர கப்பலில் இருந்து 25 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படவுள்ளமை விஷேட அம்சமாகும்.

**விமானப்படை**

விமானப் படையினரும் தரையில் தமது பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி விமானப் படையினரால் பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் அணிவகுத்து செல்லவுள்ள அதேசமயம் காலி முகத்திடல் மற்றும் அதனை அண்டிய வான் பரப்பில் விமானப் படையின் பல்வேறு ரக விமானங்கள், ஹெலிகொப்டர்கள், தாக்குதல் விமானங்கள் உள்ளடங்கலாக 19 வகை விமானங்கள் தேசிய கொடியை பறக்க விட்ட நிலையில் வானில் சாகசங்களை காண்பித்த வண்ணம் அணிவகுத்து பறந்து செல்லவுள்ளன. எப்7 ரக தாக்குதல் விமானங்களும், எம்ஏ 60, வை12, பிரி6, ரக விமானங்களும், பெல் 412, பெல் 212, எம்ஐ 17 ரக



ஹெலிகொப்டர்களுமே கொழும்பு வான் பரப்பில் தமது சாகசங்களை காண்பிக்கவுள்ளன.

**பொலிஸ், பொலிஸ் விஷேட அதிரடிப் படை**

பொலிஸாரின் அணிவகுப்புக்கு மேலதிகமாக பொலிஸாரின் மிகவும் பழைமை வாய்ந்ததும் பாரம்பரியமானதுமான பாண்ட் வாத்தியங்களுடன் பொலிஸார் அணிவகுத்து செல்லவுள்ளனர். அத்துடன் இம்முறையும் மரியாதை அணிவகுப்பில் பொலிஸ் குதிரைப் படையினரும் கலந்து கொள்ளவுள்ளனர். பொலிஸாரை தொடர்ந்து பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரும் அணிவகுத்து செல்லவுள்ளனர்.

இதேவேளை, சுதந்திரத்தினத்தில் முப்படையினர் அணிவகுத்து செல்வதும் தரை, கடல் மற்றும் வான் பரப்பில் சாகசங்களை காண்பிப்பதும் வெறுமனே சாகசங்களை காண்பிப்பதல்ல நோக்கம். மாறாக எமது நாட்டிற்கே உரித்தான முப்படைகளின் பலத்தையும் தரத்தையும் வெளிக்காண்பிப்பது ஆகும்.

**பரசூட் சாகசங்கள்**

இம்முறையும் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பரசூட் சாகசங்கள் இடம்பெறவுள்ளன.

**சமய வழிபாடுகள்**

இதேவேளை சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பௌத்த, இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய மத தலங்களில் சமய வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, இம்முறை சர்வமத ஆசிர்வாதங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன் பெப்ரவரி 04ஆம் திகதி பௌத்த மத அனுஷ்டானம் கொழும்பு 3, பொல்வத்த தர்மகீர்த்தியராமயவிலும், இந்து மத அனுஷ்டானம் கொழும்பு – 04 பிள்ளையார் கோயிலும், கத்தோலிக்க மத ஆராதனை பொரளை, அனைத்து புனிதர்கள் தேவாலயத்திலும், கிறிஸ்தவ சமய ஆராதனை கொழும்பு 3, கிறிஸ்தவ புரொட்டஸ்டன்ட் தேவாலயத்திலும், இஸ்லாமிய சமய நிகழ்வு கொழும்பு – 11 ஜாமிஉல் அல்பர் சம்மாங் கோட்டை (சிவப்பு) பள்ளிவாசலிலும் நடைபெறவுள்ளன.



ஸாதிக் ஷிஹான்

# இலங்கையின் சுதந்திரத்திற்காக போராடிய முஸ்லிம்கள்




இலங்கையின் சுதந்திரத்திற்காக போராடிய முஸ்லிம் தேசிய வீரர்களின் தியாகங்களை புதிய இளம் தலைமுறையினருக்கு அறிவூட்டுதல் வேண்டும். அதேவேளையில் எமது சமூக மேம்பாட்டுக்காக பங்காற்றிய எமது அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீசும் நினைவு கூரப்பட வேண்டியவர் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தெரிவித்தார்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவித்தபோது

இலங்கையின் சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு முஸ்லிம்களுக்கும் பாரிய பங்குண்டு. முஸ்லிம்களின் தேசிய வீரர்களை முஸ்லிம்கள்தான் நினைவு கூர வேண்டும். இது எங்களின் கட்டாயக் கடமையாகும். வரலாற்றை மறந்து வாழும் சமூகம் இன்னொரு சமூகத்தினால் கட்டியாளப்படும் என்பது வரலாற்றில் எழுதப்பட்ட உண்மையாகும்

**இலங்கையில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் செயற்பட்ட முக்கிய கட்சி இலங்கை தேசிய காங்கிரஸ்**

04.02.1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. அந்நியர் ஆட்சியில் இருந்து இலங்கையின் சுதந்திரத்திற்காக போராடிய, குரல் கொடுத்த, சகல இனத்தையும் சேர்ந்தவர்களையும் தேச பிதாக்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தேச பக்தர்கள் என அழைக்கின்றோம். இலங்கையின் சுதந்திரத்திற்காக முஸ்லிம்களும் போராடினார்கள், குரல் கொடுத்தார்கள், ஆதரவு வழங்கினார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இலங்கையின் வரலாற்றுப் பதிவுகளில் உள்ளன. சுதந்திரம் கிடைத்து 76 ஆண்டுகளுக்குள் சுதந்திரத்திற்காக குரல் கொடுத்த முஸ்லிம் தேசிய வீரர்களின் பெயர்கள் இலங்கையின் வரலாற்றுப் பதிவுகளில் இருந்து படிப்படியாக மறக்கடிக்கப்பட்டு வருகின்றது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிராகப் போராடி உயிர்நீத்த முஸ்லிம் தேச பக்தர்கள், சேகு டி. டி. (தோப்பூர்), முகம்மது, சலாம் பட்டி உடையார் (குச்சவெளி), அபூபக்கர் ஈஸா (முகாந்திரம் சம்மாந்துறை), மீரா குசைன் காரியப்பர் (சம்மாந்துறை), உசன் லெப்பை உதுமாலெப்பை (சம்மாந்துறை), அனீஸ் லெப்பை (மருதமுனை), ஆகிய வீரத் தியாகிகள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்த தேசிய வீரர்கள் என்ற வகையில் சட்ட வல்லுனர் அறிஞர் முகம்மது காசிம் சித்தி லெப்பை, சட்ட வல்லுனர் I.L.M அப்துல் அஸீஸ், 1924இல் நடை பெற்ற சட்ட சபை தேர்தலில் வெற்றியீட்டி சட்டசபை உறுப்பினர்களான, சேர் மாக்கான் மாக்கார், N.H.M. அப்துல் காதர், கலாநிதி துவான் புர்கானுதீன் ஜாயா ஆகியோரைக் குறிப்பிடலாம். முஸ்லிம் அரசியல் மாநாட்டில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் சுதந்திரத்திற்கு ஆதரவளித்து பேசினார். 1945.11.09 இல் டொமினியன் அந்தஸ்து வழங்கும் சட்டமூலத்திற்கான வாக்களிப்பில் சேர் ராசீக் பரீட், டொக்டர். M.C.M. கலீல், டி. பி. ஜாயா போன்றவர்கள் தமது ஆதரவை வழங்கி வாக்களித்தனர்.

இப்போது, இவர்களில் பலர் மறக்கடிக்கப்பட்டு M.C..சித்தி லெப்பை, T.B ஜாய ஆகிய இருவரின் பெயர்கள் மாத்திரம் நினைவு கூரப்பட்டு வருகின்றன. முஸ்லிம் விடுதலைப் போராட்ட வீரர்களின் பெயர்களை, தெரிந்து கொள்வதில் ஆர்வமின்மை காரணமாக அதுபற்றித் தெரியாமலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது சுதந்திரத்துக்காக உயிர்நீத்த,போராடிய முஸ்லிம் தலைவர்களுக்கு நாம் செய்து வரும் வரலாற்றுத் துரோகமாகும். தேசிய தினம் இலங்கை மக்கள் அனைவரும் கொண்டாட வேண்டிய ஒன்றாகும்

ஒரு நாட்டின் சனத்தொகையில் மூன்றாவது ஸ்தானத்திலிருந்த ஒரு சிறுபான்மை சமூகத்தினர், தமது எண்ணிக்கையின் பலவீனத்தை நீக்கி ஒரு பலமுள்ள, சக்தி வாய்ந்த, அரசியல் அந்தஸ்துள்ள ஒரு சமூகமாக மாறினர் என்பதே இலங்கை முஸ்லிம்களின் வரலாறாகும்.

இலங்கையில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் செயற்பட்ட முக்கிய அமைப்பாக இலங்கை தேசிய காங்கிரசைக் குறிப்பிடலாம். இலங்கை தேசிய காங்கிரசானது இலங்கை மக்களின் அரசியல் அபிலாஷைகளை பிரித்தானிய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நோக்குடன் செயற்பட்ட இலங்கையிலுள்ள அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய ஓர் இயக்கமாகும். இந்த இயக்கம் ஆரம்பம் முதலே இலங்கையர்களுக்குத் தேவையான அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை, குறிப்பாக அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை நோக்கமாகவும், கோரிக்கையாகவும் முன்வைத்து வந்தது.

ஆனால் காலம் செல்லச் செல்ல இந்திய தேசிய காங்கிரஸின் செல்வாக்குக் காரணமாக பிரித்தானிய அரசுக்கு எதிராக சில கிளர்ச்சிகளையும், பூரண சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கையையும் இலங்கை தேசிய காங்கிரஸ் முன்வைத்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து பூரண விடுதலையை இறுதி வரை கோரி நின்ற அனைத்து இயக்கங்களையும் உள்ளடக்கிய ஓர் இயக்கமாக இலங்கை தேசிய காங்கிரஸ் அமைந்திருந்தது.

இலங்கை தேசிய காங்கிரசின் செயற்பாடுகளுக்கு பெரும்பான்மை சமூகத்தைப் போன்று சிறுபான்மை சமூகங்களினதும் பங்களிப்பு கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். தேசிய காங்கிரசின் முதலாவது தலைவர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் அருணாச்சலம் ஆவார். அதுபோலவே முஸ்லிம் தலைவர்கள் பலரும் இலங்கை தேசிய காங்கிரசின் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல பாடுபட்டுள்ளனர். முஸ்லிம்கள் தேசிய காங்கிரசின் வேலைத் திட்டங்களை முழுமையாக ஆதரித்தனர். முஸ்லிம் சமூகத்தின் அப்போதைய பிரபல்யமான தலைவர்களான டீ. பி. ஜாயா, எஸ், எல். நைனா மரிக்கார், எம். காசிம் இஸ்மாயில் டீ. பி. சாபார், எம். கே. சல்டீன் போன்றவர்கள் தேசிய காங்கிரசின் உறுப்பினர்களாக இருந்தனர்.

இலங்கை முஸ்லிம்களின் அப்போதைய அரசியல், பொருளாதார, கலாசார விடயங்களில் தனது முழுமையான பங்களிப்பைச் செய்து வந்த சங்கமாக இலங்கை முஸ்லிம் சங்கம் காணப்பட்டது. இச்சங்கம் இலங்கை தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட போது அதனுடன் இணைந்து கொண்டது. அக்காலப்பகுதியில் இலங்கையில் காணப்பட்ட எல்லா இயக்கங்களிலும் கல்வி கற்ற, சொத்துடைய, உயர் அந்தஸ்துடைய குடும்பங்களின் அங்கத்தவர்களே உறுப்பினர்களாக இருந்தனர். முஸ்லிம் சங்கமும் அதற்கு விதிவிலக்கல்ல.

1919 – 1930 காலப்பகுதியில் குறிப்பிட்ட சில முஸ்லிம்களே தேசிய காங்கிரஸின் பிரதான பதவிகளில் இருந்தனர். இவர்களுள் டீ. பி. ஜாயா குறிப்பிடத்தக்கவர். 1925ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி டீ. பி. ஜாயா இலங்கை தேசிய காங்கிரசின் உப தலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். அதே போல் மற்றுமொரு முஸ்லிம் தலைவரான ரியால் முகம்மத் தேசிய காங்கிரசின் செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் அளவுக்கு காங்கிரசில் செல்வாக்குப் பெற்றிருந்தார். மேலும் காசிம் இஸ்மாயில், நைனா மரிக்கார் போன்றவர்களும் தேசிய காங்கிரசின் பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான செயற்பாடுகளில் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர். இலங்கை தேசிய காங்கிரஸ் காலத்துக்குக் காலம் பிரித்தானிய அரசு வழங்கிய அரசியல் யாப்பு சீர் திருத்தங்களில் திருப்தி கொள்ளாது கிளர்ச்சி செய்த போதெல்லாம் முஸ்லிம் தலைவர்கள் அவர்களோடு இணைந்து செயற்பட்டனர்.

டீ. பி ஜாயா இலங்கை தேசிய காங்கிரசில் பிரபலமான தலைவராக இருந்தார். காங்கிரசின் தீர்மானங்களை சட்ட சபையில் பேசக் கூடியவராக அவர் இருந்தார். 1926ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி தேசிய காங்கிரசின் தலைமைப் பதவிக்காக ஜாயாவின் பெயர் முன்மொழியப்படும் அளவுக்கு ஜாயா காங்கிரசில் செல்வாக்குப் பெற்றிருந்தார். முஸ்லிம்களுக்கும், இலங்கை தேசிய காங்கிரசுக்கும் இறுதிவரை மிக நெருக்கமான உறவு இருந்து வந்தது. அக்காலத்தில் இருந்த முஸ்லிம்களின் பிரதான அரசியல் இயக்கங்களான முஸ்லிம் லீக் மற்றும் இலங்கை சோனகர் சங்கம் என்பன தேசிய காங்கிரசுடன் இணைந்து தமது பங்களிப்பை வழங்கி வந்தன.

1919 – 1930 காலப்பகுதியில் இலங்கை தேசிய காங்கிரசின் உறுப்பினர்களாக இருந்த முஸ்லிம்கள் காங்கிரசின் கோரிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர். இனவாரிப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் முஸ்லிம்கள் அதிகமாக சட்ட நிரூபண சபைக்கு தெரிவு செய்யப்பட்டனர். இக்காலத்தில் மாக்கான் மாக்கார், டீ. பி. ஜாயா, அப்துல் காதர் போன்றவர்கள் முஸ்லிம்கள் சார்பாக சட்ட நிரூபண சபையில் அங்கத்தவர்களாக இருந்தனர். டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வந்த போது இலங்கையின் பிரதான தலைவர்கள் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தனர். சிங்களத் தலைவர்கள் ஆணைக்குழுவிடம் இனவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கோரினர். ஆனால் முஸ்லிம் தலைவர்கள், இனவாரிப் பிரதிநிதித்துவத்தையே விரும்பினர்.

இவ்வகையில் சுதந்திரத்துக்கு அண்மித்த காலப் பகுதியில் அதாவது 1942இல் தேசியவாதம் தொடர்பில் முஸ்லிம்களின் மனோபாவம் மாறத் தொடங்கியது. இவ்வாண்டு ஏ.ஈ. குணசிங்கவின் பதவியிறக்கத்தின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்காக நடத்தப்பட்ட உப தேர்தலில் சிறு எண்ணிக்கை வித்தியாசத்தில் டாக்டர் எம்.சி.எம். கலீல் மத்திய கொழும்பு ஆசனத்திற்கு தெரிவானமை அரச சபையில் முஸ்லிம்களின் பலத்தை அதிகரித்தது. அதுவரை நிறைவேற்று அங்கத்தவராக இருந்த சேர். ராஸிக் பரீத் கல்வி தொடர்பான செயற்குழுவிற்கு 1942இல் மாறினார். அத்துடன் ஏற்கனவே அந்த செயற்குழுவில் இருந்த ஜாயாவுடன் முஸ்லிம்களின் எண்ணிக்கை இரண்டாகியது. முஸ்லிம்கள் தேசிய காங்கிரசுடன் இணைந்திருந்தாலும் அவர்களை பாதித்த சில தீர்மானங்களை எதிர்த்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.



**அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. பேரவையின் 76 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு தெமட்டகொடை வீதியில் அமைந்துள்ள தலைமையகத்தில் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் நடைபெறும். இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 175 கிளைகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.**

காலனித்துவத்திலிருந்து இந்நாடு விடுதலை பெறுவதற்காக முஸ்லிம் தலைவர்கள் அயராது உழைத்துள்ளனர். உதாரணமாக 1944ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சோல்பரி ஆணைக்குழுவின் வெள்ளை அறிக்கை தொடர்பான விவாதத்தின் போது “இந்நாட்டின் சுதந்திரம் தொடர்பாக முஸ்லிம்கள் இன வேறுபாடுகள் இன்றி மிகவும் கரிசனையுடன் இருந்திருக்கின்றார்கள். அதுதான் முஸ்லிம்களின் கடமையாகவும் உள்ளது. நாட்டு நலனே முன்னிலை பெற வேண்டும்” என்று ஜாயா குறிப்பிட்டார். சோல்பரி ஆணைக்குழுவின் அரசியல் திட்டத்தை ஆதரித்தும், எதிர்த்தும் மக்கள் தமது அபிப்பிராயங்களை முன்வைத்த போது முஸ்லிம்களும் அதிகமாக அது தொடர்பான கூட்டங்களில் கலந்து கொண்டு தங்களுடைய அபிப்பிராயங்களை முன்வைத்தனர். 1946ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் சோல்பரி அரசியல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு டி. எஸ். சேனாநாயக்க தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியாக மாற்றமடைந்தது. முஸ்லிம்களும் இக்கட்சியில் இணைந்து இந்நாட்டின் விடுதலைக்காக உழைத்தனர். இது தொடர்பாக டி.பி. ஜாயா உரையாற்றும் போது,“முஸ்லிம்கள் இலங்கையின் அரசியல் சுதந்திரத்தை மட்டுமே கருதிச் செயற்பட்டனர். இதனால் இந்நாட்டில் ஏற்படவுள்ள சாதகமான விளைவுகளுக்காக அவர்கள் தம்மை தியாகம் செய்கின்றனர். இதுவே அவர்களது பணியாகும். இந்நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடும் எந்த இயக்கத்துடனும் அவர்கள் சேர்ந்து செயற்படுவது அவர்களது பொறுப்பாகும். இந்நாட்டின் பெரும்பான்மைத் தலைவர்கள் அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் சமயத்தில் சுதந்திரத்தின் அர்த்தத்தில் நாங்களும் கவனம் செலுத்துகிறோம்” என்றார். இவ்வாறு முஸ்லிம்கள் இலங்கையின் சுதந்திரத்துக்காக போராடிய தேசிய காங்கிரசுக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கினர். 1947 இல் இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றிபெற்றது. இதில் முஸ்லிம் தலைவர்களும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

1945ஆம் ஆண்டு நவம்பர் ஒன்பதாம் திகதி ‘ஸ்ரீ லங்கா மசோதா’ சபையில் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட சமயம், ஒரேயொரு காரணத்துக்காகத்தான் இம்மசோதாவை ஆதரிப்பதென சபையிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் முடிவெடுத்தனர். இம்மசோதாவுக்கு சபையில் 26 பேர் சார்பாகவும் 3 பேர் எதிர்த்தும் இன்னும் 6 பேர் வாக்களிக்க மறுத்ததோடு மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்து முஸ்லிம் அங்கத்தவரும் அதனை ஆதரித்தனர். வரலாற்று முக்கியத்துவமிக்க சோல்பரி ஆணைக்குழுவினரின் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பின் டி.பி. ஜாயா, சேர் ராஸிக் பரீத் இருவருமே சார்பாக பேசினர். டி.பி. ஜாயா தனதுரையில் ‘ஆரம்பத்தில் நாம் வெற்றி பெற்று விட்டோம் என்று குதூகலிக்கவோ, ஆர்ப்பரிக்கவோ, ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டவோ உரிய நேரமல்ல. சிறுபான்மை இன மக்களுக்கு ஏற்பட்ட அநீதியையோ அல்லது பெரும்பான்மையின சமூகத்தின் வெற்றியைப் பற்றியோ நான் கூறவில்லை”. அவர் தனக்கு கிடைத்த முஸ்லிம் லீக்கின் ஆதரவு பற்றி குறிப்பிட்டு சோல்பரி ஆணைக்குழுவின் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்தும் பேசினார். இலங்கைக்கு முழுமையான டொமீனியன் அந்தஸ்து கிடைப்பதற்கான போராட்டத்தில் இணைந்து கொள்வது பற்றியும் குறிப்பிட்டார்.

மேலும், அவர் பேசுகையில் ‘என்னைப் பொறுத்த வரை நான் முஸ்லிம் இன அங்கத்தவர்களின் முழுமையான ஆதரவுடனேயே பேசுகிறேன். இந்த முக்கியமான விவாதத்தைப் பற்றி இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் வாழும் முஸ்லிம்களினதும் கருத்துக்களை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை முஸ்லிம் லீக் பெற்றுக்கொள்ளச் செய்திருக்கிறேன். அதனால் இந்த சபையில் உள்ள முஸ்லிம் அங்கத்தவர்களுக்கு இந்நாட்டின் முஸ்லிம் மக்கள் அனைவரினதும் ஆதரவு இருப்பதை தெரிவிக்கக் கூடிய நிலையில் நான் இருக்கிறேன்”

‘ஸ்ரீ லங்கா மசோதா’ அறிமுகப்படுத்தப்பட்ட போது இந்த சபையின் முஸ்லிம் அங்கத்தவர்கள் ஒரே முடிவை எடுக்கத் தீர்மானித்தது ஒரேயொரு காரணத்துக்காக மட்டுமே, அதாவது இந்த நாட்டின் அரசியல் சுதந்திரத்தை கருத்திற் கொண்டேயாகும். இந்த சுதந்திரத்தை அடைவதற்காக எமது சமூகத்துக்கு கிடைக்க இருக்கும் அனுகூலங்களையும், நன்மைகளையும் நாம் தியாகம் செய்யத் தயாராய் இருக்கின்றோம் என்பதாகும்.

காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்க இலங்கை சுதந்திரம் அடைவதற்கு டி.பி. ஜாயா ஆற்றிய பங்களிப்பை பின்வருமாறு சட்டசபையில் பாராட்டினார்.

“இந்நாட்டு மக்களில் பலதரப்பட்டோரிடையே தாராள நோக்கின் மூலம் ஒற்றுமையைக் கொண்டுவர அங்கத்தவர் எவராலாவது முடிந்ததென்றால், அதுவும் தன் இனத்தவர் இழப்பிற்கு ஆளாகுவர் எனும் நிலையிலும் அவ்வாறு செய்வதென்றால், அதற்கான புகழ் எம் எல்லோரையும் விட எம்மிடையே உள்ள ஜாயாவையே சென்றடைய வேண்டும். அவர் இன்று சட்டசபையில் ஆற்றிய உரை இந்நாட்டு மக்களிடையே ஒற்றுமையையும், சுதந்திரப் போராட்டத்துக்கு வலுவான தன்மையையும் கொண்டு வருவதில் பாரிய அனுகூலத்தை ஏற்படுத்தும்.” எனப் புகழ்ந்து கூறினார்.



டி.பி. ஜாயாவுக்கு பிறகு பேசிய சேர் ராஸிக் பரீத் தேசிய விடுதலைக்கான தனது ஆதரவை மிகவும் அழுத்தம் திருத்தமாகக் கூறினார். அவர் தனது உரையில் “இந்த நாட்டில் வாழும் ஐந்து லட்சம் சோனகர்கள் , ஐம்பது கிளைகளாகக் கொண்ட அகில இலங்கை சோனக சங்கத்தால் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அவர்கள் அனைவரும் இன்று இந்த சபைத் தலைவரால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு தங்கள் ஆதரவைத் தெரிவிக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

அதனையும் சபைத் தலைவரின் பிரேரணைக்கான எனது முழு மனதுடனான ஆதரவையும் தெரிவிப்பதைத் தவிர வேறு எதுவும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தர முடியாது. நானும் எனது சமூகமும் எப்போதும் அவருக்கு உறுதுணையாக இருந்து வருகிறோம். வெற்றி பெறும் இத்தருணத்தில் அவரோடு கை கோர்த்துக் கொண்டு டொமீனியன் அந்தஸ்தை நோக்கி நாம் முன்னேறத் தயார் என்பதைக் கூற விரும்புகிறேன்.” மேலும், அவர் பேசுகையில் முஸ்லிம்களின் வரலாற்றைக் கூறிவிட்டு பின்வருமாறு கூறினார்.

‘சிங்கள சகோதர சகோதரிகளைப் போல, இலங்கை சோனகரும் இலங்கை தாய்த்திரு நாட்டின் தவப்புதல்வர்கள் ஆவர். இத் திருநாட்டில், கடந்த பல நூற்றாண்டுகளாக சிங்கள மக்களும், சோனகரும் ஒற்றுமையுடனும், பரஸ்பர அன்புடனும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் பல தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். நான் அதைப் பற்றி இப்போது பேச விரும்பவில்லை. இன்றைய அறிவு யுகத்தில் எந்தப் பிரச்சினையையும் நல்லெண்ணத்துடனும், ஒற்றுமையுடனும் நாம் அணுகினால் அதைத் தீர்க்க முடியும்.

எனவே எம்முடைய சினேகக் கரங்களை எம்முடைய சிங்கள சகோதரர்களுக்கு நீட்டுகிறோம். அத்துடன் தமிழ் இனத்தவரும், நாம் இவ்விடயத்தில் சிங்கள இனத்தவருடன் இணைந்து உறுதியாக நின்றது சரியான செயலே என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. டொமீனியன் அந்தஸ்தை வேண்டி நிற்கும் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைக்கு நாம் பக்கபலமாக இருக்கிறோம். எனவே, சிங்கள, தமிழ், சோனகர் ஆகிய நாம் எல்லோரும் டொமீனியன் அந்தஸ்தை நோக்கி முன்னேறி ‘பிரித்தானிய கொமன் வெல்த்’ நாடுகளின் சங்கத்தில் ஓர் அங்கத்தவராக, எமது தாய்த்திரு நாடாம் இலங்கையைப் பெருமையுடன் வீற்றிருக்கச் செய்வோமாக” என்று கூறி சேர் ராஸிக் பரீத் தனது உரையை முடித்தார்.

இலங்கை தேசிய சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது சில முஸ்லிம் தலைவர்கள் அதில் இணைந்து கொள்வதை தவிர்த்தனர். ஆனால் பிற்காலத்தில் நாட்டின் நலன் கருதி இணைந்து கொண்டனர். 1945ஆம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவின் முன்மொழிவை அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டு ஆதரவாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். 1945 ஆம் ஆண்டு டீ. எஸ் சேனாநாயக்க ஐக்கிய தேசிய கட்சியை ஆரம்பித்த போது, தேசிய சங்கத்தில் இருந்து பல உறுப்பினர்கள் அக்கட்சியில் இணைந்து கொண்டனர். அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவரும், இலங்கை முஸ்லிம் சங்கத்தின் தலைவருமான டீ. பி. ஜாயாவும் இணைந்து கொண்டார். மேலும் இலங்கை சோனகர் சங்கத் தலைவரான ஏ. ஆர். ராசிக்கும் தேசிய தலைவர்களுடன் இணைந்து கொண்டனர்.

எனவே, சுதந்திரப் போராட்ட காலப் பகுதியில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தேசிய நீரோட்டததில் இணைந்து செயலாற்றினர் என்றே கூறலாம். 1919 முதல் 1947 வரையிலான காலப்பகுதியில் ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட முக்கியமான முஸ்லிம் தலைவர்கள், இலங்கை தேசிய சங்கத்தில் இணைந்து பணியாற்றினர். முஸ்லிம்கள் எப்போதும் சமாதானத்தை, அமைதியை விரும்பிய ஒரு சமூகமாகவே இருந்து வந்துள்ளனர்.










**இக்பால் அலி**





சுதந்திரக் காற்று 76 வருடங்கள்

# சுதந்திர இலங்கையின் பாராளுமன்ற வரலாறு

**நாட்டின் 76 ஆவது சுதந்திர தினம் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய அடிமைத்தனத்திலிருந்து நாட்டை மீட்டுக்கொண்ட பெருமையை இந்த தினத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பெருமையுடன் நினைவு கூருகின்றனர்.**

அந்த வகையில் எமது நாட்டுக்கு நீண்டதொரு வரலாறு காணப்படுகிறது. நாட்டின் ஒவ்வொரு துறைக்கும் சிறப்பான வரலாறு உண்டு.

இலங்கை ஒரு விவசாய நாடு என்ற வகையில் எமக்கான விவசாயத்துறை வரலாறு மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. நாட்டை ஆண்ட மன்னர்களாகட்டும் அதன் பின்னரான ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கங்களாகட்டும் விவசாயத்துறைக்கும் நீர்ப்பாசனத் துறைக்கும் கைத்தொழில் துறைக்கும் எல்லாக் காலங்களிலும் மிகுந்த முக்கியத்துவம் வழங்கி வந்துள்ளது. உலகில் எந்த நாட்டிலும் தங்கியிருக்காமல் துறைமுகத்துக்கு கப்பல் வரும் வரை காத்திருக்காமல் எமக்கான உணவுத் தேவைகளை நாமே நிவர்த்தி செய்த பெருமை மிக்க நாடு இது. எனினும் இடைப்பட்ட காலங்களில் பல்வேறு விதத்திலும் நாடு எதிர்கொள்ள நேர்ந்த பாதிப்புகள் காரணமாக அந்த நிலை தற்போது மாற்றமடைந்துள்ளது.

அந்த வகையில் விவசாயத்துறை மற்றும் கைத்தொழில் துறை உட்பட அனைத்து துறைகளையும் மீளக் கட்டி யெழுப்புவதற்கான தூரதரிசன நோக்குடன் தற்போதைய அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் மிக காத்திரமானதாக முன்னெடுக்கப்பட்டும் வரும் இத்தகைய சூழ்நிலையிலேயே நாம் நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தை பெருமையுடன் கொண்டாடுகின்றோம். கடந்த சில ஆண்டுகளாக நாடு முகம் கொடுத்த நெருக்கடி நிலைக்குப் பின்னர் இயல்பு நிலை திரும்பும் இந்த சந்தர்ப்பத்தில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்படுவது வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது.

நாட்டு மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் வாழும் காலகட்டம் இது. அந்த வகையில் இம்முறை சுதந்திர தினம் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான அடித்தளமாக அமையும் என்பது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

நாட்டின் அனைத்து துறைகளுக்கும் நீண்ட சிறப்பான வரலாறு காணப்படுவது போன்றே இலங்கையின் பாராளுமன்றத்துக்கும் சிறப்பான வரலாறு உண்டு.

உலகின் பாராளுமன்ற சம்பிரதாயங்களைப் பின்பற்றி எமது பாராளுமன்றமும் உலகளவில் தனித்துவமான பெருமையை பறைசாற்றி வருகிறது.

அந்த வகையில் நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தில் எமது பாராளுமன்றத்தின் வரலாற்றையும் காலம் காலமாக ஏற்பட்டு வந்த மாற்றங்களையும் நாம் மீட்டிப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

## பாராளுமன்ற கூட்டத்தொடர்

தற்போதைய பாராளுமன்ற கூட்டத்தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 7ஆம் திகதி புதிய கூட்டத்தொடர் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இம்மாதம் 26ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரசியலமைப்பின் 70 (1) உறுப்புரையின்படி அவருக்குள்ள தத்துவங்களுக்கு அமைய பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

அந்த வகையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் பெப்ரவரி 07 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற வரலாற்றில் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடப்பு பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத்தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டமையைக் குறிப்பிட முடியும். இவ்வாறு பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரொன்றை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பில் வரலாற்று ரீதியான மற்றும் செயற்பாட்டு ரீதியான பின்னணிகள் காணப்படுகின்றன.

## கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவ–ரும் அதிகாரம்

அரசியலமைப்பின் 70(1) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தை கூடுமாறு அழைத்தல், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் கலைப்பதற்கான பூரண அதிகாரம் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது.

## புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் தினம்

அரசியலமைப்பின் 70(3) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத்திலேயே புதிய கூட்டத்தொடருக்கான திகதி நிர்ணயிக்கப் படுகிறது.

அந்த திகதி கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு தினமாக இருக்க வேண்டும். எனினும், பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்து மீண்டும் ஆரம்பிக்கும் திகதியை பிரகடனப்படுத்தியிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தை கூட்டுமாறு அழைப்பதற்கு அரசிலமைப்பின் 70(3)(i) உறுப்புரைக்கு அமைய ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அதன்படி, மீண்டும் பிரகடனம் ஒன்றின் மூலம் அவ்வாறு பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு எதிர்பார்க்கும் தினத்தைப் பிரகடனப்படுத்துவதுடன் குறித்த பிரகடனத்தின் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குப் பிந்திய ஒரு தினத்தில் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது, அதன் அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்படுவதாக பலர் கருதுகின்றனர்.

எனினும் அது அவ்வாறில்லை. கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது சபாநாயகர் தொடர்ந்தும் தனது பணிகளை மேற்கொள்வார். அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்வுகளில் கலந்துகொள்ள வில்லை என்றாலும் அவர்களது உறுப்பினர் பதவிகள் அவ்வாறே இருக்கும். எனினும், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது அதுவரை பாராளுமன்றத்தில் காணப்பட்ட அனைத்து அலுவல்களும் இடைநிறுத்தப்படுவதுடன் குற்றப்பிரேரணை (Impeachment) தவிர்ந்த அதுவரை சபையில் இடம்பெற்று வந்த அனைத்து செயற்பாடுகளும் தற்காலிகமாக நிறுத்தப்படும்.

எனினும், குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக சட்ட மூலமொன்றையோ, பிரேரணையொன்றையோ அல்லது கேள்வியொன்றையோ ஒரே கூட்டத்தொடரில் இரண்டாவது முறையாக முன்வைக்க முடியாது. ஆனால், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் எதிர்வரும் கூட்டத்தொடருக்கு கொண்டுசெல்ல வாய்ப்பு உள்ளது. பாராளுமன்றத்தின் முன்னர் உரிய முறையில் கொண்டு வரப்பட்டுள்ளவையும் பாராளுமன்றத்தின் அமர்வு நிறுத்தப்பட்ட நேரத்தில் முடிவுசெய்யப்படாதிருந்தவையுமான எல்லா செயற்பாடுகளும் அடுத்த அமர்வின்போது, எங்கு நிறுத்தப்பட்டதோ அந்த நிலையிலிருந்து தொடர்ந்து கையாளப்படலாம் என அரசியலமைப்பின் 70(4) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் இந்த ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் இரத்துச் செய்யப்படுவதில்லை.

இதன்போது, பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே எதிர்வரும் அலுவல்களை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய அரசாங்கத்தின் அலுவல்களை சபை முதல்வர் தீர்மானிப்பதுடன், தனியார் உறுப்பினர் சட்டமூலம் அல்லது பிரேரணை என்பவற்றை மீண்டும் புதிதாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படும் போது ஒழுங்குப் பத்திரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சபை அலுவல்களை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமானால் அவற்றை மீண்டும் பட்டியலிடுவது அவசியமாகும். பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது பாராளுமன்ற குழுக்களுக்கு என்ன நடக்கின்றது என்பது கேள்வியாகும். இதில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 109, 111(2), 127(5), 128(1) என்பவற்றுக்கு அமைய முறையே பாராளுமன்ற விசேட குழுக்கள், துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் இணைப்புக் குழு தவிர்ந்த ஏனைய அனைத்துக் குழுக்களும் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கும் போது மீண்டும் நியமிக்கப்படுகின்றன.

இங்கு நிலையியற் கட்டளை 128(2) க்கு அமைய இணைப்புக் குழுவுக்கு உறுப்பினர்கள் பதவியடிப்படையில் (சபாநாயகர், பிரதி சபாநாயகர் போன்ற பதவிகளின் அடிப்படையில்) நியமிக்கப்படுவதனால் அதில் மாற்றம் ஏற்படுவதில்லை.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 114 க்கு அமைய ஒவ்வோர் புதிய கூட்டத்தொடரின் போதும் தெரிவுக்குழு புதிதாக நியமிக்கப்படுகின்றது.

இதில் சிறப்பு நோக்கங்களுக்கான பின்வரும் அனைத்துக் குழுக்களும் பாராளுமன்ற கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது இரத்தாகின்றன.

- அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்
- சட்டவாக்க நிலையியற் குழு
- பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு
- நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு
- சபைக் குழு
- ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு
- அரசாங்க கணக்குகள் பற்றிய குழு
- அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு
- அரசாங்க நிதி பற்றிய குழு
- வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு
- பொருளதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு
- வழிவகைகள் பற்றிய குழு
- பொது மனுக்கள் பற்றிய குழு
- பின்வரிசை குழு

## பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர்

பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படும் போது வைபவ ரீதியாக அது ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அது ஜனாதிபதியின் தலைமையிலேயே இடம்பெறும்.

பாராளுமன்றத்தின் ஒவ்வோர் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றது. அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் எதிர்வரும் பெப்ரவரி 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். பாராளுமன்றத்தின் ஒவ்வோர் கூட்டத்தொடரினதும் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் காணப்படுகின்றது.



இதன்போது ஜனாதிபதியினால் அவரது அரசாங்கத்தின் எதிர்கால நோக்கு தொடர்பிலான விளக்கமான பகுப்பாய்வு கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் முன்வைக்கப்படும்.

கடந்த காலத்தில் இது மகா தேசாதிபதியால் வழங்கப்படும் அக்கிராசன உரை என்று அறியப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் ஒவ்வோர் பாராளுமன்றத்திலும் ஆரம்பிக்கப்பட்ட புதிய கூட்டத்தொடர்களின் எண்ணிக்கை 1947 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை சுமார் 50 தடவைகள் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக பாராளுமன்ற பதிவுகள் குறிப்பிடுகின்றன.

## 1978 ஆம் ஆண்டு முதல் இதுவரை 25க்கும் மேற்பட்ட பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன. அவை வருமாறு;

- 1978.09.07 ஆம் திகதி ஆரம்பமான முதலாவது பாராளுமன்றம் 1988.12.20 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் எட்டு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.
- 1989.03.09 ஆம் திகதி ஆரம்பமான இரண்டாவது பாராளுமன்றம் 1994.06.24 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் ஐந்து கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.
- 1994.08.25ஆம் திகதி ஆரம்பமான மூன்றாவது பாராளுமன்றம் 2000.08.18 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரை மூன்று கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.
- 2000.10.18ஆம் திகதி ஆரம்பமான நான்காவது பாராளுமன்றம் 2001.10.10 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் மூன்று கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.
- 2001.12.19ஆம் திகதி ஆரம்பமான ஐந்தாவது பாராளுமன்றம் 2004.02.07 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரை இரண்டு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.
- 2004.04.22 ஆம் திகதி ஆரம்பமான ஆறாவது பாராளுமன்றம் 2010.02.09 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரை நான்கு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

[2010 மார்ச் 09 ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டது (அவசரகால நிலைமை பிரகடனம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதற்கு)]

- 2010.04.22 ஆம் திகதி ஆரம்பமான ஏழாவது பாராளுமன்றம் 2015.06.26 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரை ஒரு கூட்டத்தொடரை மாத்திரம் கொண்டிருந்தது.
- 2015.09.01 ஆம் திகதி ஆரம்பமான எட்டாவது பாராளுமன்றம் 2020.03.02 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரை நான்கு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.
- 2020.08.20 ஆம் திகதி ஆரம்பமான ஒன்பதாவது பாராளுமன்றம் 2024.01.26 ஆம் திகதி வரை நான்கு கூட்டத்தொடர்களை கொண்டிருந்தது.

## பாராளுமன்ற முறைமையின் வளர்ச்சி

காலனித்துவக் காலத்துக்கு முன்னர் இலங்கை ஒரு முடியாட்சி நாடாகவே திகழ்ந்தது. அதன் பின்னர் போர்த்துக்கேய, ஒல்லாந்த மற்றும் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் கீழ், நிர்வாக மற்றும் அரசாங்க மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

முதலில் கரையோர ஒல்லாந்தர் ஆட்புலங்களும் அதனைத் தொடர்ந்து கண்டி இராச்சியமும் 1815ஆம் ஆண்டில் பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஹோல்புறூக் கெமரன் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கிணங்க நிறைவேற்றுப் பேரவையும் சட்டவாக்கப் பேரவையும் காலனித்துவ இலங்கையின் முதலாவது சட்டவாக்க சபைகள் 1833ஆம் ஆண்டு ஆளுநர் சேர் றொபட் ஹோட்டன் என்பவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. நிறைவேற்றுப் பேரவை, சட்டவாக்கப் பேரவை என்பன காலிமுகத்திடலிலுள்ள பழைய பாராளுமன்றக் கட்டடத்துக்கு மாற்றப்படும் வரை கோடன் பூங்காவுக்கு எதிரேயுள்ள, தற்போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயற்படும் கட்டிடத்திலே கூட்டப்பட்டன. அப்போதைய மகா தேசாதிபதி சேர் ஹேபட் ஸ்ரான்லி என்பவரால் 1930 ஜனவரி 29 ஆம் திகதி காலிமுகத்திடலில் அமைந்துள்ள பழைய பாராளுமன்றக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

சட்டமன்றம் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டேயிலுள்ள புதிய பாராளுமன்றக் கட்டிடத்தொகுதிக்கு மாற்றப்படும்வரை இக்கட்டிடத்திலேயே நடைபெற்றது. 1944ஆம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவினரால் வெஸ்ற்மினிஸ்டர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பாராளுமன்றம், மகாராணியையும் (மகா தேசாதிபதியினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டார்) செனற், பிரதிநிதிகள் சபை ஆகிய இரண்டு சபைகளையும் கொண்டிருந்தது. பிரதிநிதிகள் சபையில் 101 உறுப்பினர்கள் இருந்தனர். செனற் சபையில் 30 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் 15 பேர் பிரதிநிதிகள் சபையினரால் தெரிவுசெய்யப்பட, மற்றும் 15 பேர் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

1971 ஒக்டோபர் 2ஆம் திகதி செனற்சபை இல்லாமலாக்கப்பட்டது. அரசியலமைப்புச் சீர்திருத்தம் காரணமாக சட்டமன்றத்தின் பெயர் பலமுறை பின்வருமாறு மாற்றப்பட்டது.

- சட்டவாக்கப் பேரவை 1833/1931 (49 உறுப்பினர்கள்)
- ராஜ்ய சபை 1931/1947 (61 உறுப்பினர்கள்)
- பிரதிநிதிகள் சபை 1947/1972 (101 உறுப்பினர்களும் 1960 இன் பின்னர் 157 உறுப்பினர்களும்)
- தேசிய அரசுப் பேரவை 1972/1978 (168 உறுப்பினர்கள்)
- பாராளுமன்றம் 1978 முதல் இற்றை வரை (225 உறுப்பினர்கள்)

மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் பிரதம அமைச்சரான நிஸ்ஸங்க அழகேஸ்வராவின் அரண்மனை அமைந்திருந்த ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் புதிய பாராளுமன்றத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டது.

ஜிஃப்ரி பாவா கட்டடக் கலைஞராக செயற்பட்டதுடன் புதிய கட்டிடத்தொகுதியின் நிர்மாணத்துக்காக ஜப்பானிய மிற்சுயி கம்பனிகள் இரண்டின் கூட்டமைப்புடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இலங்கைப் பாராளுமன்றம் 225 அங்கத்தவர்களைக் கொண்ட ஓரவையுடைய சட்டமன்றமாகும். அது 6 ஆண்டுகால தவணையைக் கொண்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்தை ஒத்த முறையை கொண்டுள்ளது. சபாநாயகர் சமூகமளிக்காத போது பிரதி சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தலைவர் சபைக்கு தலைமை தாங்குவார்.

நாட்டின் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அல்லது கலைப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

மொத்தம் 225 அங்கத்தவர்களில் 196 அங்கத்தவர்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து பொது வாக்கெடுப்பின் மூலமும் மேலும் 29 அங்கத்தவர்கள் தேசிய அளவில் கட்சிகள் பெறும் வாக்கு எண்ணிக்கைக்கேற்ப கட்சிகளின் தேசியப் பட்டியலிலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

கோல்புறூக் கெமரன் ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி பிரித்தானிய இலங்கையின் முதலாவது சட்டமன்றம் இலங்கையின் நிறைவேற்றுப் பேரவை, மற்றும் இலங்கை சட்டவாக்கப் பேரவை ஆகியன 1833, மார்ச் 13 ஆம் திகதி நிறுவப்பட்டன.

1948 பெப்ரவரி 4 இல் இலங்கை சுதந்திரமடைய முன்னர், 1947 ஆம் ஆண்டில் சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி, அரசாங்க சபை கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஈரவை நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.

வெஸ்ட் மின்ஸ்டர் மக்களாட்சி முறைமையை ஒத்த செனட் சபை என்ற மேலவையும், பிரதிநிதிகள் சபை என்ற கீழவையும் அமைக்கப்பட்டன. கீழவைக்கான உறுப்பினர்கள் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிரதிநிதிகள் சபையில் 101 உறுப்பினர்கள் (1960 இல் 157 ஆக அதிகரிக்கப்பட்டது) தேர்ந்தெடுக்கப்பட்டனர். செனட் சபைக்கான 30 உறுப்பினர்களில் 15 பேரை பிரதிநிதிகள் சபை தேர்ந்தெடுத்தது. ஏனைய 15 பேரையும் மகாதேசாதிபதி நியமித்தார்.

1971 அக்டோபர் 2 இல் செனட் சபை கலைக்கப்பட்டது. 1972 மார்ச் 22 இல் இலங்கை குடியரசானது. பிரதிநிதிகள் சபைக்குப் பதிலாக தேசிய அரச பேரவை உருவாக்கப்பட்டது.

இதற்கு 168 பேர் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1977 ஆம் ஆண்டில் புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக தேசிய அரச பேரவை கலைக்கப்பட்டு இலங்கை பாராளுமன்றம் அமைக்கப்பட்டது.

பிரித்தானிய குடியேற்ற அரசாங்கத்தின் கீழ், இலங்கையின் நிறைவேற்றுப் பேரவை, இலங்கை சட்டவாக்கப் பேரவை ஆகியன 1833 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட போது, இந்த அவைகள் கொழும்பில் உள்ள கோர்டன் கார்டன்சிற்கு எதிரில் உள்ள கட்டடம் ஒன்றில் கூடின. இக்கட்டடம் தற்போது "குடியரசுக் கட்டடம்" என அழைக்கப்படுகிறது. இங்கு இப்போது இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சு அமைந்துள்ளது.

1930, சனவரி 29 இல் இலங்கைக்கான பிரித்தானிய ஆளுநர் சர் ஹெர்பர்ட் ஸ்டான்லி (1927–1931) காலிமுகத் திடலுக்கு எதிரே பாராளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இங்கு இலங்கை அரசாங்க சபை (1931/1947), பிரதிநிதிகள் சபை (1947–1972), தேசிய அரசு பேரவை (1972–1977), இலங்கை நாடாளுமன்றம் (1977–1981) ஆகியவற்றின் அமர்வுகள் இடம்பெற்றன.

இன்று இக்கட்டடம் ஜனாதிபதியின் செயலகமாக இயங்குகிறது.

1979 ஜுலை 4 இல் அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாச கொழும்பிலிருந்து கிழக்கே கோட்டே நகரில் தியவன்னாவ பகுதியில் அமைந்துள்ள 12 ஏக்கர் தீவில் புதிய பாராளுமன்றக் கட்டடம் அமைக்க பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றார்.

இக்கட்டடம் ஜெஃப்ரி பாவா என்பவரால் வடிவமைக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டது. 1982 ஏப்ரல் 29 ஆம் திகதி இந்த புதிய பாராளுமன்ற கட்டடத்தை அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன திறந்து வைத்தார்.

லோரன்ஸ் செல்வநாயகம்

# வெளியுறவுக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேச நலன்கள்




இலங்கை அரசின் 76 வருட கால இருப்பானது அதன் வெளியுறவுக்கொள்கையின் தனித்துவத்தினாலேயே கட்டமைக்கப்பட்டதாகும். சர்வதேச அரசியலில் வெளியுறவுக் கொள்கையின் உருவாக்கம் குறித்த அரசின் தேசிய நலன் சார்ந்து சுயசார்பாகவே கட்டமைக்கப்படுகின்றது. அதன்வழியே அவ்அரசின் சர்வதேச உறவுகளும் வடிவமைக்கப்படுகின்றது. எனினும் இலங்கை போன்ற புவிசார் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சிறிய அரசுகளின் வெளியுறவுக்கொள்கை உருவாக்கத்தில் தேசிய நலனை தாண்டி ஆதிக்க அரசுகளின் நலனையும் பொருத்தியே வெளியுறவுக்கொள்கையை வடிவமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. சுதந்திர இலங்கையின் 76 வருடகால வெளியுறவுக் கொள்கையின் ஏற்ற இறக்கத்தின் பின்னால் குழப்பகரமான காரணியே செல்வாக்குச் செலுத்துகிறது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய நோக்கு பல பரிமாணம் மிக்க சக்திகளின் கொள்கையோடு தொடர்புபட்டது. உலக நாடுகளின் போட்டிக்குள் அகப்பட்டு தெளிவற்ற போக்கையும் முரண்பாட்டையும் இலங்கை தனது வெளிநாட்டுக் கொள்கையில் அவ்வப்போது பின்பற்ற வேண்டிய துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இலங்கைத் தீவின் ஆட்சியாளர்கள் உலகப் போக்கினையும், பிராந்திய அரசியலையும் (இந்தியாவை) உள்நாட்டு அரசியல் பரிணாமத்தையும் கருத்தில் கொண்டே வெளியுறவுக் கொள்கைகளை வகுக்கவேண்டியவர்களாகவே உள்ளனர். இக்கட்டுரை சுதந்திர இலங்கையின் வெளியுறவுக்கொள்கையின் போக்கினை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவின் ஆட்சியாளர்கள் உலகப் பரிமாணம், பிராந்தியப் பரிமாணம் மற்றும் உள்நாட்டுப் பரிமாணமென முப்பரிமாணத்தை கருத்தில்கொண்டு வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கவேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகின்றது. இதனால் இலங்கை ஆட்சியாளர்களின் ஆளுமையைப் பொறுத்து வெளியுறவுக் கொள்கை வேறுபடுவதோடு அவர்கள் கொடுக்கும் உள்நாட்டுத் தேவையின் முக்கியத்துவத்தைப் பொறுத்தும் இதர உள்நாட்டுப் பிரச்சினைகளின் சவால்களைப் பொறுத்தும் வெளியுறவுக் கொள்கை மாறுபடுகின்றது. உள்நாட்டு அரசியலில் மேலோங்கியிருக்கும் பிணக்குகளுக்குத் தீர்வுகாண முடியாத குழப்பம் ஏனைய அம்சங்களில் தெளிவான கொள்கையை பின்பற்றமுடியாமல் போகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

சுதந்திர இலங்கையின் வெளியுறவுக்கொள்கையின் முதல் பத்து வருட வெளியுறவுக்கொள்கையின் இயல்பு அதிக முரணான வாதங்களை உருவாக்கியுள்ளது. டி.எஸ். சேனநாயாக்காவின் அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கையில் முதல் முதலாக அவ்வகைக் கொள்கை வகுப்புக்கான திட்டமிடல் முன்மொழியப்பட்டது. ஆனால் அவ்வகை வெளியுறவுக்கொள்கை ஐக்கிய தேசியக் கட்சியினதும் டி.எஸ். சேனநாயக்கவினதும் வெளியுறவுக் கொள்கை என்பதினைவிட பிரித்தானியாவின் அப்போதைய இலங்கைக்கான ஆளுனராக திகழ்ந்த சோல்பரி பிரபுவினதும், சேர் ஐவன்ஜென்னிங்சினதுமானதென்றே கருத இடமுண்டு. இலங்கைப் பிரதமர் டி.எஸ்.சேனநாக்கா பிரித்தானியா மீது அதிக நம்பிக்கையும் நட்பும் கொண்டிருந்ததுடன் தனிப்பட்ட ரீதியிலும் அவ்வகை நெருக்கம் காணப்பட்டது. பிரித்தானியரைப் பொறுத்தவரை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவின் விமானத்தளங்கள், இராணுவத்தளங்கள், தமது கட்டுப்பாட்டில் இருப்பது சிறந்ததாக கருதினர். இதனை சாத்தியப்படுத்த பிரிட்டிஷாருக்கு டி.எஸ்.சேனநாயக்காவின் போக்கும் நன்மையளித்தது. இன்னொரு தளத்தில், இந்தியாவின் தலையீட்டின் சாத்தியக்கூறுக்கு எதிராக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் நாட்டின் வெளியுறவு விவகாரங்களை பிரிட்டனுக்கு மாற்றுவதற்கான முடிவை சட்டபூர்வமாக்கியதாக அமைகிறது. ஏனெனில் டி.எஸ்.சேனநாயக்கவின் கூற்றுக்களில் தனக்கென ஒரு நிலையான இராணுவம் இல்லை. வெளிநாட்டில் இருந்து ஆக்கிரமிப்பு மற்றும் தலையீடு பற்றிய அவரது அச்சம் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. டி.எஸ்.சேனநாயக்காவின் தொடர்ச்சியையே டட்லி சேனநாயக்க மற்றும் சேர் ஜோன் கொத்தலாவலவும் தொடர்ந்தனர். மேலும், இந்தோ, இலங்கை இராஜதந்திரம் பற்றிய தனது படைப்பில் ஷெல்டன் கொடிகார, உலகின் பிற நாடுகளுடனான இலங்கையின் உடனடி உறவுகளை பாதித்த மூன்று காரணிகளை அடையாளப்படுத்துகிறார். ஒன்று, 1947இன் பாதுகாப்பு ஒப்பந்தம். இரண்டு, ஐக்கிய நாடுகள் சபையில் நுழைவதற்கான இலங்கையின் முயற்சியை வீட்டோ செய்யும் சோவியத் ஒன்றியத்தின் முடிவு. மூன்று, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அரசியலுக்கு இடையிலான தொடர்பு. கொடிகார இடதுசாரிகளுக்கு அப்போதைய ஆட்சியின் விரோதப் போக்கை ஒரு முக்கிய காரணியாகக் குறிப்பிடுகிறார்.



வெளியுறவுக் கொள்கையில் சடுதியான மாற்றத்தை 1956ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றம் உருவாக்கியது. சுதந்திர இலங்கையின் முதல் தசாப்தத்தில் பின்பற்றிய ஏகாதிபத்திய பொருளாதாரக் கொள்கையை நிராகரிக்கும் வகையில் தேசியமயமாக்கும் கொள்கையை எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்கா முன்வைத்தார். இதற்கு ஏற்ப இலங்கையின் வெளியுறவுக்கொள்கை மாற்றமடைந்தது. அதற்கு ஏற்ப பிரித்தானிய சார்பு வெளியுறவுக்கொள்கையில் முறிவு ஏற்பட்டு சீனா, சோவியத் யூனியன் போன்ற சோசலிச முகாமுடன் நட்புறவை வளர்க்க அதிகம் முயன்றார். மேலும், தென்கிழக்கு ஆசியாவில் சுவிட்சர்லாந்து போன்ற நாடு ஆக்கிரமித்துள்ள நிலைக்கு ஒப்பான ஒரு நிலையை இலங்கை ஆக்கிரமிக்க வேண்டும் என்று எண்ணிய பண்டாரநாயக்க 1952ஆம் ஆண்டிலேயே நடுநிலைக் கொள்கையை முன்வைத்தார். "இன்றைய உலக விவகாரங்களின் சூழலில் ஒரு சிறிய நாடு ஏதோ ஒரு குறிப்பிட்ட அதிகாரக் கூட்டத்திற்குள் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒரு தவறான கோட்பாடு" என்று பண்டாரநாயக்க 1952 ஜுன் மாதம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆற்றிய உரையில் கூறினார். ஆட்சிக்கு வந்த பின்னர் தனது வெளியுறவுக்கொள்கையில் அதனை உறுதிப்படுத்திக்கொண்டார். ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆற்றிய உரையில், பண்டாரநாயக்கா, "நாங்கள் இறுதிவரை, நேர்மறையான வடிவத்தில் சமாதானம், அனைத்து தேசங்களுக்கிடையில் நட்புறவு, அனைத்து மனிதகுலத்தின் அமைதி, செழிப்பு மற்றும் மகிழ்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளோம்" என்று கூறினார். வெளிப்படையாக நோக்கும்போது பண்டாரநாயக்கவின் வெளியுறவுக் கொள்கையினையே தகநாயக்கவும், சிறிமாவோ பண்டாரநாயக்கவும் பின்பற்றி வந்தனர். பண்டாரநாயக்க கண்ட குடியரசு கனவை சிறிமாவோ நிறைவேற்றியிருந்தார்.

இலங்கையின் வெளியுறவுக்கொள்கையின் மீண்டுமொரு பரிமாணத்தை 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் அவதானிக்கலாம். முதன் முதலாக அரசாங்க தலைவரிடமிருந்து வெளிவிவகாரத்தை தனியான அமைச்சரிடம் ஒப்படைத்தார். ஏ.சி.எஸ் ஹமீட்டை வெளிவிவகார அமைச்சராக நியமித்தார். முதலாளித்துவ சார்புடைய ஐ.தே.க. ஆட்சி டி.எஸ்.சேனநாயக்க மரபிலிருந்து இன்னும் அதிகமானது. உலக முதலாளித்துவ சார்புடமைக்குள் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் வெளிவிகாரம் அமைந்திருந்தது. இது டி.எஸ்.சேனநாயக்க மரபிலிருந்து அதிதீவிரமான செயலாக்கத்துக்கு வழிவகுத்தது. இலங்கை அமைவிடம் சார்ந்து வளர்ந்திருந்த மேற்கு முதலாளித்துவத்தின் ஊடுருவல் திறந்த பொருளாதாரக் கொள்கையால் அதிகரித்ததுடன்; அரசியல் இராணுவ விடயங்களில் நேரடித் தலையீடுகள் ஏற்பட ஆரம்பித்தன. இதனாலேயே பிராந்திய அரசியலுடனும் சர்வதேச அரசுகளுடனும் புதிய வெளிவிவகாரக் கொள்கையை பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அணிசேராமை கொள்கை பற்றி அதிக அக்கறையை வெளிப்படுத்தியிருக்கவில்லை. சான்பிரான்சிஸ்கோ சமாதான மாநாட்டில் பங்குபற்றியதன் மூலம் ஜெயவர்த்தன பதவியேற்றவுடன் ஜப்பானுடனான உறவுகள் புதிய முக்கியத்துவத்தைப் பெற்றன. இந்திரா காந்தி மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக்கு இடையே இருந்த நெருங்கிய உறவைப் போலவே, இந்தியாவின் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் உடன் ஜெயவர்த்தன நெருங்கிய புரிதலை வளர்த்துக் கொண்டார். எனினும், 1980இல் இந்திரா காந்தி பிரதமரானது இரு நாடுகளுக்கும் இடையிலான கடினமான உறவின் தொடக்கமாகும். இது இரு தலைவர்களும் பதவியில் இருந்த காலம் முழுவதும் அந்த உறவு அப்படியே இருந்தது. அவரது மகன் ராஜீவ் காந்தி பதவியேற்றபோதும் தொடர்ந்தது. 1987ஆம் ஆண்டு இந்திய, இலங்கை சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் ராஜீவ் காந்தியின் கரம் வலுத்தது. தொடர்ச்சியாக பிரேமதாச காலத்தில் அவர் ஜனாதிபதியாக இருந்த காலம் குறுகியதாக இருந்ததால், சர்வதேச உறவுகளில் கவனம் குறைவாகவே காணப்பட்டுள்ளது.

1990களிற்கு பிறகு ஏற்பட்ட புதிய உலக ஒழுங்கில் சிறிய அரசுகள் தமது வெளியுறவுக்கொள்கையை சீரமைப்பதில் பல இடர்களை எதிர்கொண்டன. அதனை சீர்செய்யும்வகையில் 1994இல் ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்காவினுடைய அரசாங்கம், பாரம்பரியமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகுத்த வெளியுறவுக் கொள்கையிலிருந்து சற்றுவிலகி சில தனித்துவங்களுடன் கொள்கையை அமைத்திருந்தது. காரணம் புதிய உலக ஒழுங்கில் இடதுசாரி ஆட்சி முறை சோவியத் யூனியன் வீழ்ச்சியுடன் முடிவுக்கு வந்ததென்றே கூறக்கூடிய நிலை ஏற்பட்டிருந்தது. முற்றாக முதலாளித்துவச் சக்திகளின் எழுச்சிகரமான மாறுதல்கள், ஒற்றைமைய அரசியல் உலகத்தினை தோற்றுவித்தது. உலகத்தின் போக்கிற்கேற்ப சந்திரிகா குமாரதுங்காவும் இலங்கையின் வெளிவிவகாரத்தை வடிவமைத்துக் கொண்டார். இதில் பிரேமதாச ஆட்சிக் காலத்தில் மேற்குலகுடன் நெருக்கமான உறவிருந்தாலும் குழப்பமும் நெருக்கடியும் அத்தோடு தெளிவாக சீரமைக்கப்படாத போக்கும் காணப்பட்டது. சந்திரிகா குமாரதுங்காவின் காலத்தில் மிகத் தெளிவான பொருளாதார வர்த்தகப் போட்டிக்குள் உலகப் பொருளாதார அரசியல் ஒழுங்கு அமைந்திருந்தது. சோசலிசம், முதலாளித்துவம் என்ற மறைபோட்டித்தன்மை தகர்ந்து போனதுடன் உலகம் ஒரே வகைக்குள் நேர்க்கணியப் போக்கை கடைப்பிடிக்க அரசுகளும் தலைமைகளும் தயாராயிருந்ததைக் காணலாம். திறந்த பொருளாதாரக் கொள்கைக்குள் மேற்குலக உறவாடலை அதிகம் அழுத்துவதாக அமைந்திருந்தது. அதுமட்டுமன்றி இந்தவகைப் பொருளாதார ஒழுங்குக்குள் சிறிய நாடுகளே அதிகம் பொருளாதார வர்த்தக வாய்ப்புக்களை நாடிச் செல்ல வேண்டிய கட்டாயமும் நிலவியது. இதனால் சந்திரிகா குமாரதுங்காவின் வெளியுறவுக் கொள்கையில் பொருளாதாரப் போட்டிக்கான அம்சம் மேற்குடன் இணங்கிப் போதல் தவிர்க்க முடியாததாகியது. இதனால் இலங்கையில் முதலாளித்துவப் பொருளாதார அடிப்படை வலுவடைய ஆரம்பித்தது. மேலும், சந்திரிக்கா சர்வதேச சிவில் அதிகாரியான லக்ஷ்மன் கதிர்காமரை வெளிவிவகார அமைச்சராக தெரிவு செய்தமை பலராலும் பாராட்டப்பட்டது. அவர்களின் ஒருங்கிணைந்த தனிப்பட்ட கவர்ச்சியுடன், அவரது அரசாங்கம் இந்தியாவுடன் நட்புறவுகளை மீண்டும் ஏற்படுத்தியது. அவர் நாட்டின் வெளியுறவுக் கொள்கைக்கு புதிய உத்வேகத்தை அளித்து பல முக்கிய உலகத் தலைநகரங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்தார். ஒரு உலகளாவிய வீரராக இருக்க விரும்பினார், ஆனால் அவர் நாட்டை எந்த அதிகார கும்பலுடனும் இணைக்க விரும்பவில்லை. கதிர்காமரின் உறுதியான வாதங்கள் சர்வதேச அரங்கில் இலங்கைக்காக ஒரு வாதத்தை முன்வைத்ததன் பலனை நாடு அறுவடை செய்தது.

மஹிந்த ராஜபக்ஷாவின் ஆட்சியில் போர்க்கால வெளியுறவுக் கொள்கையிலிருந்து மாறுபட்ட வடிவத்தை போருக்கு பின்னரான கொள்கை வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளை 2019களில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெளியுறவுக் கொள்கை கடந்த கால அனுபவங்களின் படிப்பினையிலிருந்து கட்டமைக்கப்பட்டிருந்தது. 2005இல் சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பிறகு பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ, ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்தும் நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் அணிசேரா அணுகுமுறையுடன் முன்னேறினார். 2009இல் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுடனான போரை முடிவுக்குக் கொண்டுவந்தபோது இந்தியாவின் ஆதரவை ராஜபக்ஷா நாடி வென்றது. ஆனால் 2010 –2015 வரை தனது இரண்டாவது பதவிக் காலத்தில் சீனாவுடன் அவர் இணக்கமாக இருப்பது இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் கோபத்தை ஏற்படுத்தியது. இதனை சீர்செய்யும் வகையில் 2019இல் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ இந்திய நலனில் அக்கறையுடையவராக தன்னை வெளிப்படுத்திய போதிலும், தொழிற்சங்கங்கள் மற்றும் தென்னிலங்கையின் எதிர்ப்பை காட்டி இந்திய உறவை கையாளவே முயன்றுள்ளார். ராஜபக்ஷக்களின் வெளியுறவுக்கொள்கை ஆசியவாதத்தை சீனாவை மையப்படுத்தி கட்டமைத்தது.

இலங்கையின் 2020/ 2021 அரசியல் பொருளாதார நெருக்கடியின் விளைவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தில் ஜனாதிபதி அதிகாரத்தை பெற்றுள்ள ரணில் விக்கிரமசிங்காவின் வெளியுறவுக்கொள்கை பெருமளவில் சர்வதேச பிராந்திய அரசுகளை கையாள்வதாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்திய பிராந்திய அரசின் பொருளாதார ஆதரவை பெற்றுக்கொள்ள இந்திய நலனில் அக்கறையான உரையாடல்களை முன்னிறுத்தும், அதேவேளை சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தை தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்திலேயே கையாள்கை வெளியுறவுக்கொள்கையையே வடிவமைத்து, இலங்கையின் அமைவிட முக்கியத்துவத்தால் அதனை சாத்தியப்படுத்தி நகர்வதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இத்தகைய போக்கினையே 2015ஆம் ஆண்டு தேசிய அரசாங்க உருவாக்கத்திலும் காணலாம். மைத்திரி –ரணில் அரசாங்கம், சீனா, இந்திய, மேற்குடன் சமமான கையாள்கையை மேற்கொண்டிருந்தது. தற்போதைய அரசாங்கம் ஜனநாயகத்தின் வெற்றிக் கதையாகப் போற்றப்பட்டு, மேற்குலகின் கதவுகள் திறக்கப்பட்டு, அதன் பொருளாதார நன்மைகளை நாடு அறுவடை செய்வதற்கான சாதகமான சூழல் கட்டமைக்கிறது.

எனவே, இலங்கையில் வெளிவிவகாரக் கொள்கை வகுக்கப்படுவது எந்த வகையிலும் நேர்கோட்டில் இல்லை என்பதையே அதன் தொடர்ச்சியான வடிவம் காட்டுகிறது. நாட்டின் சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாற்றின் பெரும்பகுதி இவ்வகையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தியா, சீனா மற்றும் சோவியத் ஒன்றியத்திற்கு ஆரம்பகால விரோதத்தில் இருந்து, பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்ளும் போது அரசாங்கம் இறுதியில் இந்த நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை நாடியது. குறிப்பாக, 1952 இல் சீனாவுடன் கையெழுத்திடப்பட்ட ரப்பர் – அரிசி ஒப்பந்தம் முதல் சமகால இந்திய – இலங்கை உறவின் நிலைமைகள் தீவின் வெளியுறவுக் கொள்கையை பொருளாதாரத் தேவைகள் எவ்வாறு ஆணையிட முடியும் என்பதைக் காட்டியது. எவ்வாறாயினும், கொழும்பு தனது பிராந்திய பங்காளிகளுடன் உறவுகளைப் பேண வேண்டியதன் அவசியத்தை ஒருபோதும் கைவிடவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாதுகாப்புக் கவலைகளையும், கொழும்பு புறக்கணிக்க முடியாது. 1980களில் மேற்கத்திய சார்பு முன்னணியுடன் கூட்டணி வைத்து அவர்களை புறக்கணிக்க முயற்சித்தபோது, உறவுகள் மிகவும் மோசமாகி, இந்தியா தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் பின்னர் பெருமளவில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை பிராந்தியத்தை அனுசரித்து கையாளும் வகையிலேயே கட்டமைக்கப்படுகின்றது. பிராந்திய உறவு நெருக்கடிக்கு உள்ளாகும்போது ஆட்சிகளும் நெருக்கடிக்கு உள்ளாவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



பேராசிரியர். கே.ரீ.கணேசலிங்கம்

## வங்காள விரிகுடா...13 ஆம் பக்க தொடர்ச்சி

*இதனால் இந்துஸ், அமுதாரியா, யாங்சி மற்றும் மஞ்சள் ஆறு போன்ற பிரதான ஆறுகளில் இடம்பெறும் இயற்கையான கீழ்நோக்கிய பாய்ச்சல் மாற்றத்துக்கு உட்படுகின்றது. ஆசியாவின் நீர்க் கோபுரம் என அழைக்கப்படும் இப்பகுதி தீபெத் பீடபூமி, இமயமலைப் பகுதி, காரக்கோரம், இந்துக்கூஸ், பமீர் மற்றும் ரியான்சன் மலைத்தொடர் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்றாவது முனைவுப் பகுதி எனக் கூறப்படுகின்றது. இப்பகுதியில் ஏற்பட்டு வரும் பனிக்கட்டியாற்று உருகலின் அதிகரிப்பினால் இரண்டு மில்லியன் மக்களுக்கு நம்பிக்கையாக நீர் வழங்கலை மேற்கொள்கின்றது. பிரதேச நீர் வழங்கலின் மீது காலநிலை மாற்றத்தின் செல்வாக்கு அதிகளவில் இடம்பெறுகின்றது. வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்புக் காரணமாக பனிக்கட்டியாறுகளும் பனிப்போர்வையும் பின்வாங்குவதன் காரணமாக நீர் வட்டம் பாதிக்கப்படுகிறது.*

*பனிக்கட்டியாற்று நிகழ்வுகள் தொடர்பான இடர்கள் இந்தியாவில் நன்கு தெளிவாகக் காணப்படுகின்றது. வடக்கு சிக்கிம் பகுதியில் 2023 ஒக்டோபர் 4ஆம் திகதி தென் லோனாக் ஏரியில் ஏற்பட்ட உடைப்பின் பின்னர் அழிவு தரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. 2000 / 2018 காலத்தில் இப்பகுதியிலுள்ள பனிக்கட்டி திணிவு முழுவதிலும் ஏறக்குறைய 4.3 வீதம் குறைவடைந்துள்ளது. இதனால் பனிப்போர்வையில் குறைவு ஏற்பட்டுள்ளதுடன் பனியுருகல் பருவமும் சுருங்கியுள்ளது. பனிக்கட்டி ஏரிகளின் எண்ணிக்கை, மொத்த பரப்பு, அவற்றின் கொள்வனவு என்பன அதிகரித்துள்ளதுடன் ஏரிகளின் மொத்தக் கொள்ளவும் 16 சதவீதமாக அதிகரித்துள்ளது.*

*2023 இல் அல்ப்ஸ் மலையில் பனிப் போர்வை கடந்த 30 வருட சராசியிலும் பார்க்கக் குறைவடைந்துள்ளது. போ நதியின் நீர்மட்டம் வழக்கத்துக்கு மாறாக ஏழு அடி குறைந்து உள்ளது. 2022 இல் இத்தாலியில் உள்ள 5 பிரதேசங்கள் மிக உயர்வான வரட்சித் தன்மை கொண்டனவாக மாறியுள்ளது. 2022 இல் பூகோள நீரேந்து பிரதேசங்களில் காணப்படும் நதி நீரின் வெளியேற்ற நிலைமைகளில் விலகல்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பாவிலுள்ள ஆறுகளில் கோடை காலப் பாய்ச்சல்களில் வெப்ப அலைகள், வரட்சி மற்றும் லா நினா காரணமாக வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. 2023 இல் எல்நினோ காரணமாக நீரியல் வட்டத்தில் தாக்கங்கள் ஏற்படும் நிலைமைகள் உருவாகியுள்ளன.*

*வெப்பமான வளிமண்டலம் அதிக ஈரப்பதனைக் கொண்டிருக்கும். இதனால் மிகக் கடுமையான மழைவீழ்ச்சியும், வெள்ளப்பெருக்குகளும் ஏற்படுகின்றன. வழக்கமாக இடம்பெற்று வரும் பருவகாலப் போக்குகளில் வளிமண்டல வெப்பநிலையின் அதிகரிப்பு தாக்கத்தை ஏற்படுத்தும். மின்னேற்றப்பட்ட துணிக்கைகளைக் கொண்ட ஓட்டங்களாக வரும் சூரியக் காற்று சூரியனின் வெடிப்பு ஏற்படும் பொழுது தீப்பிழம்பாக உருவாகும் மின்காந்த அலைகள் வெளியேறிச் செல்லும் பாதை பூமியை நோக்கியதாக இருந்தால் மட்டுமே பூமிக்கு பாதிப்பு ஏற்படும். பூமியை வந்தடையும் போது புவிக்காந்தப் புயலை உருவாக்கும்.*

*2012 ஜூலையில் இது போன்ற மோசமான சூரிய புயல் ஏற்பட்டு பெரும் அழிவை ஏற்படுத்தியது. கடந்த சில மாதங்களாக சூரியனின் செயற்பாடுகளில் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நாளும் இலங்கையில் உள்ள மக்கள் வெப்பத்தின் அதிகரிப்பை உணர்கின்றனர். முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு வெப்பம் மிக அதிகமாக இருக்கின்றது. 2023 மார்ச் 28 இல் சூரியனில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக பெரும் திணிவான நெருப்புப் பிழம்பு சூரியனிலிருந்து வெளியே வீசப்பட்டது. இதன் தாக்கம் காரணமாகவே வெப்பநிலை உயர்வு ஏற்பட்டு மக்களுக்குப் பாரிய பிரச்சினைகளைக் கொடுக்கின்றது. அது மட்டுமன்றி 2023 டிசம்பரில் இருந்து ஏற்பட்டு வரும் மோசமான வானிலை நிகழ்வுகளுக்கும் இவ்வளி வெப்பநிலையே காரணமாகும்.*

*கடந்த காலங்களைப் போலன்றி அதிக வெப்பத்தின் காரணமாக தாழமுக்க சுழற்சிகளும் மேற்காவுகை நிகழ்வுகளும் கீழ் அலைகளின் தாக்கமும் ஒன்று சேர்ந்து ஒரு சிக்கலான பொறிமுறையைத் தோற்றுவித்துள்ளது. பசுபிக்கின் மத்திய கோட்டுப் பகுதியில் உருவாகும் மாற்றங்கள் மேற்கு நோக்கி தாழமுக்க சுழற்சியாக நகர்த்தப்படுவதனால் அடிக்கடி இலங்கை மற்றும் தென்னிந்தியப் பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. இந்நிகழ்வுகள் பற்றி இலங்கை வளிமண்டலத் திணைக்களம் துல்லியமான எதிர்வுகூறலை மக்களுக்கு வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையிலுள்ள 19 வானிலை எதிர்வுகூறல் முகவரகங்களில் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேச வளிமண்டலவியல் அலுவலகமும் ஒன்றாகும். இந்நிலையத்தினால் ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கும் ஒருமுறை வளி வெப்பநிலை, அமுக்கம், ஈரப்பதன, படிவுவீழ்ச்சி காற்றின் வேகம் மற்றும் காற்றின் திசை ஆகிய வானிலைத் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.*

*இடர்மிக்க வானிலை நிலைமைகளைப் பொது மக்களுக்கு வழங்கும் பொறுப்பினையும் இந்நிலையம் கொண்டிருக்கின்றது. இலங்கைக்கான வானிலைத் தரவுகள் INSAT3 D மற்றும் METEOSAT 8 மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு நிபுணத்துவம் மிக்கவர்களினால் பகுப்பாய்வு செய்யப்படுவதனாலேயே வானிலை எதிர்கூறல் மிகத் துல்லியமாக இருக்கின்றது.*



# தேசிய உப்பு நிறுவனம்
## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

தேசிய உப்பு நிறுவனமானது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ்வரும் அரசாங்கத்தின் உரிமையுள்ள கம்பனியாகும். கொழும்பு-தலைமை அலுவலகத்தில் நிரந்தர அடிப்படையில் வேலை செய்வதற்காக பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உள்ளக கணக்காய்வாளர் - (எம்எம் 1-1)**
**(01 பதவி வெற்றிடம் - தலைமை அலுவலகம்)**

**தேவைப்படும் தகைமைகள்:**
**வெளியக விண்ணப்பதாரிகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம்/ கணக்கிடல்/வியாபார நிருவாகத்தில் பெற்ற பட்டமொன்று அத்துடன் முதலாம் பட்டத்தைப் பெற்ற பின்னர் எந்தவொரு அரசாங்க சேவை, கூட்டுத்தாபனமொன்று, நியதிச்சட்ட சபை/நிறுவனமொன்று அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (1) வருட பட்டப்பின் பட்ட அனுபவம்.
**அல்லது**
2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனத்தின் இடைநிலை பரீட்சையில் பெற்ற சித்தியில் பாடப் பரப்பானது பதவிக்கு உரித்தானதாகவும் ஆகக் குறைந்தது ஒரு வருட பதவிக்கு உரித்தான துறையில் பட்டப்பின் பட்ட அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

1. மேலேயுள்ள வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
**அல்லது**
2. பதவிக்கு உரித்தான பாடப் பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் (ஜேஎம்) வகுதியிலுள்ள பதவியொன்றில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:** எம்எம் 1-1 II ஆம் தரம் - 2016 53,175-10x1,375-15x1,910-95,575 ரூபா மற்றும் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய படிகள்.

**வயது:** 22 வயதிற்கு குறைவாக இல்லாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக பரீட்சார்த்திகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**ஏனையவை:** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. இலங்கை பிரஜையொன்றாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டுள்ளதுடன் தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. மிகச்சிறந்த குணாதிசயங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

- இந்த நியமனம் தொடர்பாக இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமைகளை பணிப்பாளர் சபையானது கொண்டுள்ளது.
- தகுதிகாண் காலஎல்லையானது மூன்று வருடங்களாகும்.
- எந்தவொரு ஆதரவு தேடலும் விண்ணப்பதாரியை தகைமையற்றதாக்கிவிடும்.

2024.02.19ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு உங்கள் சுயவிபரம் அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் தயவு செய்து அனுப்பவும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவித் தலைப்பானது குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

**011-2368974**

# இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
## பதவி வெற்றிடங்கள்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்யும் ஒரே நிறுவனமாகும். மேலும் இலங்கையில் தனியார் துறைக்கான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும்.

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1) முகாமையாளர் (களஞ்சியசாலைகள் மற்றும் பொருட்பட்டியல் கட்டுப்பாடு) MM 1.1 - தரம் II MANAGER (STORES & INVENTORY CONTROL) MM 1.1 – GRADE II**

**தகைமைகள்:**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் இளமாணிப் பட்டம்

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின்/ நிறுவனத்தின் வேறு ஏதாவது சமமான பட்டம்.

மற்றும்

(ஆ) கணனி ஆற்றல்

மற்றும்

(இ) அரசாங்கம்/ கூட்டுத்தாபனம்/ சபை/ நியாயாதிக்க நிறுவனம்/ கீர்த்தி வாய்ந்த வர்த்தக அமைப்பொன்றில் களஞ்சிய முகாமையாளராக குறைந்தபட்சம் 03 வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**சம்பள அளவு:** ரூபா 53,175/-, 1,375/- x 10, 1,910/- x 15 – 95,575/-
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 115,474/- ரூபாவாகவிருக்கும்)

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**2) பிரத்தியேக செயலாளர் JM 1.1 - தரம் II**
**PERSONAL SECRETARY JM 1.1 – GRADE II**

**தகைமைகள்:**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுடன் தொடர்புடைய துறையில் ஒரு இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

(2) பதவியுடன் தொடர்புடைய துறையில் ஐந்து (5) வருடங்கள் அனுபவம் சகிதம் தொடர்புடைய துறையில் டிப்ளோமா / உயர் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் வேண்டும். (கற்றை நெறிக் காலமானது ஒரு (01) வருடத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்)

**சம்பள அளவு:** ரூபா 42, 600 / - 755/- x 10, 1135/- x 18 - 70,580/-
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 97,780/- ரூபாவாகவிருக்கும்)

**வயதெல்லை:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாதாந்த வருகை ஊக்குவிப்புத் தொகை, பயன்படுத்தப்படாத விடுமுறையை பணமாக்குதல், வருடாந்த போனஸ், நலன்புரி நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற ஊழியர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம் உட்பட கவர்ச்சிகரமான நன்மைகளைப் பெறுவர்.

விண்ணப்பங்களை வயது, தகைமைகள், பயிற்சி, வேலை அனுபவம், தற்போதைய பதவி நிலை, சம்பள நிலை மற்றும் அளவு முன்னர் வகித்த பதவி, முன்னைய வேலை வழங்குநருடன் இணைந்த மற்றும் விலகிய திகதி, சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை உள்ளடக்கிய முழு சுய விபரத்துடன் உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் பெயர் மற்றும் முகவரிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும்.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

அரச துறை அமைப்புகளில் பணியாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனங்களின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் 2024-02-19ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்),**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியஸ'' 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி.**
**தொலைபேசி: 011 2320356-9**

# பல்கலைக்கழக வைத்தியசாலை
## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்
## பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**Full Time - Permanent Basis**

- Post of Consultant - Anesthetist
- Post of Nursing Officer
- Post of ECG Recordists

சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு 'நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர' என்ற முகவரிக்கு 2024.02.19 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலைப்பத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **(www.kdu.ac.lk) /** தொ.பேசி இல. 011-2044555.

**www.kdu.ac.lk**

# இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை
## கல்வி அமைச்சு
## பதவி வெற்றிடம்

நாட்டிலுள்ள அரச துறை விஞ்ஞானிகளுக்கு நிதியிடல் உதவியை வழங்கும் கல்வி அமைச்சின் ஆதிக்க வரம்பின் கீழ் செயற்படும் 2016 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டமூலத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு அரசாங்க முகவராண்மை இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையாகும்.

தேசிய ஆராய்ச்சி சபையிலுள்ள பின்வரும் பதவிக்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**உதவி பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்) – எம்எம்-1-01 வெற்றிடம்.**

**பணி விளக்கம் :** கணக்கிடல் செயற்பாடுகள், நிதியிடல் தரவு மற்றும் பொது நிருவாகத்திற்கான பொறுப்பைக் கொண்டிருத்தல்

**தகைமைகள்:**

**வெளியக அபேட்சகர்கள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவத்தில் பெற்றதொரு இளமாணிப் பட்டம்.

அல்லது

2. இந்த பதவிக்கு நிகரான பாடப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் இடைநிலை பரீட்சையில் சித்தி.

அத்துடன்

அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது சபையில் அல்லது புகழ்வாய்ந்த தனியார் தாபனமொன்றின் பதவிக்கு உரித்தான துறையில் பதவி தகைமையுள்ள கணக்கிடல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருட அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக அபேட்சகர்களினால் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.

அல்லது

2. பதவிக்கு உரித்தான பாடப்பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியிலுள்ள பதவியொன்றில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல்.

**சம்பள மட்டம் :** எம்எம் 1-1-2016 [53,175/- 10 x 1,375/- 15x1,910/- 95,575 ரூபா.]

**பதவிக்கு ஏற்புடையதான ஏனைய நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரிகள் இலங்கை பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.
3. விண்ணப்பதாரிகள் சிறந்த குணவியல்புகளை கொண்டிருத்தல்.
4. ஆட்சேர்ப்பானது போட்டிரீதியிலான எழுத்துப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை.
5. நியமனத்தின் தன்மையானது நிரந்தரமானதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குமான உரிமை.
6. விண்ணப்பதாரிகள் அவர்களின் கையொப்பமிட்ட விண்ணப்பங்களை பிறப்பு சான்றிதழின் மற்றும் ஏனைய உரித்தான சான்றிதழ்கள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியவற்றுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரையும் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2024 பெப்ரவரி 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக 'தலைவர், தேசிய ஆராய்ச்சி சபை, 120/7, வித்யா மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
7. அரசாங்க திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் அலுவலர்கள் அவர்களின் முறையான நிறுவனங்களின் தலைமைகலூடாகவே அவர் (ஆண்/ பெண்) தெரிவு செய்யப்படின் அவர் விடுவிக்கப்படுவார் என்ற தெளிவான இணக்கக் கடிதம்.
8. மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுவதுடன் இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையானது பொருத்தமான அபேட்சகர்களை தெரிவு செய்தலில் இறுதியான தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமையுள்ள அதிகாரத்தைக் கொண்டுள்ளது. நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே அழைக்கப்படுவார்கள்.

இந்த விளம்பரமானது தேசிய ஆராய்ச்சி சபையின் www.nrc.gov.lk என்ற இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி சபை,**
**120/7, வித்யா மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி : 011-2675176. தொலைநகல்: 011-2675136**

# 76 ஆவது சுதந்திர தினத்திற்கு சவூதி தூதுவர் வாழ்த்து



இலங்கையின் 76 வது சுதந்திர தினத்திற்கு சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இதற்கென அவர் விடுத்துள்ள செய்தியில், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும், இலங்கை அரசு மற்றும் அதன் நேசமிகு குடிமக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இலங்கைக் குடியரசு மேலும் முன்னேற்றமும் செழிப்பும் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சுதந்திரத்தின் மூச்சுக்காற்றை சுவாசிக்கும் காலம் உதயமாக வேண்டும்



இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில், நாட்டை பொருளாதார ரீதியாக ஸ்திரப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளுக்கு நாட்டு மக்கள் ஓரணியில் திரண்டு ஆதரவளிக்க வேண்டும் என ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள சுதந்திரதின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கு பின்னர் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது. சுதந்திரத்துக்கு முன்னர் இலங்கை பொருளாதார ரீதியாக தன்னிறைவடைந்த ஒருநாடாக காணப்பட்டது.

பொருளாதார ரீதியாக அனைத்து மக்களும் நன்மை அடையும் காலமொன்று உருவாவதன் ஊடாகவே மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

76ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடும் இலங்கையர்கள் அனைவருக்கும் சுப்பையான ஆனந்தகுமார் தமது சுதந்திர தின வாழ்த்தில் கூறியுள்ளார்.

# அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. முன்னாள் தேசிய தலைவரின் சுதந்திரதின வாழ்த்து



எமது நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய டி. பி. ஜயா, சேர் ராசிக் பரீத், அறிஞர் சித்தி லெப்பை, கலாநிதி பதியுதீன் முஹ்மூத், கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் போன்ற பெரியார்களின் அளப்பரிய பங்களிப்பை இன்றைய 76 ஆவது சுதந்திர தின நாளில் முஸ்லிம்களாகிய நாங்கள் அனைவரும் நினைவு கூருதல் வேண்டும் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

நம் நாட்டு சுதந்திரத்துக்காக போராட்டங்களூடாக செய்த தியாகங்கள் அளப்பரியவை. குறிப்பாக யுத்தங்களில் முஸ்லிம்களின் பங்களிப்பு சுதந்திரத்திற்குப் பின் அரச சேவை, முப்படை, உளவுத்துறை மற்றும் இலங்கை பொலிஸ் காவல்துறைகளில் முஸ்லிம்கள் கணிசமான அளவு மக்கள் கடமையாற்ற காரணமாக அமைந்தது. இன நல்லிணக்கத்துக்கு வழிவகுத்தது.

இவ்வாறான வரலாறு இளைஞர்கள் மத்தியில் பேசப்படல் வேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகளை அரச சேவையிலும் முப்படைகளிலும் சேர்த்து முன்னோர்கள் செய்த தியாகங்களை ஞாபகமூட்ட வேண்டும். பாடசாலைகளில் தேசிய மாணவர் படை அணிகளை ஆரம்பிக்க வேண்டும். சூழல் பதுகாப்பு,பொருளாதார அபிவிருத்திக்காக விவசாயம் மற்றும் மரநடுகை ஆகியவற்றுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மார்க்கத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உந்து சக்தியாக அமைய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி**

## ஜெயித்தது மரணம் 16 ஆம் பக்க தொடர்ச்சி

பிரயாணம் ஆரம்பித்து சுமார் 3மணி நேரம் கடந்திருக்கும். வாப்பா, வாப்பா, இடையில் ஹஸனின் சிந்தனையை திசை திருப்பியது ஷஹ்மியின் அழைப்பு.

என்ன மகன்? இந்த அம்பியூலன்ச கொஞ்சம் நிப்பாட்டி எனக்கு குடிக்க தண்ணீர் தாங்க வாப்பா. டொக்டர் உடம்பு வலியா இருக்கு ரெண்டு பெனடோல் தாங்க என்றான். ஷஹ்மிக்காக ஆம்பியூலன்ஸ் சற்று நிறுத்தப்படுகின்றது.

தண்ணீர் பருகிய பின் மீண்டும் ஓய்வு. அமைதி நிலவியது. நிறுத்தப்பட்டிருந்த ஆம் பியூலன்ஸ் மீண்டும் தனது பயணத்தை தொடர்ந்தது. அது ஒலி, ஒளி எழுப்பியவாறு வீதித் தடைகளையோ, ஒரு வழி பாதையையோ, நாற்சந்தியையோ பொருட்படுத்தாது எப்படி வேண்டுமானாலும் போகலாம். யாரும் கேட்க இயலாது என்றாப் போல் தான் விரும்பியவாறு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. வீதியில் கடமையில் நின்ற போக்குவரத்துப் பொலிஸாரும் இதற்கு உதவினார்கள்.

இடையிடையே வீட்டிலிருந்து வந்த தொலைபேசி அழைப்புகளும், பாசத்தை பறை சாற்றி நின்றது. அத்தனைக்கும் பதிலளித்தே ஆக வேண்டும். தந்தையையும் மகனை யும் அம்பியூலன்சில் வழியனுப்பி விட்டு அனைவரும் தவித்துப் போய் நின்றதன் பிர திபலிப்புதான் அத்தனை தொலைபேசி அழைப்புகளும்.

வீட்டில் தாய்க்கு பெண் பிள்ளை வெற்றிடத்தையே ஷஹ்மி நிரப்பி இருந்தான். இதனால் ஷஹ்மியின் நோய் நிலை றபீக்காவை வெகுவாக பாதித்திருந்தது. துடியாய் துடித்தாள். இதையும் தாண்டி ஹஸனின் நிலை, அன்று மஹரகம அபேக்ஷாவில் தொடங்கியது இன்று வரை வேறு வேலைகள் எதுவுமின்றி 24மணி நேரமும் மகனோடு இவ்வாறு இறுக்கமான பிணைப்பில் சிக்கிக் கொண்டது இக்குடும்பம்.

அன்றொரு நாள் வைத்தியசாலை விடுதிக்கு தொலைபேசி அழைப்பொன்று வரு கின்றது. தொலைபேசி அழைப்புக்கு பதிலளித்த வைத்தியசாலை தாதியொருவர்' ஷஹ்மியின் அப்பாவை பெரிய டொக்டர் அவரது அறைக்கு வரட்டாம்' என்றாள்

செய்தி கேட்டு பதறிப்போனான் ஹஸன். விரைகின்றான் டொக்டரின் அறையை நோக்கி. உங்க மகனின் நிலை நேற்று வரையில் நல்ல முன்னேற்றமாகத்தான் இருந் தது.

இப்ப டொக்டர்?? என்று ஹஸன் பதற, இப்ப மகனின் நிலையில் சற்று வித்தியா சம் தென்படுகின்றது. மீண்டும் முதலிலிருந்து புதிதாக ஆரம்பிக்கிற மாதிரி தோணுது. இந்தியாவுக்கு கொண்டு போய் இதற்கு சிறந்த சிகிச்சை செய்யக் கூடிய சந்தர்ப்பம் நிறைய உண்டு.

டொக்டர் சொல்லி முடிக்கு முன், .எவ்வளவு பணம் செலவாகும்? இஞ்ச செய்ய ஏலாதா டொக்டர்? கேள்விகளை தொடுத்துக் கொண்டே போனான் ஹஸன் மிகுந்த பதற்றத்துடன்.

இல்ல ஹஸன். இந்தியாதான் இதற்கு சிறந்த இடம், எப்படியும் இரண்டு கோடி செல வாகும். அவசரமாக பயண எற்பாடுகளைச் செய்ய முயற்சியுங்கள். அதற்கு முன்,

முதலில் மகனை 'மஹரகம அபேக்ஷாவுக்கு' மாற்றுகின்றேன். அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து இவருக்கு சில மருந்துகள் செலுத்த வேண்டும். இதனை அவ சரமாக செய்வதற்கு நான் தனிப்பட்ட ரீதியில் அங்குள்ள எனது நண்பர் ஒருவரிடம் பேசியுள்ளேன்.

எல்லா ஏற்பாடுகளும் உடன் நடக்கும். அங்க அவசர சிகிச்சைப் பிரிவில் இவருக் கான கட்டிலும் ஆயத்தமாக உள்ளது. பிறகு அங்கிருந்து இந்தியா செல்வதற்கான ஏற் பாடுகளைச் செய்யுங்கள். நீங்கள் ஒன்றையும் யோசிக்க வேண்டாம் நானும் தொடர் பில் இருப்பேன் என்றார் டாக்டர்.

அதுவரையில் டாக்டரின் முன், சிலை போல் திகைத்துப் போய் நின்றிருந்த ஷஹ்மி யின் தந்தை ஹஸனால் அடுத்த நகர்வுக்கு கால் எடுத்து வைக்கவே முடிய வில்லை.

இரண்டு கோடி. இரண்டு கோடி.

டொக்டரின் அறையினை விட்டகன்ற ஹஸன் நேராக மகனிடம் சென்றான். தன்னை சுதாகரித்துக் கொண்ட ஹஸன் நாம் இந்தியாக்கு போவமா எனச் சிரிப் போடு கேட்டான். சிரித்துக் கொண்ட ஷஹ்மி, ஏன் டொக்டர் போகயா சொல்ராரு. காசு கூடுதலாக வேணும. என்ன செய்யப் போறிங்க??

அதல்லாம் வாணா. விடுங்காப்பா. அங்க போகத் தேவல. எனக்கு ஒண்டுமில்லை தானே. நான் நல்லாத்தானே இருக்கன். இறைவன் உதவியால் எனக்கு சுகம் கிடைத்தி டும். சும்மா என்னத்துக்கு இந்தியா போய் கடன்பட்டு செலவழிக்கப் போறிங்க? என்று சிம்பிலாக பதிலளித்தான் ஷஹ்மி.

அவனது நோயின் தற்போதைய வீரியம் அவனுக்குத் தெரியாதுதானே? அதான் அவன்...ஆனால், ஹஸனோ எப்படியாவது மகனை இந்தியா இல்ல அமெரிக்கா கொண்டு போயாவது சுகப்படுத்திட வேண்டும் என்பதில் குறியாக இருந்தார். அன்றே இந்தியாவின் வேலூர் வைத்தியசாலையை தொடர்பு கொண்டான் ஹஸன்.

அவசர உதவிக்கு அவர்களும் ஹஸனுக்கு பல ஆலோசனைகளை வழங்கினார் கள். அவசரமாக இருவரதும் கடவுச் சீட்டுகள் அனுப்பப்பட்டு ஏற்பாடுகள் நடைபெற்றன மறு புறம், இரண்டு கோடி, இரண்டு கோடி, நினைத்துக் கூட பார்க்க முடிய வில்லை. பணத்திற்கான ஏற்பாடுகளில் குடும்ப உறுப்பினர்கள். அடுத்த நாள், வெள்ளிக்கி ழமை. ஷஹ்மியைப் பார்க்க வந்த பெரிய டொக்டர், இன்றைக்கு நான் சொன்ன மாதிரி மஹரகம அபேக்ஷா செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று உத் தரவிட்டார். ஷஹ்மியும் சிரித்துக் கொண்டு ஹஸனைப் பார்த்து இண்டைக்கு போயி டுவோம் வாப்பா என்றாப்போல் தலையசைத்தான். அதற்கிணங்கவே இவ்வனைத்து ஏற்பாடுகளும்.......

★★★★★★

டொக்டர், டொக்டர், திடீரென அம்புலன்சில் இருந்த தாதியின் சத்தம். பழைய நினை வுகள் கலைந்து சத்தம் வந்த திசையை நோக்கினான் ஹஸன்....

டொக்டர் ஷஹ்மிக்கான ஒட்சிசன் சிலிண்டரின் வாசிப்பு குறைவாக காட்டுவதால் இதனை எங்காவது மீள் நிரப்ப நடவடிக்கை எடுங்கள் என்ற தாதியின் கோரிக்கை காதில் விழுந்தது.

ஹஸன் பதறிப்போனான். ஷஹ்மியோ எந்தவொரு சஞ்சலமுமின்றி உறங்கிக் கொண்டிருந்தான். ஷஹ்மியின் சுவாச வாசிப்புகள் திருப்தியா கவே இருந்தன. உடனடியாக செயற்பட்ட வைத்தியர்கள் குழு, தொலைபேசியில் பல கோணங்களிலும் தொடர்புகளை ஏற்ப டுத்தி விட்டு அண்மையில் உள்ள வைத்தியசாலைக்கு அம்பியூ லன்ஸை விடும்படி சாரதியை பணித்தனர்.

நேரம் மாலை 6.10மணி, அதுவரையில் வேகமாகச் சென்ற அம்பியூலன்ஸ் குருநாகல் போதனா வைத்தியசாலையை அண் மித்ததும் வேகத்தைக் குறைத்து உள் நுழைந்தது.

பரபரப்பாக இருந்த அந்த மாலைப் பொழுது, ஒரே சனக் கூட் டமாய்க் காணப்பட்ட வைத்தியசாலையின் முன்றலில், ஒலி, ஒளி யெழுப்பி வருகின்ற அம்பியூலன்ஸை கண்டு வழி விடுகின்றார் கள். குருநாகல் வைத்தியசாலை ஷஹ்மிக்கு புது இடமாகும்.

உடன் செயற்பட்ட மருத்துவக் குழுவினர் ஒட்சிசனை மீள் நிரப் பிக் கொண்டு மஹரகம அபேக்ஷா நோக்கிய பயணத்தை தொடர் வதற்காக ஷஹ்மியை தற்காலிகமாக குருநாகல் வைத்தியசாலை யின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்க யோசித்தார்கள்.

அம்பியூலன்ஸ் படுக்கையில் இருந்த ஷஹ்மி, மிகவும் கவ னமாக அவசரப்பிரிவு கட்டிலுக்கு தற்காலிகமாக மாற்றப்படு கின்றான். அங்கு நேரடியான ஒட்சிசன் சுவாசம் கொடுக்கப்படு கின்றது. உடன் வந்த உதவியாளர்களினால் சிலிண்டர்கள் மீள் நிரப்புவதற்காக கொண்டு செல்லப்படுகின்றது.

அவசர சிகிச்சைப் பிரிவில் ஷஹ்மியை சுற்றி பல வயர்கள் இணைக்கப்படுகின்றன, பரிசோதனைக்காக. சற்று நேரத்தில் அந்த அவசர சிகிச்சைப் பிரிவில் பரபரப்பு. நேரம் செல்லச் செல்ல பரபரப்பு அதிகரிக்கின்றது. தாதிய உத்தியோகத்தர்கள் ஓடோடித் திரிகின்றார்கள்.

ஷஹ்மியின் கட்டிலை குருநாகல் வைத்தியசாலையின் டொக் டர்கள் பலர் சூழ்ந்து கொள்கின்றார்கள். எல்லோரும் பதற்றமாய் காணப்பட்டார்கள். ஆச்சரியமாய் எல்லோரும் திகைத்துப் போய் நிற்கின்றார்கள்.

நேரம் மாலை 6.25மணி.

அந்த அவசர சிகிச்சைப்பிரிவில் ஷஹ்மி திடீரென ஒரேயடியாக கண்ணை மூடிவிட்டான் என்ற செய்தி, காற்றலைபோல் பரவ, ஷஹ்மியின் தந்தை ஹஸனின் அழுகுரல் குருநாகல் வைத்திய சாலையையே ஒரு முறை அதிரச் செய்தது.

உடன் சென்ற அவசர சிகிச்சைக்கான மருத்துவக் குழு, என்ன நடந்த, ஷஹ்மியை கட்டியணைத்த ஹஸன், ஷஹ்மி, மகன் ஷஹ்மி, வாப்பாவை ஒரு முறை பாருங்க மகன்.

என்னை விட்டுட்டு போயிடாதிங்க மகன். உம்மா தம்பியெல் லாம் தாங்க மாட்டாங்க மகன்.

ஹஸன் செய்வதறியாது கொஞ்சிக் கொஞ்சிக் கெஞ்சுகிறான். ஹஸனின் கண்ணீரால் ஷஹ்மியின் பூப்போன்ற அழகிய முகம் நனைகின்றது. வைத் தியசாலை ஊழியர்கள் கண் கலங்கி யவர்களாக இறுதி அஞ்சலி செலுத் துவதுபோல் அமைதியாக நின்று கொண்டிருக்கின்றார்கள்.

ஹூ்ம் ..... ஒன்றுக்கும் பதிலில்லை.... புன்முறுவல் பூத்த முகத்துடன் ஷஹ்மி தூங்கிக் கொண்டிருந்தான் அமைதி யாக...அழகாக.

எல்லாம் முடிந்து விட்டது. மஹரகம அபேக்ஷா, இந்தியா, வேலூர், எவ் வளவு கற்பனைகள், எவ்வளவு ஏற் பாடுகள். அத்தனையும், எதிர்பாராத விதத்தில் எல்லாம் ஒரு நொடியில் முடிந்து விட்டது. அதுவும் குருநாகலில். எதுக்கோ அம்பியூலன்ஸை நிறுத்த, எதுவோ நடந்து விட்டது.

முடியவில்லை ஹஸனால். வைத்தி யசாலையின் ஒரு மூலையில் கிடந்து அழுது புரண்டான் ஹஸன், அவனை ஆறுதல்படுத்த அவ்விடத்தில் உறவுகள் ஒருவரும் அருகில் இல்லை. ஹஸன் மட்டும் தனியாக.... அப்போதைக்கு அவனால் அது மட்டுமே சாத்தியமா யிற்று.

ஆம், ஹஸன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்...

'பத்து மாத பாச போராட்டங்களைத் தாண்டி மட்டுமல்ல அனைத்து நவீன மருத்துவ நுட்பங்களையும் தாண்டி ஜெயித்தது மரணம்' என்று.


ஸ்ரீ ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை மீளத்தொடங்குதல்**

**த பினான்ஸ் கம்பனி பிஎல்சி இன் வைப்பாளர்களுக்கு (உரிமம் இரத்து செய்யப்பட்டது)**

அண்மையில் இயற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித் தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி இன் தகுதியான வைப்பாளர்கள்/ தகுதியான வைப்பாளர்களின் தொடர்புடைய சட்டபூர்வ பயனாளிகளுக்கு, இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் **06.02.2024** இல் இருந்து மீளத்தொடங்கும் என்பதுடன் அத்தகைய கொடுப்பனவுகள் **21.05.2024** வரை தொடரும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவிக்க விரும்புகிறது.

இதன்படி, **இதுவரை இழப்பீட்டைப் பெற்றிராத** தகுதியான வைப்பாளர்கள்/ தகுதியான வைப்பாளர்களின் தொடர்புடைய சட்டபூர்வ பயனாளிகள், உயர்ந்தபட்சம் ரூ.1,100,000/= என்ற தொகைக்கு உட்பட்டு, 06.02.2024 தொடக்கம் 21.05.2024 வரையிலான காலப்பகுதிக்குள் தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் தங்களது இழப்பீட்டு உரிமைகோரல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விசாரணைகளுக்கு : 0112 477 261, 0112 477 977
வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம்



**மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIMS)**

**பேராதனை பல்கலைக்கழகம்**

**பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

பேராதனை பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமான தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சட்ட விதிகளின் பிரகாரம் பணிப்பாளர் நிறுவகத்தின் முழுநேர உத்தியோகத்தரொருவராகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும், பிரதான கல்வி உத்தியோகத்தராகவும், நிறுவகத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரும் ஆவார். பணிப்பாளரானவர் நிறுவகத்தின் அலுவல்சார் உறுப்பினராகவும், முகாமைத்துவ சபையின் தலைவராகவும், நிறுவகத்தின் ஒவ்வொரு கல்வி சபையின் அங்கத்தவராவார். பணிப்பாளர் பதவிக்காலமானது மூன்று வருடங்களாகவும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாகவும் விண்ணப்பங்களின் இறுதித் திகதியன்று 63 வயதிற்கு குறைவாகவுமிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் மருத்துவ விஷேடத்துவத்தைக் கொண்ட கலாநிதி பட்டப்பின்படிப்பு தகைமை மற்றும் சபை சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். கல்விசார் அமைப்பொன்றை நிருவகித்த அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். மேலும் பல்துறை கல்விசார் சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்கு தேவையான மிகச் சிறந்த தனிப்பட்ட திறமைகளைக் கொண்டிருப்பவராகவும் சமூகத்திற்கான நிறுவகத்தின் அர்ப்பணிப்பை இணங்கண்டு செயற்பட கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அவர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கான பொறுப்பையும் கொண்டிருப்பார்.

பணிப்பாளரானவர் இப்பதவிக்கு பொருந்தக்கூடிய சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளைப் பெற உரித்துடையவருமாவார்.

**பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.**

I. பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரி பற்றிய முழுமையான சுயவிபரக் கோவை
II. நிறுவகத்தின் விருத்திக்கான சுய தொலைநோக்கு அறிக்கை அத்துடன் விண்ணப்பதாரி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் சாதிக்கத் திட்டமிட்டுள்ளவை பற்றிய சுருக்குப் பட்டியல்
III. விண்ணப்பதாரி குறிப்பிட்ட பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து அவர் பணியாற்றும் அரச சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட தாபனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் தொழில் வழங்குநரிடமிருந்து அவர் விடுவிக்கப்படுவார் என்பதைக் குறிப்பிடும் ஒரு கடிதம்

விண்ணப்பங்கள் உதவிப் பதிவாளர், மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம், கெட்டம்பே, பேராதனை எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக **2024 மார்ச் 04ஆம் திகதி பி.ப. 3.30க்கு அல்லது முன்னதாக** கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **'பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்'** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, மேலேயுள்ள ஆவணங்கள் மற்றும் வேறேதாவது சான்றுபகரும் ஆவணங்களின் மென்பிரதியொன்று PDF உருமாதிரியில் ar@pgims.pdn.ac.lk என்ற மின்னஞ்சலூடாக இறுதித் திகதிக்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

பணிப்பாளர் பதவி நியமனத்திற்கான நடைமுறை தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு 2024 ஜனவரி 01ஆம் திகதியிடப்பட்ட 01/2024 என்ற பமாஆ இன் சுற்றறிக்கையை தயவு செய்து பார்வையிடவும்.

மேலதிக விபரங்களை சாதாரண அலுவலக நேரங்களில் 081-2389757 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**உதவிப் பதிவாளர்,**
**மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம்,**
**பேராதனை பல்கலைக்கழகம்,**
2024 பெப்ரவரி 04.



**இலங்கை இராணுவம்**

**விலைமனுக்கோரல்**

1. 2024 ஆம் ஆண்டில் நாரஹேன்பிட்ட இராணுவ வைத்தியசாலையின் 15 மாடி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக மற்றும் மைட்லண்ட் பிளேஸ் இராணுவ நலன்புரி கட்டிடத்தின் கட்டுமான பணிகளுக்கு தேவையான பின்வரும் கட்டுமானப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தகைமையுடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மனுக்களுக்கு ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் இராணுவ டெண்டர் சபை (கொள்முதல்) குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையின் 15 மாடி கட்டடத்திற்கு (கடனடிப்படையில்)

| இல. | விலைமனு இலக்கம் | விபரம் | அண்ணளவாக ஏலத்தின் மதிப்பீடு | மீள்ச் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ). |
|---|---|---|---|---|
| 01 | DES/04/2024/100(01) | Electrical Items | ரூ. 2,687,597.50 | ரூ. 1000.00 |
| 02 | DES/04/2024/100(02) | Water Pumps | ரூ. 535,130.00 | - |
| 03 | DES/04/2024/100(03) | Tools | ரூ.1,356,492.60 | - |
| 04 | DES/04/2024/100(04) | Toner | ரூ.1,692,297.00 | - |
| 05 | DES/04/2024/100(05) | Hardware Items | ரூ.5,781,238.90 | ரூ. 1000.00 |
| 06 | DES/04/2024/100(06) | Local Timber | ரூ.10,659,603.00 | ரூ. 3,500.00 |
| 07 | DES/04/2024/100(07) | Plywood Sheets | ரூ.9,315,000.00 | ரூ.1,000.00 |
| 08 | DES/04/2024/100(08) | Concrete Items | ரூ.172,500.00 | - |
| 09 | DES/04/2024/100(09) | Yard Items | ரூ.1,725,000.00 | - |
| 10 | DES/04/2024/100(10) | Ready Mix Concrete | ரூ.50,312,500.00 | ரூ. 12,500.00 |
| 11 | DES/04/2024/100(11) | Cement | ரூ.1,667,500.00 | - |
| 12 | DES/04/2024/100(12) | Miscellaneous Stationery Items | ரூ.1,297,196.42 | - |
| 13 | DES/04/2024/100(13) | Steel | ரூ.28,437,074.88 | ரூ. 3,500.00 |
| 14 | DES/01/7E/2024/06 | "Supply And Installation Of Water Pressure Booster System For Fifteen Storied Medical Facility And Or's Accommodation Building At Military Hospital Narahenpita (Contract Services)" | ரூ.965,000.00 | - |

மைட்லேண்ட் பிளேஸில் இராணுவ நலன்புரி வளாகத்திற்கு (பணமாக)

| இல. | விலைமனு இலக்கம் | விபரம் | அண்ணளவாக ஏலத்தின் மதிப்பீடு | மீள்ச் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ). |
|---|---|---|---|---|
| 15 | DES/04/2024/100(31) | Kitchen Equipment | ரூ.19,795,445.39 | ரூ. 3,500.00 |

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விநியோகங்களுக்கான கொள்முதல் ஆவணங்கள் பொறியியல் சேவைகள் பணிப்பாளர் சபை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு எனும் முகவரியில் 2024.02.05 ஆம் திகதி முதல் 2024.02.28 ஆம் திகதி வரை வார நாட்களில் 0900 மணி முதல் 1600 மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் 2024.02.29 ஆம் திகதி 1100 மணிக்கு இராணுவத் தலைமையக வாகன நிறுத்துமிடம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு என்ற முகவரியில் திறக்கப்படும். மேலும் ஒரு விலைமனுக்கோரல் இலக்கத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ள மீளப்பெறமுடியாத விண்ணப்ப கட்டணத்தை இலங்கை இராணுவ பணிப்பாளர் (நிதி), இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜெயவர்தனபுரயில் பணமாக செலுத்த வேண்டும். மேலும் மனுதாரர்கள் அதிகாரப்பூர்வ முத்திரையை ஒட்டிய பிறகு முறையாக கையொப்பமிடப்பட்ட விலைமனுக்கோரலினை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மனுக்கள் இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2024 ஆம் ஆண்டு (பொருட்களுக்கான) விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விலைமனுக்கோரல் இலக்கம், திகதி மற்றும் நேரத்தினை குறிப்பிட வேண்டும்.

3. குறிப்பிட்டுள்ளபடி தேசிய போட்டி நடைமுறை மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.

4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரலின் மூன்று பிரதிகள் கீழே உள்ள முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் காலத்திற்குப் பின்னர் உடனடியாக திறக்கப்படும். மேலும் தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தேசிய அடையாள அட்டை மற்றும் வேலை செய்யும் இடத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தினை தன்னகத்தே கொண்டுள்ள மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு மனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

கொள்முதல் குழு தலைவர்,
இராணுவத் தலைமையகம்,
இராணுவத் தலைமையக வாகன நிறுத்துமிடம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர,
கொழும்பு.

5. VAT பதிவுச் சான்றிதழ் மற்றும் வணிகப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும் மேலும் மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி எண்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

6. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனுப் பத்திரத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு உரித்தானது.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.
அ. பொறியியல் சேவை பணிப்பாளர் சபை கொள்முதல் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 2339317
பி. மாஸ்டர் பொது கிளை கொள்முதல் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 2431301

இராணுவத் தளபதி,
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு.

# துரிதகதியில் அபிவிருத்தியடையும் வடக்கும் கிழக்கும்



ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் எனும் காற்றை சுவாசித்த எமது நாடு அதன் பின்னரான நான்கு தசாப்தங்களாக முகங்கொடுத்த யுத்தத்திலிருந்து மீண்டு ஆறுதல் அடைந்தாலும் கூட பூரணமாகத் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளையோ அல்லது தேவைகளையோ நாம் காணக் கூடியதாக இருந்தது.

கடந்த ஒன்றரை வருடங்களாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசம் தற்போது நன்றாக அபிவிருத்தி அடைந்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதில் முக்கியமான ஒன்றுதான் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியயேற்றுதல் ஆகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட மோதல் காரணமாக இடம் பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றி அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கி மக்கள் வாழ்வை மேம்படுத்தக்கூடிய செயல் திறனான பயனுள்ள அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் கௌரவமான பாதுகாப்புமிக்க மக்கள் சமூகம் ஒன்றை உறுதிப்படுத்தல் இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

அதில் முக்கியமான திட்டமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கல் மற்றும் சாந்தைப் பயன்படுத்தி நிரந்தர வீட்டை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தைக் கூறலாம்.

அதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 27,322 வீடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 28,619 வீடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 29, 762 வீடுகளும் வவுனியா மாவட்டத்தில் 23,068 வீடுகளும் மன்னார் மாவட்டத்தில் 16,227 வீடுகளும் திருகோணமலை மாவட்டத்தில் 10,039 வீடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 12,098 வீடுகளும் அம்பாறை மாவட்டத்தில் 1,713 வீடுகளுமாக மொத்தம் 148,848 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நிரந்தர வீடமைப்புத் திட்டத்தில் பயனாளர்களினால் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படும். இதற்கான கண்காணிப்பு மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து பணியாற்றும் தொழிநுட்ப அதிகாரியினால் வழங்கப்படும். இந்த செயற்றிட்டத்தின் கீழ் குடும்பத்திற்கு 600,000 –10,00,000 ரூபா வரை வழங்கப்படும். அதற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் 7,671 வீடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 952 வீடுகளும் , முல்லைத்தீவு மாவட்டத்தில் 223 வீடுகளும் வவுனியா மாவட்டத்தில் 2,183 வீடுகளும் மன்னார் மாவடத்தில் 526 வீடுகளும், திருகோணமலை மாவட்டத்தில் 3,500 வீடுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,214 வீடுகளும் அம்பாறை மாவடத்தில் 2,007 வீடுகளுமாக நிர்மாணிக்க வேண்டிய வீடுகளின் மொத்த எண்ணிக்கை 20,276 ஆகும்.

2024 ஆம் ஆண்டில் இந்த செயற்றிட்டத்திற்காக 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்டு 600,000 ரூபாய் பெறுமதியான 833 வீடுகளும் 1,000,000 ரூபாய் பெறுமதியான 1000 வீடுகளையும் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 694 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில், 86 வீடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் , 20 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 197 வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் 48 வீடுகளும், திருகோணமலை மாவட்டத்தில் 316 வீடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 291 வீடுகளும் அம்பாறை மாவட்டத்தில் 181 வீடுகளுமாக மொத்தம் 1,833 வீடுகள் 2024 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் இரண்டாவது செயற்றிட்டமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை கூறலாம்.

2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நிரந்தர வீடு நிர்மாணிக்கும் செயற்றிட்டத்திற்கு சமாந்தரமாக அவர்களை மீள்குடியேற்றும்போது அத்தியாவசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்படி, 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 90,270 ஆகும். இதற்காக 10,848,92 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

குடி நீர் இணைப்பு, குழாய்க் கிணறு நிர்மாணிப்பு, பொதுக் கிணறு நிர்மாணித்தல், விவசாயக் கிணறு நிர்மாணித்தல், வீட்டு மின் இணைப்பு, வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டம், மலவசலகூட வசதிகள், கல்விச் செயற்றிட்டம், உள்ளக வீதி, சுகாதாரம், சிறு குளங்களின் மறுசீரமைப்பு, ஏனைய செயற்றிட்டங்கள், காணிக் கொள்வனவு, TFR செயற்றிட்டம் ஆகியவை அத்தியாவசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தினுள் அடங்கும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களில் சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் பதிவாவதாக சுகாதாரப் பிரிவினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு சுத்தமான குடிநீர் வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பது மிகவும் பிரதானமான என இனங்காணப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 23, வவுனியா மாவட்டத்தில் 23, முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்குமாக நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு கட்டமைப்பின் மொத்த எண்ணிக்கை 50 ஆகும். இதில் முழுமையாகப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 25 நனோ நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகள் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த செயற்றிட்டத்திற்காக திட்டமிடப்பட்ட முழு ஒதுக்கீடு 211,669,403.67 ரூபாவாகும். இதுவரை செலவிடப்பட்ட முழுத்தொகை 125,678,182.44 ரூபா ஆகும். எஞ்சியிருக்கும் 25 நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகளின் பணிகளை நிறைவுசெய்து இந்த வருட இறுதிக்குள் மக்கள் மயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முனீரா அபூபக்கர்


## விலைமனுக்களுக்கானஅழைப்பு

**வெலிசர ராகம, வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கு(CEFAP) ரவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

1. பின்வரும் வெடிபொருட்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவின் சார்பாக இலங்கை கடற்படையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| File No. | Description | Qty |
|---|---|---|
| CEFAP/PRT/04/2022 | Potassium Chlorate | 60,000 kgs. |
| CEFAP/PRT/05/2022 | Red Phosphorus | 3,000 kgs. |

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை CEFAP பிரிவின் பெறுகை அலுவலகரிடமிருந்து பெற்று கீழே 02 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

கவனத்திற்குரியவர் : பணிப்பாளர் CEFAP பிரிவு
முகவரி : வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு, வெலிசர, ராகம
தொலைபேசி : 0112958227 – 0112955514
மின்னஞ்சல் : **director.cefap@gmail.com**

3. மீளளிக்கப்படாத கட்டணமான 4,500 ரூபாவை (நான்காயிரத்து ஐந்நூறு ரூபா) செலுத்திய பின்னர், 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் மர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது இலங்கை வங்கியின் 7041344 என்ற கணக்கிலக்கத்திற்கு கடற்படை தளபதியின் பெயரில் (CEFAP) வழங்கப்பட்ட வங்கித் துண்டில் வரவு வைக்கப்பட்டதாகும்.

4 2024 மார்ச் 19 ஆம் திகதியன்று கேள்வி மூடப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கடற்படை தலைமையலுவலகம்.**



பாதுகாப்பு அமைச்சு
இலங்கை விமானப்படை

## விலைமனுக் கோரல்

## இலங்கை விமானப்படைக்கான பொருட்கள் கொள்முதல்

1. இலங்கை விமானப்படையின் திணைக்கள வழங்கல் குழுவின் தலைவரினால் (MPC) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கான தகுதி மற்றும் தகைமைகளைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | அளவு | மனு பாதுகாப்பின் பெருமதி மற்றும் காலம் | காலம் | மனு முடிவடையும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| AHQ/23/PUB/CLO/ 1004 | விமான வீரர்கள் மற்றும் பெண்களுக்கு ஜாகிங் பாதணிகளை கொள்வனவு செய்தல் | 20,000 ஜோடிகள் | 2024.06.27 LKR 2,290,000.00 | 2024.02.05 முதல் 2024.02.28 வரை | 2024.02.28 1100 மணிக்கு | 41,500.00 |

2. மனுக்கோரலானது **தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (NCB)** இடம்பெறும்.

3. ஆர்வமுள்ள மனுதாரர்கள், **கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சகம், பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே (தொலைபேசி: +94112390719, தொலைநகல்: +94112390720, மின்னஞ்சல்: (procurement@defence.lk)** மூலமாக மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கொள்முதலுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை **2024.02.05** ஆம் திகதி முதல் அலுவலக நாட்களில் **0900 மணி முதல் 1500 மணிவரை** மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் **தலைமை நிதி அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே** எனும் முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியினால் ஆன முழு ஆவணத்தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். **மேலும் 0900 மணி முதல் 1500 மணிவரை கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டேயில்** இலவசமாகப் பரீட்சித்துக்கொள்ள முடியும். மனுக்கள் **2024.05.29** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட மனு முன்மொழிவுகள் டெண்டர் அடையாள எண்ணைக் குறிப்பிட வேண்டும், மேலே குறிப்பிட்டுள்ள பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் மற்றும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு விரைதூதர் சேவை மூலமாக கையளிக்கப்படுதல் வேண்டும் தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளத் தேர்வுசெய்யும் மனுதாரர்கள் / மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் நேரத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். நேரிலோ அல்லது நிகல்நிலை மூலமாக ஏலங்கள் முடிந்தவுடன் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். கால எல்லை முடிவடைந்த பின்னர மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்திட்கு பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**கொள்முதல் கிளை,**
**2ஆம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை.**

5. மனுதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு இலங்கை விமானப்படையின் பின்வரும் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

பிரதான கொள்முதல் அதிகாரி,
கொள்முதல் பிரிவு,
**LL2** மாடி, இலங்கை விமானப்படை,
இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே
தொலைபேசி: **+94112347694, +94112441044** (நீட்டிப்பு **11902**)
தொலைநகல்: **+94112441553**, மினனஞ்சல்: **cpd@slaf.gov.lk, acpot@slaf.gov.lk**

விமானப்படை தலைமையகம்,
இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.

விமானப்படை தளபதி

SELACINE



SPC

## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

## பெறுகை அறிவித்தல்

## நுவரெலியா, கதிர்காமம் மற்றும் அனுராதபுரத்தில் விடுமுறை பங்களாக்களை பெற்றுக் கொள்ளல்

**கேள்வி குறிப்பீடு : HR/HOLIDAY HOMES (NU-KA-ANU)/09/2024**
**மூடும் தினம் : 2024.02.20 (மு.ப. 11.30 மணிக்கு)**

கூட்டுத்தாபன மற்றும் அதனது ஊழியர்களின் பாவனைக்காக ஆகக் குறைந்தது 02 வருட கால எல்லைக்கு குத்தகை அடிப்படையில் நுவரெலியா, கதிர்காமம் மற்றும் அனுராதபுர நகர்கள் அல்லது சுற்றியுள்ள பிரதேசங்களில் பராமரிப்பவருடன் அல்லது இல்லாமல் விடுமுறை பங்களாக்களை பெற்றுக் கொள்வதற்காக கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன. முன்வைப்புக்களில் இந்த பங்களாக்கள் தளபாடங்களுடன் அல்லது தளபாடங்கள் இல்லாமல் சமர்ப்பிக்கப்படுகின்றதென தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

தூய குடிநீர், தொலைபேசி வசதி மற்றும் வாகன தரிப்பிட வசதி ஆகியன இந்த பங்களாக்களில் இருத்தல் வேண்டுமென்பதுடன் மனோரம்மியமான பின்புலத்துடன் நேர்த்தியான தோற்றத்துடன் மற்றும் சிறந்த முறையில் பராமரிக்கப்படும் வீட்டு மலர்பூங்கா ஆகியன விஷேட தகைமையொன்றாக கருதப்படும். இந்த பங்களாக்களில் ஒவ்வொரு அறைக்கும் அனைத்து வசதிகளுடனான தனியாக இணைக்கப்பட்ட குளியலறை வசதிகள் இருத்தல் வேண்டும்.

தயவு செய்து தொலைபேசி இலக்கங்களுடன் அனைத்து விபரங்களும் பங்களாக்களின் வெளியக மற்றும் உள்ளக தோற்றங்களின் நிழற்படங்களுடன் பின்வரும் முகவரிக்கு 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி இலக்கம், நேரம் மற்றும் மூடும் நேரம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விதாரர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு கண்டிப்பாக அமைந்தொழுகுதல் வேண்டும்.

1. கேள்விகள் மூலப்பிரதி மற்றும் பிரதியொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. ‘மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி’ ஆகியன உரியமுறையில் முத்திரையிடப்படல் வேண்டும்.
3. கேள்விகள் ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என தெளிவாக அடையாளமிடப்பட்டு இரு தனித்தனியான தபாலுறைகளில் உட்சேர்க்கப்படல் வேண்டும் (Staple Pins should not be used)

கேள்விகளை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

விசாரணைகள் : முகாமையாளர் (மனித மூலவளங்கள்)
தொலைபேசி: 0112 055303

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**41, ‘மெஹெவர பியச’,**
**கிருள வீதி, நாராஹேன்பிட்ட.**



# சுதந்திர விடுதலை

வளைந்தாடும்
அடிமையாய்
வகுத்திட்ட
சட்டத்தினால்
நிலையான கப்பமதை
நிர்ப்பந்தமாய்ப்
பெற்றெடுக்க

உடமைகளும் சொந்தமிலா
உரிமைகளும் கொஞ்சமிலா
அடிமையான வாழ்விங்கு
அன்றாடம் நடந்தோங்கக்
கடுமையான
நிலைமைதனை
கண்ணுற்ற மக்களோ
கண்ணீரோடு
அங்கலாய்க்கத்
தென்பட்டது
புரட்சியொன்று

விழியாடும் எழிலோடு
விரிந்தாடும் வங்கத்தில்
துளியான தேசமாய்
வழியாடும் வணிகத்திற்கு
வளமான இடமான
தலமாகும் இலங்கையைத்
தட்டிப்பறித்து தன்னகத்தே
கட்டுப்படுத்தி அரசாளவே !

அரியணை வெறிபிடித்து
அதிகார திமிர்பிடித்துப்
பேருலகத் தலைவனாய்
பேரரசுக் கொடியேற்றப்
போரினை செய்கின்றோர்
புறப்பட்டு வந்தனரே !
கூராடும் ஆயுதத்தோடும்
குறைவில்லாப் படையோடும்

அலையாடும் கரையோரம்
அரசாளும் கோட்டைகட்டி
மலைபோல சுமையினை
மக்கள்மீது ஏற்றிவிட்டு

சிரசுயர்த்தித் தலைமைகள்
சிற்றளவு பயமுமின்றிக்
கரசமோடும் குரலோடு
கலகமதைப் பிறப்பித்து
அரசெதிர்த்துக் கோசமிட்டனர்.
அந்நியரை வெளியேற்றி
முரசறையும் வெற்றியதை
முழுமையாய் பெற்றிடவே

தன்னொளி தடைப்பட்டுத்
தரணியில் அடைபட்ட
வன்மையான காலமதுவோ
வடிந்தோடிக் கண்மறைய
மென்மையான சுதந்திரம்
மேன்மையுற்று பறந்தாடப்
பன்மையான சமூகத்தில்
பசுமையாக மணம் வீசியதே !

**றமீஸ்**



# இலங்கையின் சுதந்திர தினம்

அந்நியர்களின் ஆட்சியால்
அல்லலுற்றது நம்நாடும்
அமைதியைப் பறித்தே
அலைக்கழித்ததே துயராகும்
அடிமை விலங்கை
அணிவித்தே அன்று
அகம்பாவம் கொண்டு
அகமகிழ்ந்ததே சான்று

ஆணவம் கூடியே
ஆடியது தலைக்கனம்
ஆறாத் துயரில்
ஆழ்ந்தது மௌனம்
ஆட்சியின் கொடூரம்
ஆத்திரத்தை வரைந்தது
ஆவேசம் நிறைந்திட
ஆரம்பமானது விடுதலைப்போர்

இலங்கையைக் காத்திட
இணைந்தது கரங்களும்
இயலாமை மறைந்தே
இரும்பானது மனதும்
இன்னலைக் களைந்திட
இனமதம் மறந்தே
இலக்கிலோடியது மனிதம்
இதுவே சுதந்திரம்

உன்னதம் கொண்ட
உத்தமர்களால் அன்று
உரைத்திட்ட வீரிய
உரிமைக்குரலால் இன்று
உள்ளம் மகிழ்ந்திடும்
உண்மை சுதந்திரம்
உவகை தந்தே
உயர்கிறது நல்லுணர்வும்..!

**ஏரூர் கவிமாமணி**
**எம்.ரி.எம்.அன்ஸார்**

# அம்மாவின் வீடு முழுவதும் மகனின் விடுதியின் அறைகள்

முதன் முதலாக மகனை
விடுதியில் விட்டு
பிரிந்து வரும் அம்மா
உடன் தன்னையும் விட்டு
வருகிறாள்

அதிகம் பேசுபவர்களை கண்டு
முகம் திரும்பும் அம்மா
ஊர் திரும்பி வரும் வரைக்கும்
மகனைத் தவிர
வேறெதுவுமே பேசவில்லை

வரும் வழியில் மகனின் வயதில்
யார் குறுக்கறுத்தாலும்
மகனின் சாயலில் இருப்பதாக
மறுபடியும் கதை அவிழ்க்கிறாள்

சில தருணங்களில்
அங்கேயே தரித்து விடுகிறாள்

இப்போது அம்மாவின்
உடல்தான்
எங்களோடு பயணிக்கிறது

ஆனால் அம்மா மட்டும்
இன்னும் விடுதியில்தான்
மகனோடு தங்கி இருக்கிறாள்

அம்மாவின் வீடு முழுவதும்
நிரம்பி இருக்கின்றன
மகனது விடுதியின் அறைகள்

**ஜமீல்**



# தேசமே... என் நேசமே...

இந்து சமுத்திர முத்தென மிளிர்வதெம் தாய் நாடு.
சிந்தையில் சீரிய மானிடர் வாழும் செந்நாடு

வளங்கொழி செழுமையின் தாயகம் இந்தத் தேனாடு
நலமென நீர்வளம் பொங்கிடும் பொழில் திருநாடு..

மங்கள மலர்கள் எங்கும் மலரும் பூக்காடு
திங்களின் ஒளியில் மின்னிடும் அலைகடல் சூழ் நாடு.

இரத்தினம் வாசனைத் திரவியம் விளையும் பொன்னாடு
வரமென உயர்தரத் தேயிலை கொண்ட மலைநாடு...

தந்தம் கொண்ட கரியினம் வாழும் எழில் காடு
மந்தமாருதம் குறைவிலாச் சிறக்கும் சீர்நாடு

நல்லறம் சொல்லும் நால்வகை
மதங்களின் நன்நாடு
எல்லா மாந்தரும் அன்பால் பிணைந்த பொற்கூடு

பல்லின மக்களின் ஐக்கியம் நிலைத்திட வேண்டும்
நற்கோட்பாடு
நல்லிணக்கம் மலரக் காண வேண்டும் இந்நாடு..

சங்குகள் முழங்கிடச் சுதந்திரம் பெற்றதெம் நாடு
இங்குள மானிடர் யாவரும் சமமெனப் பாரினில் இனி நீ பாடு.

இதயம் திறந்தே இணைவோம் வாரீர் யாவரும் அன்போடு
இலங்கைத் தேசத்தை உலகம் பேசட்டும் பெருமதிப்போடு.



**மக்கொனையூராள்**



# கட்டழகு பெண்

கடற்கரை மணற் தரையிலே
காற்று வாங்கி நின்றவளே
நேற்று கண்ட உன் முகத்தை
நெட்ட யுற்று நின்றேன் கண்ணே

முந்தாகி போட்ட உன் பாத த்திலே
பித்தாகி விட்டு பிரள்கின்றேனடி
காந்தமாகி தவழ்ந்த கட்டழகில்
கட்டுண்டு தவித்தேன் என் கண்ணே

கடல் அலையின் வேக வீச்சினிலே
உடல் நனைந்து விட்டதடி
விடலை பருவக் கோளாறினாலே
மடல் விரித்து மாண்டேனடி பெண்ணே

உன்நாமம் என்நாவில் தவழ்ந்ததினாலே
உறவு கொண்டு விட்டேனடி
எந்நாளும் அன்பிணைப்பு வந்ததினாலே
எதிர்ப்பின்றி ஏற்றம் காணுவம் கண்ணே

அம்பாப் பாட்டு பாடி நின்றதினாலே
ஆசை கொண்டு ஆலிங்கமானதடி
மணக்கோலம் கண்டு மகிழ்ந்திடவே
மணாளன் ஆகி விட்டேன் பெண்ணே

வெட்டவெளி வெளிச்சத்தில் ஆளிலா
நேரத்திலே
கிட்ட வந்து சொல்லிடவா சேதியை
பட்ட துயரம் பறந்தோ டிடவே
நாட்டம் கொண்டே நாம் பாடவே கண்ணே

கச்சான் காற்று கடலடியினிலே
முல்லைப்பால் வடியுதடி
கொண்டையிலடி
மச்சாள் முறைப் பெண்ணவளே
உச்சி முகந்து உறவானேன் பெண்ணே

**உடப்பூர் வீரசொக்கன்**



# வாழ்க்கை

தொலைபேசியில்
தொலைந்து
இணையத்தில்
இணைந்து
உறக்கம்
தொலைத்து

ஒய்வின்றி ஓடி
பணத்தை
நாடி
பரிதாபமாய்
காணாமல்
போனதே
காதல் வாழ்க்கை
இன்று
பல
இல்லங்களில்

அழகான
வாழ்க்கையின்
அன்பை
பகிரும்
கணப் பொழுதுகள்

காதல்
மொழி பேசும்
பார்வைகள்

சமையலறை
யுத்தங்கள்
சாமியறை
பூசைகள்
இரு
தேநீர் கோப்பை
காதல்கள்

மாலை நேர
மரத்தடி
அலட்டல்கள்
தொலை தூர
பயணங்கள்

சீண்டல்கள்
சிணுங்கல்கள்
கோபங்கள்
கொள்ளை பிரியங்கள்
இதுவல்லவா
வாழ்க்கை
இதுவே வாழ்க்கை

**சுதேசினி தினேசன்**
**ஆசிரியை**
யா/கைதடி முத்துகுமாரசுவாமி
மகா வித்தியாலயம்



# யார் யாருக்காக....

எனக்கு நீ எவ்வளவு
தேவையென்பதை
எனக்கு
நீதான் உணர்த்த வேண்டும்
உன் காதலில்

என் வாழ்வில்
எனக்கு மிக முக்கியமானதொரு
நபர் நீதானென்பதை
நீயேதான் எனக்கு
உறைக்கச் செய்யவேண்டும்

நம் காதலில்
எனக்கு நீயும்
உனக்கு நானும்
அவசியமற்றவர்களாக
இருந்துவிடுமொரு அன்பில்
என்னதான் சுவாரஸ்யமாய்
இருக்கப்போகிறது

நீயில்லாமலே
என்னால்
ஒரு துயரத்தை கடக்க
முடியுமானால்
ஒரு நிகழ்வை கொண்டாட
முடியுமானால்
நீயில்லாமலே ஒரு
நடைப்பயணத்தை
முடித்திட முடியுமானால்
நீயில்லாமலே என் தனிமைகளை

கழித்திட முடியுமானால்
எனக்கான பரிசுகளை நானே
வாங்கிக் குவித்திட
முடியுமானால்

நம் காதலில் சொல்லிச்சொல்லி
பெருமைப்பட்டுக்கொள்ள
அப்படிப் பிரமிப்பாய்
என்னதானிருந்து
விடப்போகிறது
ஒரு நாளில்

உன்னைத் தேடாத
உன்னைத் தேட வைக்காத
ஒருகாதலில்
யார் யாருக்காக
சாகத்துணிவது
மயிலிறகு மனசு

**ஷிபானா அஸீம்**



# புரியாத புதிர்...

புலர்கின்ற ஒவ்வொரு
விடியலும்
எதற்காகவானதோர்
காத்திருப்பு.....
நேற்றைய பொழுது
இன்றைக்கான காத்திருப்பு
இன்றைய பொழுது
நாளைக்கான காத்திருப்பு...

எதையோ சாதிக்கப்
பிறந்து விட்ட எண்ணம்
பெரிதாக ஏதோ கிடைக்க
போவதற்கான எதிர்பார்ப்பு...
ஆனால்...
கண்ணுகெட்டியவரை
எல்லாமே சூனியம்தான்.....

அர்த்தமற்ற வாழ்வில்
எதையோ தொலைத்து
விட்ட தேடல்.... ஆனால்.....
அது எது என்று தான்
புரியவில்லை.....

சடங்கு சம்பிரதாயங்களையும்
பழமையையும்
ஏற்க மறுக்கும் இதயத்திற்கு.....
புதுமைகளையும்
புரட்சிகளையும்
செய்வதற்கான துடிப்பு.......
அது எதற்கென்று தான்
புரியவில்லை...

முடிகின்ற நிமிடங்கள்
ஆயுளின் இறங்கு படிகள்
என்று தெரிந்தாலும்
தெரியாதது போல் பாசாங்கு
செய்யும் கோமாளி மனதுக்கு
அதற்குள் வாழ்வை
முழுமையாக வாழ்ந்து
விட பேராசை ஆனால்....
ஒரு நொடியும் வாழத்
தெரியாமல்
தொடரும்
அவலங்கள் ஏராளம்....

விடிகின்ற பொழுதுகள்
வாழ்க்கைக்கான விடிவென்று
கனவு காணும் உள்ளம்
ஆனால்.....
அப்பொழுதும் திருப்தியின்றி
மறுவிடியலுக்கு மனம் ஏங்கும்
மர்மம்தான் புரியவில்லை....

கானல் நீரை நம்பிய
வாழ்க்கை பயணம்
முடிவில் பூஜ்ஜியம் தான்.......

**ஷிபானா அப்துல் fபதா,**
பதுளை



# சுதந்திரக் காற்று

இந்து சமுத்திரத்தின் சொத்தே...
இலங்கிடும் பொன் இலங்கை முத்தே...
வல்லோன் அளித்த வரமே...
நீ வையகத்தின் வைரமே...

உன் சுதந்திரத்திற்காய் உன்னத மாந்தர்கள்
உதிரத்தை உதிரமாய் சேர்ந்தனர்

கயவர்கள் கரத்தில் இருந்து உன்னை காத்திட....
இலங்கை தேசம் எங்கும் உன் நாமம் ஓங்கிட....
இன மத பேதமின்றி கைகள் கோர்த்து
இனிதாய் சுதந்திரத்தை வென்றனர்

எட்டுத்திக்கும் பரவிடும் சுதந்திரக் காற்றை
வெண்புறா கூட்டம் கூட சுவாசிக்கின்றது
எத்திசையும் நிலைத்திடும் சமாதானக் கீற்றை
வெண்மலர் கூட்டம் சான்று பகர்கின்றது.

சகவாழ்வு, சமத்துவம்
சமாதானம் ஐக்கியம்
என்ற கோஷம் ஓங்கிட சுதந்திர தேசமே நீ உயர்ந்திடு

**உஸ்மான் ரஷ்மீ**
அல்ஹக்கானிய்யா அரபுக் கல்லூரி

# படித்ததும் பகர்வதும் 177



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### நாட்டின் மைந்தர்கள் நாம்!



இலங்கையின் 76வது சுதந்திர தினம் இன்று விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இக்கொண்டாட்டத்தில் நாட்டு மக்கள் அனைவரும் முழு மனதோடு, முழுமையான மகிழ்ச்சியோடு, அதீத விருப்போடுபங்குகொள்கிறார்களா என்பது கேள்விக் குறிதான்.

வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்து பூரணமாக விடுபட்டு, சுதந்திரம் பெற்று, 'சிலோன்' என்பது 'இலங்கை' என மாற்றம் பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், நாம் பெற்ற சுதந்திரத்தின் காரணமாக நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எந்தளவு நன்மைகள் கிடைத்துள்ளன என்பது பற்றி பல்வேறுவிதமான கருத்துக்கள் பரவலாக நிலவுகின்றன.

'சுதந்திரம் பெற்றதனால்தான் நாம் இன்று இருக்கும் நல்ல நிலையில் பல்வேறு அபிவிருத்திகளோடு, முன்னேற்றங்களோடு இருக்கின்றோம்' என்று சிலர் கூறுகின்றனர். அதேவேளை 'சுதந்திரத்தினால் கிடைத்த அனுகூலங்களை பயன்படுத்தி உரிய உயர் நிலையை எந்த வகையிலும் நாடும் மக்களும் இன்னும் பெறவில்லை' என்று மற்றும் சிலர் வாதிடுகின்றனர்.

பல இனங்களை சேர்ந்த, பல மதங்களை பின்பற்றுகின்ற, பல மொழிகளைப் பேசுகின்ற மக்கள் கலந்து, இணைந்த வாழுகின்ற நம் நாட்டில், அவர்களது உரிமைகள் அவரவர்களுக்கு சரியாக, உரிய முறையில் கிடைத்துள்ளனவா? அரச பதவிகளில் அனைவருக்கும் சம உரிமைகள் வழங்கப்படுகின்றனவா?, பொருளாதாரச் சமநிலை பேணப்பட்டுள்ளதா?, மொழிச் சுதந்திரம் முழுமையான அளவில் கிடைத்துள்ளதா? எவரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் தாம் விரும்பியவாறு வாழும் வாய்ப்பு உள்ளதா? போன்ற பல்வேறு கேள்விகளுக்கு திருப்தியான பதில்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும் சிறுபான்மையினராக இருப்பவர்கள் தமது மொழி உரிமைகளையும் மத உரிமைகளையும் முழுமையாக அனுபவிக்கும் சுதந்திரம் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று தொடர்ந்து வருத்தம் தெரிவிப்பதையும் காண முடிகிறது.

பதவிக்கு வரும் அரசாங்கங்கள் 'நாம் நாட்டின் இனப் பிரச்சினையை நிச்சயமாக தீர்த்து வைப்போம்' என்று எத்தனை முறைதான் வாக்களித்தாலும், நீண்ட காலமாக நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு சரியானதொரு தீர்வு இதுவரை எந்த ஆட்சியாளர்களாலும் வழங்கப்படவில்லை என்பதையும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவற்றை நோக்கும் போது, "மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்களின் செயற்பாடுகள் இந்நாட்டு மக்கள் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கத்தக்க வகையில் ஆட்சி செய்யவில்லை" என்ற கருத்தை எவராலும் மறுக்க முடியாதுள்ளது.

அரசியல், பொருளாதார, மொழி, மத, கருத்து, பேச்சு, எழுத்து உரிமைகள், சுதந்திரம் நாட்டு மக்கள் அனைவருக்கும் பாரபட்சம் இன்றி கிடைக்கும் வகை செய்யப்பட்டு, சட்ட ஆட்சி முழுமையாக நாட்டில் அமுல் செய்யப்படும் போதுதான், நாட்டு மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கும் நிலை உருவாகும். அத்துடன் 'நாமும் இந் நாட்டின் மைந்தர்கள்' என்ற நாட்டுப்பற்று உளப்பூர்வமாக வெளிப்படும் என்பதை மறுக்க முடியாது.

இன்றைய சுதந்திர தினம் இத்தகைய உண்மையான சுதந்திர உணர்வை நாட்டு மக்கள் அனைவர் மீதும் ஏற்படுத்த வேண்டும். நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனது உரிமைகளை பெற்று முழுச் சுதந்திரத்தோடு வாழ வேண்டும். என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்த 76வது சுதந்திரத் தினத்தில் எம் தாய் நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் உளம் நிறைந்த சுதந்திர தின நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!

## பேசும் கவிதை

### சுதந்திரம் சிரிக்கிறது!

சுதந்திரம் இங்கே கிடக்கிறது – அது
சுற்றி நடப்பதைப் பார்த்து சிரிக்கிறது

பளபள வென்றே பகட்டினைக் காட்டி
பைகளில் போதைப் பொருளினை வைத்து
தளதள வென்றே மேனியைத் தாக்கி
தகர்த்திடும் புகையிலை விற்றிட
சுதந்திரம் இங்கே கிடக்கிறது – அது
சுற்றி நடப்பதைப் பார்த்து சிரிக்கிறது

மதமும் சாதியும் கட்சிகள் வைத்து
மனிதரை பிரித்து வன்முறை வளர்த்து
பதமாய் அரசியல் நடத்தும் பலரை
விரட்டிட இயலா நிலையில் இங்கே
சுதந்திரம் இங்கே கிடக்கிறது – அது
சுற்றி நடப்பதைப் பார்த்து சிரிக்கிறது


எங்கள் நாட்டின் மானம் காத்திட
இயலா நிலையில் இளைஞர் இருந்திட
மந்தை ஆட்டினைப் போன்றே இவர்களை
மயக்கிடும் சினிமா இருந்திடும் நிலையில்
சுதந்திரம் இங்கே கிடக்கிறது – அது
சுற்றி நடப்பதைப் பார்த்து சிரிக்கிறது

சின்னத் திரையாம் டி.வியும் இங்கே
சிந்தனை இல்லா மக்களை வளர்க்க
தன்முனையற்ற தலைமுறை தழைப்பதை
தடுத்திட இயலா நிலையில் தானே
சுதந்திரம் இங்கே கிடக்கிறது – அது
சுற்றி நடப்பதைப் பார்த்து சிரிக்கிறது

– இ. முருகேசன்

## தகவல் களஞ்சியம்

### இலங்கையின் தேசியக்கொடி



இலங்கையின் தேசியக்கொடி மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும், பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன. கொடியின் பெரும்பகுதியை அடக்கியுள்ள மற்றப்பகுதி கருஞ் சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மரத்து இலைகளையும் கொண்டுள்ளது. செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும், பச்சை நிறப் பட்டை முஸ்லிம்களையும், சிங்கத்துடன் கூடிய கருஞ் சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடையும் வேளையில் இலங்கை நாட்டுக்கென தனியான கொடியின் தேவை ஏற்பட்டது. அப்போது இலங்கையின் பிரதமராக இருந்த டி. எஸ். சேனாநாயக்க இலங்கையின் கடைசி இராச்சியமான கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் ஸ்ரீவிக்கிரம ராஜ சிங்கனின் சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற போர் வாளேந்திய சிங்கக் கொடியானது சுதந்திர இலங்கையை குறிக்கும் கொடியாக அமையும் என தேர்வு செய்தார். எனினும் அக் கொடியில் தங்கள் இனத்துவங்களை பிரதிபலிக்கும் அடையாளங்கள் ஏற்படுத்த வேண்டும் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதனால் தேசிய கொடியில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, ஜீ. ஜீ. பொன்னம்பலம், ஜே. எல். கொத்தலாவல, ரி.பி. ஜாயா, எல். ஏ. ராஜபக்ச, எஸ். நடேசன், ஜே. ஆர். ஜயவர்தன என்போர் அடங்கிய பாராளுமன்றக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைக்கமைய தேசிய கொடியில் சம அளவு அகலம் கொண்ட மஞ்சள், பச்சை நிறமான இரண்டு நிலைகுத்தான பட்டைகள் உருவாக்கப்பட்டன. இதில் மஞ்சள் நிறம் தமிழரையும், பச்சை நிறம் முஸ்லிம் இனத்தவர்களையும் குறிக்கும். அத்துடன் பௌத்த மதத்தைக் குறிக்கும் வகையில் நான்கு அரச இலைகள் கொடியின் நான்கு மூலைகளிலும் இணைக்கப்பட்டன. இக்கொடியே தற்போது இலங்கையில் பயன்பாட்டில் உள்ளது.

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### அறிவை வைக்க மறந்துட்டானே!



ஒரு சமய நிகழ்வில் கடையத்தில் உள்ள வேடுவர்கள் சாமிக்குப் பூஜை போட்டனர். அப்போது, அவர்களுள் ஒருவனுக்கு திடீரென ஆவேசம் வந்து, சாமி ஆட ஆரம்பித்தபடி பின்வரும் பாட்டைப் பாடினான்.

"பாக்கும் வச்சான்; பழமும் வச்சான்;
வெத்திலையும் வச்சான்;
பொயிலையும் சேத்து வச்சான்;
ஆனால் ஒன்னு வைக்க மறந்துட்டானே...
சுண்ணாம்பில்லே; சுண்ணாம்பில்லையே!"

அப்போது அங்கு வந்தார் மகாகவி பாரதியார், அந்தப் பாட்டைக் கேட்டு பலமாகச் சிரித்து விட்டார். அருகிலிருந்தோர், "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டனர்.

"இப்பாட்டு நம் மக்களுக்குக் கூட ஒரு வகையில் பொருந்துகிறதே" என்றார் பாரதியார்.

"எப்படி?" என்று எல்லோரும் ஒரே குரலில் கேட்டனர்.

"நம்நாட்டு மக்களுக்குக் கடவுள்
நிலமும் வச்சான், பலமும் வச்சான்,
நிகரில்லா செல்வம் வச்சான்.
ஆனால், ஒன்னு வைக்க மறந்துட்டானே?"
என்று பாடி நிறுத்தினார் பாரதியார்.

"அது என்ன ஐயா?" என்று மீண்டும் அவர்கள் கேட்டார்கள்.

"அறிவை வைக்க மறந்துட்டானே,
மண்டையில் அறிவை வைக்க மறந்துட்டானே..."
என்று சொன்னார் பாரதியார். இதைக் கேட்ட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

## சிந்தனை செய் மனமே

### அன்புடன் செல்வமும் வெற்றியும்!

ஒரு கிராமத்தில், ஒரு பெண் தனது வீட்டிற்கு வெளியே மூன்று வயதானவர்கள் அமர்ந்திருப்பதைக் கண்டாள், அவர்கள் சிறிது நேரம் அங்கேயே அமர்ந்திருந்தார்கள். அதனை அவதானித்த அந்தப் பெண் வெளியே சென்று அவர்களிடம், "உங்களை எனக்குத் தெரியாது, ஆனால் நீங்கள் இங்கே நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பதை நான் பார்த்தேன், நீங்கள் பசியுடன் இருக்க வேண்டும். தயவு செய்து உள்ளே வந்து ஏதாவது சாப்பிடுங்கள்." என்று சொன்னாள்.

அவர்களில் ஒருவர் கேட்டார், "வீட்டின் ஆண்கள் யாராவது வீட்டில் இருக்கிறார்களா?'

அவள், 'இல்லை' என்று பதிலளித்தாள்.

'அப்படியானால் உள்ளே வர முடியாது' என்றார்கள்.

அந்தப் பெண் உள்ளே சென்றாள். மாலையில் கணவன் வந்ததும் வெளியில் அமர்ந்திருந்தவர்களையும் நடந்ததையும் கணவனிடம் கூறினாள். அவர் தனது மனைவியிடம் அந்த ஆண்களை உள்ளே அழைத்து வரச் சொன்னார்.

அவள் வெளியே சென்று அவர்களிடம் சொன்னாள். "என் கணவர் இப்போது வீட்டில் இருக்கிறார். அவர் உங்கள் அனைவரையும் அழைக்கிறார். தயவு செய்து உள்ளே வந்து எங்களுடன் உணவு உண்ணுங்கள் ".

அவர்கள் பதிலளித்தார்கள், "நாங்கள் ஒன்றாக வீட்டிற்குள் வர மாட்டோம்".

ஏன் என்று அவள் கேட்டபோது, முதியவர் ஒருவர் விளக்கினார். அவர் தனது நண்பர் ஒருவரைச் சுட்டிக்காட்டி கூறினார்: "அவன் பெயர் செல்வம். அவர் உன்னுடன் வந்தால், உங்கள் வீட்டில் எப்போதும் செல்வம் நிறைந்திருக்கும்".

பின்னர் மற்றொரு முதியவரைக் காட்டி அவர் கூறினார்: அவர் பெயர் வெற்றி. அவர் உங்களுடன் சென்றால், நீங்கள் தொடங்கும் எந்த முயற்சியிலும் வெற்றி பெறுவீர்கள்."

பின்னர் அவர் தன்னை 'அன்பு' என்று அறிமுகம் செய்து கொண்டார். நான் உன்னுடன் வீட்டுக்கு வந்தால், உன் வீடு எப்போதும் அன்பால் நிறைந்திருக்கும். என்று கூறி அவளை உள்ளே சென்று அவர்களில் யாரை அவர்கள் வீட்டுக்கு அழைக்க வேண்டும் என்று கணவருடன் ஆலோசிக்க சொன்னார்.

அதைக் கேட்ட அவளது கணவன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். 'செல்வத்தை அழைப்போம். அவர் வந்து நம் இல்லத்தை செல்வத்தால் நிரப்பட்டும்' என்று கூறினார்.

அவரது மனைவி அதனை ஏற்கவில்லை, 'நாம் ஏன் வெற்றியை அழைக்கக்கூடாது? நாம் எல்லாவற்றிலும் வெற்றி பெறலாமே' என்று கேட்டாள்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்களின் மருமகள் அவர்களிடம் வந்து, 'அன்பை நம் வீட்டிற்கு அழைத்தால் நன்றாக இருக்கும் அல்லவா? அப்போது எங்கள் இல்லம் என்றென்றும் அன்பினால் நிறைந்திருக்கும்.' என்று ஆலோசனை கூறினாள்.

கணவனும் மனைவியும் அதனை ஏற்றுக்கொண்டனர். அந்தப் பெண் மீண்டும் வெளியே சென்று சொன்னாள். 'உங்களில் யார் அன்பு? தயவு செய்து உள்ளே வந்து எங்கள் விருந்தினராக இருங்கள்.'

அன்பு எழுந்து வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அப்போது மற்ற இருவரும் எழுந்து அவரைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள்ளே சென்றனர்..

ஆச்சரியமடைந்த அந்தப் பெண் கேட்டாள், 'எல்லோரும் ஒன்று சேர்ந்து வர முடியாது என்று சொன்னீர்கள். நான் அன்பை மட்டுமே அழைத்தேன். நீங்கள் அனைவரும் ஏன் உள்ளே வருகிறீர்கள்?'

அப்போது, "செல்வத்தையோ வெற்றியையோ நீங்கள் அழைத்திருந்தால் மற்ற இருவரும் வெளியில் தங்கியிருப்பார்கள், ஆனால் நீங்கள் அன்பை அழைத்ததால், அவர் எங்கு சென்றாலும், நாங்கள் அவருடன் சேர்ந்து செல்கிறோம்" என்று முதியவர்கள் பதிலளித்தனர்.

ஆமாம். அன்பு இருக்கும் இடத்தில் செல்வமும் வெற்றியும் கூடவே வரும்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்ப் (WhatsApp): 0777314207

---




# வந்து விட்டதே துர்காவின் மீது சந்தேகம்! கொஞ்சம் நடுங்கியதே சிந்துஜனின் தேகம்!

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்

சற்று நேர அமைதிக்குப் பிறகு,

"ம்.. இந்த வாசல் வழியாகத்தான் கொலைகாரன் உள்ளே வந்திருக்க வேண்டும்!"

சிந்துஜன்தான் சொன்னான்!

சிரஞ்சீவி எதுவுமே பேசாமல்,

அந்த அறையை ஆராய்ந்து கொண்டிருந்தார்!

அதேநேரம், பரபரப்புடன் ஓடி வந்த பிரதம வேலைக்காரன் மாது,

"ஐயா, துர்கா அம்மாவின் அறை பூட்டப்பட்டிருக்கிறது. தட்டிப் பார்த்தேன், ஆனாலும் திறக்கவே இல்லை."

அவன் இப்படிச் சொன்னதும்,

சிந்துஜனுக்கு சைகை காட்டிவிட்டு, விரைந்து ஓடினார் சிரஞ்சீவி!

அவரை பின் தொடர்ந்து ஓடினான் சிந்துஜன்!

துர்காவின் அறைக்கு முன்னால் வந்து நின்றார்கள்.

உட்பக்கமாக சாத்தப்பட்டிருந்த கதவைத் தட்டினார்கள்!

அப்போதும்,

கதவு திறக்கப்படவில்லை!

"துர்கா! துர்கா! என்று, பெயரைச் சொல்லி கதவைத் தட்டினார்கள்!

அடுத்து, அறைக் கதவைத் திறந்து கொண்டு,

துர்கா வெளியே வரவில்லை!

இதற்கு மேலும் காத்திருப்பது பைத்தியக்காரத்தனம் என்பதைப் புரிந்து கொண்டே சிந்துஜன்,

கொஞ்சம் பின்னால் சென்று, சாத்தப்பட்டிருந்த கதவில்,

ஓங்கி ஓர் உதை விட்டான்!

அடுத்து, கதவு இரண்டாக உடைந்து விழுந்தது!

இருவரும் உள்ளே ஓடினார்கள்!

உள்ளே, கட்டிலில், துர்கா, இறந்து கிடக்கவில்லை!

அவள் அங்கே இருந்ததற்கான அடையாளமே இருக்கவில்லை!

"ம். .சிந்துஜன், நேற்று இரவு போனவள் இன்னும் வரவில்லை என்று நினைக்கிறேன்!" கட்டிலை உற்றுப் பார்த்தபடியே சொன்னார் சிரஞ்சீவி.

சிந்துஜன்,

எதுவும் பேசாமல்,

அமைதியாகவே நின்றான்!

அவன் விழிகளில்,

அச்சத்தின் ரேகைகள் படர்ந்திருந்தன!

"சரி, மாது, நாம் போய் செல்வராகவன் ஐயாவின் படுக்கை அறையை கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம்!" சொல்லியபடியே,

முன்னால் நடந்தார் சிரஞ்சீவி,

மற்ற இருவரும்,

அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

அந்த அறையும்,

சாத்தப்பட்டிருந்தது!

ஆனாலும்,

தன்னிடம் இருந்த மாற்று சாவியைப் பயன்படுத்தி,

அறையைத் திறந்துவிட்டான் மாது

உள்ளே சென்று பார்த்தார்கள்,

அந்த அறைக்குள் இருந்த கட்டிலில்,

விரிப்புகள் எதுவும் கசங்காமல் அப்படியே இருந்தன.

இதிலிருந்து,

அந்தக் கட்டிலில்,

செல்வராகவன் படுக்கவில்லை என்பதை, சிரஞ்சீவி புரிந்து கொண்டார்.

"ம்.. நான் நினைத்தது சரியாகத் தான் இருக்கிறது! துர்காவைப் போலவே செல்வராகவனும் நேற்றிரவு இந்த வீட்டில் தூங்கவே இல்லை! சொல்லியபடியே,

இன்னும் கொஞ்சம் முன்னால் சென்றார்!

அங்கே,

பாதி திறந்திருந்த ஒரு சிறிய கதவு,

அவர் கவனத்தைக் ஈர்த்தது!

அதன் அருகில் சென்று பார்த்தால் பக்கவாட்டில்,

கீழே இறங்கிச் செல்வதற்கான சிறிய படிக்கட்டொன்று இணைக்கப்பட்டிருந்தது!

இருள் நிறைந்திருந்த அந்தப் படிக்கட்டின் வழியாக,

எல்லோரும் கீழே இறங்கினார்கள்!

அது,

செல்வராகவனின் ஆபிஸ் அறை!

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்ட சிரஞ்சீவி,

"ஏன்? மாது? செல்வராகவன் ஐயா பணம் வைத்திருக்கும் இடத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" மாதவனைப் பார்த்துக் கேட்டார்.

"தெரியும் ஐயா, அது ஒரு சிறிய இரும்புப் பெட்டி. அதிக விலை உயர்ந்த பொருட்கள் எதையும் அவர் அதில் வைப்பதில்லை! வீட்டுச் செலவுக்குத் தேவையான கொஞ்சம் பணமும், சின்னம்மாவுக்குத் தேவையான கொஞ்சம் நகைகளும் தான் அதில் இருக்கும். பெறுமதியான பொருட்களை எல்லாம் வங்கியில்தான் வைத்திருக்கிறார். வாங்க ஐயாவோட அந்த இரும்புப் பெட்டியை காட்டுகிறேன்!" என்று சொல்லிவிட்டு,



நிறையவே புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றான் மாதவன்!

"ம்.. இந்த இரும்புப் பெட்டியின் சாவி யாரிடம் இருக்கிறது?"

"ஒரு சாவி, செல்வராகவன் ஐயாவிடம். மற்றது துர்கா சின்னம்மாவிடம்!"

அதைக்கேட்டு விட்டு,

சிந்தனையுள் மூழ்கினார் சிரஞ்சீவி!

விரைந்து சென்று கொண்டிருந்தது நேரம்

அந்த அறைக்குள் அமைதி!

"சரி, அடுத்து நாம் என்ன செய்வது?" அமைதிக்கு சாவு மணி அடித்தபடியே கேட்டான் சிந்துஜன்.

"இப்போதா? இப்போது நாம் ஏதாவது வயிறு முட்ட சாப்பிடுவோம். காலையில் இருந்து இன்னமும் எதுவும் சாப்பிடவில்லை அல்லவா?"

அடுத்து, இருவரும் சென்று நன்றாக சாப்பிட்டார்கள்!

ஆனாலும், சிந்துஜன், ஏதோ சாப்பிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்!

"என்ன சிந்துஜா, துர்காவைப் பற்றி எண்ணி உனது மனம் சஞ்சலப்படுகிறது இல்லையா?" சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொண்டபடியே, சோர்ந்து போய் அமர்ந்திருந்த,

சிந்துஜனைப் பார்த்துக் கேட்டார் சிரஞ்சீவி!

பயங்கரமான இந்தக் காரியத்தில் அவளுடைய பங்களிப்பு எதுவும் இருக்குமென்று நான் நினைக்கவில்லை! இவ்வளவு ஒரு அழகான பெண் இப்படி ஒரு காரியத்தில்!" அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை!

"ம்..இவளைவிட அழகான பெண்கள் பயங்கரமான காரியங்களில் ஈடுபட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன் சிந்துஜன்!"

"ஆனாலும் இவள் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்க முடியாது?" தனது மாமனாரை முறைத்துப் பார்த்தபடியே சொன்னான் சிந்துஜன்.

"அவள் இதில் சம்பந்தப்பட்டிருப்பாள் என்று நான் உறுதி செய்யவில்லை. அதனால் தயவு செய்து என் மேல் பதிந்திருக்கும் உனது விழிகளைத் திருப்பிக் கொள்!" ஒரு விழியை மூடியபடியே, புன்னகையை அதரங்களில் தவழவிட்டார் சிரஞ்சீவி!

"ஆனாலும் மாமா, இது நடக்க முடியாத ஒரு சம்பவம்! அவளால் எப்படி ஒரு மனிதனைத் தூக்கிச் செல்ல முடியும்?"

"உண்மைதான். அவளால் மட்டுமல்ல திடகாத்திரமான ஒரு மனிதனால் கூட அவரை தூக்கிச் செல்ல முடியாது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் எனக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது!"

"என்ன அது?"

"நேற்று இரவு தோமஸ் துர்காவுக்கு சைகை காட்டியுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது!"

"அப்படியானால் அவர் எங்களிடம் சொன்னது பொய்யா?"

"ஆமாம் பச்சைப் பொய்! சகதி நிறைந்த இடத்தில் இருந்து எடுத்த சப்பாத்தையும் ஊத்தை வாளியில் இருந்த சப்பாத்தையும்தான் நாங்கள் இங்கே வந்தபோது அவள் அணிந்திருந்தாள். எனது நம்பிக்கை இதனால் நேற்று இரவு அந்த இடத்திற்கு துர்கா போகிருக்கிறாள் என்பது உறுதியாகிறது."

சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, சிந்துஜன் மீண்டும் பேசினான்.

"இல்லை, இல்லை அது சாத்தியமில்லை! அந்த சைகை துர்காவிற்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை" அவளது அறை இருப்பது மேல் மாடியின் இடது பக்கத்தில்!"

சிந்துஜன் இப்படிச் சொன்னதும், திடீரென்று புருவங்களை உயர்த்தி, சிந்திக்க ஆரம்பித்தார் சிரஞ்சீவி!

சிரஞ்சீவி இதுவரையில் கட்டி வந்த மாளிகை,

தூள் தூளாவது போல், சிந்துஜனுக்குத் தோன்றியது.

"ம்.. உனது கண்டுபிடிப்பு சரிதான் சிந்துஜன் நீ ஒரு சிறந்த துப்பறியும் நிபுணராக வருவாய் என்பதில் இப்போது எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது! என்றார் சிரஞ்சீவி.

தனக்கு கொடுக்கப்பட்டிருந்த வேலையை முடித்துவிட்டு,

இன்ஸ்பெக்டர், அருகே வந்தபோது, பத்து மணியாகியிருந்தது.

துர்கா காணாமல் போன விஷயத்தைக் கேள்விப்பட்டதும்,

அவர் வியப்பில் விழுந்தார்!

"அவள் நேற்று இரவே கொழும்புக்குப் போயிருப்பாள் என்று எண்ணுவதற்கு வாய்ப்பில்லையா?"

"பல விதமாகவும் சிந்திக்கலாம் இன்ஸ்பெக்டர். ஒரு வேளை செல்வராகவனுக்கு ஏற்பட்ட கெதி அவளுக்கும் ஏற்பட வாய்ப்பிருக்கிறதல்லவா?" புதிதாக ஓர் ஐயத்தைக் கிளப்பினான் சிரஞ்சீவி!

இதனால், மிகவும் ஆடிப் போனவன்,


சிந்துஜன்தான்.

"உண்மையாகவே உங்களுக்கு அப்படித் தோன்றுகிறதா மாமா?" பரிதாபமாகக் கேட்டான் சிந்துஜன்!

அவன் குரல் நன்றாகவே உடைந்து போயிருந்தது!

(தொடரும்..)

சுகந்தி



இல்வாழ்க்கை : தென்புலத்தார் தெய்வம் விருந்தோக்
கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

*தெளிவுரை :*

*தென்புலத்தார், தெய்வம் விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்.*



# எமது நாட்டின் பெருமை கூறும் தேசிய கீதம்

உலக நாடுகள் அனைத்திலும் அந்தந்த நாட்டுக்கென தேசிய கீதங்கள் அமைக்கப்பட்டு பாடப்பட்டு வருகின்றன. சுதந்திரம் கண்ட எமது இலங்கை திருநாட்டிலும் தேசிய கீதம் பாடப்பட்டு வருவது நாம் அறிந்தது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி எமது நாடு கண்ட சுதந்திரத்தின் போது அமைக்கப்பட்ட இந்த தேசிய கீதம் ஏனைய நாடுகளின் தேசிய கீதத்திலும் அழகு மிக்கது, இனிமை வாய்ந்தது. அதன் இசை கேட்பதற்கு ஆசை தருவது.

எமது தேசிய கீதத்தில் எமது நாட்டின் வளங்கள், சிறப்புக்கள் யாவும் கூறப்படுகின்றன. இது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். இவற்றுக்கும் மேலாக நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையும் எமது தேசிய கீதம் உணர்த்துகிறது. கருத்தாழம் நிறைந்த எமது தேசிய கீதத்துக்கு இலங்கையர் ஒவ்வொருவரும் மதிப்பு கொடுக்க வேண்டியது கடமையாகும்.

இப்படியாக பல சிறப்புகள் கொண்ட எமது தேசிய கீதத்தை ஆனந்த சமரக்கோன் அமைத்துக் கொடுத்தார். இதன் மூலம் அவர் இலங்கை வரலாற்றிலே முக்கிய இடம் பெறுகிறார். மக்களின் பாராட்டுக்குரியவராக மதிக்கப்படுகிறார். ஆனந்த சமரக்கோன் இந்தியாவின் ரவிந்திரநாத் தாகூரின் மாணவராக இருந்து பாடம் படித்து வந்துள்ளார்.

1939 இல் நாடு திரும்பிய அவர் உயர்கல்விப் பணிகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார். அன்று நிதியமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆலோசனைக்கு ஏற்ப ஆனந்த சமரகோன் அமைத்த "நமோ நமோ மாதா" என்று தொடங்கும் தேசிய கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொடர்ந்து வந்த நான்காவது சுதந்திர தினத்தின் போது முதன் முதலாக கொழும்பு மியூசியஸ் கல்லூரி மாணவர்கள் இந்த தேசிய கீதத்தை பாடியிருக்கிறார்கள். அது இலங்கை வானொலி மூலம் நாடெங்கும் ஒலிபரப்பப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

எமது தேசிய கீதம் சிங்களத்திலிருந்து, தமிழுக்கு மொழி பெயர்த்தவரான மு. நல்லதம்பிப் புலவர் வரலாற்றிலே முக்கிய இடம்பெறுகிறார். கடந்த சில வருடங்களுக்கு முன் நடைபெற்ற சுதந்திரதின விழாவின் போது தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட தேசிய கீதமும் உத்தியோகபூர்வமாக பாடப்பட்டதை இங்கு ஞாபகப்படுத்த முடியும். தொடர்ந்து வரும் சுதந்திர தின விழாக்களின் போதும் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று பலர் தங்களது விருப்பத்தை தெரிவித்து வருகின்றனர்.

எமது தேசிய கீதத்துக்கான இசையையும் ஆனந்த சமரக்கோன் அவர்களே அமைத்திருக்கிறார் என்பதையும் இங்கு குறிப்பிட முடியும். நாட்டில் அவ்வப்போது நடைபெறும் விழாக்களின் போதும் அரசாங்க காரியாலயங்கள், பாடசாலைகள், தொழில் நிறுவனங்கள் ஆகிய நிலையங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளின் போதும் தேசிய கீதம் பாடப்பட்டு வருவது சிறப்புக்குரியதாகும். வானொலி தொலைக்காட்சி ஒலிபரப்புகளின் போதும் தேசிய கீதம் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

தேசிய கீதம் பாடப்படும் போது நாம் நேராக எழுந்து நின்று அதற்கு மரியாதை செய்ய வேண்டும். தேசபக்தியுடன் பாட வேண்டும். அல்லது கேட்க வேண்டும். நாம் அனைவரும் எமது நாட்டு தேசிய கீதத்தை மதிப்போம்.

தேசிய கீதம் எமது நாட்டுக்குக் கிடைத்த வெற்றியாகும் என்பதை பெருமையுடன் கூறுவோம்.

**எம்.ஏ. அத்தாஸ் - மாத்தறை**

## எமது சுதந்திரம்

அந்நியர் ஆட்சி வேண்டாம்
அடிமை தளை வேண்டாம்
கோபமும் பகைமையும் வேண்டாம்
சுதந்திரமும் விடுதலையுமே வேண்டும்
சமாதானமும் ஐக்கியமுமே வேண்டும்
நீதியும் நியாயமுமே வேண்டும்

சுதந்திர வீரர்கள் அன்று
எழுப்பிய குரல் அல்லவா இது
செவிகளில் இன்னமும்
ஒலிப்பது போல கேட்குதே
அன்றைய தியாகிகளை
நினைவு கூரும்
இந்நாள், நந்நாளல்லவா

இரத்தம் சிந்தா போர் செய்து
அந்நியர் ஆட்சியை
ஒழித்துக் கட்டிய
சுதந்திர வீரர்களின்
புகழ்பேசும்
இந்நாள், நந்நாளல்லவா

சுதந்திரம் கண்டு
எங்கள் நாடெங்கும்
ஆனந்தம் பெருகுது
தேசிய கொடிகள் பறக்குது
ஆலய மணிகள் ஒலிக்குது
தேசிய கீதம் கேட்குது
கோயில் பூசை நடக்குது
சுதந்திரத்தை வரவேற்கும்
நிகழ்வுகள் அல்லவா இது

காரிருள் நீங்கி
நல்லொளி வீசிட
கொடூரம் மறைந்து
சுபீட்சம் பிறந்திட
அஞ்ஞானம் அகன்று
மெஞ்ஞானம் தோன்றிட
நாம் கண்ட சுதந்திரம்
துணையாக வேண்டும்

மக்கள் உரிமை மதிக்கப்படவும்
அடிமை வாழ்வு ஒழிந்திடவும்
வறுமை துயர் நீங்கிடவும்
சண்டை குழப்பம் விலகிடவும்
போட்டி பொறாமை அகன்றிடவும்
நாம் கண்ட சுதந்திரம்
துணையாக வேண்டும்

சுதந்திரத்தின்
பெருமை மட்டும்
பேசினால் போதுமா
செயலிலும் அது விளங்க வேண்டுமே...!

என்றும் எங்கும்
புகழ் மணம் வீசும்
எமது சுதந்திரத்தை
பாதுகாப்போம்
இன ஐக்கியத்துடன்
ஒன்றாய் வாழ்வோம்
இலங்கை மாதாவின்;
புகழ் ஓங்க
வாழ்த்துவோம்!

**எம்.ஏ.அத்தாஸ், மாத்தறை**

## இவ்வார மழலை




க. அவினாஷ்

கமல் – இந்துஷா

## வயிற்று வலிக்கு மருந்தாகும் சொக்லேட்

சில நூற்றாண்டுகளுக்கு முன் சொக்லேட் கண்டுபிடிக்கப்பட்ட புதிதில், சொக்லேட்கள் வயிற்றுவலிக்கான மருந்தாக உபயோகப்படுத்தப்பட்டன. சொக்லேட் சாப்பிட்டால் வயிற்றுவலி குணமடைவதாக மக்களும் நம்பினார்கள்.

சொக்லேட்டில் இருக்கும் *Theobromine* என்ற வேதிப்பொருளும் காஃபியில் இருக்கும் *Caffeine*னும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. இதில் சொக்லேட்டில் இருக்கும் *Theobromine*, நரம்பு மண்டலத்தையும், இரத்த ஓட்டத்தையும் தூண்டக்கூடியது. இதனால்தான் இதை சாப்பிட்டவுடன் இரத்த அழுத்தத்தில் கொஞ்சம் மாறுதல் இருக்கும். நாய், குதிரை போன்ற விலங்குகளுக்கு மனிதர்களைப் போல் *Theobromine* வேதிப்பொருளை ஏற்றுக்கொள்ளும் உடலமைப்பு கிடையாது. சொக்லேட் சாப்பிடும் நாய்கள் இறந்துவிடும் அபாயம் அதிகம்.



## கண்ணீர் மூன்று வகை

அழுகையை அடக்குவதால் ஹோர்மோன் பிரச்சினைகள் ஏற்பட்டு உடல் எடை கூடுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால், நாம் சிரிக்கும்போது எவ்வளவு கலோரிகள் வெளியேற்றப்படுகின்றனவோ அதே அளவு கலோரிகள் நாம் அழும்போதும் நம் உடலிலிருந்து வெளியேற்றப்படுகின்றன.

நம் கண்ணீர் பார்ப்பதற்கு (!)ஒரே மாதிரி இருந்தாலும், இதிலும் 3 வகைகள் இருக்கின்றன.


*Basal tears – அடிப்படை கண்ணீர்* – நம் கண்களை எப்போதும் ஈரப்பசையுடன் வைக்க உதவுகிறது.

*Reflexive tears – எதிர்வினைக் கண்ணீர்* – கண்களில் தூசு விழும் போதும், வெங்காயம் நறுக்கும்போதும், இருமும்போதும், தும்மும் போதும் வரும் கண்ணீர்.

*Psych tears – உணர்வுசார் கண்ணீர்* – கோபம், மன அழுத்தம், பயம், துக்கம் இவை மட்டுமல்ல அளவுகடந்த சந்தோசத்தாலும் வரும் கண்ணீர். இந்த வகைக் கண்ணீர், மன அழுத்தத்தாலும் கவலையினாலும் நம் உடலில் சேர்ந்திருக்கும் நச்சுப்பொருட்களை வெளியேற்ற உதவுகிறது.

உணர்வுசார் கண்ணீர், மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. அழுதுமுடித்தவுடன் புத்துணர்ச்சியுடனும் லேசான மனதுடனும் இருக்க இதுவே காரணம்.

## போத்தல்களால் உருவாக்கப்பட்ட பௌத்த ஆலயம்



போத்தல்களால் உருவாக்கப்பட்ட பௌத்த ஆலயம் ஒன்று தாய்லாந்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்தில் Khun Han என்ற இடத்தில் அமைந்திருக்கும் புத்தர் கோயிலின் பெயர் Wat Pa Maha Chedi Kaew. சுருக்கமாகச் சொன்னால் "The Million Beer Bottle Temple". வெற்று பியர் போத்தல்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பது தான் இதன் சிறப்பாகும். கிட்டத்தட்ட 1.5 மில்லியன் போத்தல்கள் இந்தக் கோயிலில் பதிக்கப்பட்டுள்ளன.

குப்பையில் வீசப்படும் போத்தல்களைக் கொண்டு இப்படி ஒரு கோயிலைக் கட்டுவதற்காக இக் கோயிலில் இருக்கும் பௌத்த மதத் துறவிகள் 1984ஆம் ஆண்டு முதல் போத்தல்களைச் சேமிக்க ஆரம்பித்துள்ளனர்.



பச்சை கலரில் இருக்கும் பியர் போத்தல்களும், பிரவுன் கலரில் இருக்கும் தாய்லாந்து பியர் போத்தல்களும் அழகழகான வடிவங்களில் இங்கு பதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டடத்தில் இருக்கும் போத்தல்களின் மூடிகளைக் கொண்டு தரையில் விதவிதமான வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கோயிலுக்கு வரும் மக்களிடமும், உள்ளூர் மக்களிடமும் விருப்பமிருந்தால் வெற்று போத்தல்களைச் சேமித்து உதவுமாறு இங்கிருக்கும் பௌத்தத் துறவிகள் கேட்டுள்ளனர்.

## Rainbow Mountains



*சீனாவின் Danxia Landform Geological Park இல் இருக்கும் இந்த மலைகளுக்குப் பெயர் "Rainbow Mountains". 24 மில்லியன் ஆண்டுகளாக இருக்கும் இந்த மலைகளுக்கு இப்படி வண்ணம் பூசி அழகு பார்க்கிறது இயற்கை.*

*பல்லாயிரம் ஆண்டுகளாக ஒன்று சேர்ந்து இருந்த மணற்கற்களும் தாதுப்பொருட்களும், அவ்வப்போது வந்து அரவணைத்த மழையும், எப்போதும் உடனிருந்த காற்றுமே இந்த வண்ணங்களுக்குக் காரணம் என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 100

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | ■ | 04 |
| ■ | 05 | ■ | ■ | 06 | 07 |
| 08 | 09 | 10 | ■ | 11 | ■ |
| ■ | 12 | 13 | 14 | 15 | ■ |
| 16 | ■ | 17 | ■ | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | ■ | 24 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஈரூடகவாழி உயிரினம்.
(6) பிரித்தானிய நீட்டலளவை அலகு. பன்னிரண்டு அங்குலம் அல்லது முப்பது சென்றிமீற்றர்.
(8) நன்னீர்நிலைகளில் ஒன்று இது. விவசாயம், குடிநீர், நீர்மின்சாரத் தயாரிப்பு போன்ற தேவைகளுக்காக தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ள இடம்.
(12) விறகு போன்ற பொருட்களை தீயிலிட்டு எரித்தால் மிஞ்சுவது இது. (தலைகீழான சொல்)
(18) சுவரில் ஏதாவது படத்தை தொங்கவிடுவதானால் இது அவசியம். சுவரில் இதனை பதிப்பதற்கு சுத்தியலும் தேவை. (தலைகீழான சொல்)
(20) சிறுதூறல்களாக மழை பெய்கின்ற வேளையில், வானத்தில் சூரியனுக்கு எதிர்த்திசையில் தோன்றுகின்ற வண்ணஜாலம் கொண்ட வளையம் இது.

**மேலிருந்து கீழ்**

(2) இல்லாதோருக்கு வாரிவழங்கும் கொடையாளியைக் குறிக்கின்ற சொல். பாரி, கர்ணன் போன்ற அரசர்கள் இப்பெயரால் குறிப்பிடப்படுகின்றார்கள்.
(4) இலட்சத்தின் நூறு மடங்கு.
(6) வண்டியின் சில்லுகள் கழன்று விடாமலிருப்பதற்காக பூட்டப்படுவது. இது இன்றேல் வண்டி உருண்டோட மாட்டாது.
(10) நிலைக்கண்ணாடியின் முன்னால் நின்று பாருங்கள். கண்ணாடியில் தெரிகின்ற உங்கள் தோற்றம் இது. (தலைகீழான சொல்)
(16) முக்கனியில் இது மூன்றாவது. (தலைகீழான சொல்)
(19) ஆழமாக உள்ளதால் இப்பெயர் வந்தது. சாகரம், சமுத்திரம் என்றெல்லாம் கூறலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 99

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தேர்தல் 06. கரு 08. வீடு 10.நாளை 12. கான்
15. கரை 19. மனைவி 22. அணில் 25.பாதை

**மேலிருந்து கீழ்**

02. நாகர் 03. தரு 05. வீணை 10. காளை
12. மகன் 17. கவிதை 18. மணி 20. பானை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 98

### பாராட்டு பெறுவோர்

1. **சாரான் அப்துல் றகீம்**
தரம் 06, அல் - அமான் மு.ம. கல்லூரி,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

2. **கு. துவாகரன்**
தரம் 06C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை.

3. **ஸியான் எம். மிலான்**
தரம் 06, அசனாகொடுவ மு. வித்தியாலயம்,
அசனா கொடுவ கூரடி ஹேன.

4. **எஸ்.எம்.எம். ஷஹ்றானா**
தரம் 08, கம்பளை ஸாகிரா கல்லூரி,
இல. 282/1, ஜயமாலபுர, கம்பளை.

5. **எஸ்.எப். சிம்லா**
தரம் 04, கெ/ப, முஸ்லிம் வித்தியாலயம்,
இல. 323/1, பலகொல்ல, கண்டி.

6. **ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 07E, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

7. **எம்.ஏ. அத்லான்**
தரம் 07, தி/கிண்/ கிண்ணியா மு.ம. வித்தியாலயம்,
கிண்ணியா.

8. **எம்.எச்.எம். சைப்**
தரம் 04B, அல் ஹிலால் மத்திய கல்லூரி,
நீர்கொழும்பு.

9. **தி. மனுஜன்**
தரம் 07V, கமு/ விபுலானந்த மத்திய கல்லூரி,
இல. 186, திருமால் முக வீதி, காரைதீவு 07.

10. **அப்தார் நூரி**
தரம் 07, டி.எஸ். சேனாநாயக்க கல்லூரி,
கொழும்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 100
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# விளையாட்டு



# விலகிய தடையும் விலகாத பிரச்சினைகளும்

எதிர்பார்த்தது போன்று சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் இலங்கை கிரிக்கெட் மீதான தடையை நீக்கியது. "அங்கத்துவத்திற்கான கடப்பாட்டை இலங்கை கிரிக்கெட் தொடர்ந்தும் மீறவில்லை என்பதில் தற்போது திருப்தி அடைந்துள்ளோம்" என்று ஐ.சி.சி. தடையை நீக்குவதற்கான காரணத்தை கூறியிருந்தது.

அண்மைக்காலத்தின் சாதகமான நகர்வுகள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் எதிர்வுகூறலைத் தொடர்ந்தே கடந்த ஜனவரி 28 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் மீதான தடை நீக்கப்பட்டது.

கடந்த நவம்பர் 10 ஆம் திகதி ஐ.சி.சி. இலங்கை கிரிக்கெட் மீது தடை விதிப்பதற்கு உடனடிக் காரணம், அப்போது நடந்து கொண்டிருந்த ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் படு தோல்வியைத் தவிர வேறு எதுவும் இல்லை.

ஏற்கனவே இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திற்கும் அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் அவரின் சகாவான அர்ஜுன ரணதுங்கவுக்கும் இடையே நீடித்த முறுகல் இலங்கையின் தோல்வியோடு உச்சம் பெற்று இலங்கை கிரிக்கெட் சபையை நீக்கி, அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் இடைக்கால சபை ஒன்றை அமைக்க, மறு நாளே நீதிமன்றம் மீண்டும் கிரிக்கெட் சபையை கொண்டுவர, அதற்குள் அரசியலில் இந்த விவகாரம் பேசுபொருளாக மாற, எல்லாமாக சேர்த்து இலங்கை கிரிக்கெட் சபையின் தடையில் முடிந்தது.

ஒருவேளை உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்தால் கதையே மாறியிருக்கும். ஐ.சி.சி. இலங்கை கிரிக்கெட்டின் மீது தடை விதிப்பதற்கு காரணம் அரசியல் தலையீடு. எனவே, தடைக்கு பின்னர் இலங்கை அரசியலிலும் இது மாற்றத்தைக் கொண்டுவந்தது.

விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பதவி நிக்கப்பட்ட பின் புதிதாக நியமிக்கப்பட்ட ஹரீன் பெர்னாண்டோ இலங்கை கிரிக்கெட்டுடன் ஒத்துப்போவதைப் பார்க்க முடிந்தது.

தேர்வுக் குழுவில் மாற்றம், பயிற்சி குழாத்திலும் மாற்றங்கள், அதனை ஒட்டி அணியின் கட்டமைப்பில் மாற்றம் என்ற தொடர்ச்சியில் தடை நீக்கம் வந்திருக்கிறது.

இந்த மாத ஆரம்பத்தில் ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரி இலங்கை வந்திருந்தார். அவர் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவை சந்தித்து பேசி இருந்தார். அப்போதே தடை விலகப்போவதற்கான சமிக்ஞை கிடைத்தது.

ஆனால் தடையை விலக்கிக் கொள்வதற்காக கடந்த



இரண்டு மாதங்களில் இலங்கை சில விட்டுக்கொடுப்புகளை செய்திருக்கிறது. அது மைதானத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது இப்போதே கணிக்க முடியாது. என்றாலும் தடை நீக்கப்பட்டது பெரிய ஆறுதல்.

தடையை அடுத்து இலங்கையில் நடக்க வேண்டிய 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது. இந்தத் தடையால் இதுவே இலங்கை சந்தித்த பெரிய இழப்பு. மற்றபடி, ஐ.சி.சியின் தடை என்பது ஓர் அடையாள நடவடிக்கையாகவே இருந்தது. இலங்கையின் அன்றாட கிரிக்கெட் செயற்பாடுகள் வழக்கம் போலவே இடம்பெற்றது. தடைக் காலத்திலேயே இலங்கை வந்த சிம்பாப்வே அணி இலங்கைக்கு எதிராக ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியது. இலங்கைக்காக ஐ.சி.சி. நிதியிலும் எந்தக் குறையும் இருக்கவில்லை.

என்றாலும் தடை என்ற கறுப்புப் புள்ளியோடு இலங்கைக் கிரிக்கெட்டில் முன்னோக்கிப் பயணிக்க முடியது என்ற வகையில் முதலில் தடையில் இருந்து விடுதலை பெறுவது மிக முக்கியமாக இருந்தது.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் அரசியல் மட்டத்தில் அதனை அடைவதற்கே முக்கியத்தும் அளிக்கப்பட்டு வந்தது.

மற்றபடி தடைக்குக் காரணமான பிரச்சினைகள் முழுமையாக தீர்ந்துவிட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது. இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதில் அனைத்து தரப்புக்கும் இடையே ஒருமித்த நிலைப்பாடு இருக்கிறது. ஆனால் அதனை செயற்படுத்துவதிலேயே முரண்டபாடு நிலவுகிறது.

இதனையொட்டி கிரிக்கெட் நிர்வாகத்திற்கும் அரச நிர்வாகத்திற்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுவது காலம் காலமாக நிகழ்ந்து வரும் ஒன்றாக மாறி இருக்கிறது. கடந்த காலங்களிலும் இலங்கை கிரிக்கெட் கலைக்கப்பட்டு இடைக்கால சபைகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன.

என்றாலும் அது உள்ளூர் மட்டத்தில் தப்பித்ததோடு சர்வதேச தடை ஒன்றுக்கு செல்லாததால் அதன் பாரதூரம் புரியாமல் இருந்தது. என்றாலும் இப்போது நிலைமை மாறி இருக்கிறது.

மைதானத்தில் தோல்விகளை சந்திக்கும்போதெல்லாம் முரண்பாடுகள் உச்சம் பெறுவதும் பின்னர் ஒரு சில போட்டிகளில் வெல்லும்போது அது தணிவதுமாக தொடர்ந்து பயணிக்க முடியாது.

இதற்கான நிரந்தரத் தீர்வுகளை நோக்கிச் செல்வது அவசியம். இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துவது, அதன் வாக்குரிமை கட்டமைப்பில் மாற்றத்தை கொண்டுவருவது, நிதி விவகாரத்தில் முறையான கட்டமைப்பை உருவாக்குவது பற்றி அனைத்துத் தரப்புகளும் பேசி வருகின்றன. எனவே அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பது அடிப்படையானது.

ஐ.சி.சி. இப்போது விதித்த தடை இலங்கை கிரிக்கெட்டில் பெரிதாக பாதிப்பு செலுத்தும் அளவுக்கு தீவிரமாக இருக்கவில்லை.

இதற்கு முன்னர் 2019 இல் இதே அரசியல் தலையீட்டை காரணம் காட்டி ஐ.சி.சி. சிம்பாப்வேயுக்கு தடை விதித்தது. ஆனால் அப்போது சிம்பாப்வேயுக்கான நிதியை நிறுத்தி ஐ.சி.சி. அந்த அணி சர்வதேச கிரிக்கெட்டில் ஆடுவதையும் தடை செய்தது. நல்ல வேளையாக மூன்று மாதங்களில் தடை நீங்கியது.

தவிர சியூபா, ரஷ்யா, மொரோக்கோ போன்ற இணை அங்கத்துவ நாடுகளுக்கு தடைகள் விதிக்கப்பட்டபோதும் அங்கே கிரிக்கெட் பெரிதாக இல்லாததால் தடையும் பெரிதாக உள்நாட்டில் தாக்கத்தை செலுத்தவில்லை.

இலங்கையின் தடை தற்போது நீக்கப்பட்டபோதும் தடைக்கான காரணத்தை தூண்டக்கூடிய விவகாரங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. முதலில் அதனை தீர்ப்பது முக்கியமாகும். அதுவே ஒரு வலுவான இலங்கை அணியை கட்டமைப்பதற்கு உதவியாக இருக்கும்.

**எஸ். பிர்தௌஸ்...**

# மரபை காப்பாரா ஷமர் ஜோசப்?

பிரிஸ்பான் கிரிக்கெட் மைதானம், புரியும்படி சொல்வதென்றால் கப்பா அரங்கு என்பது அவுஸ்திரேலியாவின் கோட்டை. அங்கே அவுஸ்திரேலியாவை வீழ்த்துவது இலகுவானதல்ல. இங்கே அவுஸ்திரேலிய அணி 93 ஆண்டுகளாக டெஸ்ட் கிரிக்கெட் ஆடியபோதும் அதனை பத்து தடவைகள் தான் எதிரணியால் வீழ்த்த முடிந்திருக்கிறது. அதுவும் இப்போதைய மேற்கிந்திய தீவுகள் அணியால் வீழ்த்த முடிந்திருப்பது பெரிய ஆச்சரியம்.



கடந்த ஜனவரி 28 ஆம் திகதி நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி கடைசி விக்கெட்டாக நெதன் லியோனை வீழ்த்தியபோது அரங்கில் இருந்த பிரையன் லாரா மற்றும் கார்ல் ஹூப்பர் மகிழ்ச்சி தாங்காமல் அழுதுவிட்டார்கள்.

மேற்கிந்திய தீவுகள் அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது, அந்த அணி அவுஸ்திரேலிய மண்ணில் 27 ஆண்டுகளில் பெறும் முதல் வெற்றி மாத்திரமல்ல, 21 ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய முதல் முறையாகவும் இருந்தது.

கடந்த உலகக் கிண்ண போட்டிக்குக் கூட தகுதி பெறாத மேற்கிந்திய அணி டி20 கிரிக்கெட்டில் மூழ்கி இருந்தபோதே, பெரிதாக அனுபவம், பரீட்சயம் இல்லாத வீரர்களைக் கொண்டு அவுஸ்திரேலியாவை வீழ்த்தி புதிய செய்தி ஒன்றை செல்லியிருக்கிறது.

என்றாலும் இதனை மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட்டின் புதிய திருப்பமாக கூறுவதில் அவசரப்பட முடியாது. ஆனால் அவுஸ்திரேலிய அணிக்கு 216 ஓட்டங்கள் மாத்திரமே வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டபோது, 11.5 ஓவர்களில் 68 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தி மேற்கிந்திய தீவுகளின் வெற்றியை சாத்தியமாக்கிய வேகப் பந்து வீச்சாளர் ஷமர் ஜோசப் மீது அனைவரும் அவதானம் செலுத்தி வருகிறார்கள்.

அவரது ஆக்ரோஷமான பந்துவீச்சு கேர்ட்லி அம்ப்ரோஸ், கேர்ட்னி வோல்ஷ், ஜொவல் கானர் காலத்து மேற்கிந்திய தீவுகளை ஞாபகமூட்டுகிறது.

என்றாலும் அந்த 24 வயது வீரரின் பயணம் அத்தனை இலகுவானதல்ல. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அவர் உள்ளூர் மட்டத்தில் கூட கிரிக்கெட் ஆடி இருக்க மாட்டார்.


கயானாவில் பின்தங்கிய கிராமமான பரகாராவில் தான் அவர் பிறந்து வளர்ந்தார். 2018 ஆம் ஆண்டிலேயே அந்த கிராமத்திற்கு தொலைபேசி மற்றும் இணைய தள வசதி கிடைத்தது. அத்தனை தொலைதூரத்தில் இருக்கும் அந்த கிராமத்தை அடைய வேண்டும் என்றால் நியு அம்ஸ்டர்டாம் துறைமுக நகரில் இருந்து படகில் தான் செல்ல வேண்டும். அதுவும் இரண்டு நாள் பயணம் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தனது தந்தை மற்றும் சகோரர்களுடன் சேர்ந்து மரம் வெட்டும் வேலையை பார்த்து வந்தார். ஒருநாள் மரம் ஒன்று தன் மீது விழுவது நூலிழையில் தப்பியது. அப்போது மனைவி கர்ப்பமாக இருந்தார். இந்த நிகழ்வே, அவரை வேறு வேலை தேடி ஊரை விட்டு வெளியேற்றியது.

படகில் 121 கிலோமீற்றர் வந்து நியூ அம்ஸ்டர்டாம் நகரை அடைந்த அவர் ஆரம்பத்தில் கட்டட வேலையில் கூலியாளாக இருந்தார். "என்றாலும் எனது வேலையை நான் சரியாகப் பார்க்கவில்லை. இந்த வேலை அதிக உயரத்தில் இருந்தது, நான் உயரத்துக்குப் பயந்தேன். எனவே அந்த வேலையை விட்டு விட்டேன்" என்று தனது கடந்த காலம் பற்றி விளையாட்டு இணையதளம் ஒன்றுக்கு கூறினார் ஷமர் ஜோசப்.

பின்னர் அவர் பாதுகாவலர் வேலைக்குப் போனார். ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை. இதில் கிரிக்கெட் ஆடுவதற்கு எங்கே நேரம்! "என்றாலும் பாதுகாவலர் ஒருவராக வேலைபார்ப்பதையிட்டு நான் வருந்தவில்லை. குடும்பத்தை காப்பாற்றுவதற்கு போதுமான பணம் கிடைத்தது" என்கிறார்.





ஜோசபின் கிரிக்கெட் வாழ்வு என்பது அது வரை ஊர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் பழைய கிரிக்கெட் போட்டிகளில் வோல்ஷ், அம்ரோஸ் போன்ற வீரர்களின் ஆட்டங்களை பார்ப்பது, உருண்டையான பழங்களை பந்துபோல் வீசி பயிற்சி செய்வதுமாகவே இருந்து. அவ்வப்போது டேப் சுத்தப்பட்ட பந்திலும் கிரிக்கெட் ஆடுவார்.

ஆனால் நியூ அம்ஸ்டர்டாமில் மேற்கிந்திய தீவுகளின் சகலதுறை வீரர் ரொமாரியோ ஜோசப் அண்டை வீட்டுக்காரராக கிடைத்தது அவரின் வாழ்வில் முக்கிய தருணமாக இருந்தது. ஜோசப்பிடம் வித்தியாசத்தைக் கண்ட ரொமாரியோ அவரை கயானா கிரிக்கெட் அணிக்கு அறிமுகம் செய்தார். இதனால் அவருக்கு தேசிய அணி வீரர்களுடனும் பயிற்சி பெற வாய்ப்புக் கிடைத்தது.

இதனால் அவருக்கு அம்ரோஸினால் நடத்தப்படும் கிரிக்கெட் பயிற்சி முகாமில் பங்கேற்க வாய்ப்புக் கிடைத்தது.

"கேர்ட்லி நான் பந்துவீசுவதை கண்டார். அவர் என் தோளில் தட்டினார். அடுத்த ஆண்டு கயானா அணிக்கு நான் ஆடுவதை பார்க்க வேண்டும் என்ற அவர் கூறினார். பின்னர் பயிற்சிப் போட்டி ஒன்றில் நான் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தியதை அடுத்து முதல் முறை நான் அணிக்கு அழைக்கப்பட்டேன்" என்றார் ஜோசப்.

முதல்தர கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்திலேயே அவர் 13 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கரீபியன் பரீமியர் லீக்கில் வலைப்பந்து வீச்சாளராக பங்கேற்றார்.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் அவர் கயானா அணிக்கும் முதல்தர போட்டிகளில் ஆடுவதற்கு புதுமுக வீரராகவே அழைக்கப்பட்டிருந்தார். என்றாலும் தனது கிரிக்கெட் திடுதிடுப்பு முன்னேற்றத்திற்கு என்ன காரணம் என்று அவருக்கே தெரியாது.

"எனது பந்துவீச்சு இயற்கையானதா அல்லது பயிற்சியால் பெற்றதா என்று சிலர் கேட்கிறார்கள். பயிற்சி என்றால் என்னவென்று கூட எனக்குத் தெரியாது. இயற்கையானது என்று நான் கூறுவேன். நான் ஓடுவேன். ஆனால் ஓடுவது உடற்தகுதிக்கான பயிற்சி என்பது எனக்குத் தெரியாது. நான் முதல்தர கிரிக்கெட்டில் ஆடும்போது, கோன்கள் மற்றும் பொருட்களை வைத்து ஓடுவோம். அது என்னவென்று கூட எனக்குத் தெரிந்திருக்கவில்லை" என்கிறார். 2023 பெப்ரவரி 11 ஆம் திகதி பார்படோஸ் அணிக்கு எதிரான போட்டி தான் அவரது கன்னி முதல் தர ஆட்டம். பின்னர் கரீபியன் பிரிமீயர் லீக்கில் காயமடைந்த கிமோ போலுக்கு பதில் கயானா அமேசன் வொரியர்ஸ் அணிக்காக அழைக்கப்பட்டார்.

அனைவரதும் அவதானத்தை ஈர்த்த ஜோசப், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட மேற்கிந்திய தீவுகள் அணியில் இடம்பெற்ற ஏழு புதுமுக வீரர்களில் ஒருவராக அழைக்கப்பட்டார்.

அடிலெய்ட்டில் கடந்த ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்பமான அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் முதல் முறை பந்துவீச அழைக்கப்பட்ட ஜோசப் முதல் பந்திலேயே ஸ்டீபன் ஸ்மித்தின் விக்கெட்டை வீழ்த்தினார்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதற்கு முன்னர் 22 வீரர்கள் தனது கன்னி டெஸ்டில் முதல் பந்திலேயே விக்கெட் வீழ்த்தி இருந்தபோதும், ஸ்டீபன் ஸ்மித் போன்ற முன்னணி துடுப்பாட்ட வீரர் ஒருவரின் விக்கெட்டை வீழ்த்துவது சிறப்பானது.

மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட்டுக்கு தனி மரபு இருந்தபோதும், அந்த மரபு அருகி வருவது தான் இன்றைய பெரும் கவலை. பொருளாதார நெருக்கடி ஒரு பக்கம், பணத்துக்காக உலகெங்கும் நடக்கும் டி20 லீக் கிரிக்கெட்டில் அந்த பிராந்தியத்தின் கிரிக்கெட் திறமை குவிக்கப்படுவது மறுபக்கம் இருக்க மேற்கிந்திய தீவுகள் அணி என்பது கிழட்டுச் சிங்கமாக மாறிவிட்டது.

"டி20 கிரிக்கெட்டுக்கு மத்தியில் டெஸ்ட் கிரிக்கெட் ஆடக் கூடிய நேரமும் வரக்கூடும். ஆனால் எனக்கு எத்தனை பணம் வந்தாலும் காரியமில்லை மேற்கிந்திய தீவுக்காக ஆட நான் எப்போதுமே தயாராக இருக்கிறேன். இதனைக் கூற நான் பயப்படப்போவதில்லை" என்றார் ஜோசப்.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் முன்னேற ஜோசப்பின் இந்த உறுதி தான் முக்கியம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2024 பெப்ரவரி 4 ஞாயிற்றுக்கிழமை



தேன் சிந்தும் பூ அழகு
அலை பாயும் நதி அழகு
துள்ளி ஓடும் மான் அழகு
மழலை பேசும் மொழி அழகு

செனோவா செட்ரிக்



# டயானாவின் கடைசி புகைப்படம்

இளவரசி டயானா, அவரை வேல்ஸ் இளவரசி என்றும் அழைப்பார்கள். அவர் 1997 ஒகஸ்ட் 31 ஆம் திகதி பிரான் ஸின், பாரிஸ் நகரில் கார் விபத்தில் உயிரிழந்தார். அவர் தனது காதலரான டொடி பயத், மெய்க் காவலர் ட்ரவொர் ரீஸ் ஜோன் மற்றும் அவரது ஓட்டுநர் ஹென்றி போலுடன் அந்தக் காரில் இருந்தார். பொன்ட் டெல் அல்மா சுரங்கப்பாதையில் உள்ள தூணில் அந்தக் கார் மோதியது. இளவரசி டயானா மற்றும் டொடி பயத் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஓட்டுநர் ஹென்றி சற்று நேரத்தின் பின் உயிரிழந்தார். ரீஸ் ஜோன் படுகாயங்களுடன் உயிர் தப்பினார். இந்த சம்பவம் ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்திய ஒன்றாக இருந்தது. விசாரணையில் ஓட்டுநர் ஹென்றி மது போதையில் காரை செலுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் புகைப்படம் விபத் துக்கு முன்னர் கடைசியாக எடுக்கப்பட்டது. நள்ளிரவு தாண்டி 12.20 க்கு எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்தில் பாரிஸ் நகரின் ரிட்ஸ் ஹோட்டலில் இருந்து கார் வண்டி வேகமாக செல்வதும் தன்னை பின்தொடரும் பப்பராசிகளை இளவரசி டயானா பின்னால் திரும்பிப் பார்ப்பதும் தெரிகிறது.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

## அழிவை பார்க்கும் ஹிட்லர்



ஜெர்மனி நாஜித் தலைவர் அடொல்ப் ஹிட்லர் பெர்லின் பதுங்கு குழி வாயிலில் இருப்பதை இந்தப் படத்தில் காணலாம். அதாவது அவர் மரணிப்பதற்கு முன்னர் எடுக் கப்பட்ட கடைசிப் புகைப்படம் இதுதான்.

இந்த புகைப்படத்தில் அவர் எதிரிப் படையின் குண்டுத் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்களை பார் வையிடுவது தெரிகிறது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் தோல்வி உறுதியான நிலையிலேயே அவர் தனது உயிரை மாய்த் துக்கொள்ள தீர்மானித்தார்.

அதனைச் செய்வதற்கு முன்னர் அவர் தனது காதலியான ஈவா பிரவுனை திருமணம் செய்து தனது கடைசி உயிலை தயாரித்தார். இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டு இரண்டு நாட்களில் 1945 ஏப்ரல் 30 ஆம் திகதி ஹிட்லர், பிரவு னுடன் அறைக்குச் சென்று தற்கொலை செய்து கொண்டார். அவர் சயனைட் குடித்து தலையில் சூடு நடத்தி தற்கொலை செய்து கொண்டார் என்பது அவரது மருத்துவரின் கூற்று.

அதாவது மே 2 ஆம் திகதி ஜெர்மனி சரண டைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் மே 8 ஆம் திகதி ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போர் முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னருமே ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

# திருட்டுபோன ஐன்ஸ்டைன் மூளை




பிரபல விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டை னின் மூளை அவர் இறந்த விரைவிலேயே களவாடப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில் மூளைசாலிகளின் மூளைக்கு தனிக் கிராக்கி இருந்தது. அந்த மூளையை வைத்து ஒரு வரின் அறிவை கண்டறிய முடியும் என்ற நம்பிக்கைதான் பலரது மூளைக்கு ஆபத் தாக முடிந்தது. உதாரணத்திற்கு முதலா வது கணினி இயந்திரத்தை கண்டுபிடித்த சார்ல்ஸ் பாபேஜ்ஜின் பாதி மூளை இன்றும் லண்டன் றோயல் கொலேஜ் அருங்காட்சிய கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, ஐன்ஸ்டைன் இறந்தபோது அவரது மூளையை வைத்து ஆய்வு செய்ய வேண்டும் என்று அப்போது மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டியது ரகசியமல்ல. 1955 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதி காலையில் அமெரிக்காவின் பிரின்ஸ்டன் மருத்துவமனையில் ஐன்ஸ் டைன் இறந்தபோது அவரை சோதித்த மருத்துவர் தோமஸ் ஹார்வி எதிர்கால ஆய் வுக்காக அவரது முளையை அகற்றுவதற்கு தீர்மானித்தார்.

அதன்படி, ஐன்ஸ்டைனின் மூளையை திருடிய ஹார்வி, அதனை தனது வீட்டுக்கு எடுத்துச் சென்று 240 துண்டுகளாக வெட்டி செலைடின் நிரப்பப்பட்ட இரு ஜாடிகளில் சேமித்த வைத்தார்.

ஐன்ஸ்டைன் இறுதிக் கிரியை முடிந்த விரைவிலேயே அவரது மகன் ஹான்ஸ் அல்பர்ட் இந்தத் திருட்டை கண்டறிந்தார். இதனால் அவர் கோபத்துக்கு உள்ளானபோ தும் அந்த மூளையை தம்மிடம் வைத்திருப் பதற்கு மகனை சமாதானப்படுத்தினார் ஹார் வியால்.



உலகப் பிரபலமான விஞ்ஞானியின் மூளையை அனுமதியின்றி வைத்திருந்ததற் கான விளைவை அவர் எதிர்கொண்டார். அவர் பிரின்ஸ்டன் மருத்துவமனையில் தனது வேலையை இழந்தது மாத்திரமன்றி மண வாழ்க்கையும் முறிந்துபோனது. பின்னர் மிட்வெஸ்ட் பிராந்தியத்திற்கு சென்ற அவர் அங்கு மருத்துவம் மற்றும் ஆராய்ச்சிகளில் தீவிரம் காட்டினார். அடுத்த பல தசாப்தங்களாக அவர் ஐன்ஸ்டைனின் மூளையை தன்னுடன் வைத்திருந்தார். ஒரு கட்டத்தில் பியர் போத்தல்களை குளி ரூட்டும் பெட்டிக்குக் கீழ் பெட்டி ஒன்றில் மறைத்து வைத்திருந்தார். ஒருநாள் இல்லா விட்டால் ஒருநாள் ஐன்ஸ்டைனின் அறி வாற்றலுக்கான காரணத்தை கண்டுபிடிப் பது அவரது தீராத ஆசையாக இருந்தது. எனினும் 1978 வரை ஐன்ஸ்டைன் மூளை எங்கே என்பது ரகசியமாகவே இருந்தது. இந்நிலையில் ஆய்வுக்காக ஐன்ஸ்டைன் மூளையின் மாதிரிகளைத் தரும்படி பலரும் கோரிக்கை விடுத்ததன்படி அந்த மாதிரிகள் பல விஞ்ஞானிகளுக்கும் பகிரப்பட்டன.

1985 தொடக்கம் அந்த மூளையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளை விஞ்ஞா னிகள் வெளியிட ஆரம்பித்தார்கள். இதில் சில ஆய்வுகள் ஐன்ஸ்டைனின் மூளைக் கும் மற்றவர்களின் மூளைக்கும் இடையே சில வித்தியாசங்கள் இருப்பதாக குறிப்பிட் டன. என்றாலும் இந்த ஆய்வு முடிவுகளில் சந்தேகங்கள் இன்று வரையில் இருந்து வருவதோடு ஒருவரது அறிவுக்கும் அவரது மூளைக்கும் இடையிலான தொடர்பை விஞ்ஞானிகளால் இதுவரை உறுதியாக கண் டறிய முடியாமல் போயுள்ளது.

இன்று ஐன்ஸ்டைனின் மூளை நியூ ஜெர்சி யின், பிளைன்போரோவில் பென் மெடிசின் பிரின்ஸ்டன் மருத்துவ மையத்தில் வைக்கப் பட்டிருக்கிறது.

என்றாலும் ஐன்ஸ்டை மூளையின் பல பாகங்கள் அமெரிக்கா எங்கும் இருப்பதாக நம்பப்படுகிறது.

# நியூட்டனும் ஆப்பிளும்



ஐசாக் நியூட்டனுக்கும் ஆப்பிளுக்கும் இருக்கும் உறவு எல்லோருக்கும் தெரிந்தது. அதில், நியூட்டன் ஆப்பிள் மரத்தின் கீழ் இருந் தபோது அவரின் தலையில் ஆப்பிள் விழுந் ததைப் பார்த்தே அவர் ஈர்ப்பு விசையை கண் டுபிடித்தார் என்பது பிரபலமான கதை.

ஆனால், உண்மையில் அந்தக் கதை அப் படியல்ல. அவரது வாழ்க்கை வரலாற்றில் அவரது தலையில் அப்பிள் விழுந்ததாக கதை இல்லை.



1665 இல் நியூட்டன், கேம்பிரிட்ஜ் பல் கலைக்கழகத்தில் கற்றபோது பபோனிக் பிளேக் நோய் காரணமாக அவர் தனது பெற்றோர்களின் பண்ணையில் தனிமைப்படுத்தப்பட்டார். அங்கேயே அவர் ஆப்பிள் பழம் மரத்தில் இருந்து கீழே விழுவதை உற்று அவதானித்திருக்கிறார். அது எப்போ தும் கீழே விழுவது ஏன்? வேறு திசையில் விழாதது ஏன்? என்று யோசிக்க ஆரம்பித் தார்.

இவ்வாறு அவர் ஈர்ப்பு விசையை கண்டு பிடிக்கக் காரணமான அந்த ஆப்பிள் மரம் இன்றும் அங்கேயே இருக்கிறது. இங்கிலாந் தின் லிங்கன்ஷெயரில் நியூட்டன் பிறந்த குடும்ப வீட்டுக்கு அருகிலேயே அந்த மரம் இருக்கிறது.

1650 ஆம் ஆண்டு நட்டியிருக்கலாம் என்று நம்பப்படும் இந்த மரம் 1816 இல் ஏற்பட்ட புயலில் பெரும் பகுதி சாய்க்கப்பட்ட போதும் மீண்டும் துளிர்விட்டது. இந்த மரத் தின் பாகங்களை பயன்படுத்தி பல "நியூட்டன் மரங்கள்" வளர்க்கப்பட்டன. அசல் மரம் இன்றும் இருப்பதோடு அதன் சந்ததியை உலகெங்கும் காண முடியும்.



ஏஜமானி : இருபத்துநாலு மணி நேர நியூஸ் சானல் வரப்போகுதாம் .. ..
வேலைக்காரி : அதுக்காக என்னை வேலையை விட்டு நீக்கிவிடாதீங்கம்மா

கணவன் : குழந்தை ஏன் அழுறான் டாக்டர் ஊசி போட்டாரா....?
மனைவி : இல்லே.. அவர் தான் சரியான குழந்தை டாக்டர் ஆச்சே இவன் தின்னுக்கிட்டு இருந்த பிஸ்கட்டை அவர் பிடுங்கித் தின்னுட்டார் .. ..



நிருபர் : நீங்க எழுதின நாவல் ரொம்ப Tasteஆ இருக்கே, எங்க ?
எழுத்தாளர் : கிச்சன்லே நான் சமையல் பண்ணும்போது எழுதினது ஆச்சே



நண்பர் 1 : போஸ்ட்மேன் மனைவிக்கு டெலிவரி ஆகியிருக்கு ... ?
நண்பர் 2 : அதுக்கென்ன ... ?
நண்பர் 1 : குழந்தையோட வெயிட்டுக்கு ஏத்தா மாதிரிதான் ஆஸ்பத்திரிக்கு பணம் கட்டுவென்னு ஒரே தகராறு பண்றாரு ...



காவல் அதிகாரி : உங்களை அரெஸ்ட் பண்றேன்... வாங்க ஆஸ்பத்திரிக்கு..
அரசியல்வாதி : எதுக்கு ?
காவல் அதிகாரி : எப்பவும் ஜெயிலுக்குப் போனதும் நெஞ்சு வலின்னு ஆஸ்பத்திரிக்குத்தானே போகப் போறீர்.. அதான்.

பெண் : வர்ற ஒண்ணாம் தேதி எங்கப்பாவை வந்து பாருங்க .....
பையன் : நிச்சயம் பண்ணவா ?
பெண் : என் பின்னாடியே வர்றிங்களே அதுக்கு செக்யூரிட்டி சம்பளம் வாங்கதான்






கணவன் : நம்ம வீட்டுக்கு சாப்பிட எங்க மானேஜரை கூப்பிட்டிருக்கிறேன்.
மனைவி : என்ன திடீர்னு ?
கணவன் : அவர் மனைவியோட சாப்பாட்டை கொஞ்ச நாளா குறை சொல்லிக்கிட்டிருந்தாராம் அதான்.





ஆசிரியர் : உங்க அப்பா ராத்திரி படுக்கிறப்ப சட்டை பாக்கெட்ல நூறு ரூபா வைக்கிறாரு. காலையில பார்க்கிறப்ப நூறு ரூபா அப்படியே இருக்கு. இதுல இருந்து என்ன தெரியுது ?
மாணவன் : எங்க அம்மா ஊர்ல இல்லேன்னு தெரியுது சார்.........



வேலு : அந்தத் தியேட்டர் முதலாளியை போலிஸ் பிடிச்சுக்கிட்டுப் போகுதே ஏன்..?
ராமு : டி.வில போட வெச்சிருந்த படத்தைத் தியேட்டர்ல ரிலீஸ் பண்ணிட்டாராம்

ராணி : டாக்டர்.. என் கணவருக்கு சில நேரம் என்னை அடையாளம் தெரிய மாட்டேங்குது..
டாக்டர் : எப்படி சொல்றீங்க?
ராணி : சில நேரம் என்னைப் பார்த்தா பயப்பட மாட்டேங்கிறாரு டாக்டர்..



ரமனன் : டாக்டர்... நீங்க சொந்தமா வீடு கட்டிட்டு இருந்தீங்களே.. அந்த வேலை முடிஞ்சுதா?
டாக்டர் : இன்னும் இல்லை. நீங்க ஏன் தினம் அதைக் கேட்கறீங்க?
டாக்டர் : என்னை எப்போ டிஸ்சார்ஜ் பண்ணப் போறீங்கனு தெரிஞ்சுக்கத்தான்.



நண்பர் : திரும்ப வாங்க முடியாத கடன் கோடிக்கணக்குல இருக்கறதால உங்க பாங்க்குக்கு எதிர்காலமே இருக்காதுன்னு சொல்லிக்கறாங்களே?
அதிகாரி : நீங்க வேறே.. எதிர்காலத்துல எங்க பாங்க்கே இருக்காதுங்கறதுதான் உண்மை.



வேனி : குடும்பத்துக்கு விளக்கேற்றி வைக்கப் பொண்ணு வேணும்னு சொல்லி என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணினது தப்பா போச்சு..
ராணி : ஏன்?
வேனி : என் மருமகள் விளக்கேத்தறதைத் தவிற வேற எந்த வேலையும் செய்ய மாட்டேங்கிறா..



பாபு : நம்ம ஃபைனான்ஸ் கம்பெனி முதலாளிக்கு பத்மஸ்ரீ பட்டம் தரப்போறாங்களாமே...
வேலு : நிஜமாவா?
பாபு : ஆமாம்... குல்லா போடாம எல்லோருடைய பணத்தையும் வட்டியோட திருப்பித் தர்றாரே.. சும்மாவா



# புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் –2023









புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் 2023 ஆம் ஆண்டுக்கான கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த ஞாயிறன்று கொழும்பு14 சுகததாச ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வினில் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# நான்கு தசாப்த காலத்திற்கு மேலாக ஈழத்து சிறுவர் இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டவர் இக்பால் அலி

கடந்த நான்கு தசாப்த காலத்திற்கு மேலாக ஈழத்து சிறுவர் இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டவர் இக்பால் அலி. இவர், இலக்கியம், இலத்திரனியல் ஊடகம், அச்சு ஊடகம், சமூக ஊடகம் எனப் பல்துறைகளிலும் கால்பதித்து சிரேஷ்ட ஊடகவியலாளராக தற்போது கடமையாற்றி வருகிறார். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சிசேவை மற்றும் இலங்கை ஒலிரப்புக் கூட்டுத்தானபம் ஆகிய செய்திப் பிரிவுகளுக்கான பிராந்திய செய்தியாளராகவும் மற்றும் தினகரன், வீரசேகரி, தினக்குரல், தமிழன் பத்திரிகைகளுக்கான பிராந்திய செய்தியாளராகவும் பணியாற்றி, பல்லின சமூகத்திற்கு மத்தியில் ஊடகவியலாளராகவும் தடம்பதித்து நிற்பவர்.

இவர் சிறந்ததொரு கவிஞராகவும் விளங்குபவர். இவரது கவிதைகள் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவர் பத்தி எழுத்து, வாழ்வியல் வரலாற்று நூல்கள் என இதுவரை சுமார் எட்டு நூல்களை எழுதியுள்ளார். கவிஞர் இக்பால் அலி கவிதைத் துறையில் நாட்டம் கொண்டதைப் போல சிறுவர் இலக்கியத் துறையிலும் குறிப்பிடத்தக்க எழுத்தாளராகவும் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டவர். 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே அவருடைய முதலாவது சிறுவர் பாடல்கள் தொகுதி " நான் மூன்று சக்கரக்காரன்" வெளிவந்தது. 2001 இல் இரண்டாவது சிறுவர் பாடல்கள் தொகுதி " அன்பு பெருக" வெளிவந்தது. 2003 இல் அவருடைய மூன்றாவது "நல்லதொரு பயணம்" என்ற சிறுவர் கதைத் தொகுதி வெளிவந்தது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் " குரங்குத் தம்பி" என்ற பெயரில் தற்போது நான்காவது சிறுவர் பாடல்கள் தொகுதி வெளிவந்துள்ளது.

சிறுவர் இலக்கியங்களில், சிறுவர்களுக்குரிய நற்பண்புகளும் அறிசார் விடயங்களும்; அடங்கி இருத்தல் வேண்டும். ஆரம்பகால வாய்மொழி மூல சிறுவர் இலக்கியங்களில், நீதிப் பாடல்கள், இயற்கையின் அழகு , மிருகங்கள் , பறவைகள் பற்றிய சிறப்பு, சிறுவர்களுடைய எதிர்காலம் குறித்த அம்சங்கள் முதலியன உள்ளடக்கங்களாக விளங்கின. ஆரம்ப காலத்தில் சிறுவர் பாடலாசிரியர்கள் இயற்கையினை நேசித்த அனுபவங்களையே அதிகளவு பாடல்களாக வெளிக்கொணர்ந்தார்கள். ஆனால் கவிஞர் இக்பால் அலி சற்று வேறுபட்டு சிறுவர்கள் நேரடியாக தம் வாழ்வில் அனுபவிக்கின்ற விடயங்களையும் அறிவியல் சார்ந்த விடயங்களையும் பாடுபொருளாகக் கொண்டு எழுதியுள்ளார்.

1984 க்குப் பின்னர் கவிதை இலக்கியத்திற்குள் நுழைந்த இக்பால் அலி சிறுவர் இலக்கியத்தின் வரலாற்றிலும் ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்தினார். அவரது பாடல்கள் அறிவியல் சார்ந்த விடயங்களை சித்திரிக்கின்றன. இது குறித்து பேராசிரியர் சபா ஜெயராசா தமது, "சிறுவர் இலக்கிய வளர்ச்சி" என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"நவீன அறிவியல் சார்ந்த விடயங்களை வைத்து சிறார்களுக்கு உகந்த பாடல்களை எழுதுவதில் இக்பால் அலி முதன்மையானவர்"

சிறுவர்களுடைய உளப் பாங்குகள் பற்றி அறிந்து இக்பால் அலியினால் வெளிக் கொணரப்பட்ட சிறுவர் பாடல் நூல்களிருந்து 20க்கும் மேற்பட்ட பாடல்களைத் தெரிவு செய்து, அவற்றிற்கு அட்டாளைச்சேனைக் கல்விக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அமீரினால் இசை வடிவம் வழங்கப்பட்டது.

இச்சிறுவர் பாட நூலில் 30 சிறுவர் பாடல்கள் உள்ளன. பெரும்பாலான சிறுவர் பாடல்கள் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் எழுதப்பட்டவை. இன முரண்பாடுகள், இன நல்லிணக்கம், மனித நேயம், ஒழுக்க மாண்புகள், தொழில் நுட்ப விருத்தி, இயற்கையின் பயன்கள், பயிர்ச் செய்கை, வேடிக்கைப் பாடல்கள், பால் நிலை சமத்துவம், கல்வி முதலிய அம்சங்களைப் பேசக் கூடிய சிறுவர் பாடல்கள் இதில் காணப்படுகின்றன. இவை மனிதகுல மேம்பாட்டிற்கும் சிறுவர்களின் எழுச்சிக்குமான நுண்ணறிவை மேலோங்கச் செய்யக் கூடியவை. இதில் நான்கு பாடல்கள் இன முரண்பாட்டினால், மனச்சாட்சிப்படி நேர்மையாக நடந்து கொள்ள முடியாமல் சிறுவர்கள் தவிக்கிறார்கள் என்ற செய்திகளைச் சொல்லுகின்றன. திறந்த மனதோடு சிறுவர்ளுக்கு சேர்ந்து வாழவோ சேர்ந்து விளையாடவோ, சேர்ந்து படிக்கவோ சமூகச் சூழல் இடம்கொடுக்காமல் தடை விதிக்கிறது. இதில் இருந்து விடுதலையாகி எல்லா இன சிறுவர்களுடனும் சேர்ந்து திறந்த மனதோடு நேர்மையாக நடந்து கொள்வதற்கான ஓர் ஆரோக்கியமான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்ற விடயம் ஒவ்வொரு பாடலிலும் அழுத்தமாக பேசப்படுகிறது. 'சமாதானக் கல்வி', 'அன்பு பெருகப் பாடுவோம்', 'எறிபட்ட கோழி', 'சமரசம்' போன்ற நான்கு பாடல்களும் சிறுவர்களிடையே வலுவான நட்பைக் தூண்டக் கூடியவை.

"சமாதானக் கல்வியினை
வகுப்பில் தினமும் படிக்கின்றோம்
ஒற்றுமை கீதம் பாடுகின்றோம்
அமைதியை இன்னும் காணலியே"

என்று கூறும் கவிஞரின் பாடல் வரிகள் சமாதானத்தின் மீதான ஏக்க நிலையை சிறுவர்களுடைய எதிர்பார்ப்பாகக் கொண்டு கவிஞர் சித்திரித்துள்ளார். கொரோனாவினாற் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை பாதிக்கப்பட்டனர். கொரோனாவின் அபாய எச்சரிக்கைகளை அறிந்தவர்கள். ஊரடங்குச் சட்டத்தினால் வீட்டோடு முடக்கப்பட்டார்கள். உயிரிழந்த தாயின் முகத்தைக்கூட தந்தை பிள்ளைகள் பார்க்க முடியாதிருத்தல், அம்பியூலன்ஸ் வண்டியின் ஒலியின் இரைச்சலைக் கேட்டால் பயந்து ஓடி ஒழிதல், முகக் கவசமின்றி வெளியே செல்ல முடியாத நிலை, தினசரி மரண ஓலங்கள், தடுப்பூசி ஏற்றுதல், சுயதனிமைப்படுத்தல் முகாம், தொழிலின்மை, பொருளாதார நெருக்கடி போன்ற நிலைமைகளால் பெரியவர்கள் மட்டுமல்ல சிறுவர்களும் இன்னல்களை அனுபவித்தார்கள்.




பேராசிரியர் கலாநிதி சாதியா பௌஸர்
(மொழித்துறை) தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,


Colombo North Hindu Paripalana Sangham


Selva Shinthu





Nilanthi Priyadarshani


Shanthi Banusha


Kalaithendrel Selvarani


Saman


Selvaratnam


கவிதாயினி வசந்தகுமாரி எழுதிய"தவங்களெல்லாம் வரங்களாவதில்லை"நூல் வெளியீடு அண்மையில் கொழும்பு J.R.JAYAWARDANE மண்டபத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் கஜமுகன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மனோ கணேசன் MP பிரதம அதிதியாக கலந்து கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும், ஜனாதிபதியின் தொழிற்சங்க கூட்டமைப்பின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான எஸ். ஆனந்தகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இலக்கிய வானில் உலாவரும் திண்டுக்கல் இரா.கவிதா

**உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்.**

நான் இரா.கவிதா. தமிழ்நாடு அரசுப் பள்ளியில் ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன்.என் சொந்த ஊர் இந்தியாவின் திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறைக்கு அருகிலுள்ள அய்யாக் கண்ணூர் ஆகும். நான் தற்போது திண்டுக்கல்லில் வசித்து வருகிறேன். என் தந்தை ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி அ.ராமச்சந்திரன். தாயார் இந்திராணி. இரண்டு சகோதரர்கள்,மூத்த அண்ணன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர். இளைய அண்ணன் மாவட்ட வருவாய் கோட்ட அலுவலர். என்னுடைய கணவர் திரு.சு.முருகேசன் ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர். எனக்கு ஹரிஷ், பிரசன்னா என்ற மகனும், தீட்சிதா என்ற மகளும் உள்ளனர்.

**உங்கள் இலக்கியப் பயணம் பற்றி கூறுங்கள்?**

மனதில் தோன்றும் எண்ண அருவியை, விரல்களின் வழியே சிந்தனை ஆறாக ஓட



விடும் கலையே எழுத்து. நாம் இரசித்த அல்லது நம்மை பாதித்த நிகழ்வுகளை, நபர்களைப் பற்றி பிறருக்குத் தெரியப்படுத்த கவிதை மற்றும் சிறுகதைகள் ஒரு சிறந்த ஊடகம் ஆகும். சிறு வயது முதலே அந்தந்த வயதுக்கு ஏற்ப சிறு சிறு கவிதைகள் எழுதுவது உண்டு. வளரிளம் பருவத்தில் சிறுகதைகள் மற்றும் தொடர் கதைகள் படிக்கும் போது இதே போல நாமும் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கல்கி, லஷ்மி சாண்டில்யன், ரமணி சந்திரன், தேவிபாலா, இராஜேஷ்குமார், போன்றோரின் கதைகளை வாசித்ததால் எழுத்தாளராகும் எண்ணம் வந்தது. பாரதியார், பாரதிதாசன், என் ஆசான் கடவூர் மணி மாறன் ஐயா போன்றோரின் கவிதைகளை வாசிக்கும் போது இதே போல நாமும் சிறந்த கவிதைகள் எழுதி, அவற்றை நூலாக்கம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. எதிர்காலத்தில் திரைப்படப் பாடல்கள் எழுதும் ஆர்வம் உள்ளது.

**எவ்வாறான கருப்பொருளை உள்ளடக்கி எழுதுகிறீர்கள்?**

இயற்கை, சமூக அவலங்கள், பெண் கல்வி, பகுத்தறிவு, அறம், இன்றைய தலைமுறை, தனி மனித உணர்வுகள், உறவுகள், குடும்பம், குழந்தை, காதல், பேரிடர்,போர், கலவரம், தமிழ் மொழி என்று அன்றாடம் காணும், மனதில் தோன்றும் அனைத்தையும் கருப்பொருளாகக் கொண்டு எழுதி வருகிறேன்.

**மரபுக்கவிதை, தன்முனை, சென்ரியூ கவிதை எழுதுவதாக கூறினீர்கள், அது பற்றி கூறுங்களேன்.**

மரபுக் கவிதையின் இலக்கணத்தை ஓய்வு நேரத்தில் கற்றுக் கொண்டு, பல்வேறு விருத்தங்கள், வெண்பாக்கள், ஆசிரியப் பாக்கள் தொடர்ந்து எழுதி வருகிறேன்... அவை பிரான்ஸ் நாட்டில் இருந்து வெளிவரும்"தமிழ் நெஞ்சம்" மாத இதழில் வெளி வந்துள்ளன.

தன்முனைக் கவிதைகள் என்பது நான்கு வரிகள் கொண்டது. வரிக்கு இரண்டு அல்லது மூன்று வார்த்தைகள் இருக்க வேண்டும்.

இரண்டாம் வரியில் ஒரு நிறுத்தம் வர வேண்டும். மூன்றாம் மற்றும் நான்காம் வரிகள் முதலிரண்டு வரிகளில் சொல்லப் பட்ட நிகழ்வுக்கு ஒட்டியோ அல்லது முரணாகவோ அமைய வேண்டும். தன்னை ஈடுபடுத்திக் கொண்டு எழுத வேண்டும். தலைப்பிடக் கூடாது. எளிய சொற்கள் கொண்டதாக அடடா என்று எண்ணத்தக்க வகையில் இருக்க வேண்டும்.

**கடனாகத் தாயேன்//**
**கண்ணீர்த் துளிகளை//**
**முறை வரும்போது//**
**முகவரி தேடித் திருப்பித்தா//**

சென்ரியூ கவிதைகளை எனக்கு எழுத்தாளர் "அன்புச் செல்வி சுப்புராஜ் அம்மா அறிமுகம் செய்து வைத்தார். சமூகம், அரசியல், இயற்கை மற்றும் மெய்யியல் குறித்து நகைச்சுவை உணர்வோடு எழுதப்படும் அதில் ஆர்வம் ஏற்பட்டு பல சென்ரியூக்கள் எழுதியுள்ளேன். அவற்றுள் சில,"தேனீக்கள் சேகரித்த சென்ரியூ" நூலில் இடம் பெற்றுள்ளன.

சென்ரியு அல்லது நகைத்துளிப்பா என்பது ஜப்பானில் உருவான ஒரு கவிதை வடிவமாகும். ஹைக்கூவைப் போன்று இது அதன் பகடி வடிவமாகும். சென்ரியு கவிதைகளும் ஹைக்கூ போன்று மூன்று அடிகளில் எழுதப்படுகிறது. இவை பொருண்மை நிலை சார்ந்த தனித் தன்மையில் அறிவுரை, பொதுத் தன்மை, முரண், பொன்மொழி,விடுகதை மற்றும் நகைச்சுவை போன்ற பல நிலைகளில் வெளிப்படுகின்றன.

★ வீட்டிற்குச் சென்று
ஆரோக்கிய உணவு உண்கிறார்
துரித உணவு கடைக்காரர்

★ அன்றாடம் கூட்டலும் பெருக்கலும்
வரவில்லை கணக்கு
விளக்குமாற்றுடன் வேலைக்காரி

**உங்கள் புத்தக வெளியீடுகள் பற்றி கூறுங்கள்**

" சிறுமலை நறுவீ " என்ற என்னுடைய கவிதை நூல், எங்கள் "கவிதைத் தூவானம்" குழுமத்தின் ஆண்டு விழா மேடையில், மதிப்பிற்குரிய எழுத்தாளர் ஐயா, ஈழ வேங்கை தம்பியின் தம்பி, அவர்களின் பொற்கரங்களால் வெளியிடப்பட்டது.

தேனீக்கள் சேகரித்த சென்ரியு, இமயம் தொடும் இயைபுகள், இங்காவின் ஆலாபனைகள், ஓய்வறியாச் சூரியனின் ஒல்காப் புகழ், தன்முனையியைபுக் கவிதைகள், ஒப்பனை மிருகங்கள், போன்ற தொகுப்பு




நூல்களிலும் என்னுடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

"*Namaste India*" ஆங்கிலப் பத்திரிகையில் எனது கவிதைகள் பலவும், ஆங்கிலக் கட்டுரையும் வெளி வந்துள்ளன."*Aim for the sky and stars*" மற்றும் "*Lips of roses*" போன்ற ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு நூல்களிலும் என்னுடைய கவிதை இடம் பெற்றுள்ளது.

**சிறுகதைகள் எழுதுவதற்கு நீங்கள் கையாளும் உத்திகள் பற்றி கூறுங்கள் ?**

ஆழ்ந்த கருத்தாழம் கொண்டு புதுவித உணர்வைத் தருவதாக, அடுத்தது என்ன என்று படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் சிறுகதைகள் அமைய வேண்டும். மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் காட்சிகள் இருக்க வேண்டும். அன்றாடம் நாம் சந்திக்கும் பாத்திரப் படைப்புகள் சில நேரங்களில் அசாதாரண தன்மையுடைய கதாப் பாத்திரங்களையும் அமைக்க வேண்டும். முக்கியமாகக் கதைக் கரு, குடும்ப அமைப்பு, உறவுச் சிக்கல்கள், தனிநபரின் உணர்வுகள் மற்றும் சமுதாய சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி அதற்குத் தீர்வு சொல்வதாக இருக்க வேண்டும்.



**பெண்கள் எழுதுவது பற்றி இன்றைய சமூகக் கண்ணோட்டம் எப்படி உள்ளது ?**

பெண்களின் திறமைக்கு உரிய அங்கீகாரம் நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகே கிடைக்கிறது. பெண்களை போகப் பொருளாக நினைக்கும் மனநிலை இன்னும் சிலரிடம் உள்ளது. நமக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு வேண்டாததைப் புறந்தள்ளப் பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டும். நமக்கு உரிய மரியாதை மற்றும் பாதுகாப்புக் கொடுக்கும் பத்திரிகை மற்றும் குழுமங்களில் மட்டுமே பயணிக்க வேண்டும். தன்மானத்தை இழந்து புகழ்பெற எண்ணக் கூடாது. எந்த நிலையிலும் பெண்கள் தன்னம்பிக்கை இழக்கக் கூடாது.

**சான்றிதழ்கள், விருதுகள் பற்றி கூறுங்கள்.**

அதிகமான சான்றிதழ்கள் பெற்றுள்ளேன். தமிழகத்தில் ரோட்டரி சங்கம் சார்பில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளேன்.

கவிமதி விருது, கவிச் சூரியன் விருது, சந்தப் பாமணி விருது,

விருத்தக் கவிவேந்தர் விருது, ஜெயகாந்தன் விருது உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட விருதுகள் பெற்றுள்ளேன்.

*TNTP* என்ற தமிழ்நாடு அரசு ஆசிரியர் இணையதளத்திலும் என்னுடைய பாடம் தொடர்பான வீடியோக்கள் இடம்பெற்று பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன்.

"*Design for change* " அமைப்பு நடாத்திய செயல் திட்டப் போட்டியில் என் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து வழிகாட்டி ஆசிரியராக நாங்கள் செய்த செயல் திட்டம் சுற்றுச் சூழல் பிரிவில் இந்திய அளவில் நான்காம் இடமும், மாவட்ட அளவில் முதலிடமும் பெற்றது.

*Best educator Award* மற்றும் ரோட்டரி சங்கத்தின் சிறந்த ஆசிரியர் விருது போன்றவற்றையும் பெற்றுள்ளேன்.

**பெண்ணாக நீங்கள் இத்துறையில் சந்தித்த சவால்கள் இருப்பின் கூறுங்களேன்.**

ஆரம்ப காலங்களில் என்னுடைய குடும்ப உறுப்பினர்களிடம் முகநூல் குழுமங்களைப் பற்றிய புரிதல் ஏற்படும் வரையில் சற்று சிரமமாகவே இருந்தது. அதுவும் எங்கள் கவிதை தூவானத்திற்கு வெளிநாடு வாழ் தமிழ் நிறுவுநர், செயலாளர் என்றதும் அவர்கள் தயங்கியது உண்மையே... ஆனால் எங்கள் குழுமத்தின் ஆண்டு விழாவில் அதில் கிடைத்த அங்கீகாரம் மற்றும் பாராட்டுகளைக் கண்டு, படிப்படியாக என் மீது நம்பிக்கை வைத்து நான் தொடர்ந்து இலக்கியப் பயணம் செய்ய ஆதரவாக என் குடும்பம் இப்போது உறுதுணையாக உள்ளது.

**வளர்ந்து வருகின்ற இளம் எழுத்தாளர்களுக்கு ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?**

எல்லாவற்றையும் படியுங்கள். ஆனால் யாரையும் பின்பற்றாமல் உங்கள் சொந்த நடையில் எழுதுங்கள்.. வித்தியாசமான கதைக்களத்தில், புதிய கோணத்தில் சிந்தித்து சிறுகதை எழுதுங்கள்.நயமான வரிகளுடன் சிறந்த கருத்தாழம் மிக்க கவிதைகள் எழுதுங்கள்... தடைகள் வரலாம்... துவளாமல் தொடர்ந்து உழையுங்கள்... வெற்றி நிச்சயம்..

*மஜினா உமறுலெவ்வை*
மாவடிப்பள்ளி.

# பாகிஸ்தான் உடை வடிவமைப்புக்கள் கொண்ட அலங்காரக் கண்காட்சி












பாகிஸ்தான் உடை வடிவமைப்புக்கள் கொண்ட அலங்காரக் கண்காட்சி கடந்த 1ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பாகிஸ்தான் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரியான வாஜித் ஹசன் காசிமியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வு பி.எம்.ஐ.சி.எச்சில் பெப்ரவரி1ஆம் திகதி தொடக்கம் எதி'வரும் 5ஆம் திகதி வரை நடைபெறும். இங்கு உடை அலங்காரம், கைப்பணிப்பொருட்கள், பாதணிகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பாகிஸ்தான் மகளிர் அமைப்பு இலங்கைக்கு வருகை தந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

(அஷ்ரப் ஏ சமத்)

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் தைப்பொங்கல் விழா






கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தைப்பொங்கல் தின விழா கோலாகலமாக நடைபெற்ற போது....

படங்கள் : காரைதீவு குறூப் நிருபர் வி.ரி.சகாதேவராஜா

Senthooram செந்தூரம்





## 90 சதவிகித படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது

நடிகர் கவுண்டமணி கதையின் நாயகனாக நடிக்கும் படம், 'ஒத்த ஓட்டு முத்தையா'. அரசியல், நகைச்சுவை திரைப்படமான இதை நடிகரும் இயக்குநருமான சாய் ராஜகோபால் இயக்குகிறார். சசி ஃபிலிம்ஸ் தயாரிப்பில் கோவை லட்சுமி ராஜன் மேற்பார்வையில் உருவாகும் இதன் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதில் யோகி பாபு , ராஜேஸ்வரி, சிங்கமுத்து, சித்ரா லட்சுமணன், மொட்டை ராஜேந்திரன் உட்பட பலர் நடிக்கின்றனர். சித்தார்த் விபின் இசை அமைக்கிறார். ஹெக்டர் தர் ஒளிப்பதிவு செய்கிறார்.

படம் பற்றி சாய் ராஜகோபால் கூறியதாவது: சுமார் 70 படங்களில் கவுண்டமணி செந்திலுக்காக நகைச்சுவை பகுதி எழுதி இருக்கிறேன். 'சுந்தரி நீயும் சுந்தரன் நானும்', 'கிச்சா வயசு 16' படங்களை இயக்கி உள்ளேன். 'ஒத்த ஓட்டு முத்தையா', அனைவரும் ரசிக்கக் கூடிய அரசியல் கலந்த நகைச்சுவை திரைப்படம். இதில் யோகிபாபு விரும்பி நடித்தார். கவுண்டமணி, யோகிபாபு வரும் காட்சிகள் காமெடியாக இருக்கும். கவுண்டமணியிடம் யோகிபாபு அடிவாங்கும் காட்சிகளும் ரசிக்கும் விதமாக இருக்கும். அரசியல் கட்சி சார்பாகத் தேர்தலில் நின்று ஒரு ஓட்டில் தோற்றுவிடும் கவுண்டமணி, பிறகு சுயேச்சையாக இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து யோகிபாபு போட்டியிடுவார். இறுதியில் யார் வெல்கிறார்கள் என்பது கதை. சமகால அரசியலை நையாண்டி செய்யும் காட்சிகள் படத்தில் இருக்கும். நானும் முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறேன். கவுண்டமணி இதுவரை பேசிய பரபரப்பான பன்ச் வசனங்களை வைத்து ஒரு புரமோஷனல் பாடலை உருவாக்கி இருக்கிறோம்.



## 'வடக்குப்பட்டி ராமசாமி'

சந்தானம், மேகா ஆகாஷ் நடித்துள்ள படம் 'வடக்குப்பட்டி ராமசாமி'. பீப்பிள் மீடியா ஃபேக்டரி சார்பில் விஸ்வ பிரசாத் தயாரித்துள்ள இந்தப் படத்தை கார்த்திக் யோகி இயக்கியுள்ளார். இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் சந்தானம் பேசும்போது, " எனக்கு இதுதான் முதல் பெரிய பட்ஜெட் படம். 'டிடிரிட்டர்ன்ஸ்' பட ஸ்டைலில் ஒரு காமெடி படம் எடுத்து ஹிட் கொடுக்க ஆசைப்பட்டேன். அப்படி வந்த கதைதான் இது. இந்தப் படத்தில் யார் மனதையும் புண்படுத்தும் காட்சிகள் இருக்காது. அனைவரும் சிரித்து ரசிக்கும்படியாக இருக்கும். நானும் ஆர்யாவும் பல படங்களில் இணைந்து நடித்திருக்கிறோம். இடையில் சேர்ந்து நடிக்கவில்லை. விரைவில் இருவரும் இணைந்து அட்வென்சர் ஃபேன்டஸி படம் பண்ண இருக்கிறோம். ஆர்யா தயாரிப்பிலும் நடிக்க இருக்கிறேன்" என்றார். விழாவில் நடிகர்கள் ஆர்யா, அல்லு சிரிஷ், இயக்குநர் மடோன் அஸ்வின் மற்றும் படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

## 'ஸ்கூலில்' உளவியல் ஆசிரியையாக பூமிகா

குவான்டம் பிலிம் ஃபேக்டரி சார்பில் ஆர். கே.வித்யாதரன், கே.மஞ்சு இணைந்து தயாரிக்கும் படம், 'ஸ்கூல்'. இதில் பூமிகா சாவ்லா, யோகிபாபு, கே.எஸ். ரவிகுமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள். பக்ஸ், சாம்ஸ் ஆகியோருடன் பலர் நடிக்கின்றனர். ஆதித்யா கோவிந்தராஜ் ஒளிப்பதிவு செய்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி ஆர்.கே. வித்யாதரன் இயக்குகிறார். படம் பற்றி அவர் கூறும்போது, "இது ஸ்கூலில் நடக்கும் கதையைக் கொண்ட உளவியல் த்ரில்லர் படம். இன்றைய பள்ளி மாணவ, மாணவிகளின் கண்ணோட்டத்தில் சமுதாயத்தில் நடக்கும் கிரைம் சம்பவங்களை ஆராயும் விதமாக திரைக்கதை இருக்கும். அதே நேரத்தில் ஆவிகள், பிசாசுகள் பற்றிய நம்பிக்கைகள் குறித்தும் தீவிரமாகச் சொல்லவிருக்கிறோம். மாணவர்களை உளவியல் ரீதியாக ஆராய்ச்சி செய்யும் ஆசிரியராக பூமிகாவும் மாணவர்களை நல்வழிக்கு நடத்திச் சொல்லும் ஆசிரியராக யோகி பாபுவும், போலீஸ் அதிகாரியாக கே.எஸ். ரவிகுமாரும் நடிக்கின்றனர்" என்றார். இதன் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியுள்ளது.





## ஹாலிவுட் இயக்குநர் படத்திலிருந்து விலகினார் சமந்தா; இணைந்தார் ஸ்ருதி



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் சமந்தா, தசை அழற்சி பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்தார். இதற்காக சிகிச்சை பெற்று வந்த அவர், நடிப்புக்கு சிறிது காலம் விடுமுறை கொடுத்து விட்டு ஓய்வெடுத்து வருகிறார்.

இதற்கிடையே அவர் கடந்த 2021ம்ஆண்டு ஹாலிவுட் இயக்குநர் பிலிப் ஜான் இயக்கும் 'சென்னை ஸ்டோரி' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருந்தார். இதை அவரும் அறிவித்திருந்தார். டிமேரி என் முராரியின் 'அரேஞ்ச் மென்ட்ஸ் ஆஃப் லவ்' என்ற ரொமான்டிக் காமெடி நாவலின் அடிப்படையில் உருவாகும் இதன் படப்பிடிப்பு சென்னையில் தொடங்குவதாகவும் இருந்தது. இந் நிலையில் இந்தப் படத்தில் இருந்து சமந்தா விலகியுள்ளார்.அவருக்குப் பதிலாக அந்த வேடத்தில் ஸ்ருதிஹாசன் நடிக்க இருக்கிறார். அவருடன் விவேக் கல்ராவும் நடிக்கிறார். ஆங்கிலத்தில் உருவாகும் இந்தப் படத்தில் தமிழ் வசனங்களும் இடம் பெற இருக்கின்றன. ஸ்ருதிஹாசன், அனு என்ற தனியார் துப்பறியும் நிபுணராக நடிக்கிறார்.





தமிழில், பட்டதாரி, களவாணி மாப்பிள்ளை, ரஜினியின் ஜெயிலர் உட்பட சில படங்களில் நடித்திருப்பவர் மலையாள நடிகை மிர்ணா. இவர் அடுத்து, 'பெர்த் மார்க்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இதில் அவர் ஏழு மாத கர்ப்பிணியாக நடிக்கிறார்.

விக்ரம் ஸ்ரீதரன் இயக்கும் இந்தப் படத்தில் ஷபீர் கல்லாரக்கல் நாயகனாக நடிக்கிறார். ஜெனி என்ற கதாபாத்திரத்தில் மிர்ணா நடிக்கிறார். தீப்தி, இந்திரஜித், பொற்கொடி உட்பட பலர் நடிக்கும் இப்படத்துக்கு விஷால் சந்திரசேகர் இசை அமைக்கிறார்.

உதய் தங்கவேல் ஒளிப்பதிவு செய்கிறார். படம் பற்றி விக்ரம் ஸ்ரீதரன் கூறும்போது, "இந்தப் படத்தின் கதை ஜெனி என்ற கேரக்டரை சுற்றிப் பின்னப்பட்டுள்ளது. அதனால் அந்த கதாபாத்திரத்துக்கு திறமையாக நடிக்கக் கூடியவரைத் தேடிக் கொண்டிருந்தோம்.

அதில் சரியாக மிர்ணா பொருந்தினார். இயக்குநர், ஹீரோ என நாங்கள் எந்த அளவுக்கு உழைப்பைக் கொடுத்துள்ளோமோ அந்த அளவுக்கு மிர்ணாவும் கொடுத்துள்ளார். இந்தப் படம் அவரின் சிறந்த நடிப்பை வெளிப்படுத்துவதாக இருக்கும்" முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரத்தில் மிர்ணா

அர்ஜூன் தாஸ் காளிதாஸ் இணைந்து நடிக்கும் படத்துக்கு 'போர்' என்று தலைப்பு வைத்துள்ளனர். இதை பிஜோய் நம்பியார் இயக்கியுள்ளார். தமிழ், இந்தியில் உருவாகியுள்ள இந்தப் படத்தின் இந்திப் பதிப்பில், ஹர்ஷ்வர்தன் ராணே, எஹான் பட் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இதன் முதல் தோற்ற போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. "இந்தப் படம் கதை சொல்லலின் எல்லைகளை மாற்றி அமைத்து, வித்தியாசமான, பரபரப்பான அனுபவத்தை தரும் படைப்பாக இருக்கும்" என்று படக்குழு தெரிவித்துள்ளது. படத்தை குல்ஷன் குமார், டிசீரிஸ், ரூக்ஸ் மீடியா அண்ட் கெட்அவே பிக்சர்ஸ் நிறுவனங்கள் சார்பில், பூஷன் குமார், கிரிஷன் குமார், பிரபு ஆண்டனி, மது அலெக்சாண்டர், பிஜாய் நம்பியார் ஆகியோர் தயாரித்துள்ளனர்.

## அர்ஜூன் தாஸ், காளிதாஸ் இணைந்து நடிக்கும் 'போர்'




## 'டபுள் டக்கர்'



ஏர் ஃபிளிக் புரொடக்‌ஷன் தயாரிக்கும் படம் 'டபுள் டக்கர்'. இதில், தீரஜ் நாயகனாக நடிக்கிறார். ஸ்மிருதி வெங்கட் நாயகியாக நடிக்கும் இதில், கோவை சரளா, எம்.எஸ்.பாஸ்கர், யாஷிகா ஆனந்த், காளி வெங்கட், கருணாகரன், முனிஷ்காந்த், சுனில் ரெட்டி உட்பட பலர் நடிக்கின்றனர். வித்யாசாகர் இசை அமைத்துள்ளார். கவுதம் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

ஃபேன்டஸி காமெடி படமான இதை அறிமுக இயக்குநர் மீரா மஹதி இயக்கியுள்ளார். இதன் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில், போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் பரபரப்பா க நடந்து வருகின்றன. இதன் முதல் தோற்ற போஸ்டரை நடிகர் சூர்யா தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டார்."இந்தப் படத்தில், 2 அழகான அனிமேஷன் கதாபாத்திரங்கள் நாயகன் தீரஜுடன்இணைந்து நடிக்கின்றன. இது பார்வையாளர்களுக்கு புதுமையான அனுபவத்தைக் கொடுக்கும்" என்கிறது படக்குழு.

## ஆக்‌ஷன் படம் இயக்குகிறார் ஸ்டன்ட் சில்வா

பிரபல ஸ்டன்ட் இயக்குநர், ஸ்டன்ட் சில்வா. இவர், தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராத்தி, சிங்களம் என பல மொழிகளிலும் 300க்கும் மேற்பட்ட படங்களுக்கு ஸ்டன்ட் இயக்குநராகப் பணியாற்றி உள்ளார். இவர், இப்போது மிரட்டலான ஆக்‌ஷன் படம் ஒன்றை இயக்க இருக்கிறார். இதுபற்றி அவர் கூறும்போது, "ராஜமவுலி இயக்கத்தில் ஜூனியர் என்.டி.ஆர் நடித்த 'எமதொங்கா' என்ற படம் மூலம் ஸ்டன்ட் இயக்குநர் ஆனேன்.

தொடர்ந்து படங்களில் பணியாற்றி வருகிறேன். வில்லனாகவும் நடித்து வருகிறேன். சமீபத்தில் அருண்விஜய் நடிப்பில் வெளியான 'மிஷன் சாப்டர் 1' படத்தில் நூற்றுக் கணக்கான ஸ்டன்ட் நடிகர்களை வைத்து நான் அமைத் திருந்த ஆக்‌ஷன் காட்சிகளுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது.

சமுத்திரக்கனி, சாய் பல்லவியின் தங்கை பூஜா நடிப்பில் 2022ம்ஆண்டு 'சித்திரை செவ்வானம்' என்ற படத்தை இயக்கினேன். இதில் சமூகத்தில் பெண் பிள்ளைகளை எப்படி பாதுகாப்பாக வளர்க்க வேண்டும் என்றும் சோஷியல் மீடியாவை எப்படி கையாளவேண்டும் என்றும் சொல்லி இருந்தே ன்இப்போது பிரம்மாண்டமான அதிரடி ஆக் ஷன் படத்தை இயக்க இருக்கிறேன். இது பற்றிய விவரங்களை விரைவில் அறிவிக்கிறேன்.





# பிள்ளைகளின் பிழைக்குத் துணை செல்லாதீர்கள்

முதலில் பெற்றோர்கள் குழந்தைகள் முன்பாகவும், குழந்தைகளிடமும் மரியாதையுடன் உரையாடுங்கள். நாம் விதைப்பதை தான் நாம் அறுவடை செய்ய முடியும். பிழையான சொற்பிரயோகம் கொண்டு பிள்ளைகளை நீங்கள் திட்டினால் மன்னிப்பு கேட்கத் தயங்காதீர்கள். அதே போலவே பிள்ளைகள் பேசினால் மன்னிப்பு கேட்கக் கற்று கொடுங்கள். தொலைக்காட்சி, கைப்பேசி இரண்டிலும் நல்ல நிகழ்ச்சிகளை பார்க்க அனுமதியுங்கள். பெரியோர்கள் பேசும் இடங்களில் குழந்தைகளை அனுமதிக்காதீர்கள்.

வீட்டில் உள்ள பெரியோர்களை மதிக்க கற்றுக் கொடுங்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளை முகம் சுலிக்காமல் செய்ய பழக்குங்கள். உங்கள் பகைமை, விரோதம் என்பவற்றை பிள்ளைகள் நெஞ்சில் நிரப்பாதீர்கள். ஏழை, பணக்காரன், முட்டாள் போன்ற பிரிவினைச் சொல்லை சொல்ல அனுமதி கொடுக்காதீர்கள். குழந்தை வேறொரு பிள்ளையின் மீது குற்றச் சாட்டு சொல்லும் போது ஆராய்ந்து சரியான தீர்ப்பை சொல்லுங்கள். பிள்ளைகளின் பிழைக்குத் துணை செல்லாதீர்கள்.

பொது இடங்களில் தண்டிக்காதீர்கள். அதே வேளை பிள்ளைக்கு எச்சரிக்கைக் கொடுக்க மறக்காதீர்கள். யாரிடமும் எதையும் எதிர் பார்த்து அன்பு செலுத்த அனுமதிக்காதீர்கள். குழந்தைகளை குழந்தைகளாக வளர விடுங்கள். வாசிக்கக் கற்றுக்கொடுங்கள். விசேட நாட்களில் புத்தகங்களை பரிசளியுங்கள். அவர்களின் நட்பு வட்டம் உங்கள் பார்வையிலே இருக்கட்டும்.

மன உறுதியுடன் உண்மை பேச பழகுங்கள். உண்மை பேச முடியாத இடங்களில் பொய் தேவையில்லை. அமைதியாக இருக்க பழகுங்கள். பிள்ளைகள் பேசுவதை செவிமடுங்கள். மற்றவர்கள் பேசுவதை செவிமடுக்க வழி செய்யுங்கள். கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பாகவும், சிறப்பான விடயங்களை செய்யும் போது பாராட்டவும் தயங்காதீர்கள். மாதம் ஒரு நாள் அவர்களுடன் வெளியில் சென்று பிடித்ததை கேட்காமலே வாங்கிக் கொடுங்கள். நீங்கள் செயற்படும் விதம் முக்கியம். காரணம் உங்கள் செயற்பாடுகள் அனைத்தையும் அவர்கள் கவனித்து கொண்டே இருப்பார்கள். அதற்கு பெற்றோர் நாம் சரியாக நடக்க எம் பின்னே பிள்ளைகளும் நல் வழி நடப்பார்கள்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# முக சுருக்கங்கள் மாயமாய் மறைய... வேப்பிலை மாஸ்க்

உங்கள் அழகான முகத்தில் கரும்புள்ளிகள் மற்றும் சுருக்கங்கள் உள்ளதா? உங்கள் முகத்தில் உள்ள சுருக்கங்கள் மற்றும் கரும்புள்ளிகளை மறைக்க நிறைய கிளென்ஸர் மற்றும் ஃபவுண்டேஷன் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளதா... ஆம் எனில், கவலைப்பட வேண்டாம். இன்று இந்த கட்டுரையில் அத்தகைய பயனுள்ள முக மாஸ்க் பற்றி அறிந்து கொள்ளலாம்.. இது உங்கள் சருமத்தை இளமையாகவும் அழகாகவும் மாற்றும். மேலும் ரசாயன பொருட்களால் ஏற்படும் பாதிப்புகளில் ரிருந்தும் தப்பலாம். ஏறக்குறைய ஒவ்வொரு பெண்ணும் தனது சருமம், பளபளப்பானதாகவும், களங்கமற்றதாகவும், சுருக்கங்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். ஆனால் இன்றைய காலகட்டத்தில், சிறு வயதிலேயே இதுபோன்ற பிரச்சனைகளை மக்கள் சந்திக்கின்றனர்.

நீண்ட நேரம் சூரிய ஒளியில் இருப்பது, முகப்பரு, முதுமை, மெலஸ்மா, ஹார்மோன் மாற்றங்கள், காயம் அல்லது ஏதேனும் அதிர்ச்சி போன்ற பல்வேறு காரணங்கள் இந்தப் பிரச்சனைக்கு இருக்கலாம். அதோடு தற்போதைய உணவு முறை மற்றும் வாழ்க்கை முறையும் ஒரு காரணம். முக சுருக்கங்கள் மற்றும் கரும்புள்ளிகளை குறைக்க முகத்தில் எந்த ஃபேஸ் மாஸ்க் போட வேண்டும் என்பதை தெரிந்து கொள்வோம்.

சுருக்கம் இல்லாத, தெளிவான, களங்கமற்ற சருமத்தை நீங்கள் விரும்பினால், வேப்பிலை கொண்டு தயாரிக்கப்பட்ட பேஸ் மாஸ்க் உங்களுக்கு சிறந்ததாக இருக்கும். ஆயுர்வேதத்தில் வேம்புக்கு தனி முக்கியத்துவம் உண்டு. இது சக்திவாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளைக் கொண்டுள்ளது. இது முகத்தில் உள்ள முகப்பருவைக் குறைக்கும். மேலும் பல வழிகளில் சரும தொற்றுகளை குறைக்கலாம். வேப்பிலையில் ஆக்ஸிஜனேற்ற பண்புகள் உங்கள் சரும செல்கள் சேதமடைவதைத் தடுக்கும். மேலும், இது மெலனின் உருவாவதைத் தடுக்கும். வேப்பிலை கொண்டு தயார் செய்த ஃபேஸ் பேக்குகளை தவறாமல் தடவி வந்தால் சில வாரங்களில் நல்ல பலன் கிடைக்கும்.



# பூஞ்சோலைப் போல் அழகுக்கு அழகு சேர்க்கும் சேலை



பெண்களின் அழகுக்கு அழகு சேர்ப்பது அவர்கள் அணியும் உடை, அதில் முக்கியமானது சேலை. ஒரு சிலர் நேர்த்தியாக சேலையை கட்டுவார்கள். சிலருக்கு சரியாக அதை உடுத்த தெரியாது. புடவை அணியும்போது சின்னச் சின்ன விஷயங்களில் கவனம் செலுத்தினால் அந்த உடை மிகவும் அழகான தோற்றத்தைத் தரும். அதற்கு சில டிப்ஸ்□

★உயரமாக இருக்கும் பெண்கள் சேலையைத் தரையில் புரளுமாறு தழையத் தழைய அணிய வேண்டும். சோளியைக்கூடியவரை முழங்கையைத் தொடும் அளவு அணிந்தால் அழகாக இருக்கும்.

★கருப்பு நிறம் கொண்ட பெண்கள் வெண்மை நிறமுடைய உடைகள் அணிவதை தவிர்க்க வேண்டும். வெண்மை ஆடைகள் கருப்பு நிறத்தை அதிகப்படுத்திக் காண்பிக்கும்.

★மாநிறம் கொண்ட பெண்கள் தூய வெள்ளை ஆடைகளை அணிந்தால் எடுப்பாகவும், எழிலாகவும் இருக்கும்.

★நல்ல சிவப்பு நிறம் கொண்டவர்கள் அழுத்தமான வண்ணத்தில் சேலை அணிந்தால் மிக அழகாக இருக்கும்.

★மிகவும் உயரம் குறைந்த தோற்றமுடைய பெண்கள் அகலக்கரையும், படுக்கைக்கோடுகளும் கொண்ட அழுத்தமான வண்ணமுடைய சேலைகளை அணிந்தால் நேர்த்தியான தோற்றம் அளிக்கும்.

★பெண்கள் அணியக்கூடிய சேலையின் அமைப்பே அவர்களின் தோற்றத்தை மாற்றியமைக்கும் தன்மையுடையதாகும். சேலையில் அமைந்த கோடுகள் குறுக்குவாட்டில் இருந்தால் உயரமானவர்களும் குள்ளமான தோற்றத்தைப் பெறுவார்கள். கோடு நேர்வாக்கில் இருந்தால் குள்ளமான பெண்களும் உயரமான தோற்றத்தைப் பெறலாம்.

★கல்யாணம் போன்ற குடும்ப விழாக்களுக்குச் செல்லும்போது வேலைப்பாடுகள் செய்த உடைகளை அணிந்தால் எடுப்பாக இருக்கும். வயதை குறைத்துக் காண்பிக்கும். உடல் முழுவதும் கொடி, கொடியான சித்திர வேலைப்பாடுகளும், அகலமான ஜரிகையும் அமைந்த பட்டுப் புடவைகள் குடும்ப விழாக்களுக்கு அணிந்து சென்றால் மிகவும் தன்மையான தோற்றத்தைத் தரும்.

★சேலைகள் நம் உடல் அமைப்பையும் தோற்றத்தையும் மாற்றியமைக்கும் தன்மை கொண்டது என்பதை மனதில் கொண்டு சேலைகளை தேர்ந்தெடுத்து அணிய வேண்டும்.

# பொத்துவில் அஸ்மின் எழுதிய "தாயம்மா" தலைப்புப் பாடல் வரலாறு மீண்டும் திரும்புகிறது!



ராடான் மீடியா ராதிகா சரத்குமார் தயாரிப்பிலும் நடிப்பிலும் இந்திய அரச தொலைக்காட்சியான பொதிகையில் வாரந்தோறும் ஒளிபரப்பாகி வருகிறது "தாயம்மா குடும்பத்தார்" நெடுந்தொடர். இந்த தொடரை விக்ரம் ஆதித்யா இயக்கியுள்ளார்.

ராதிகா சரத்குமார் மிக நீண்ட இடைவெளிக்கு பின் நடித்துள்ள இத்தொடருக்கு ரசிகர்களிடையே வரவேற்பு அதிகரித்துள்ளது.

ராடன் நிறுவனம் தயாரிப்பில் கலர்ஸ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய "ஜமீலா" நெடுந்தொடரில் ரிஸ்வான் இசையில் மூன்று பாடல்களை பொத்துவில் அஸ்மின் எழுதியிருந்தார், குறித்த மூன்று பாடல்களும் ரசிகர்கள் மத்தியில் நன்கு வரவேற்பு பெற்றன.

அதன்பின்னர் ராடன் நிறுவன தயாரிப்பில் பொத்துவில் அஸ்மின் பாடல் எழுதிய இரண்டாவது நெடுந்தொடர் ,"தாயம்மா குடும்பத்தார்" ஆகும். இந்த நிலையில் பொத்துவில் அஸ்மின் அவர்கள் இது தொடர்பில் கூறுகையில்..

ராதிகா சரத்குமாரின் சித்தி நெடுந்தொடருக்கு தினா இசையில் மறைந்த இலங்கை முஸ்லிம்களின் மாபெரும் தலைவர், கலாநிதி மர்ஹூம் எம்.எச்.எம் அஸ்ரப் அவர்கள் "விருட்சமுனி" எனும் பெயரில் ஒரு பாடலை எழுதியிருந்தார்.

"வானத்தை நோக்கி ஒரு வண்ணத்து பூச்சி பறந்திட முனைந்ததுவே", என ஆரம்பிக்கும் பாடலை பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள் பாடியிருந்தார். இத்தொடர் 1999 முதல் 2001 வரை சண் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. 2000 ஆண்டு இடம்பெற்ற விமான விபத்தில் தலைவர் அஸ்ரப் அகாலமரணமானார்.

2001 ஆம் ஆண்டு நான் பொத்துவில் மத்திய கல்லூரியில் உயர்தரம் படிக்கும் காலகட்டத்தில் அவர் மறைவை முன்னிட்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற கவிதைப்போட்டியில் "அரசியல் வானில் அஸ்ரப் எனும் விடிவெள்ளி" எனும் தலைப்பில் நான் எழுதிய கவிதை முதலிடம் பெற்று அப்போதைய இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கரங்களால் விருது பெற்றபோதே என் இலக்கிய வாழ்க்கை முறைப்படி அங்கீகாரத்தோடு தொடங்கிவைக்கப்பட்டது.

நான் வாழ்க்கையில் பெற்ற முதல் விருது, முதல் பரிசு அவருக்காக எழுதப்பட்ட கவிதைக்கு கிடைத்ததென்றால், "தென்கிழக்கின் பொன் விளக்கு" என்றபெயரில் நான் எழுதிய முதல் பாடலும் அவருக்காக எழுதுப்பட்டதே.

2001 மற்றும் 2002 ஆம் ஆண்டு வெளிவந்த எனது கவிதை நூல்கள் விடைதேடும் வினாக்கள்", "விடியலின் ராகங்கள்" ஆகியவற்றை தலைவர் அஸ்ரப் அவர்களுக்கே நன்றியுடன் சமர்ப்பணம் செய்திருந்தேன்.

25 ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு இலங்கை கவிஞனாய் அவர் பாடல் எழுதிய ராதிகா சரத்குமார் அவர்களுக்கு நான் பாடல் எழுதுகின்றேன் என்பதை நினைத்துப்பார்த்தால் மனம் பூரிப்படைகின்றது. இத்தொடரின் தலைப்பு பாடலினை இசையமைப்பாளர் C.சத்யா இசையில் நான் எழுதியுள்ளேன் அவரோடு இணைந்து பணிபுரியும் முதல் தருணம் இதுவாகும்.

"எங்கேயும் எப்போதும்", "நெடுஞ்சாலை", "தீயா வேலை செய்யனும் குமாரு", "காஞ்சனா 02", "அரண்மனை03", "ராங்கி", "நாடு" போன்ற படங்களுக்கு இசையமைத்திருக்கும் இவர் "கனா காணும் காலங்கள்", "ரேகா IPS", "வாணிராணி", "லக்ஸ்மி ஸ்டோர்ஸ்", "சரவணன் மீனாட்சி" போன்ற பல நெடுந்தொடர்களுக்கும் இசையமைத்துள்ளார்.







பாடலை புகழ்பூத்த தமிழ்சினிமா பாடகி சைந்தவி பாடியுள்ளார். அவர் குரலில் பாடல் கேட்பவர் மனதை தாலாட்டும்படியாக அமைந்துள்ளது. "தாயம்மா" என் பாடல் பணியில் நிச்சயம் ஒரு மைல்கல்லாக இருக்கும் என நம்புகின்றேன்.

இந்த தருணத்தில் மூத்த கலைஞர் ராதிகா சரத்குமார் அவர்கள், ராடன் நிறுவன மேலாளர் சுபாவெங்கட், திரைப்பட இயக்குனர் "திருமணம் எனும் நிக்காஹ்" புகழ் அனீஸ், இசையமைப்பாளர் C.சத்யா ஆகியோருக்கும் என் வாழ்நாள் நன்றிகள் கவிஞர் பொத்துவில் அஸ்மின் குறிப்பிட்டார்.

தாயம்மா குடும்பத்தார் நெடுந்தொடர் பொதிகை தொலைக்காட்சியில் (DD தமிழ்) திங்கள் முதல் வெள்ளிவரை இரவு 8.30 மணிக்கு ஒளிபரப்பாகிறது.

# நார்தர்ன் வாரியர்ஸ்" சாம்பியன்ஸ் 11வது வருடாந்தர "மேட்ஸ் விஷன்" கிரிக்கெட் சுற்றுப்போட்டி











*மெல்போர்ன் "மேட்ஸ் விஷனின்" 11வது வருடாந்த கிரிக்கெட் டேப்ட் பால் போட்டியை ஆஸ்திரேலியா நாளில் (ஜனவரி 26, 2024) மெல்போர்னில் உள்ள விக்டோரியாவில் உள்ள "செலேந்திர ரிசர்வ்" கிரான் போர்னில் நடத்தியது.*

*இது "மேட்ஸ் விஷன் அவுஸ்திரேலியா" நடாத்தும் வருடாந்த நிகழ்வாகும், மேலும் இந்த போட்டியின் வருமானம் இலங்கையிலும் அவுஸ்திரேலியாவிலும் அமைப்பின் செயல்திட்டங்களுக்கு பயன் படுத்தப்படும். தற்போதைய திட்டங்களில் சில:*

*அனாதை ஆதரவு திட்டம்*

*விதவைகள்*

*ஆதரவு திட்டம்*

*பின்தங்கிய சிறுவர்களுக்கான உதவித்தொகை திட்டம்*

*சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கான ஆதரவு*

*அவசர முறையீடுகள்*

*ஹோம்லெஸ் ரன் பிரச்சாரம் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் வீடற்றவர்களுக்கான உணவு விநியோகம்.*

*"ஹுசைன் பைசர்" தலைமையிலான "நார்தர்ன் வாரியர்ஸ்" இறுதிப் போட்டியில் "சொரிங் சிக்சர்களை" கடுமையாக போராடிய ஆட்டத்தில் தோற்கடித்தது.*

*சாம்பியன்கள்: "நார்தர்ன் வாரியர்ஸ்" கேப்டன் "ஹுசைன் பைசர்"*

*ரன்னர் அப்: "சொரிங் சிக்ஸர்கள்" கேப்டன் "சஹத் ரிஸ்மி"*

*சிறந்த பந்துவீச்சாளர் விருது: "ஷசிகா குணதுங்கே" அணி உயரும் சிக்ஸர்களில் இருந்து*

*சிறந்த பேட்ஸ்மேன்: "அணி சோரிங் சிக்ஸர்கள்" அணித்தலைவர் "சஹத் ரிஸ்மி"*


*ஆட்ட நாயகன்: டீம் நார்தர்ன் வாரியர்ஸ் "ரிஃப்டி ரஃபி" இந்நிகழ்வின் கௌரவ விருந்தினராக ஜிஃப்ரி ஹனிஃபா (YMMA இன் முன்னாள் தலைவர்) மற்றும் விஷேட விருந்தினராக மொஹமட் ஹாஜி மஹ்ரூப் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

# பாடசாலை மைதானத்திற்கு மின் ஒளி
















மாபொல, அல்அஷ்ரப் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுச் சபையின் வேண்டுகோளுக்குகிணங்க முன்னாள் வத்தளை மாபோல நகர சபை பிரதித் தலைவரின் சகோதரர் தாயிர் ரிசானின் (Thahir Rizan) முழு அனுசரணையுடன் பல இலட்சம் ரூபா செலவில் பாடசாலை மைதானத்திற்கான மின் ஒளி வழங்கும் திட்டம் நிறைவு செய்யப்பட்டு பாடசாலைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு அதிபர் இர்ஷாட்டின் தலைமையில் நடைபெற்றது.

# செல்லப்பிராணிகளுக்கான நவீன காட்சியறை Royal Aquarium & Pet Accessories














அலங்கார மீன்கள் மற்றும் பறவைகள் உள்ளிட்ட செல்லப்பிராணிகளுக்கான புதிய நவீன காட்சியறையான Royal Aquarium & Pet Accessories அண்மையில் இலக்கம் 03, நீர்கொழும்பு வீதி, ஒளியமுல்ல, வத்தளை என்னுமிடத்தில் திறந்துவைக்கப்பட்டது. காட்சியறையினை திறந்துவைப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன அழைத்து வரப்படுவதையும் ஏனைய அதிதிகளையும் காட்சியறையினையும் படங்களில் காணலாம்.


# திக்குவல்லை மண்ணின் புகழை நாடறியச் செய்த கவிஞர் யோனகபுர ஹம்ஸா

அவரின் ஐந்தாவது நூலான விளக்கே நீ விளக்கு வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

மூத்த கவிஞரும் ஓய்வுநிலை ஆசிரியருமான கலாபூசணம் யோனகபுர ஹம்ஸா அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக எழுதி வருபவர். திக்குவல்லை மண்ணிற்கு பெருமை பெற்றுத் தந்த எழுத்தாளர்கள் பட்டியலில் குறிப்பிடத்தக்க ஒருவரான ஹம்ஸா சிறுகதை, கட்டுரை, நாடகம், கவிதை, பாடல், சித்திரம் என பல்வேறு துறைகளில் தடம்பதித்தவர்.


ஆரம்ப காலத்தில் சினிமா மெட்டில் பாடல் அமைத்து பின்னர் திருமண






















வாழ்த்துக்கள் எழுதினார். 196080 களில் தீவிரமாக எழுதிய இவர் இலக்கிய மாநாடுகளிலும் கவியரங்குகளிலும் இலங்கை வானொலியிலும் பங்கேற்று வந்தது குறிப்பிடத்தக்கது. ஊரில் பல நாடகங்களை மேடையேற்று நடித்தும் வந்துள்ள இவர் 1960 களில் எம்.எச்.எம். ஷம்ஸ் உள்ளிட்ட இலக்கிய நண்பர்களுடன் இணைந்து இக்பால் கலாமன்றம் அமைத்து களிகம்பு, கோலாட்டம் போன்ற கலைகளை வளர்க்க பங்களித்தார். திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் உருவாக்கி எழுத்தாளர் பரம்பரை உருவாக இவர் வித்திட்டது விசேட அம்சமாகும்.



இது வரை ஐந்து புத்தகங்களை யோனகபுர ஹம்ஸா வெளியிட்டுள்ளார். சில வருடங்களாக எழுத்துத் துறைக்கு ஓய்வு கொடுத்து நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அவ்வப்போது பேனாவை ஏந்தி வருகிறார். வானவில் (சிறுவர் பாடல் 2006), நெஞ்சத்தில் நிறைந்தவர்(வரலாறு 2012),புன்னகைச் சுடர்(சிறுவர் கதை 2012) மங்காச் சுடர் எம்.ஸீ.எம்.நிஸார்(தொகுப்பு2018) விளக்கே நீ விளக்கு( கவிதை நூல்2024)என்பனவே அவரின் பிரசவங்களாகும்.

அவரின் விளக்கே நீ விளக்கு வெளியீட்டு விழா கடந்த 24ஆம் திகதி, புதன் கிழமை, திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை மஹ்மூத் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிர் தலைமையில் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் திக்குவல்லை சப்வான் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்த நூல் மாணவர்களுக்கு எவ்வகையில் பயன்பெறும் என்பது பற்றியும் இவ்வாறான ஆளுமைகளை மாணவர் சமுகத்திற்கு அறிமுகம் செய்வதன் அவசியம் பற்றியும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மஷாயிர் மற்றும் பாடசாலை அதிபர் அஸ்வான் ஆகியோர் கருத்து முன்வைத்தனர்.

கல்வி, கலை, இலக்கியம் என்று ஓயாப் பணியாற்றிய யோனகபுர ஹம்ஸா பல நூல்களை வெளியிட்டுள்ள போதும் அவரது முதலாவது கவிதை நூல் இது என்று திக்குவல்லை கமால் தனது நூலாய்வில் எடுத்துக்காட்டினார். இந்த நூல் பல வருடங்களுக்கு முன்னர் வெளிவந்திருக்க வேண்டியது. இக்கவிதைகளில் மரபு, புதுமை, பேச்சுமொழி, கருத்தியல், விழுமியம், சமயம் என்று பல தரப்பட்டவை உள்ளடங்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.




எழுத்தாளர் செய்யது இஸ்மாயில் இமாம் உரையாற்றுகையில், நற்பணிகளை வித்துகளாக பரப்புவதில் இக்கவிதைகள் வெற்றி பெற்றுள்ளதாக கிளாசித்துப் பேசினார். மகாகவி இக்பாலின் கவிதைகளுடன் இணைத்து அவர் தன துரையின் பல விடயங்களை தொட்டுச் சென்றார். திக்குவல்லை சப்வானின் கவிவாழ்த்து இடம்பெற்றது. முன்னாள் பிரதிப் பணிப்பாளர் எம்.ஜே.முஹம்மதும் இங்கு உரையாற்றினார்.

இறுதியில் நூலாசிரியரின் ஏற்புரை இடம்பெற்றது. 85 வயதை எட்டியும் இன்னும் இலக்கிய ஆர்வம் குறையாமல் இருக்கும் திக்குவல்லை ஹம்ஸா தேகாரோக்கியத்துடன் மென்மேலும் இலக்கியம் படைக்க பிரார்த்திப்போம். அவரின் ஏனைய கலைப்படைப்புகளும் நூல் வடிவம் பெற வாழ்த்துவோம்.

ஷம்ஸ் பாஹிம்

# வாசிப்பின் குறியீடும் குறியீட்டு வாசிப்பும்



இலக்கியப் பயில்வின் போது குறியீட்டுப் படிவு உறைந்திருக்கக் காணலாம். வாசிப்பில் புதிய உந்தலைத்தருவதாக குறியீட்டு வாசிப்பு இருக்கும்.இந்த வாசிப்பு முறை ஒரு பொருள்வழி மற்றொரு பொருளை உருவாக்க அல்லது கண்டடைய வழிகாட்டும்.

கம்பராமாயணக் காட்சிகளிலும் குறியீட்டு வாசிப்பு இருக்கிறது.இது 'கொற்றத்து ராமன் கதை'வாலியை மறைநிலையிலிருந்து தாக்குகிற ராமன் கொற்றத்து ராமனா?

கேள்வி எழுகிறது.

'வாலிவதை படலத்தை'முன்வைத்தெழும் கேள்விகள் முக்கியமானவை.

ராமனுக்கும்வாலிக்குமான உரையாடலை கம்பன் கட்டமைக்கிறான்.

இதற்குள் மேலெழும் வாசிப்பு.'ஆதிக்க சக்திகள் எப்போதும் ஒரு சமூகத்தை ஒடுக்கிக் கொண்டேயிருக்கும்'

ராமன்ஆதஇக்க அதிகாரத்தின் குறியீடு.

வாலிஒடுக்கப்படும் சமூகத்தின் அடையாளம்.

மறைந்திருந்து தாக்குதல்ஒடுக்கப்படும் அதிகார முறை.

இந்நிலையை வாலிவதையில் காணுகிறோம்.

இதுவே ஆதிக்க சக்திகளுக்கும்,அடக்கப்பட்டோருக்குமிடையிலான முரண்பாட்டின் வெளிப்பாடு.

ராமன்'இப்பித்தாய விலங்கினத்தின் ஒழுங்கினைப் பேசலாமோ......'என்ற தொடரில்,சுக்ரீவனை பித்தான விலங்கு என்கிறான்.அதற்கு மேலே சென்று அந்தப்பித்தாய விலங்கிடமிருக்கும் உதவும் குணத்தைதன் மனைவி மை மீட்க உதவுவதான நிலையை கருதுகிறான்.மேலாதிக்கத்தின் சந்தர்ப்பவாத நிலையை இவ்விடத்தில் வாசகர் வாசிக்க வேண்டியுள்ளது.

வாலிமீது மறையம்பு எய்கிறான் ராமன். இது அடக்குமுறையின் உச்சக்கட்டம். ராமன் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையுமுடையவன் வாலி.அறத்தின் வழிகாட்டியென்றும்,இருமையும் நோக்கும் இயல்புடையவன் என்றும்,கூறுவான்.ராமன் இழி செயல் கொள்வது தருமம் தன்னை அழிப்பதற்கு ஒப்பானது.எனவே அது நடவாதென்கிறான்.இது ஒடுக்கப்படுவோரின் எளிய மனநிலையென வாசிப்புச் செய்ய வேண்டியுள்ளது.

'சிறிய சிந்தியாதான்' என்ற கூற்று வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் அப்பாவிகளின் மனநிலையை வாசிப்புச் செய்கிறது.

ராமன் வாலிமுன் தோன்றும் போது 'என்னுற்றாய்,என்செய்தாய் 'எனவெழும் கேள்விகள் அடக்கப்பட்டவர்களின் வெளிக்காட்டமுடியா மன எழுச்சியை அல்லது போர்க்குரலை இவ்வாறுதான் வாசிக்க வேண்டியுள்ளது.

அறத்தின் அடிப்படைகளையே அழித்தவாலிவதையை

வாசிக்கும்போது மேலாதிக்க சக்திகள் தமது நியமங்களை,நெறிகளை,பலமற்றவர்கள் மீது திணித்து விடுவார்கள்.

எதிர்க்குரலை அடக்கிவிடுவார்கள்,அடங்கிப் போகவும் செய்து விடுவார்கள். என்பதையே ராமனுக்கும்வாலிக்குமிடையிலான உரையாடல் நிறுவுகிறது 'நின்சரமலாற் பிறிது வேறுளதோ தருமம்' என்று வாலி கூறுமளவு ஆதிக்க குரல் எதிர்ப்புக்குரலை அடக்கிவிடுகிறது.இந்த வாசிப்பே காலாகாலமாகவுள்ளது.

மறுபுறம் குரங்கினத்தானை உயர்ந்த மனநிலையில் வைத்து வாசிக்கவும் வேண்டியுள்ளது.வாலியின் போர்த்தர்மம்,வாதிடு திறன்,என்பவற்றால் மனிதனைவிட உயர்ந்தவன் ஆகிறான்."அடக்குவோர் தர்மத்தை மீறினாலும் அடக்கப்படுவோர் தர்மவழியில் நிற்பர்"

என்ற வாசிப்பு வாலிவதையில் வாலியை 'சிறியன சிந்தியாதான்'என நிறுவுகிறது. வாலிவதை மீதான புதிய குறியீட்டு வாசிப்புகள் மேலும் பொருண்மையை அகலிக்கலாம்.







இரண்டாம் பக்க அடிக்குறிப்பு

(அ)

பாடசாலை தர்மவிதிப்புத்தகத்தின் நினைவிலொட்டி நிற்கிறது. புத்தகத்தின் பக்கங்களைக்காட்டிலும் இணைப்பாட நிழ்த்துகைகளின் நினைவுகள் தான்நா னும் நிகழ்த்துகைக் காரனாகி நிற்கிறேன்ள னக்குள் மகிழ்வின் ரேகைகள்

கல்விக்காலத்தின் சுவடுகள்

என் கால்த்தடம் பட்டென்னைப்புடம் போட்ட பள்ளிக் காலம்

பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் அடிக்குறிப்பிலகருக்கிறது அழகியதென் கையெமுத்துப் பழகிய கையெழுத்து சஞ்சிகை 'வளர்பிறை'யென வளர்ந்தது

'வேலையொன்று கிடைத்து விட்டது' எட்டாம் வகுப்புப் பிஞ்சுப்பேனாவின் கதை வந்ததிலிருந்து

எழுத்து வேலையொன்று கிடைத்தே விட்டது நெடும் பயணம் தொடருமொரு பணி

ஏஎல் படிக்கும் எண்பதுகளில்

'சருகுகளாய்' கவிதைச்சோலையிலே பூத்தது

ஸலாம் சொல்லி நண்பரெழுதினர் வாழ்த்து

"வாழ்க்கைக் கடலில் வறுமைக் கப்பல்கள்

விடிவுக்கரையைத்தேட

சீதனப்புயல்கள் திசையை மாற்றி மூழ்கடிக்கும்....."எழுதத் தொடங்கிய சமூகப்பார்வை 'சமுகா'வாக்கியது என்னை

இல்ல விளையாட்டுப் போட்டிகள் பாடசாலைப்புத்தகத்தின் வீரிய பக்கங்கள்

உள்ளத்தின் உவகையை மைதானத்தின் மையத்தில் ஓடும் கால்களால் எழுதியது

மைதானமென்பது சிறுதிடல் சின்னக்கால்கள் புதையும் மணல் தடம்

முயலோட்டம் தொடங்கி நீளம் வரை பதினைந்தின் கீழ்

சம்பியனாக்கியது

பொக்கட்டில் பூ போட்டு தைத்த சேட்டில் இருந்தது நினைவு கிழியாப்பரிசு

உத்தி யாட்டு கிளித்தட்டு கிட்டிப்புள்ளு புங்கடி புளியடி புளியடிச்சந்தியில் வேர் கொண்டது

மரதனோட்டம் வெலகெதர வரை நீண்டது

கிழிந்த நெற்றிக் ஓட்டைப் பந்தை வொலிபோலாக்கியது ஜின்னா ரீம்

பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் பதின்மூன்று பக்க அடிக்குறிப்பு 05

பாடசாலைப்புத்தகத்தின் பக்கங்கள் நடிப்புக்கலை மேடைகளாயின

சித்திர குப்தன்,சீத்தலைச் சாத்தனார்,தண்டனையின் அன்வர்,ஒருதுளி ரத்தத்தில் வழக்கறிஞனென எனக்குள் பாத்திரங்கள் முதிர்ந்தனநெறியாள்கை,கூட்டு நடிப்பு இயக்கமென

ஊர்மேடைவரை வளர்ந்தது கலையொரு காலம்

பாடசாலைப்புத்தகத்தில் வானொலியும் வளர்ந்தது

அறிவிப்பின் மொழியை உதடுகள் உச்சரித்த பிஞ்சுக்குரலில் துளிர்த்தது பேரவா

மாணவர் மன்றத்தில் துளிர்த்த குரல் பெரு மேடைகளில் விரித்த குரல் இ.ஒ.கூ. தா.வரை பரந்ததென் குரல்

பாடசாலை இணைப்பாட விதானத்தின் கீழ் நிழலிருக்கை ஆளுமையின் ஆரம்பமென் பேன்

பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் அடிக்குறிப்பில் உறைந்து கிடக்கிறது அரைநூற்றாண்டின் நினைவுகள்

# மாற்றுமொழிக் கவிதை

கவிதை எழுப்பும் கேள்விகள் அர்த்தம் மிக்கது.அதன் வழி வாசகரின் சிந்தனைப்பரப்பில் சிறிய கல்லையோ ஒரு பூவையோ எறிந்து விடும். சிவிக் சந்திரன் என்கிற கேரளக் கவியின் "நாங்களோ பலர்" இத்தகைய கேள்விகளைத் தொடுத்து விடுகிறது.

மாற்றுமொழிக் கவிதை

சிவிக் தெரு நாடக இயக்கக்காரராக செயற்பட்டவர்; சுற்றுச்சூழல்சார் பிரச்சினைகளில் அக்கறை கொண்டவர்."மண்ணும் சொல்லும்" மூன்றாம் உலகக் கவிதைகளிலிருந்து இந்தக் கவிதை தரப்படுகிறது.

நாங்களோ பலர்
நாங்களோ பலர்
வெவ்வேறு கூரைகளின்
கீழிருந்த சிலரும்
வானத்தின் கீழ்
கூரைகளே
இல்லாத பிறருமாக
அப்போது நாங்கள்
கனவுகளைத் தொடங்கியிருந்தோம்
அப்போதுதான் பாடல்கள்
எங்கள் உதடுகளிலிருந்து
வெளிவரத்தொடங்கியிருந்தன
அப்போதுதான்
நாங்கள்
நிமிர்ந்து நடப்பதற்கு
பழகத் தொடங்கியிருந்தோம்
ஆனால் எங்கள்
கால்களோ
குட்டை
பாதைகளை
அந்நியமானவை
எங்களை மோப்பம்
பிடிப்பது எளிதாக
இருந்தது
தப்பித்து ஓடுவது
சாத்தியம்
இல்லை விரைவில்
நாங்கள்
வலையில்
சிக்கினோம்
எங்களது மூளைகள்
சிதறடிக்கப்பட்டன
காலமும் வெளியும்
குழம்பிப் போயின
எங்களிடம்
வற்றிப்போனவை எவை?
எங்களது கிளர்ச்சிக்
கனவுகளா?
அல்லது அவற்றின்
துடிக்கும் நாளங்களா?

சிவிக்கின் கவிதை மொழி எளிமையானது.

ஆனாலும் அது எழுப்பும் அதிர்வு ஓய்ந்து விடுவதில்லை.



எளிய மனிதரின் தமக்கான சுதந்திர வாழ்வை அவாவும் எண்ணத்தின் அல்லது விடுதலை உணர்வுன் ஏக்கத்தின் வெளிப்பாடு இது.

கனவைத் தொடங்கிய மனிதரின் பாடல் வலுவானது; நிமிர்ந்தெழும் துடிப்பானது.

அந்நியமான பயணத்தில் இவர்களது மூளை சிதறடிக்கப்படலாம். எனினும் கேள்வியாக சிவிக் எழுப்பும் கவிதையின் கடைசிவரி முக்கியமானது.

வற்றிப்போனவை எவை? கிளர்ச்சிக்கனவின் நாளத்துடிப்பை எவராலும் சிதைக்க முடிதல்லவா?



# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா 08

மண்டேலா ஹில்டன் உயர் பள்ளியில் இறுதியாண்டில் படித்துக்கொண்டிருக்கும் போது கலை நிகழ்ச்சி ஒன்றிற்காக கோசாவின் புகழ்பெற்ற கவிஞர் "க்ரூனே ம்காயி" என்பவர் சிறப்பு விருந்தினராக வருகை தரவிருக்கிறார் என்ற செய்தியை கேள்விப்பட்டதும் மண்டேலா சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான். மண்டேலா கவிஞர் "க்ரூனே ம்காயி" என்பவரின் தீவிர ரசிகன். இசையையும் வரலாறையும் ஒன்றுசேர்த்து சுவைபட கவிபாடும் க்ரூனேயை சந்திக்க வேண்டுமென மண்டேலா பலநாள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவனது பலநாள் கனவு நிறைவேறியது. குறிப்பிட்ட தினம் வந்தது. மாணவர்கள் அனைவரும் க்ரூனேயை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். க்ரூனே அங்கு வந்த தோரணையை மண்டேலாவால் என்றுமே மறக்க முடியவில்லை. கரிய நிறத்தில் கட்டமைப்பான உடல் வனப்பு, சிறுத்தை தோலங்கி, கையில் கூரான நீண்ட ஈட்டி, தலையில் சிறகுகளில் அமைக்கப்பட்ட தொப்பி அச்சு அசலாக ஒரு பழங்குடி மனிதனாக கோசாவின் சாம்ராஜ்ய வீரனாக மண்டேலாவுக்குத் தோன்றியது. மண்டேலா மெய் மறந்து வாய் பிளந்து க்ரூனேயை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். க்ரூனேயின் பேச்சு ஆரம்பமானதும் திகைப்பும் அபரிமிதமான உற்சாகமும் அவனை தொற்றிக்கொண்டது. மண்டேலாவுக்கு அன்றைய பொழுது க்ரூனேயின் நினைவுகளுடனே கழிந்தது.காலங்கள் உருண்டோடின. ஹில்டன் உயர்பள்ளியில் மண்டேலா மூன்று ஆண்டுகள் படித்த பின் "யுனிவெர்சிடி கொலேஜ் ஒஃப் ஃபோர்ட் ஹரே" எனும் கல்லூரியில் பி.ஏ. பிரிவில் சேர்ந்து கொண்டான். அப்போது அவனுக்கு இருபத்தொரு வயது. ஹில்டன் உயர்பள்ளியில் இருந்து இந்தக் கல்லூரி கிழக்கே இருபது மைல் தொலைவில் ஆலிஸில் அமைந்துள்ளது. மண்டேலா இதுவரை படித்த கல்லூரிகளில் இருந்து இது வேறுபட்டது. தெற்கு, மத்திய, கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து பல மாணவர்கள் இக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த படியால் மண்டேலாவுக்கு இது சற்று அகன்ற களமாக தென்பட்டது. தெற்கு ஆபிரிக்க மாணவர்களுடன் மட்டுமே பழகி வந்த மண்டேலாவுக்கு பல்வேறு கலாசாரப் பின்புலம் கொண்ட ஆபிரிக்க மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. மண்டேலா தன் வாழ்நாள் தோழரான "ஒலிவெர் டேம்போ"வை சந்தித்தது இந்தக் கல்லூரியில்தான். இருவரும் கால்பந்து மைதானத்தில் முதன் முதலாக சந்தித்து தங்கள் தோழமையை ஆரம்பித்துக் கொண்டார்கள். ட்ரான்ஸ்கியிலுள்ள போன்டோலேன்ட் எனும் பகுதியை சேர்ந்த ஒலிவெர் டேம்போ மண்டேலாவின் மனதைக் கவர்ந்துவிட்டார். டேம்போவின் தனித்திறமையும், வாதத் திறமையும், புத்திசாலித்தனமும் மற்ற மாணவர்களிடமிருந்து இவரை வேறுபடுத்திக்காட்டி மண்டேலாவுடன் ஒட்ட வைத்துவிட்டது. மண்டேலா நட்புக்கு முன்னுரிமை கொடுக்க கூடிய ஒருவர் என்பது குறிப்பிட வேண்டிய விடயம். கல்லூரி வாழ்க்கை மண்டேலாவுக்கு உற்சாகத்தையும் புதுத்தெம்பையும் அளித்தது. கல்லூரியில் பேராசிரியர் சிலரும் அவனுடன் நெருங்கிப் பழகினார்கள். அவர்களில் ஒருவரான கோசா வரலாற்றுப் பாடம் எடுத்த பேராசிரியர் "ஜவாபு" என்பவர் மண்டேலாவுடன் அன்பாகப் பழகினார். பல விடயங்களை அவனுடன் பகிர்ந்து கொண்டார். மண்டேலாவின் தந்தை காட்லாவைப் பற்றி மண்டேலாவுக்கே தெரியாத பல தகவல்களை அவர் சொன்னார். ஜவாபு ஆசிரியர் காட்லாவைப் பற்றி பேசிய அன்றிரவு மண்டேலாவுக்கு தூக்கமே வரவில்லை. தந்தையின் நினைவும் தாயின் பிரிவும் அவனை சோகத்தில் வாட்டியது. ஒருவாறு தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான். கல்லூரியில் மண்டேலாவுக்கு கோசா, லத்தீன், ஆங்கிலம், வரலாறு, மானுடவியல், அரசியல், நிர்வாகவியல், ரோமானிய டச்சு சட்டம் என்று பல பாடங்கள் புகட்டப்பட்டன. கல்வி எனும் அருந்தனம் அழியாப் பெருந்தனம் என்பதைப் புரிந்துகொண்ட மண்டேலா கல்வியில் கண்ணாயிருந்தான். எதிர்காலமே கல்வியில் தான் தங்கியிருக்கிறது என்பதை புரிந்துகொண்டான். பெற்ற தந்தை காட்லாவும் வளர்த்த தந்தை ஜோங்கிந்தாபாவும் எதிர்பார்த்தபடி பிற்காலத்தில் கோஸாவுக்கு தலைவனாக வரவேண்டும் என்ற உன்னத குறிக்கோளோடு கல்வியில் கவனத்தை செலுத்தினான். அவ்வப்போது பொழுது போக்கிற்காக புதிய தோழன் டேம்போவுடன் விளையாட்டுகளிலும் ஈடுபட்டான். கல்லூரியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர்கள் புதிய மாணவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். பழைய மாணவர்களே கல்லூரியின் விடுதிக்கு நிர்வாகிகளாக இருந்து புதிய மாணவர்களை வேலை வாங்கி தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருந்தனர்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# பன்முகம் கொண்ட கலைஞர் சித்ரா லட்சுமணன்



தமிழ்த்திரையின் பிரபல தயாரிப்பாளர், இயக்குனர், பெரியத்திரை, சின்னத்திரை நடிகர், திரை விமர்சகர் என பன்முகம் கொண்ட கலைஞர் சித்ரா லட்சுமணன். சித்ரா லட்சும ணன் ஜனவரி 23, 1948 இல் பிறந்தார். சித்ரா லட்சுமணன் ஒரு திரைப்பட பத்திரிகையாளராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார். மேலும் இயக்குனர் பாரதிராஜாவுடன் திரைத்துறையில் அறிமுகமானார். பின்னர் அவரது சகோதரர் சித்ரா ராமுவுடன் இணைந்து அவரது அனைத்து படங்களிலும் இணை தயாரிப்பாளராக பணியாற்றினார். 1983 ஆம் ஆண்டில், காயத்ரி பிலிம்ஸின் கீழ் "மண் வாசனை" திரைப்படத்தை தயாரித்தார். இது வணிக ரீதியான வெற்றிகளையும் சிறந்த தமிழ் திரைப்படத்திற்கான பிஃலிம்பேர் விருதையும் வென்றது . 1980 களில் தமிழ் படங்களுக்கான பத்திரிகை உறவு அதிகாரியாகவும் பணியாற்றினார், பின்னர் கமல்ஹாசன் நடித்த "சூரசம்ஹாரம்" (1988), பிரபுவுடன் பெரிய தம்பியை (1997) மற்றும் கார்த்திக்குடன் சின்ன ராஜா (1999) படங்களை இயக்கினார். ஜப்பானில் கல்யாண ராமன் (1985) திரைப்படத்தில் இவரது நகைச்சுவை வேடம் பாராட்டுக்களைப் பெற்றது. பாஸ் என்கிற பாஸ்கரன் (2010) மற்றும் தீயா வேலை செய்யணும் குமாரு ஆகிய திரைப்படங்களில் இவரது நகைச்சுவை வரவேற்கப்பட்டது. தனது வாழ்க்கை முழுவதும், லட்சுமணன் பொறுப்பான பதவிகளையும் வகித்துள்ளார். தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் செயலாளராக நான்கு ஆண்டுகள் பணியாற்றினார் மற்றும் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, இந்திய திரைப்பட கூட்டமைப்பு மற்றும் தமிழ் திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தில் நிர்வாக குழு உறுப்பினராக பல ஆண்டுகள் பணியாற்றினார். 2011 ஆம் ஆண்டில், தமிழ் சினிமாவின் வரலாற்றை ஆவணப்படுத்தும் 80 ஆண்டு தமிழ் சினிமா என்ற புத்தகத்தை சமீபத்தில் வெளியிட்டார்."சாய்(chai) வித் சித்ரா "என்ற திரைவிமர்சன நிகழ்வினை யூடியூப் ஊடாக நிகழ்த்தி வருகின்றார். சினிமா வரலாற்றுத் தகவல்களை விரல் நுனியில் வைத்துள்ளவர் சித்ரா லட்சுமணன். இவர் தயாரித்த படங்கள்: மண்வாசனை (1983), அம்பிகை நேரில் வந்தாள் (1984), வாழ்க்கை (1984), இராசேந்திரன் (1985), ஜல்லிக் கட்டு (1987), சின்னப்பதாஸ் (1989) , நடித்த சில படங்கள்: புதுமைப் பெண் (1984), தாவணிக் கனவுகள் (1984), ஜப்பானில் கல்யாண ராமன் (1985), சி. வி. இராசேந்திரன் (1985), ஜல்லிக்கட்டு (1987), பெரியதம்பி (1997), சின்ன ராஜா (1999), சுந்தரி நீயும் சுந்தரன் நானும் (1999), உள்ளம் கொள்ளை போகுதே (2001), அழகான நாட்கள் (2001), காதல் வைரஸ் (2002), உன்னை நினைத்து (2002), ரிலாக்ஸ் (2003), போஸ் (2004), கண்களால் கைது செய் (2004), வசூல்ராஜா எம்.பி.பி.எஸ் (2004), உணர்ச்சிகள் (2005), பச்சக் குதிர (2016 திரைப்படம்) குஸ்தி (2006 திரைப்படம்) (2006) பிறகு (2007), வைத்தீஸ்வரன் (திரைப்படம்), (2008) பாஸ் என்கிற பாஸ்கரன் (திரைப்படம்) (2010), சதுரங்கம் (2011), சகுனி (தமிழ்த் திரைப்படம்) (2012), சேட்டை (திரைப்படம்) (2013), பட்டத்து யானை (திரைப்படம்) (2013) , தீயா வேலை செய்யணும் குமாரு (2013) , ஆர்யா சூர்யா (2013), யா யா (2013), நவீன சரஸ்வதி சபதம் (2013), நினைத்தது யாரோ (திரைப்படம்) (2014), நிமிர்ந்து நில் (2014 திரைப்படம்) (2014), அரண்மனை (திரைப்படம்) (2014), நண்பேன்டா (திரைப்படம்) (2015).



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# ஸ்மார்ட்குரோ கற்கை நிலையத்தின் வருடாந்த அபாகஸ் விருது விழா















ஸ்மார்ட்குரோ கற்கை நிலையத்தின் வருடாந்த அபாகஸ் விருது வழங்கும் நிகழ்வு மருதானை எல்பின்ஸ்டன் கலையரங்கில் புதன்கிழமை மாலை நடைபெற்ற போது முன்னாள் கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோசி சேனாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து மாணவ மாணவிகளுக்கு விருதுகள் வழங்குவதையும் தேசபந்து கலாநிதி கோவிந்த பிள்ளை கௌசல்யா தேவி, பாடசாலை அதிபர் திருமதி தேவராஜ், தேவராஜ் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.